# சிந்தாமணி





வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்ஆலய

## கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழா

## சிறப்பு மலர்

## 22.10.2010

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறக்கவும் தானங்களில் சிறந்த
தானம் அன்னதானம் பெருகவும் இந்துக் கலாசாரம்
மேம்பாடடையவும் வாழ்த்துகின்றோம்.

ups®

# IML (PVT) LTD.

## United Parcel Services
## "UPS HOUSE"
## 209/2, Union Place,
## Colombo - 02.

**Call us on 337773, 328793.**

**Fax: 434287**

உ
சிவமயம்



# சிந்தாமணி

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன்
வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்
நிர்மாணிக்கப்பட்ட

## ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
## கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழாச்

# சிறப்பு மலர்


மலராசிரியர்கள்

தமிழ்மணி அகளங்கன்

திரு.க.ஐயம்பிள்ளை S.L.A.S

(ஓய்வுநிலை பிரதேச செயலாளர்)


## 22.10.2010



வெளியீடு:

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலனசபை

உ
சிவமயம்

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கலாசார/அன்னதான மண்டபம்





உ

சிவமயம்

# நுழைவாயிலில்.....

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீசிந்தாமணி விநாயகர் கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழாச் சிறப்பு மலரினூடாக உங்களைத் தரிசிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

வவுனியா வெளிவட்ட வீதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்க்கு அருள் பாலிக்கும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் திருவருள் இவ்வாலயத்தின் பரிபாலன சபையினரை இன்னுமொரு பணிக்குத் தூண்டியுள்ளது.

தேர்த்திருவிழாக் காலத்திலும் மற்றும் மகோற்சவக் காலங்களிலும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்ற ஒரு மண்டபம் இன்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், விரும்பியதை விரும்பியவர்களுக்கு விரும்பியபடி விக்கினமின்றிக் கொடுக்கும் விநாயகப் பெருமான், பெரியதொரு மண்டபத்தை தன் ஆலய முன்றலில் அமைப்பதற்கு அருள்பாலித்துள்ளார்.

கலையம்சம் மிக்கதாய், இந்து சமயப் பெருமைகளை எடுத்துக் கூறத்தக்கதாய் இம்மண்டபத்தை வடிவமைத்த ஆலய பரிபாலன சபையினர், இம்மண்டப வேலைகளில் ஈடுபட்ட அனைத்துக் கலைஞர்கள், தொழிலாளர்கள், பொறியியலாளர்கள் யாவரையும் பாராட்டி அவர்களுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீசிந்தாமணி விநாயகரின் நல்லருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இம்மண்டபத் திறப்பு விழாவின் நினைவாக **சிந்தாமணி** என்ற பெயரில் சிறப்பு மலரொன்றை வெளியிட விரும்பிய ஆலய பரிபாலன சபையினர் இப்பாரிய பொறுப்பினை எம்மிடம் ஒப்படைத்தனர்.

பல்வேறு சிரமங்களுக்கும் தடங்கல்களுக்கும் மத்தியில் விநாயகப் பெருமானின் திருவருளால் இம்மலரை வெளியிடுகிறோம். இம்மலருக்கு வாழ்த்துச் செய்திகள், ஆசிச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், தகவல்கள் தந்துதவிய அனைத்துப் பெரியார்களுக்கும் மனம் கனிந்த நன்றிகள்.

எம்மை இப்பணியில் ஈடுபடுத்திய பரிபாலன சபைச் செயலாளர் திரு.ஞா.கேதீஸ்வரன் அவர்களுக்கும் ஏனையோருக்கும் நன்றிகள்.

இம்மலரை அழகாக அச்சிட்டுத் தந்த வவுனியா வாணி அச்சகத்தாருக்கும் பயன் பெறப் போகும் வாசகர்களுக்கும் நன்றிகள்.

**மலராசிரியர்கள்.**

உ

வவுனியா வெளிவட்ட வீதி

# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபை

தலைவர்
திரு.வி.சீ.தேவகுமாரன்

செயலாளர்
திரு.ஞா.கேதீஸ்வரன். ச.நீ

பொருளாளர்
திரு.சி.க.அருந்தவராசா

உப தலைவர்
திரு.த.தர்மபாலன்

உப தலைவர்
திரு.வீ.குமாரசிங்கம்

உப செயலாளர்
திரு.க.முருகேசு. ச.நீ

உறுப்பினர்கள்

திரு.க.நா.பத்மநாதன். ச.நீ
திரு.க.தெய்வேந்திரராசா
திரு.மு.விஜிதரன்
திரு.சி.சிவராசா
திரு.சு.ஸ்ரீகரி
திரு.வே.குகேந்திரன்
திரு.ச.தணிகாசலம்
திரு.ந.யோகராசா
திரு.ஆ.நந்தகுமார்

கௌரவ காப்பாளர்கள்

திருமதி.இராசமனோகரி புலந்திரன்
திரு.க.ஐயம்பிள்ளை
திரு.பொ.நல்லையா

கௌரவ கணக்காய்வாளர்
திரு.இ.திருமேனி ச.நீ

முகாமையாளர்
திரு.ஆ.பொன்னம்பலம்

வவுனியா வெளிவட்ட வீதி,

# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

## பரிபாலன சபை



இடமிருந்து வலம்

மேல்வரிசை: மு.விஜிதரன், ந.யோகராசா, இ.திருமேனி (கணக்காய்வாளர்), சி.சிவராசா, ச.தணிகாசலம், ஆ.நந்தகுமார்

கீழ்வரிசை: க.நா.பத்மநாதன், பொ.நல்லையா (காப்பாளர்), க.ஐயம்பிள்ளை(காப்பாளர்), வீ.குமாரசிங்கம் (உப தலைவர்), சி.க.அருந்தவராசா(பொருளாளர்), வி.சீ.தேவகுமாரன்(தலைவர்), ஞா.கேதீஸ்வரன் (செயலாளர்), சி.த.தர்மபாலன்(உப தலைவர்), க.முருகேசு(உப செயலாளர்) , ஆ.பொன்னம்பலம் (முகாமையாளர்), வே.குகேந்திரன்

# மலரின் உள்ளே ...

பக்கம்

ஆசிச் செய்திகள் i

வாழ்த்துச் செய்திகள் viii

கௌரவிப்புக்கள் அ

நினைவலைகள்

ஆலய வரலாறு 1

பாமாலை 20

## கட்டுரைகள்

01. விநாயகர் தத்துவமும் விநாயகர் வழிபாடும் 28
**டாக்டர்.மா.வேதநாதன் M.A.Ph.D**

02. இந்துப் பண்பாட்டு மரபில் சிவாகமங்கள் ஒரு சமய நிலை நோக்கு 59
**பிரம்மஸ்ரீ.ம.பாலகைலாசநாத சர்மா M.A.M.Phil**

03. வல்லபா கணேசமூர்த்தி 64
**பிரம்மஸ்ரீ.குருசாமி சுந்தரசர்மா**

04 சைவ சித்தாந்த வளர்ச்சியில் ஈழத்தறிஞர் வரிசையில்
சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் 67
**மு.கௌரிகாந்தன் M.A.M.Ed**

05 பிள்ளையாருக்கு முன் தோப்புக் கரணம் போடுவது ஏன்? 81
**கு.நவரத்தினராஜா**

06. சமயம் காட்டும் சில வாழ்வியல் உண்மைகள் 83
**ந.பார்த்திபன்**

07 தேரின் அமைப்பும் தத்துவங்களும் 86
**ஸ்தபதி.சு.சண்முகவடிவேல்**

08 வெளிவட்ட வீதி விநாயகருக்கு முகபத்திரவட்டத் தேர் 88
**விஷ்வப் பிரம்மஸ்ரீ.க.கலாமோகன்**

09 நடராசர் 90
**மதவர் மார்க்கண்டு**

10. பஞ்ச அட்சரத்தின் மகிமை 93
**மதவர் மார்க்கண்டு**

11. அன்பு ஆணவம் இன்பம் 94
**கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன்**

12. திருக்குறள் ஓர் ஆன்மீக நூலா ? 97
**தமிழ்மணி அகளங்கன்**

13. பக்தி இலக்கியத்தில் திருமுருகாற்றுப் படையும் பரிபாடலும் 107
**செல்வி.தர்மராஜா அறிந்திதை B.A.(Honns). Dip.in.Eng**

14. அன்னதான விஷேசமும் செய்யும் முறையும் 111
**பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம் B.A.Dip.in.Edu**

15. பண்டிகைகளின் தத்துவங்கள் 116
**M.பாலச்சந்திரன்**

16. போற்றி அருளுக 120
**தவத்திரு.குன்றக்குடி அடிகளார்**

17. கனவு 125
**திருமுருக. கிருபானந்த வாரியார்**

18. உணவும் உள்ளமும் 130
**ஆர்.வீ.கந்தசாமி**

19. சிந்தையும் செயலும் 132
**குறிஞ்சி**

20. வவுனியா மாவட்டமும் கந்தபுராண படனமும் 135
**க.ஐயம்பிள்ளை**

21. வன்னிப் பிரதேச கிராமிய திருமண நடைமுறைகள் 149
**தமிழ்மணி அகளங்கன்**

# ஆசிச் செய்திகள்

# வாழ்த்துச் செய்திகள்

உ
சிவமயம்

**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்**

ஆதீன முதல்வர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமகா சந்நிதானம்

## அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையோருக்கு,

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி ஆலயத்தில் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட கலாசார மண்டபம் இன்று திறப்பு விழா நடைபெறு வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். சைவ மக்களும், தமிழ் மக்களும் நிறைந்து வாழும் வவுனியா மாவட்டத்தில் இன்று பல அறப்பணி நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. வேண்டுவார் வேண்டுவதை ஈயும் சிந்தாமணி விநாயகர் இவ்வாலயத்தில் எழுந்தருளி இருந்து நல்ல பல விடயங்களை செயற்படுத்துவதற்கு உறுதுணையாக விளங்குகின்றார். அமைந்திருக்கும் இம் மண்டபம் பல சமூகப்பணிகளையும், சமயப் பணிகளையும் செய்வதற்கு இன்று முதல் ஆரம்பமாகி இருப்பது மக்களுக்கு தனிச்சிறப்பைத் தருகின்றது. மக்களுடைய சேவைகளும், சமயப்பணிகளும் இன்றைய காலகட்டத்தில் பல வளர்ச்சிகளாக இருக்கின்றன. இவற்றை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு இவ்வாலயத்தைச் சார்ந்துள்ளது. இன்று வாழும் இந்து இளைஞர்களின் சமயத்தின்பால் ஏற்படும் ஐயங்களை நீக்குவதற்கு ஆலயவழிபாடு, நலமோம்புதல், பொதுத்தொண்டு, என்பவற்றில் ஈடுபடுவதற்கு சமயம் எவ்வகையில் உதவுகின்றது. என்பதை எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்துள்ளது. இதனை உள்வாங்கி ஆலய பரிபாலண சபையினர்கள் கருத்தரங்குகள், செயலமர்வு, பயிற்சிகளை நடாத்தி எம் சமயப் பணியை நெறிப்படுத்த வேண்டும் என விரும்புகின்றோம். மண்டபத்தை அமைத்த கலைஞர்களையும், அர்ப்பணம் செய்த அன்புள்ளங்களையும் இறைவன் ஆசிர்வதிக்க பிரார்த்திக்கின்றோம். மலர் சிறப்புற அமைத்துள்ள மலராசிரியர் அகளங்கன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

" **என்றும் வேண்டும் இன்பவன்பு** "

**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

உ
சிவமயம்

திருக்கைலாய பரம்பரை

**மெய்கண்டார் ஆதீனம்**

3வது குருமகா சன்னிதானம்

*சித்தாந்த சிவ வித்தகர்*

**சிவஸ்ரீ.சிவக்கொழுந்து சிவதேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**

## அருளாசிச் செய்தி

நமசிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஆலய நிர்வாகிகள் ஓர் அன்னதான கலாசார மண்டபம் அமைத்து திறப்பு விழா எடுத்து, விஷேட மலர் வெளியிடுவதை அறிந்து அகமிக மகிழ்ந்து அதற்கு ஆசியுரை வழங்குவதற்கு காஞ்சிபுர காமாட்சி சமேத ஏகாம்பரேஸ்வரர் திருவருளை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்.** காப்பு - திருவருட்பயன்

ஆலயம் அரன் உறைவதற்காக என்றால் ஆன்மா பேரின்பமடைய அமைதி நிறைந்த மண்டபங்கள் அவசியம். அவற்றை மடம், சத்திரம் என அமைத்தனர். ஆங்காங்கே ஞான, யோக போதனை, உண்ண உணவு, உறங்க வசதி செய்து, சூழல், உடற்பிணி, உயிர்ப்பிணி, பிறவிப்பிணி, நீக்கும் வசதிகளை கொடுப்பது சன்மார்க்க தர்மமான அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு புருஷார்த்தங்களாகப் போற்றப்பட்டு வந்தன.

" சந்திராபோஜனம் மடா நித்திரை " என்பது பழமொழி, நிர்க்கதியுற்றோருக்கு அறம், பொருள், இன்பத்தால், ஈட்டிய செல்வத்தை கதியுடையோர் அன்னதான மடங்கள், சத்திரங்கள் ஆதரவு அளிப்பது அவசியமாகின்றது.

சீவ போதத்தை, சிவபோதமாக்கி, சத்திநிபாதம் எய்த, சிவபாதநீழல் அடைய குருவருளும் திருவருளும் உறுதுணையாகும். அவ்வாறாக தங்கள் செயற்பாடுகள், அன்னதானப் பணி மகேஸ்வரப் பூசையாக, ஞானயோக, பூசையாக உயர்ச்சி பெற குருவருள் திருவருள் அமைவதாகுக.

4560 வருடங்களுக்கு முன் வியாசர் அருளிய பார்க்கவ (விநாயக) புராணத்தின் படி பிள்ளையார் தோன்றிய 11 அவதாரங்களில் சிந்தாமணி விநாயகர் இரண்டாவதாகும். அவரால் அருளப்பட்ட திருவருட் செறிவு, சிவபூசை, மேற்படி தங்கள் பணிகள், வெளியிடப்படவுள்ள விஷேச மலர் சீர் சிறப்புற திருவருள் பாலிப்பதாகுக.

கடந்த 40 ஆண்டுகளாக நடைபெற்று வரும் கந்தபுராண படனம், சரியை, கிரியை, ஞான, யோக பூசை, பிறவா பேரின்ப பேற்றை ஒவ்வோர் உயிர்களும் அனுபவிக்க நிர்வாகிகளாகிய தாங்கள் எடுத்த திருப்பணிகள், அன்னதான கைங்கரியம், கலாசார மண்டபம் திறப்பு விழா விஷேட மலர் வெளியீடு ஆலய வளர்ச்சி, அதியுன்னத நிலையில் உயர்வுறத் திருவருள் செயற்பாடுகள் அமையுமென உறுதியாக விசுவாசிக்கின்றேன்.

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமயை தன்னொடு வல்வினை இன்றே-
(சிவஞானபோதம் 10ம் சூத்திரம்)

உ
சிவமயம்

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத் தலைவர்
சிவாகம கிரியா சூடாமணி

**முத்து ஜெயந்திநாதக் குருக்கள்.ச.நீ.** (நந்தாவில்)

## அருளாசிச் செய்தி

" வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் "

வவுனியா வெளிவட்ட வீதியில் சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் அரிய முயற்சியால் சிறப்புடன் அமைக்கப்பெற்ற ஆலய கலாசார/அன்னதான மண்டபத்தின் திறப்புவிழா சிறப்புடன் நடைபெற இறைவன் திருவருளுடன் நல்லாசி கூறுவதோடு இம் மண்டபத்தை அமைத்த சிற்பக் கலைஞர்களையும் பாராட்டுகின்றேன். இம் மண்டபம் சிறந்த முறையில் அமைவதற்கு பொருள் உதவி, நிதியுதவி, மற்றும் ஆலோசனை வழங்கிய அனைவருக்கும் சகல செல்வங்களும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். மேலும் திறப்பு விழா அன்று வெளிவரும் மலர் சிறந்து மணம் வீச வாழ்த்துவதோடு மலர்க் குழுவினரின் பணியையும் பாராட்டுகின்றேன் மலரை சிறந்த முறையில் உருவாக்கிய அச்சகத்தினருக்கும் பாராட்டுக்கள். பெருமையுடன் அமைத்த இம்மண்டபத்தில் சமய சமூக பணியுடன் அறப்பணிகள் பல்லாண்டு காலம் இடம் பெற வாழ்த்துகின்றேன். இவ்வரிய திருப்பணியை சிறப்புடன் நிறைவேற்றிய பரிபாலன சபையினர் இன்னும் பல்லாண்டு காலம் இறைபணியாற்ற சிந்தாமணி விநாயகர் பாதம் பணிந்து மனோன்மணி அம்பாள் திருவருளுடன் நல்லாசி கூறுகின்றேன்.

*" மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்*
*லோகா சமஸ்தா சுகினோ பவந்து "*

" ஜெயகௌரிவாசம் "
இல 101, லக்சபானாறோட்,
தோணிக்கல்,
வவுனியா.

**முத்து ஜெயந்திநாதக் குருக்கள**
நந்தாவில்

உ
சிவமயம்

வவுனியா ஸ்ரீ கந்தசாமி கோவில் பிரதமகுரு .

சிவநெறிக்காவலர்

**பிரம்மஸ்ரீ . இ. பாலச்சந்திரக் குருக்கள்,**

## அருளாசிச் செய்தி

வவுனியாவில் பிரசித்தி பெற்றதும் ஆகம முறைப்படி அந்தணர்களால் பூஜிக்கப்படுவதும், நல்ல அறங்காவலர்கள் உள்ளதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் உள்ளதுமான ஆலயமாகவும், முதன் முதலிலே தேர் ஓடியதும், முப்பது வருஷ பழைமை வாய்ந்ததுமான (கும்பாபிஷேகம் நடைபெற்று) வவுனியா வெளிவட்ட வீதி சிந்தாமணி விநாயகர் ஆலயம் சிறந்து விளங்குகின்றது. படிப்படியாக முன்னேறி இப்போது ஓர் அழகிய கலாசார மண்டபத்தை உருவாக்கியது பெருமைக்குரியது.

அதிகமாக வீடு, வாசல் வசதி குறைந்ததும் மழை, வெயில் குழப்பம் இல்லாததும், ஆகிய இடம் ஒன்று மக்களுக்கு தேவை. இதை நிறைவு செய்ய முதன் முதலிலே எமது கலாசாரத்தைப் பேணும், சமயத்தைப் பேணும் இடமாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபம் வசதி செய்திருந்தது. இப்போது இந்த ஆலய சூழலில் வாழும் மக்களுக்கும், மற்றையோருக்கும் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு கலாசார மண்டபத்தை உருவாக்கியதில் இவ்வாலயம் பெருமை பெறுகின்றது. இதன் மூலமாக எமது இயல், இசை, நாடகங்கள், சொற்பொழிவுகள், திருமணம் மற்றும் சடங்குகள், அன்னதானம் முதலியவற்றுக்கு இது வசதி செய்து தருகிறது. இந்த அரும் பணியை ஆற்றுவதற்கு இடம் ஒதுக்கி திட்டமிட்டு செயற்படுத்திய ஆலய அறங்காவலர்கட்கும் மற்றும் அரும்பாடு பட்டவர்கட்கும் எம்பெருமான் சிந்தாமணிப்பிள்ளையார் முன்னின்று காப்பாராக!

இம் மலர் மூலம் இவ்வாலயம் மற்றும் செற்பாடுகள் ஆவணப்படுத்தப் படுகிறது. நாம் மறைந்தாலும் இவை என்றும் நிலைத்து நிற்கும். இம்மலர் ஆசிரியர் தொண்டு போற்றக் கூடியது. (போற்றற் குரியது) இம்மலர் வெளியீட்டு விழா சிறப்பாக நிறைவேற எமது நல்லாசிகள் உரித்தாகுக.

சுபம்.

இல.11, கற்குழி,
வவுனியா.

**பிரம்மஸ்ரீ . இ. பாலச்சந்திரக்
குருக்கள்,**

உ
சிவமயம்

வவுனியா குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு

கணபதிச் சித்தர்

**சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள்**

## அருளாசிச் செய்தி

வவுனியா நகரில் வெளிவட்ட வீதி சிந்தாமணிப்பிள்ளையார் கோயில் கும்பாபிசேகத்தை நவாலி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் தலைமையில் சிறப்பாய் நடைபெற்று அக்கும்பாபிசேகத்திலும் கலந்து பின் அவ்வாலயத்தை குருவாக இருந்து நடாத்தும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. அவ்வாலயம் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து நிர்வாக சபையினர் ஒரு ஆலயத்திற்கு என்ன தேவையோ அவற்றில் ஒவ்வொன்றாய் செய்து அதன் பின் ஆலயத்திற்கு தேவையான அன்னதான கலாச்சார மண்டபத்தை பல லட்சம் ரூபாய் செலவில் அழகாய் கட்டி முடித்தார்கள் என்றால் அது சிந்தாமணிப்பிள்ளையாரின் அருட்பார்வை என்று தான் கூற வேண்டும். அவ்வகையில் இந்த முயற்சியை எடுத்த நிர்வாக சபையினர்களை பாராட்டி இம் மண்டபம் வவுனியா மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறவேண்டும் என்று கூறி எனது ஆசிகள் வழங்குகின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

குடியிருப்பு
சித்திவிநாயகர் ஆலயம்

பிரதம குரு
**சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள**

உ
சிவமயம்

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

முன்னாள் பிரதம குரு

## சிவஸ்ரீ சிவகுகநாதக் குருக்கள்

## அருளாசிச் செய்தி

"ஆனை முகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம் பலவன் ஞானகுரு
வாணிபதம் நாடு"

வவுனியா வெளிவட்ட வீதியில் கோயில் கொண்டு எழுந்தருளி தன் அடியவர்களின் விக்கினங்களைக் களைந்து, அருள்பாலித்து சர்வவியாபகமாய் வியாபித்திருக்கும் சிந்தாமணியான் திருப்பாதங்களைத் தொழுது, இம்மலருக்கு ஆசியுரை வழங்க விழைகின்றேன்.

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய கலாச்சார/அன்னதான மண்டபத்திறப்பு விழாவும், அவ்விழா மலரும் நன்கு சிறப்புற மலர விநாயகரின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

ஆலய, நித்திய நைமித்திய விழாக்களில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கவும் மற்றும் இந்து சமய சடங்குகளை சிறப்புற நடாத்துவதற்கும், நகரின் மத்தியில் ஆலயச்சூழலில் இம்மண்டபம் அமையப்பெற்றது ஆனைமுகன் கருணையே.

இம்மண்டபமானது அழகுற நிர்மாணிக்கப்பட்டு சைவமக்கள் பயன்பெறத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பயன்பாடும் விநாயகனின் அருளைப் போன்று எல்லையில்லாது நீடிக்க வேண்டி அவர்தாள் பணிகின்றேன்.

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயம்
வவுனியா.

**சிவஸ்ரீ. சிவகுகநாதக் குருக்கள்**

உ
சிவமயம்

ஆலயப் பிரதமகுரு,
சிவாச்சாரிய இளம் சுடர்
**சிவஸ்ரீ. உ. சிவகுமாரக்குருக்கள்.**

## அருளாசிச் செய்தி

லோகசமஸ்தா சுகினோபவந்து.

வவுனியா நகரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அருள்மிகு சிந்தாமணிவிநாயகர் ஆலய கலாசார/அன்னதான மண்டபம் விகிர்திவருஷம் ஐப்பசித்திங்கள் 5ம் நாள் (22-10-2010) வெள்ளிக்கிழமை அன்று திறப்புவிழா நடைபெறுவதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கல்தோன்றி மண்தோன்றாக்காலத்திற்கு முன்தோன்றிய மூத்தமதமாம் இந்துமதமென்று சொல்லிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். அவ்வழியே வந்த நாமும் கூறப்பட்டிருக்கின்ற கலைகலாசார பண்பாடுகளை மதிப்பதோடு மட்டுமின்றி அதனை நன்கு ஆராய்து அதன்படி நடக்கவேண்டிய கடமைப்பாட்டில்இருக்கின்றோம். எமது கலாசாரத்தில் கூறப்பட்டிருக்கின்ற அனைத்து விடயங்களும் விஞ்ஞானரீதியாக ஆராய்கின்ற பொழுது அனைத்தும் உண்மையானவை என்பதனை பிரதிபலிக்கின்றன. அந்தவகையிலே எமது திருமணத்தின் போது நடைபெறுகின்ற அனைத்து சடங்குகளும் ஓர் அர்த்தமுள்ளவையாக அமைந்திருக்கின்றது. உதாரணமாக தாலிகட்டிய பின்னர் மோதிரம் தேடுகின்ற நிகழ்விலே கணவன் மனைவிக்கிடையில் எவ்வாறான விட்டுக்கொடுப்புக்கள் இருக்கவேண்டுமென்பதனைக் குறிக்கின்றது.

காட்டிலே இரண்டு மான்கள் நீரின்றி தவித்த பொழுது ஒரு குட்டையிலே ஒருமான் மட்டும் பருகக் கூடியநீர் காணப்பட்டது. இருப்பினும் இருவரும் பகிர்ந்து பருகலாம் என முடிவு செய்து பருகிக்கொண்டிருந்த பொழுதும் ஒரு துளி நீர்கூடவற்றாமல் காணப்பட்டது. இதற்குக் காரணம் இருமான்களுக்கும் இடையில் காணப்பட்ட விட்டுக்கொடுக்கும் தன்மையும் பாசமும் மட்டுமே. அதுபோன்று நிறைய கிரியைகள் நடைபெறுகின்றதிருமணமண்டபம்இங்கு அமையப்பெற்றது ஒரு நன்மையே. எனவே இந்த மண்டபத்திலே நடைபெறுகின்ற அனைத்து திருமணமான மக்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துவதுடன் மேலும் இம்மண்டபத்திலே கலைகலாசார நிகழ்வுகளும் அன்னதானங்களும் நடைபெற்று மங்களம் நிறைந்து காண எல்லாம்வல்ல சிந்தாமணி விநாயகர்பாதம் பணிந்து எனது நல்லாசியைக்கூறி அமைகின்றேன்.

ஆலய பிரதமகுரு
**சிவஸ்ரீ. உ. சிவகுமாரக்குருக்கள்.**

உ
சிவமயம்

*அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர், மனிதநேயர்*

**திருமிகு. வி. கயிலாசபிள்ளை**

*அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனாக விளங்கும் விநாயகப்பெருமான், வெவ்வினையை வேரறுக்க வல்லவர். பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் போற்றித்துதித்து வருபவர்களுக்கு வாக்குண்டாம். நல்ல மனமுண்டாம். மாமலராள் நோக்குண்டாம். மேனிநுடங்காது. என்ற தத்துவம் பழந்தமிழ் நூல்களிலே சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் வாழும் இந்துமக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வமாக விளங்கும் விநாயகப்பெருமான் **சிந்தாமணிவிநாயகராக** கோயில் கொண்டு எழுந்தருளி அருள்புரிந்து வருகிறார். வரலாற்றுப்பெருமையும் திருவருட்சிறப்புமுள்ள இந்த ஆலயத்தினூடாக சமய, சமூகப் பணிகளை ஆற்றிவருவதில் ஆலயபரிபாலனசபையினர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருப்பது போற்றுவதற்குரியது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான இந்த பரிபாலன சபையின் ஒரு முயற்சியாக - இந்து மாமன்றத்தின் நிதிஅனுசரணையுடன் நிறுவப்பட்டுள்ள கலாசார/அன்னதான மண்டபம் இயங்கத் தொடங்கவிருப்பது சிறப்பானநிகழ்வாகும். வவுனியாவாழ் இந்துமக்களுக்கும், ஏ-9 பாதை ஊடாக பயணம் செய்யும் இந்து மக்களுக்கும் பேருதவியாக அவர்களுக்கு சிறப்பான சேவையாற்றும் வகையில் இந்த மண்டபம் அமையும் என்பதால் அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமளவு நிதியுதவி செய்து இதனை வடிவமைக்கும் வகையில் துணைநின்றது. இது விடயத்தில் இந்து மக்கள் மிகுந்த பயனையும், நன்மையையும் பெறவேண்டும் என்பதில் இந்துமாமன்றம் அக்கறை கொண்டு செயற்பட்டது.

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் சிறப்பான சேவைகளைப் பாராட்டுவதுடன், ஆலயம் மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்பதுடன், கலாசார/அன்னதான மண்டபமும் நல்ல வகையில் இயங்கவேண்டும் எனவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக இனிதே வாழ்த்துகிறேன்.

**வி. கயிலாசபிள்ளை**

27.09.2010

உ
சிவமயம்

*அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர்*

**திருமிகு. கந்தையா நீலகண்டன்**

*அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

வெவ்வினையை வேரறுக்க வல்லவர் விநாயகப் பெருமான். தும்பிக்கை நாயகன் மீது நம்பிக்கை வைத்து ஆரம்பிக்கும் எந்தவொரு கருமமும் நிச்சயம் வெற்றியைத் தரும். அத்தகைய மகிமைக்குரிய அருள்மிகு விநாயகப் பெருமான் வவுனியா நகரில் சிந்தாமணி விநாயகராக கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருப்பது எழில்மிகு அருட்காட்சியாகும்.

வரலாற்றுப் பெருமையும் தெய்வீகச் சிறப்புக்களையும் கொண்ட ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயம் வவுனியா மாவட்டத்திலேயே முதன் முதலாக மகோற்சவப் பெருவிழா கண்ட பெருமைக்குரியது என்பதாக அறிகிறோம். வவுனியா மாவட்டத்திலுள்ள இந்துப் பெருமக்களது வழிபாட்டுக்குரிய ஆலயம் என்பதற்கும் மேலாக, ஏ-9 நெடுஞ்சாலை ஊடாகப் பயணஞ் செய்யும் இந்து மக்களும் இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை தரிசித்துச் செல்வதற்கும் இவ்வாலயம் பேருதவியாக அமைந்துள்ளது என்பதைச் சிறப்பாகச் சொல்லலாம்.

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும், அதனை நிர்வகித்து வரும் பரிபாலன சபையினரின் ஆக்கபூர்வமான பங்களிப்பே காரணமாக அமைந்துள்ளதை இங்கு சிறப்பாகக் குறிப்பிடலாம். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனங்களில் ஒன்றாக ஆலய பரிபாலன சபையும் நீண்ட காலமாகவே இணைந்துள்ளது. ஆலயத்தின் முன்னேற்றத்திற்காக பரிபாலன சபையினர் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு இந்து மாமன்றமும் தனது பங்களிப்பை அவ்வப்போது வழங்கியுள்ளது என்பதையும் சிறப்பாகச் சொல்லவேண்டும். இந்த ஆலயத்தில் கடந்த காலங்களில் நடந்தேறிய பல சிறப்பு நிகழ்வுகளிலே மாமன்றத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் பலர்

கலந்து கொண்டு சிறப்பித்து வந்துள்ளார்கள். மாமன்றத்தின் பொன் விழாவையொட்டி 2005 ஆம் ஆண்டில் ஆலய பரிபாலன சபையுடன் இணைந்து சிவதொண்டர் மாநாட்டை வவுனியாவில் இரு நாள் விழாவாக நடத்தியிருந்தோம்.

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு அன்னதான மண்டபமொன்று தேவையாக இருப்பதால், மாமன்றத்தின் பங்களிப்புடன் அதனை அமைத்துக் கொடுப்பதற்கு முன் வந்தோம். மண்டபத்தின் வேலைகள் நிறைவடைந்த நிலையில் இயங்கத் தொடங்கவிருப்பது இந்து மக்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகும். ஆலயத்திற்கு அண்மையில் நல்லதொரு தெய்வீகச் சூழ்நிலையான ஒரு இடத்திலே அன்னதான மண்டபம் அமையப் பெற்றிருப்பது பொருத்தமானதே. தென் இலங்கையிலிருந்து வடபகுதி செல்லும் இந்துப் பெருமக்களுக்கு மிகவும் பேருதவியாகவும், வசதியாகவும், இறை சிந்தனையைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இந்த அன்னதான மண்டபம் விளங்குகிறது என்று சொல்வது சிறப்பானது.

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சியிலும், பராமரிப்பிலும் பெரும் பங்களிப்புச் செய்து வரும் பரிபாலன சபையின் சிறப்பான செயற்பாடுகளைப் போற்றிப் பாராட்டுவதுடன் அன்னதான கலாச்சார மண்டபத்தின் திறப்பு விழாவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, ஆலயம் மேலும் சிறப்பாகத் தொடருவதற்கு அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**20.07.2010** **கந்தையா நீலகண்டன்**

உ
சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றப் பொருளாளர்,

**திருமிகு. வே. கந்தசாமி,**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பிள்ளையார் சுழிபோட்டு எந்தவொரு கருமத்தையும் தொடங்க வேண்டும் என்பதுடன் அதுவே சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமையும் என்பதும் நமது சமய தத்துவமாகும். விக்கினங்கள் தீர்த்து வைக்கும் விக்கினேஸ்வரப் பெருமான் வவுனியா நகரில் சிந்தாமணி விநாயகராக எழுந்தருளி இந்துப் பெருமக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர், வவுனியா நகரில் ஓர் அன்னதான மண்டபத்தை அமைக்கவேண்டும் என விரும்பி. அதற்கான நிதியுதவிக்காக இந்து மாமன்றத்துடன் தொடர்பு கொண்ட போது அங்கு அத்தகைய ஒரு மண்டபம் அமைவதன் நோக்கம் அதன் குறிக்கோள், செயற்பாடுகள் என்பவைகளை கருத்திற்கொண்டு மாமன்றம் நிதியுதவி செய்திருந்தது. ஏ-9 நெடுஞ்சாலை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் இந்து மக்களுக்கு மிகவும் பயன் தரும் வகையில் அந்த மண்டபம் அமைய வேண்டும். என்பதில் மாமன்றம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. பயணம் மேற்கொள்ளும் இந்து மக்கள் தங்கி உணவருந்திச் செல்வதற்கு வசதியாக இந்த மண்டபம் அமைவதில் ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும் பெரும் கவனம் செலுத்தி கலாசார அன்னதான மண்டபமாக இது தோற்றம் பெற்றிருப்பது ஒரு வரலாற்று நிகழ்வாக அமைந்திருக்கிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் எதிர்பார்ப்புக்கும் விருப்பிற்கும் ஏற்ற வகையில் சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு அண்மையாக நல்லதொரு ஆன்மீக சிந்தனையைத் தோற்றுவிக்கும் சூழலில் அமைந்துள்ள கலாசார அன்னதான மண்டப திறப்பு விழாவை ஒட்டி மாமன்றத்தின் சார்பாக இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கலாசார அன்னதான மண்டபம் ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் தீவிர பராமரிப்பில் சிறப்பாக இயங்கவேண்டும் என்பதுடன் இந்த மண்டபத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் சகல இந்துப் பெரு மக்களும் தாங்கள் விரும்பும் பட்சத்தில் தங்களால் இயன்ற நிதியுதவியைச் செய்து மண்டபம் நல்ல வகையில் பராமரிக்கப்படுவதற்கு ஒத்துழைப்பை வழங்கலாம். மண்டபத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் இந்து மக்களது பிரதியுபகாரமாக இதனைக் கருத முடியும்.

**வே. கந்தசாமி**

உ
சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும்,
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கக் காப்பாளருமாகிய,

**திருமிகு. சின்னத்துரை தனபாலா,**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

விநாயகப் பெருமானின் திருவருள் துணைகொண்டு ஆரம்பிக்கும் எந்தவொரு கருமமும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறும். நாம் விநாயகப் பெருமானை வெவ்வேறு வடிவங்களில் போற்றி வணங்கி வருகின்றோம். வவுனியா நகரில் சிந்தாமணி விநாயகராக எழுந்தருளி அடியார்களின் வெவ்வினையை வேரறுத்து வருகின்றார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர், விநாயகப் பெருமானின் திருவருள் துணைகொண்டு பல்வேறு சமய, சமூக நலப் பணிகளை ஆற்றி வருவதை நாம் அறிவோம். அந்த வகையில் ஒன்றாகவே அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் தோற்றம் பெற்றிருக்கும் கலாசார அன்னதான மண்டபம் விளங்குகின்றது. வவுனியா நகரில் வாழும் இந்துப் பெருமக்களுக்கு மட்டுமல்ல ஏ-9 நெடுஞ்சாலை ஊடாக பயணம் மேற்கொள்ளும் பொது மக்களுக்கும் பெரிதும் உதவும் வகையில் இந்த மண்டபம் அமைந்திருப்பது ஒரு சிறப்பான விடயமாகும்.

முற்றுமுழுதாக சமூக நோக்கின் அடிப்படையில் வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்ட பெரு முயற்சியினாலேயே இந்த மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சிறப்பாகச் சொல்லலாம். மாணவர்களின் அறநெறிக் கல்விப் போதனைக்கும், சமய கலாச்சார நிகழ்வுகளுக்கும், அன்னதான

செயற்பாடுகளுக்கும், இந்த மண்டபத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக இந்து மக்களுக்கு ஓர் உயர்ந்த சேவையை வழங்குவதில் ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபை முன்னிற்கிறது.

கடந்த காலங்களில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களிலும் மருத்துவமனைகளிலும் தங்கியிருந்த பொது மக்கள், முதியோர் இல்லங்களில் தங்கியிருந்தவர்கள் என்போருக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் அங்கு நேரில் சென்று பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய வேளையிலும், நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த இந்துமத குருமார்களுக்கு உணவு வழங்கிய விடயத்திலும், பின்னர் அவர்களைப் பொறுப்பேற்கும் விடயத்திலும், வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் இந்து மாமன்றத்திற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியிருப்பதன் மூலம் அவர்களது பெரும் பங்களிப்பை இச்சந்தர்ப்பத்தில் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் தீவிரமான பங்களிப்பும், நிர்வாகச் செயற்பாடும் ஆலயத்தின் சிறப்பான வளர்ச்சிக்கும் அதன் ஊடான சேவைகளுக்கும் பெரிதும் காரணமாகவிருப்பதை பாராட்டுவதுடன் பரிபாலன சபையின் சேவைகளும் செயற்பாடுகளும் மேலும் சிறப்பான வகையில் வளர்ச்சி பெற வேண்டும் எனவும் திருவருள் துணைகொண்டு வாழ்த்துகிறேன்.

**சி.தனபாலா,**

உ
சிவமயம்

*முன்னாள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும்,*
*முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும்*
*ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபைக் காப்பாளருமான*

**இராச மனோகரி புலந்திரன்**

*அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

பிள்ளையார் சுழி! போட்டு "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை உச்சரித்து, நாம் செய்யும் கருமங்கள் யாவும் உன் செயலே இறைவா! நாம் கூறும் ஒவ்வோர் சொல்லும் செயலும் நீயே பிள்ளையாரப்பா.

சிந்தாமணி விநாயகரின் அருட்கடாட்சம் நிறைந்த அருட்பார்வை வவுனியாவின் வளர்ச்சிக்கு அத்திவாரமாக எழுந்தருளியிருக்கும் கலாச்சார மண்டபமும், அன்னதான சாலையும் பெருவிருட்சமாக நகர மத்தியில் அமைந்திருப்பது நம் மக்கள் செய்த அரும் பாக்கியமே. தானத்தில் சிறந்த தானம் அன்னதானம், என்பார்கள். எத்தனையோ வருடங்களாக பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் அன்னதானம் வழங்கி வந்த விநாயகர் ஆலய சபையினரின் விடா முயற்சியால், விநாயகரின் அருட்பார்வையில் சிறந்த ஓர் அன்னதான சாலை அமையப்பட்டுள்ளது. இது நம் மக்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியமே! கலாசார மண்டபத்தை ஓர் நோக்கில் திரும்பிப் பார்த்தால் ஸரிகமபதனி, என்ற ஏழு ஸ்வரங்களுக்குள் அடங்கியது தான் மனித வாழ்வு. எமது கலாசார பின் அடைவுக்கு பொருத்தமான சூழல் அமையாமல் போனதும் ஓர் காரணமாகும்.

இன்று எமது கலாசார விழுமியங்களை விழிப்புணர்வோடு கட்டி காக்க ஓர் கலாசார மண்டபம் நகர மத்தியில் அனுகூலமாய் இருப்பது பெரும் பாக்கியமாய் கருத வேண்டும்.

ஓம் என்ற ஓங்காரத்தில் ஏழுலகையும் ஆளும் விநாயக போற்றி, ஏழுபிறப்பிலும் உன்னை மறவா வரம் வேண்டும். விநாயகா. அன்பே வாழ்வின் சக்கரமாய் உணர்த்தி மாங்கனி பெற்ற பிள்ளையாரே போற்றி. மனிதனாக பிறந்தவர்களின் நிலை தடுமாறும். உள்ளங்களை

ஒருங்கிணைப்பதற்கு இலக்கணமாக விளங்கப் போகும் இக் கலாசார மண்டபம், கட்டுக்கோப்பான வாழ்வை வளம் படுத்தும் முகமாக இணையில்லா செயலூக்கத்தின் விழிப்புணர்வாக கலாசார விழுமியங்களை செயல்படுத்துவதற்கு

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்னும் குறள் மந்திரத்தை அச்சாணியாக ஆணித்தரமாக செயல்படுத்த சிந்தாமணி விநாயகரை நம்பினோர் கைவிடப்படார் என்னும் உவகையுடன் ஒவ்வோர் பௌர்னமி தினத்திலும், அறிஞர், ஆசிரியர்கள், மழலை செல்வங்கள் ஆகியோரின் கலாசார நிகழ்வுகள் பேருரைகள் மங்களகரமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உணர வைப்பதற்கு சிறந்த ஓர் மண்டபமாக வியாபித்திருக்கிறது.

ஓவென்று கூவிஅழைத்து வருவதல்ல கலாசார பண்பு என்பதை உணர்வு பூர்வமாக தெளிவு படுத்தி செயலூக்கத்தால் நடைமுறைப்படுத்துவதே நம் கலர்சாரம்.

ஓங்காரமாய் ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் ரீங்காரம் வவுனியாவில் மட்டும் அல்லாமல் நாடளாவிய ரீதியில் வியாபித்து இந்து மக்களின் மனம் குளிர வைக்க சிந்தாமணி விநாயகர் அருள் வேண்டி அன்பு நல் வாழ்த்துக்களை பணிவுடன் கூறுகிறேன்.

**இராச மனோகரி புலந்திரன்**

உ
சிவமயம்

*வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர்*

**திருமிகு. தி. இராசநாயகம்**

*அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

வடக்கிலே வளம் பொங்கும் வவுனியா மாநகரில் சிந்தை மகிழ்ந்திட சைவம் தழைத்திட எந்தைப் பெருமான் விநாயகனாம், அவன் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் சித்தத்தின் விளைவாக, அவன் சிறப்பையெல்லாம் அவனியெங்கும் மணம் பரப்ப எண்ணம் கொண்டு, சைவ வரலாற்றில் தானும் தடம் பதித்த ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் பெருமையை எடுத்தியம்பும் சிறப்பு மலராம் "சிந்தாமணி" எனும் இந்நூல் இந்துக்கள் மனங்களில் என்றென்றும் நிலைத்திட இறைவனை வேண்டுகின்றேன்.

அவனின்றி அணுவும் அசையாது என்று ஆன்றோர் அருளியது, சிவனின் மைந்தனாம் ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் பக்தர்களின் வரலாற்றில் அத்துணை உண்மையென்பது அனைவரும் அறிந்த உண்மை.

ஆலமர நிழலினிலே தன் இருப்பிடத்தை ஆரம்பித்து. நாம் செய்த நற்பலன்களின் பேறாக, அபிவிருத்திப் பணிகள் ஈடேறி, கால ஓட்டத்திலே கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு, வானோங்கக் காட்சி தந்து அருள் பாலிக்கும் அவன் புகழ், சீலமெங்கும் பரவிட சிந்தை கொண்டு இந்நூல் சமர்ப்பணம் செய்யப்படுகின்றது.

தானங்களில் சிறந்தவற்றில் அன்னதானம் ஒன்றாகும். அதன் பலனை அடியார் பெற்றிட அருள் கொண்டு அமைக்கப்படும் அன்னதான மண்டபம், அடியவரை என்றென்றும் வரவேற்கும் என்பதில் ஐயமேதும் இல்லை. சைவ மரபின் வழிவந்த கலாச்சாரப் பண்பாடுகளையும் வரவேற்கும் பொருட்டு, சிந்தாமணி விநாயகரின் திருவடிகளில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ள அன்னதான கலாச்சார மண்டபம் எந்நாளும் சைவ மணம் பரப்பி நிற்க அவன் பாதம் வேண்டித் தொழுகின்றேன்.

இந்துக்களின் நலன் கருதி வெளியிடப்படும் இந்நூலின் பூரணத்திற்கு தம்மை அர்ப்பணித்த ஆண்டவனின் அடியார் அனைவரும் அவனியில் சிறப்புக்கள் யாவும் பெற்று சீருடன் வாழ நிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

**தி. இராசநாயகம்**

மாகாணப் பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்

வவுனியா மாவட்ட
அரசாங்க அதிபர் திருமதி.P.S.M சாள்ஸ்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

மதங்கள் அனைத்துக்கும் அடிநாதமாக விளங்குவது அன்பு. அன்புதான் இன்ப வாழ்க்கை. அன்புதான் உலகமகா சக்தி. உலகத்தில் இன்றுவரை நின்று நிலவும் சமயங்கள் அனைத்தும் அன்பு, கருணை, பொறுமை, அடக்கம், அஹிம்சை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டேயமைந்தவை.

தமது சமூக கலாசார விழுமியங்களின் தனித்துவங்களைப் பேணாத எந்த இனமோ மதமோ நின்று நிலைத்திட முடியாது. அந்தவகையில் இந்துமதத்தில் மகேஸ்வர பூசை எனச் சிறப்பிக்கப்படும் அன்னதானம் வழங்கவும், இந்து சமய, தமிழ்க் கலாசாரத்தைப் பேணி வளர்க்கவும் வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர ஆலய பரிபாலன சபையினர், கலையம்சம் திகழும் நவீன வசதிகளைக் கொண்ட புதியதொரு மண்டபம் அமைத்து 22.10.2010ல் திறப்பு விழா நிகழ்த்தவுள்ளனரென்பதறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

சமயப்பணியோடு சமூகப்பணியையும் இணைத்துச் செயற்படுவார்களெனின், மண்டபத்தின்பயன்பாடும் நோக்கமும் மேம்பாடுடையதாகும் என்பது எனது நம்பிக்கை.

மண்டபத் திறப்பு விழா இனிதே நிறைவேற
எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

மாவட்டச் செயலகம்
வவுனியா
19.10.2010

**திருமதி.P.S.M சாள்ஸ**
அரசாங்க அதிபரும்
மாவட்டச் செயலாளரும்

உ
சிவமயம்

*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்*
*பணிப்பாளர்*
**சாந்தி நாவுக்கரசன்**
*அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய அன்னதான / கலாசார மண்டபத் திறப்பு விழாவில் வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய சூழ்நிலையில் இந்து சமயம், கலாசாரம் என்பன பல சவால்களை எதிர் நோக்கியுள்ளது. அந்த சவால்களை எல்லாம் முறியடித்து வீறு கொண்ட ஒரு இந்து சமுதாயத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இந்துக்களாக வாழுகின்ற பலர் தாம் கைக்கொள்ளும் சமயத்தின் உயர்ந்த பண்புகளை, அதனுள் ஊடுருவி நிற்கும் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை, கலை, கலாசார விழுமியங்களை அறிந்திலர்.

ஆலயங்கள் இத்தகைய கலாசார மண்டபங்களை அமைத்து எமதுசமுதாயத்தின் மேம்பாட்டிற்கான விழுமியங்களை மக்கள் மத்தியில் புகுத்துவதற்கு சிறந்த ஒர் அடித்தளத்தை அமைத்து விடும். இங்கு இடம் பெறும் ஆன்மீக சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், குரு பூசைகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் என்பன இந்து சமூகத்திற்கு ஓர் புத்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழா மிகச் சிறப்பாக இடம் பெற்று இந்து சமூகத்திற்கு அரியபல கைங்கரியங்களை செயல்ப்படுத்த வேண்டுமென நான் மனதார வாழ்த்துகின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன**

உ
சிவமயம்

வவுனியா நகரசபைத் தலைவர்

**திருமிகு. எஸ். என். ஜி நாதன். ச. நீ. உ. ப. நீதிபதி**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வவுனியா மாவட்டத்தில் முதன் முதலாக மகோற்சவப் பெருவிழாவை நடத்திய பெருமைக்குரிய சிறப்புப் பெற்ற வரலாற்றுப்பின்னணியைக் கொண்ட வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம், கலாச்சார அன்னதான மண்டபத்தை அழகொளிர அமைத்திருப்பதைக் கண்டு மனமகிழ்கின்றேன். மேற்படி மண்டபத்தை அமைப்பதற்கு அனுசரணை வழங்கிய அகில இலங்கை இந்துமா மன்றத்தினரின் அளப்பரிய சேவையையும் பாராட்டி நிற்கின்றேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இம்மண்டபத் திறப்புவிழாவில் "**சிந்தாமணி**" எனும் சிறப்பு மலரை வெளியிடுவது மிகவும் சிறப்பம்சமாகும். இம்மலருக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் பேரானந்தமடைகின்றேன்.

இவ்வாலயத்தில் பதிகொண்டிருக்கும் வினைதீர்க்கும் விநாயகப் பெருமானின் ஆசி பெற்று, அறங்காவற் சபையினரின் சேவையால் பல்லாயிரம் பக்தகோடிகள் ஆன்மீக ஞான வளர்ச்சியில் திளைத்து வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் ஆசிவேண்டி அவர் பாதம் சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

நகராண்மைக்கழகம் **எஸ். என். ஜி. நாதன்** (ச.நீ, உ.ப.நீதிபதி)
வவுனியா. நகர பிதா.

உ
சிவமயம்

வவுனியா பிரதேச செயலாளர்

## திருமிகு. அ. சிவபாலசுந்தரன்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

### நல்ல சிந்தனையுடன் கூடிய திருப்பணி

வவுனியா வெளிவட்டவீதியில் எழுந்தருளி தஞ்சமென தன்னைநாடிவரும் அனைத்து அடியார்களினதும் வழிபாட்டிற்கும், ஆன்மீக ஈடேற்றத்திற்கும் மூலகாரணியாக விளங்குகின்ற அருள்மிகு ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் கலாசாரமண்டபத்திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெரும் ஆனந்தம் அடைகின்றேன்.

ஆலயங்கள் வெறுமனே வழிபாடு,திருவிழாக்கள் நடைபெறும் இடங்களாக மட்டுமன்றி குறித்த சமய நெறியை பின்பற்றுகின்ற அனைவரினதும் அன்றாட வாழ்வியற் கருமங்களுடனும் தொடர்புபடவேண்டும். குறிப்பாக ஆலயத்தை அண்டியுள்ள மக்களின் கலை கலாசார மேம்பாட்டிற்கும் தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்க ஆலயங்கள் முன்வரவேண்டும். இவ்வாறானதொரு தொடர்பின் மூலமே சமயநெறி தனது நிலைபேற்றினைப் பெறமுடியும்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சோழமன்னர்களின் ஆட்சிக்காலத்தில் ஆலயங்களை அண்மித்ததாக கலாசாரமண்டபங்கள் எழுச்சி பெற்ற வரலாற்றினை நாம் காண்கின்றோம். அந்த வரலாற்றுப்பாடத்தின் பின்புலத்தில் வவுனியா மாவட்டத்திலும் ஆலயங்களை அண்டியதாக கலைவளர்க்கும் கலாசார மண்டபங்கள் எழுச்சிபெற்றுவருகின்றன. கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயம், பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம், வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ள கலாசாரமண்டபங்களும், வவுனியா கந்தசாமி ஆலயம், குருமன்காடு காளியம்மன் ஆலயம் ஆகியவற்றில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசாரமண்டபங்களும் இவற்றிற்கு தக்கசான்றுகள் என்றுதான் கூறவேண்டும்.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசாரமண்டபங்கள் மக்களின் அன்றாட வாழ்வுடன் தொடர்புபடும் வகையில் கலைசார்ந்தவகுப்புக்கள், அறநெறிப்பாடசாலைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கு பயன்படுத்தப்படல்வேண்டும். அத்துடன், ஆலயத்தை அண்டியுள்ள மக்கள் தினமும் ஒன்றுகூடி இத்தகைய மண்டபங்களில் எதாவதொரு நிகழ்வை நடாத்தவேண்டும் என்பது எனதுவேணவா.

இந்தவகையில் வவுனியா வெளிவட்டவீதி சிந்தாமணி விநாயகர் ஆலயபரிபாலன சபையினர், நல்ல சிந்தனையுடன் கூடிய திருப்பணியாக பெரும்நிதிச்செலவின் மத்தியில் நிர்மாணித்திருக்கும் கலாசாரமண்டபத்தின் மூலம் சிறப்புமிகு கலாசாரசேவையை ஆற்றுவதற்கு எல்லாம்வல்ல அருள்மிகு சிந்தாமணி விநாயகர் அருள்பாலிக்க வேண்டும் எனப்பிரார்த்தித்து அமைகின்றேன்.

**அ. சிவபாலசுந்தரன்**

உ
சிவமயம்

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர்

மக்கள் சேவை மாமணி

**திருமிகு. நா. சேனாதிராசா. ச. நீ**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையால் நிருமாணிக்கப்பெற்ற அன்னதான / கலாசார மண்டபத் திறப்பு விழாவிற்கான வாழ்த்துரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். குறுகிய கால சரித்திரத்தைக் கொண்ட இந்த ஆலயம், இங்கே எழுந்தருளி இருக்கின்ற சிந்தாமணி விநாயகரின் மேலான அருளாலும், பரிபாலன சபையினரின் அயராத உழைப்பாலும் குறுகிய காலத்தில் அபரிமிதமான வளர்ச்சி கண்டிருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பரிபாலன சபையினரின் அதி உச்ச செயற்பாட்டினாலும், முயற்சியாலும், இன்று ஒரு பாரிய மண்டபத்தை அமைத்து அதை மக்கள் பாவனைக்கு விடுவது வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியதே. இம்மண்டபம் அன்னதான / கலாசார மண்டபமாகப் பெயர் சூட்டினாலும் இது ஒரு திருமண மண்டபமாகவே என் கண்முன் தோன்றுகின்றது. அழகான, வேலைப்பாட்டுடனும், இந்து கலாசாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும், திராவிடக்கலை அம்சத்துடனும் கூடியதுமான இம்மண்டபம் பல தேவைகளுக்கும் பயன்படக்கூடிய ஒரு பலநோக்கு மண்டபமாக எதிர் காலத்தில் திகழும் என நான் கருதுகின்றேன்.

காலத்தின் தேவை அறிந்து இம்மண்டபத்தை அமைக்க உதவிய அகில இலங்கை இந்துமாமன்றத்தினருக்கும், பரிபாலன சபையினருக்கும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் சார்பாக எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் அருள் என்றென்றும் எல்லோருக்கும் கிடைக்க விநாயகப் பெருமானை வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி

**நா. சேனாதிராசா**

உ
சிவமயம்

வவுனியா இந்துமாமன்றத் தலைவரும், வவுனியா
மணிவாசகர் சபைத் தலைவருமாகிய
இறைபணிச்செம்மல், திருவாசகச்செல்வர்,

**திருமிகு.வை.செ.தேவராசா. அ.இ. ச.நீ**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வவுனியா வெளிவட்ட வீதி சிந்தாமணி விநாயகர் ஆலயம் புதிதாக பலலட்சம் ரூபா செலவில் ஆலயத்துக்கு அருகாமையில் அமைத்துள்ள கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழாவினைக் காணும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

சிந்தாமணி விநாயகர் ஆலயம் ஒரு சிறிய கொட்டிலாக இருந்த போது அதில் வழிபாடு செய்தவர்கள் அனேகமானவர்கள் அரச ஊழியர்களாகவே இருந்தார்கள். இவர்களில் முக்கியமானவர்களாக திரு.கே.கணேஷ் அவர்கள். திரு.ச.நாகராசா (காணி உத்தியோகத்தர்) அவர்கள்.திரு.பொன்னம்பலம் (மாவட்ட காணி உத்தியோகத்தர்) அவர்கள், திரு.பாலசிங்கம் (கச்சேரி) அவர்கள், திரு.கனகசிங்கம் (பிஸ்கால் உத்தியோகத்தர்) அவர்கள், திரு.பத்மநாதன் (கச்சேரி)அவர்கள். மற்றும் திரு.தனபாலசிங்கம்(கல்வித்திணைக்களம்) அவர்கள். போன்றவர்கள் இச்சிறிய கிடுகினால் வேய்ந்த கொட்டிலில் ஓர் விநாயகர் சிலையை வைத்து வழிபட்டார்கள். அந்த இடம் ஒரு பாலைமரத்தடியாக இருந்தது.

பின்னர் திரு.கணேஷ் அவர்களும் திரு.நாகராசா அவர்களும் என்னிடம் வந்து இந்த ஆலயத்தை 10அடி x 6அடி கொண்ட ஒரு சிறிய ஆலயமாக ஒடு போட்டு கட்டித்தரும்படி வேண்டிக் கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளிற்கமைவாக நான் அதனைச் செய்து கொடுத்திருந்தேன். இச்சந்தர்ப்பத்தில் அந்த நிகழ்வை நினைவு கூருகின்றேன். சிலவருடங்களின் பின்னர் இந்த ஆலயத்தினை அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.தா.சிவசிதம்பரம் அவர்களும், திரு.நாகராசா அவர்களும், திரு.கணேஷ் அவர்களும், கிராம சேவையாளர் திரு.விசாகப் பெருமாள் அவர்களுடன் இன்னும் பலருடன் நானும் சேர்ந்து கோவிலாகக்கட்டி கும்பாபிஷேகம் செய்தோம். கும்பாபிஷேகத்திற்கு

என்னால் முடிந்த பல உதவிகளைச் செய்து சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றிருந்தமையினை இவ்விடத்தில் நான் நினைவு கொள்கிறேன். இதன் பின்னர் இக்கோயிலில் 15 வருடங்களுக்கு மேலாக நிர்வாகசபை உறுப்பினராக இருந்து ஆலய வளர்ச்சியில் மிகவும் பங்கு கொண்டுள்ளேன். அவ்வேளையில் திரு.முருகையா (புகையிரத நிலைய ஊழியர்) அவர்களுடன் நானும் இணைந்து ஆலயத்திற்கு நித்திய பூசைசெய்வதற்கு வவுனியா நகரில் வர்த்தகர்களிடம் ஒரு நாளைக்கு ரூபா5.00 வீதம் வாங்கி அன்றைய கஸ்டங்களைப் பூர்த்தி செய்திருந்தோம். 1990ம் ஆண்டுக்குப் பின்னரும் அதற்கு முன்னரும் பலருடைய உதவிகளைப் பெற்று இவ் ஆலயம் வளர்ச்சி கண்டுள்ளது.

அத்துடன் வவுனியா நகரில் உள்ள கோவில்களில் முதன்முதலில் தேர் ஓடிய ஆலயம் என்ற பெருமையினை இவ்வாலயம் பெறுகின்றது. அத்துடன் இவ்வாலயத்தில் பல புராண விரிவுரைகள், திருவாசக முற்றோதல்கள் மற்றும் கந்தபுராண விரிவுரைகள் என பல சமய நிகழ்வுகளை நடாத்தி சிறப்புப்பெற்று விளங்குகின்றது.

இவ்வாறு பெருமையும் சிறப்பும் பெற்றுள்ள இவ்வாலயத்திற்கு இந்த அன்னதான மண்டபம் அமைப்பதற்கு கொழும்பு இந்துமாமன்றம் பேருதவியை வழங்கியதையிட்டு நான் அவர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இம் மண்டபம் அன்னதான மண்டபமாக மட்டும் இயங்காமல் சமய சமூக வளர்ச்சிகளுக்கும் பயன்படவேண்டும் என எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**வை.செ.தேவராசா.**

உ
சிவமயம்

வவுனியா இந்துமாமன்றச் செயலாளர்

சிவநெறிப்புரவலர்

**திருமிகு. சி. ஏ. இராமஸ்வாமி**

அவர்களின்

---

## வாழ்த்துச் செய்தி

" எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின் "

இவ்விதமாகத் திருவள்ளுவப் பெருந்தகை திருவாய்மலர்ந்தருளி உள்ளார் இங்கே சிந்தாமணி விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் உறுதியான மனங்கொண்டு சிந்தாமணி விநாயகர் திருவருளால் அழகான சிறப்பான திருமண மண்டபத்தை அல்லது கலாச்சார மண்டபத்தை அமைத்து பெருமைக்கு உரியவர்கள் ஆயினார். போர்ச்சூழலும் நிலவிய காலத்திலும் பெரு முயற்சி செய்து தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டனர். பெருமைக்கும் உரியவர்கள் ஆயினர். அயராது உழைத்து வெற்றி கண்ட ஆலய நிர்வாகத்தினரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் வவுனியா இந்துமாமன்றம் பெரும் மகிழ்ச்சி அடைகிறது.

20.12.2009

**சி. ஏ இராமஸ்வாமி**

உ
சிவமயம்

*சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்*

**திருமிகு. இ. நித்தியானந்தன் M.A**

*(மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கச்சேரி, வவுனியா)*

*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

**இந்துக்கலைகளின் களஞ்சியம்**

வவுனியா வெளிவட்டவீதி அருள்மிகு ஸ்ரீசிந்தாமணிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்று திறப்புவிழாக்காணும் கலாசார மண்டபத்தின் திறப்புவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சிப்போக்கில் இன்று முக்கியமான நாள். மக்களின் ஆன்மீகப்பசிக்கு வழிபாடுகள், பிரார்த்தனைகள் மற்றும் திருமுறைஓதல்,புராணபடனம் முதலியனவற்றின் மூலம் விருந்தளித்துவந்த இந்த ஆலயம்,இன்று தனது அடியவர்களின் கலைப்பசியை தீர்ப்பதற்கும் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதும்,வரவேற்பிற்கும் உரியதாகும்.

ஆலயங்களைப் பரிபாலனஞ் செய்வதும், அவற்றில் திருப்பணிகள் மேற்கொள்வதும் இலகுவான காரியமன்று. பொருளுதவி, நிதியுதவி, உடலுதவி என்பவற்றுக்கும் மேலாக இறையருள் கூடிநிற்கும் சமயத்திலேயே இத்தகைய கலாசார மண்டபங்களை நிறுவியிருக்கமுடியும். வெறுமனே கட்டிடமாக மட்டுமன்றி இந்து சமயத்தின் சிற்பக்கலை, ஓவியக்கலை மற்றும் இதிகாச புராணக்கதைகளைப் புலப்படுத்தி நிற்கும் கலைக்கூடமாக இந்த கலாசாரமண்டபம் விளங்குவது சிறப்பிற்குரியதாகும்.

கிடைத்தற்கரிய மானிடப்பிறவியெடுத்த நாங்கள், எமது வாழ்நாளில் ஒவ்வொரு கணப்பொழுதையும், பயனுறுதியுடையதாகவும், அர்த்தபுருட்சயம் மிக்கதாகவும் செலவிடவேண்டும். குறிப்பாக, இறைகாரியங்கள் மற்றும் சுபகாரியங்கள் தொடர்பில் நாம் செலவழிக்கும் ஒவ்வொரு கணமும் எமக்கு நித்தியப் பேரின்ப வாழ்வைத் தரக்கூடியன என்று அறிஞர்கள் விளம்பியிருக்கின்றனர். குறிப்பாக, ஈழத்தின் மூத்தசிவாச்சாரியர்களில் ஒருவரான அமரர் நயினை சிவஸ்ரீசுவாமிநாதபரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் **ஆலயம் ஒன்றின் திருப்பணியுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் பாக்கியசாலிகள்** எனக்கூறியிருப்பதை இந்தத் தருணத்தில் நான் எண்ணிப்பார்க்கின்றேன்.

இந்த வகையில், கலாசார மண்டபத்தை நிர்மாணித்து, இதன்மூலம் கலைச்சேவையை ஆற்ற முன்வந்திருக்கும் சிந்தாமணிவிநாயகர் ஆலய பரிபாலனசபையினரை மனதார வாழ்த்துவதுடன், அவர்களது பெருமைமிகுபணிக்கு இறையருள் துணைநிற்கவேண்டும் எனப்பிரார்த்தித்து அமைகிறேன்.

**இ. நித்தியானந்தன்**

உ
சிவமயம்

*திருகோணமலை*

**திருமிகு. பொ. கந்தையா (காந்தி ஆசிரியர் )**

*அவர்களின*

## வாழ்த்துச் செய்தி

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி ஆலயத்திற்கு அன்னதான மண்டபமும் கலாசார மண்டபமும் திறப்பு விழா நடைபெறுவதறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைதலே ஆகும் என்று ஈழத்திருநாட்டில் சைவத்தையும் தமிழையும் கட்டிக் காத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அருளுரை வழங்கியுள்ளார்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று, என்றும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள்.

ஆலயம் அவ்வூரில் உள்ள மக்களை வழிநடத்த வேண்டும். கோயில் குருக்கள் மாரும் நிர்வாகிகளும் அதற்குப் பொறுப்பாயிருக்க வேண்டும் வெளிச்ச வீடு கப்பலுக்கு வழிகாட்டுவது போல ஆலயம் அங்குள்ள குடிமக்களுக்கு ஆன்மீக மார்க்கத்தை நாவலர் பெருமான் அருளிய கடவுளை அடையும் வழியைக் காட்ட வேண்டும்.

ஆலயத்தில் பூசைகள் அர்ச்சனைகள் விழாக்கள் நடத்தினால் மட்டும் போதாது. மக்களையும், பிள்ளைகளையும் ஆலயத்திற்கு வரச் செய்து சமய பாட வகுப்புக்கள் கூட்டுப் பிரார்த்தனைகள் பிரசங்கங்கள் நடத்தி ஆன்மீக வழிக்கு மக்களை இழுக்க வேண்டும்.

ஆலயத்திற்குப் பக்கத்தில் சமய சமூக நீதி நூல்கள் கொண்ட வாசிகசாலைகள் நூல் நிலையங்கள் இருக்க வேண்டும். மக்கள் அங்கு சென்று நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது பெரியோர் வாக்கு.

பட்டத்துக்கும் பதவிக்கும் பணத்துக்கும் மட்டும் படிப்பதோடு நில்லாது, கடவுளையும் சமயத்தையும் பற்றிப் படித்து கடவுளின் பிள்ளைகளாக வாழ வேண்டும்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர். அன்னதானம் செய்து ஏழைகளின் சிரிப்பில் கடவுளைக் காணவேண்டும். சாதி சமய வேறுபாடுகள் மறந்து எல்லோரையும் கடவுளின் பிள்ளைகளாக மதித்து வாழவேண்டும். பசித்தோர் முகம் பார் என்னும் பழமொழி உண்டு. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று பாடிய வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் பாடலை நினைத்தாவது பசித்தோர் முகம் பார்த்து வாழுங்கள். திறப்பு விழா இனிது நடைபெறவும் மக்கள் கடவுளை அடையும் வழியில் வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*
*ஆனந்தம்*

முத்துக் குமார சுவாமி கோயிலடி
திருகோணமலை
26.12.2009

**பொ. கந்தையா**

உ
சிவமயம்

## திருமிகு.பொ. நல்லையா

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

### இன்னும் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும்

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் 1986ம் ஆண்டு பங்குனித்திங்கள் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று அவ்வருடம் ஐப்பசி மாதம் புதிய பரிபாலன சபை தெரியப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் சித்திரை மாதப் பௌர்ணமித்திதியை தீர்த்தோற்சவமாகக் கொண்ட பத்து தினங்கள் மஹோற்சவம் செய்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்காகிய ஒழுங்காக சரசாலை சிதம்பர விநாயகர் ஆலயத்தில் முன்பு பாவிக்கப்பட்ட கட்டுத்தேர்த் தளபாடங்கள் பொருளாளர் திரு.அருந்தவராசா அவர்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்டது. புதிய கொடிமரமும் நிறுத்தப்பட்டது. தேர்ச்சகடையும் செய்யப்பட்டது. தற்காலிக கொட்டகைகளாக வசந்த மண்டபம், முன்கொட்டகைகள், யாகசாலை, ஆகியன ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றுடன் தீர்த்தக்கேணியும் அமைக்கப்பட்டது. திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. வவுனியாவிலே முதன்முதலாக நடைபெற்ற தேர்த்திருவிழாவையும் தீர்த்தத் திருவிழாவையும் கண்டு களிக்க ஏராளமான பக்தர்கள் வந்து கூடினார்கள். தீர்த்தோற்சவ தினத்தன்று அன்னதானமும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அடியார்கள் வழங்கிய திருப்பணி நிதியைக் கொண்டு நிலையான வசந்தமண்டபம், யாகசாலை, கும்பமண்டபம், தம்பமண்டபம், மடப்பள்ளி, காரியாலயம், களஞ்சிய அறை, குருக்கள் அறை, காரியாலய உதவியாளர் விடுதி, உள்வீதிக்கமைவான சுற்றுமதில் சுற்றுக் கொட்டகை ஆகிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

பரிவார மூர்த்திகளான வள்ளி, தேவசேனா சமேத சிவசுப்பிரமணியர், மகாலட்சுமி, சண்டீஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கான ஆலயங்கள் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகங்களும் இனிதே நிறைவேறின.

தொடர்ந்து வந்த திருப்பணி வேலைகளாக எம் பெருமானுக்கான அழகிய சித்திரத்தேர் சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த சிற்பக் கலாரத்தினம் திரு.கி.கலாமோகன் அவர்களால் உருவாக்கப்பட்டு அதற்காகிய தேர்முட்டி

கொட்டகை என்பனவும் ஸ்தாபிக்கப்பட்டு 2001ம் ஆண்டு தேர் வெள்ளோட்ட விழாவும் நடைபெற்று எம்பெருமான் அழகிய சித்திரத்தேரிலே பவனிவரும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை அடியவர்கள் எல்லோரும் கண்டு களித்தனர். தொடர்ந்து அடியார்கள் வழங்கிய திருப்பணி நிதியிலே ஆலய பூசகர்களுக்கான தொடர் மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு, அவர்கள் அந்த விடுதிகளில் தங்கியிருந்து அதிகாலை 5.30 மணிக்கு நடைபெறுகின்ற திருப்பள்ளி எழுச்சிப் பூசை, காலை 6.30 மணிக்கு நடைபெறும் உதயகாலப் பூசை, நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் உச்சிக்காலப்பூசை, பிற்பகல், 5.00 மணிக்கு நடைபெறும் மாலைப்பூசை ஆகியனவற்றைக் காலம் தவறாது திறம்படச் செய்து வருகின்றார்கள்.

இவற்றையெல்லாம் தனது திருவருட் தன்மையினாலே நிறைவேற்றிய ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமான் தனக்காகிய ஒரு அன்னதான மண்டபம் நிர்மாணிக்கப்பட வேண்டும். என்ற திருவருளினால் ஆலயத்திற்கு முன்பாக ஒரு காணியைத் தனக்காக்கிக் கொண்டார். அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பேருதவியுடன் அடியார்களின் மனம் நிறைந்த அன்பளிப்புக்களாலும் அக்காணியிலே அழகிய சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஓர் பிரமாண்டமான அன்னதான மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு இன்றைய தினம் அதற்காகிய திறப்பு விழாவும் இனிதே நடைபெறத் திருவருள் கூடியுள்ளதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவைபோல எம்பெருமானுடைய ஆலயத்திற்கு வரும் அடியார்கள் முதலாவதாக வணங்கவேண்டிய இராசகோபுரத் திருப்பணியும் நிறைவேற்றுவதற்கு எம்பெருமானுடைய திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

நன்றி

ஆலய பரிபாலன சபை
1986-1993

**பொ.நல்லையா**
முன்னாள் கௌரவ செயலாளர்

உ
சிவமயம்

நயினாதீவ ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தலைவர்

**திருமிகு. ஆ. தியாகராசா**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வேண்டும் வரம்வேண்டி வருவோர்கு சிந்தாமல் சிதறாமல் வேண்டியதை வழங்க வல்லவர் சிந்தாமணி விநாயகர். வவுனியா வெளிவட்ட வீதியில் எழுந்தருளியிருந்து அருள் புரியும் எம்பெருமானின் திருவருளால்

மன்னும் மலைமகள் கையால் வருடின மாமறைகள்
சொன்ன துறை தொறும் தூப்பொருள் ஆயின தூக்கமலத்து
அன்ன வடிவின அன்புடைத் தொண்டற்கு அமுதளித்து
இன்னல்களை வள இன்னும் பரான்றன் இணையடியே

என்ற அப்பர் பெருமானின் திருவாக்கிற்கு அமைய தொண்டு செய்யவென்று அழகிய மண்டபம் ஒன்றை அமைத்து இன்று திறப்பு விழாக்கண்டு அகமகிழும் ஆலய அறங்காவலர்களின் ஆன்மீகப் பணியை அகம் மகிழ்ந்து பாராட்டுகின்றேன். 1979-1987 காலப்பகுதியில் அமைந்திருந்த இத் திருத்தலத்தின் அறங்காவலர் சபையில் அடியேனும் சிறிது காலம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்பட்டது. மிகமிக இக்கட்டான ஒரு சூழ்நிலையில் பெருமானின் கும்பாபிஷேகத்தையும் செய்து 24 நாட்களில் மணிக்கூட்டுக் கோபுரத்தையும் அமைத்து மண்டலப் பூர்த்தி விழா முடிந்ததும் நாட்டின் அப்போதைய சூழலில் பெருமாற்றம் ஏற்பட்டது. இதன் பெறுபேற்றைக் கண்டு பலரும் வியந்தார்கள்.

படிப்படியாக அமையப் பெற்ற அறங்காவலர் சபையினர் காலத்துக்குக் காலம் பல்வேறு திருப்பணிகளைச் செய்து அழகுற ஆலயச் சூழலைப் பேணியதோடு இன்று வியத்தகு வகையில் தெளிந்த மனதுடன் இன்று வரை செய்த திருப்பணிகளுக்கு எல்லாம் மகுடம் வைத்தால் போல் எமது கலாசார விழுமியங்களை உள்ளடக்கியவகையில் இரண்டு மாடிகளைக் கொண்ட அன்னதான/கலாசார மண்டபம் ஒன்றை அழகுற அமைத்து பெருவிழா எடுக்கும் இவர்களுக்கும், நிதிவழங்கிய வள்ளல் பெருமக்களுக்கும், அமைப்புக்களுக்கும் எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகனின் அருளும் ஆசியும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஆ.தியாகராசா

இளைப்பாறிய உதவி அரச அதிபர்

உ
சிவமயம்

*வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்*
*ஆலய பரிபாலன சபைத் தலைவர்*
**திருமிகு. V.S. தேவகுமாரன்**
*அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

வளமிகு வன்னியின் தலைநகராம் வவுனியா நகரில், வெளிவட்ட வீதியில் கோயில் கொண்டருளி, அடியவர்க்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் **ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்** ஆலயத்துக்கு **கலாசார மண்டபமாகவும் அன்னதான மண்டபமாகவும்** பயன்படக்கூடிய புதிய தொரு அழகுமிகு மண்டபம் அமைக்கப் பெற்று நிகழும் 22.10.2010 இல் திறப்பு விழா நிகழ எம்பெருமானின் திருவருள் பாலித்துள்ளதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்டகாலமாக இவ்வாலயத்தின் செயற்பாட்டோடு நெருங்கிய தொடர்புள்ளவனாகப் பணியாற்றிய யான் 1987 தொடக்கம் தலைவராக பணியாற்றி வருகின்றேன். ஆலயத்துக்குத் தேவையான பல முக்கிய திருப்பணிகள் இக் காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நிறைவு செய்கின்ற போது கிடைக்கும் அடியவர்களின் ஆதரவும், ஊக்கமும் மேலும் மேலும் நல்ல திருப்பணிகளை நிறைவேற்றும் வேட்கையை உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்தன.

எண்ணிக்கையில் வேறுபட்டபோதும் எண்ணத்தில் ஒன்றுபட்ட பரிபாலன சபையினரின் ஒத்துழைப்பால் இன்றியமையாத தேவையாக இருந்த **கலாசார/அன்னதான** மண்டபம் அமைக்கும் பணி 2006 இல் அகில இலங்கை இந்துமாமன்றப் பிரதித் தலைவர் **திரு.சி.தனபாலா** அவர்களாலும், இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் **திரு.க.பரமேஸ்வரன** அவர்களாலும் அத்திவாரக்கல் நாட்டப்பட்டதிலிருந்து தொடர்ந்தது.

அகில இலங்கை இந்து மாமன்றம் பெருந் தெகையான பணத்தைத் தந்துவியது. வெளிநாட்டிலுள்ள சமய நிறுவனங்கள் சில நிதியுதவி செய்து உற்சாகப்படுத்தின. உள் நாட்டிலுள்ளவர்களது அன்பளிப்புக்களாலும் நலன் விரும்பிகளது கடன் உதவிகளாலும் சுமார் இரண்டரைக் கோடி ரூபா செலவில் இம்மண்டப வேலைகள் நிறைவு செய்யப்பெற்றன. இம்மண்டபம் சமயப் பணிகளோடு சமூகப் பணிகளையும் நடத்த உதவ வேண்டுமென்பது எமது அவா.

மண்டபம் அமைப்பதற்கு, காணி வழங்கியதிலிருந்து வர்ணம் பூசுவது வரையுள்ள சகல செயற்பாடுகளிலும் பங்கேற்று பணியாற்றிய அன்பு நெஞ்சங்களுக்கு நன்றி கூறுவதோடு, திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்படுகின்ற **சிந்தாமணி** மலர் சிறப்படைய வேண்டுமெனவும் திறப்பு விழா இனிதே நிறைவுபெற வேண்டுமெனவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் போற்றித் துதித்து வாழ்த்தியமைகின்றேன்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்

தலைவர்
ஆலய பரிபாலன சபை

அன்பன்
**V.S.தேவகுமாரன**

உ
சிவமயம்

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

ஆலய பரிபாலன சபைச் செயலாளர்

**திருமிகு. ஞா. கேதீஸ்வரன்**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகும். மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ள சிறப்புத் தலமாகும். வவுனியா நகரின் மத்தியில் புகையிரத நிலையம், பஸ்தரிப்பு நிலையம், ஏ- 9 பாதை ஆகியவற்றிற்கு அருகாமையில் அரச விடுதிகளின் மத்தியில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் விநாயகப் பெருமான் மூல மூர்த்தியாக அமைந்திருப்பதுடன் மகா லக்ஷ்மி, வள்ளி தெய்வானை சமேதராக முருகப்பெருமான், நவக்கிரக நாயகர்கள், வைரவப்பெருமான் ஆகிய பரிவார மூர்த்திகளைக் கொண்டு அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் மகோற்சவப் பெருவிழா சித்திரை பூரணைத் தினத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடிய வகையில் பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றது. இவ் ஆலயத்தில் வேதாகம விதி முறைகளுக்கமைய பூசைகள் நடைபெற்று வருவது சிறப்புடையதாகும். மாதந்தோறும் சங்கடகர சதுர்த்தி, சதுர்த்தி, கார்த்திகைத் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இதனைவிட தைப்பூசம், தை அமாவாசை, சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், ஆனி மகம், ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் பெருங்கதை, திருவெம்பாவை போன்றவை பெருவிழாக்களாக நடைபெறுகின்றன. இவ்விழாக்களின் போது விசேடமாக உபயகாரர், அடியார்கள் மகேஸ்வர பூசை செய்வது சிறப்பு நிகழ்வாகும். ஆலயத்தில் தினந்தோறும் காலைப் பூசையின் போது நிரந்தர அர்ச்சனை செய்யும் அடியார்களின் பெயர், நட்சத்திரங்களுடன் அஸ்டோத்திர அர்ச்சனை விநாயகப் பெருமானுக்கு நடைபெற்று வருகின்றது. அத்துடன் மாதப் பூசை செய்யும் அடியார்களுக்கான பூசையும், மூன்று வேளைப் பூசைகளின் போதும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மார்கழி திருவாதிரை தினத்தில் ஆரம்பமாகி பங்குனி உத்தரத் தினத்தில் பூர்த்தி நிகழ்வு நடைபெறக்கூடிய வகையில் கந்தபுராணப் படிப்பும் பயன்சொல்லுதலும் காலையிலும் மாலையிலும் நடைபெற்று

வருகின்றது. கந்தபுராணப் படிப்பு பூர்த்தி நிகழ்வின் போது புராணிகர்களுக்கும் படித்த தொண்டர்களுக்கும் கௌரவம் வழங்கிச் சிறப்பிப்பது சிறப்பு நிகழ்வாக நடைபெற்று வருகின்றது. அறநெறிப் பாடசாலை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலையில் மூன்று ஆசிரியர்கள் தொண்டர்களாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். வருடந்தோறும் அறநெறி விழா நடைபெற்று வருகின்றது. இவ்விழாவில் மாணவர்களுக்கு சிறப்பு அன்பளிப்புக்கள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இம்மாணவர்களுக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சீருடை வழங்கப்படுகின்றது. அகில இலங்கை இந்துமாமன்றத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட அப்பியாசப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இவ் அறநெறி மாணவர்கள் தேசிய மட்டம், மாவட்ட மட்டங்களில் நடைபெறும் சமயப் பரீட்சைகளில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் மாணவர்களும் இப்பரீட்சைகளின் மூலம் சிறப்பு பரிசில்களை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். இவ் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் பணி என்றும் போற்றுதற்குரியதாகும்.

ஆலயப் பரிபாலன சபை ஆலயத்திருப்பணிகளோடு மட்டுமல்லாது சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவிகள் வழங்குதல், அகதிகளுக்கு உதவுதல் மற்றும் இடம்பெயர்ந்த அந்தணப் பெருமக்களுக்கு உதவுதல் போன்றன சிறப்புப் பணிகளாகும்.

ஆலயத்தில் அன்னதான மடம் இல்லாதமை பெரும் குறைபாடாக இருந்துள்ளது. மகோற்சவப் பெருவிழாவின் போது மகேஸ்வர பூசை ஆலய உள் மண்டபத்திலேயே நடாத்த வேண்டியிருந்தது. இது விதி முறைகளுக்கு முரண்பட்டதான செயற்பாடாகும். இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அன்னதான மடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனை வவுனியா அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியதற்கு

அமைய ஏ-9 வீதிக்கு அண்மையில் அன்னதான மடம் அமைப்பதற்கான காணி வழங்கப்பட்டது. இதில் வவுனியா அரசாங்க அதிபர் உயர்திரு க.கணேஸ் அவர்கள் பிரதேச செயலாளர் திருமதி.இமெல்டா சுகுமார், பிரதேச செயலாளர் திருமதி.க.தவஈஸ்வரி மற்றும் காணி அலுவலர்களின் பங்களிப்பு என்றும் பராட்டுதற்கு உரியதாகும். இக்காணியில் அன்னதான மடத்தினை அமைப்பதற்கு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உயர்திரு க.பரமேஸ்வரன் அவர்கள் ஆரம்ப நிதி உதவியை வழங்கியிருந்தார்கள். அந்நிதியுடன் ஆரம்பிக்கப்பட்ட பணியை தொடர்ந்து மேற்கொள்வதில் நாட்டின் சூழ்நிலை காரணமாக கஸ்ரநிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதற்கான அடிக்கல் 15.07.2006 இல் நாட்டப்பெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பிரதித் தலைவர் உயர்திரு சின்னத்துரை தனபாலா அவர்கள் கலந்து அடிக்கல்லினை நாட்டி வைத்தார்கள். இம்மண்டபத்திற்கான அடிக்கல் இந்துசமய கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உயர்திரு க.பரமேஸ்வரன் மேலதிகச் செயலாளர் உயர்திரு.க.பரமலிங்கம், அரச அதிபர் உயர்திரு க.கணேஸ் ஆகியோரும் நாட்டிவைத்து சிறப்பித்தனர்.

ஆலயத்தில் நடைபெற்ற கந்தபுராண பூர்த்தி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொதுச் செயலாளர் உயர்திரு.கந்தையா நீலகண்டன் அவர்களிடம் இம்மண்டபத் திருப்பணியை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தினையும் அதற்கு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் ஆலய பரிபாலனசபை எடுத்துக்கூறியது. இதற்கமைய அங்கத்துவ நிறுவனம் என்ற வகையில் அகில இலங்கை இந்துமான்றத்துடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பின் காரணமாக இம்மண்டபத்தின் தொடர் வேலைகள் நடைபெற காரணமாயிற்று. அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் ஆலய பரிபாலன சபையினால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கலாசார/அன்னதான மண்டபத்தின் திறப்பு விழா 22.10.2010 (வெள்ளிக்கிழமை)

பூரணை தினத்திலன்று நடைபெறுவது விநாயகப் பெருமானின் அடியார்கள் செய்த பெரும் பாக்கியமாகும். இம்மண்டப திருப்பணியை மேற்கொள்வதற்கு உதவிய அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் உயர்திரு.வி.கயிலாசபிள்ளை அவர்கள், மாமன்றத்தின் பொதுச் செயலாளர் உயர்திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள், மாமன்றத்தின் பொருளாளர் உயர்திரு.வி.கந்தசாமி அவர்கள், சமூக நலன்குழுத் தலைவர் இராஜா புவனேஸ்வரன் அவர்கள், உப தலைவர் உயர்திரு சின்னத்துரை தனபாலா அவர்கள், பிரதிச் செயலாளர் உயர்திரு.எம்.கதிர்காமநாதன் அவர்கள் மற்றும் மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினர்கள், மாமன்றத்தின் பணியாளர்கள் ஆகியோரின் பங்களிப்பு என்றும் போற்றுதற்குரியதாகும். கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழங்கிய ரூபா இரண்டு இலட்சம் நிதியும் இந்து கலாசா திணைக்களம் வழங்கிய ரூபா ஏழு இலட்சம் நிதியும் பேருதவியாக அமைந்தன. இம்மண்டபத் திருப்பணியை மேற்கொள்வதற்கு லண்டன் விம்பிளி விநாயகர் ஆலயத்தின் பிரதம இணைப்பாளர் திருமதி.இரத்தினசிங்கம் அவர்களினதும், துணை இணைப்பாளர் டாக்டர்.மகேஸ்வரன் அவர்களினதும் பங்களிப்பும் என்றும் பாராட்டுதற்கு உரியதாகும். இவர்கள் விம்பிளி விநாயகர் ஆலயத்தின் சார்பாக வழங்கிய பங்களிப்பு காலத்திற்கு ஏற்ற உதவியாக இருந்தது. அத்துடன் பிரித்தானிய இந்து அறக்கட்டளை நிறுவனம், கனடா இந்துசமயப் பேரவை ஆகியவற்றின் உதவியும் காலத்தால் செய்த பேருதவியாக அமைந்திருந்தது. இலண்டன் பிரித்தானிய இந்து நிறுவனத்தின் தலைவர் அவர்களினதும், கனடா இந்துசமயப் பேரவையின் தலைவர் உயர்திரு.எம்.சின்னையாய அவர்களினதும் பங்களிப்பும் பாராட்டுதற்குரியதாகும். இத்துடன் வவுனியா புனர்வாழ்வு செயலகத்தின் திட்டப்பணிப்பாளர், நகர சபையின் செயலாளர், வவுனியா தமிழ் பிரதேச சபையின் செயலாளர், வவுனியா அரச அதிபர், வவுனியா பிரதேச செயலாளர், மற்றும் அரச திணைக்களங்கள் மற்றும் இலங்கை வங்கி, வவுனியா, இலங்கை வங்கியின் பிரதேச காரியாலயம் வவுனியா, ஆகியன ஆற்றியபங்களிப்பும் போற்றுதற்குரியதாகும். வீதி அபிவிருத்தித்

திணைக்களத்தின் (வ.மா) பணிப்பாளர் அவர்கள் இம்மண்டபத்தின் அருகாமையில் அமைந்துள்ள வீதியைப் புனரமைப்பதிலும், வடிகால் அமைப்பதிலும் உதவிய தன்மை என்றும் பாராட்டுதற்குரியதாகும். விநாயகப் பெருமான் அடியார்கள் இம்மண்டபத் திருப்பணிக்கு பெருவிழாக்களின் போது உதவியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மண்டபத்தை அமைப்பதில் பிரதம கட்டடக் கலை நிபுனராக கடமையாற்றிய கட்டட விற்பனர் திரு.செல்வநாயகம் அவர்களது குழுவினரதும், இக்கட்டடத்திற்கான மரவேலைகள் செய்த நவாலியூர் ஆசாரியார் திரு.இராஜதுரை அவர்களினதும், அவரது குழுவினரதும், இரும்பு வேலைகள் செய்த திரு.சேரன்குமார் அவர்களினதும் அவரது குழுவினரதும், வர்ணவேலைகள் செய்த திரு.பாலசுப்பிரமணியம் சிவரூபன் அவர்களினதும் அவரது குழுவினரதும், திரு.விநாசித்தம்பி பிரபாகரன் அவர்களினதும் அவரது குழுவினரதும், சிற்ப வேலைகள் செய்த இந்தியாவிலிருந்து வருகைதந்த சிற்பாசாரியார் திரு.கோ.தினேஷ் ஸ்தபதி அவர்களினதும், அவரது குழுவினரதும், மின்சார இணைப்பு வேலைகள் செய்த திரு.ஜெயம் அவர்களினதும், அவரது குழுவினரதும் பணி என்றும் பாராட்டுக்குரியதாகும். இத்துடன் கலாகேசரி சண்முகரட்ணம் அவர்களினதும் ஆலய தொண்டர்களினதும், ஆலய பரிபாலன சபை, பொதுச்சபை, உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பும் பணியும் இம்மண்டபம் நிறைவுபெற காரணமாக அமைந்துள்ளது. இம்மண்டபத் திறப்பு விழாவினை ஒட்டி வெளியீடு செய்யப்படுகின்ற **சிந்தாமணி** மலர் புத்தக வெளியீட்டிற்கு விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்கள் மற்றும் அன்பர்கள் இம்மலரின் ஆக்கத்திற்கு நூலாசிரியராக பணிபுரிந்த **தமிழ்மணி அகளங்கன்** ஆசிரியர் அவர்களினதும், **உயர்திரு.க.ஐயம்பிள்ளை** அவர்களினதும் பணியும் பாராட்டுதற்குரியதாகும். இம்மண்டபத்தில் 63 நாயன்மார்களின் உருவச் சிலைகளை நிறுவுவதற்கு ஆலய பரிபாலன சபை ஏற்ற ஒழுங்குகள் மேற்கொண்டிருந்தது. இச்சிலைகளை அமைப்பதில் அடியார்கள் பொறுப்பேற்று

செயற்பட்டிருந்தார்கள். அவர்களது பணியும் பாராட்டுக்குரியதாகும். இம்மண்டப வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு மிகுந்த பங்களிப்பை நல்கியும் செயற்பட்டும் ஊக்குவித்த ஆலய முகாமையாளர் திரு.ஆறுமுகம் பொன்னம்பலம் அவர்களினது பணி என்றும் பாராட்டுக்குரியதாகும். ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசைகளை செய்துவரும் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சிவகுமார குருக்கள் உதவிக்குருக்கள் சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள் அர்ச்சகர் சிவகுமாரசர்மா ஆகியோரது பணியும் பாராட்டுக்குரியதாகும். ஆலயத்தில் கந்தபுராணப்படிப்பு புராணிகராக பணிபுரிந்து வரும் சாமசிறி மாதவர் மார்க்கண்டு அவர்களினது வழியில் தோன்றிய புராணிகர்கள் உயர்திரு க.ஐயம்பிள்ளை, உயர்திரு.பொ.நல்லையா, உயர்திரு.இ.திருமேனி, உயர்திரு.நமசிவாயம் ஆகியோரினதும், ஆலய அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திருமதி.மகாதேவன், திருமதி.தம்பித்துரை அவர்களினது பணியும் பாராட்டுக்குரியதாகும். இந்துசமய பணிகளை முன்னெடுத்து வருகின்ற இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் உயர்திரு.சுப்பிரமணியம் அவர்கள், வவுனியா கலாசார உத்தியோகத்தர் செல்வி.கலையமுதா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன் அவர்களது பணியும் பாராட்டுக்குரியதாகும். இம் மண்டபத் திருப்பணியை நிறைவு செய்வதற்கு உதவிய அடியவர்களுடைய பணி என்றும் பாராட்டுக்குரியதாகும். மற்றும் இம் மண்டபத் திறப்பு விழாவுக்கான சிறப்பு மலரை அழகுற அச்சிட்ட வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும் எமது பாராட்டுக்கள். ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமான் ஆலய திருப்பணி வேலைகளிலும் பார்க்க ஆலயத்திற்கென அழகான மண்டபத்தை அமைப்பதை விரும்பி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் உயர்திரு.கந்தையா நீலகண்டன் அவர்களை ஆலயத்திற்கு அழைத்து தனது திருவாக்கை அவர்மூலம் வெளிப்படுத்தியதன் வெளிப்பாடே இம்மண்டபம் என்று குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மண்டபம் ஏ-9 பாதையில் அந்தணர் ஒன்றியம், காயத்திரிபீடம் ஆகியவற்றுடன் இணைந்து தெய்வீகச் சூழலில் அமைந்திருப்பது சிறப்புடையதாகும். தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் இந்துக்கள் இம்மண்டபத்தில் தங்கி தெய்வீகச் சூழலில் தெய்வீகச் சிந்தனையுடன் இளைப்பாறிச் செல்லக்கூடிய வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை இந்துக்கள் பயன்படுத்தி சமயப்பணியை முன்னெடுப்பதற்கு ஊக்கமளிப்பதற்கு உறுதுணையாக இம்மண்டபம் அமைந்தள்ளது. ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபை ஆலயத் திருப்பணியோடு சமய சமூகப் பணிகளில் இந்து நிறுவனங்களுடன் இணைந்தும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடனும் சமய சமூகப் பணிகளை இம்மண்டபத்தின் மூலம் மேற்கொள்வதற்கு ஏற்ற திட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறநெறிப் பாடசாலை, சங்கீத வகுப்பு, நடனவகுப்பு, கணணி வகுப்பு போன்ற கல்வி நெறிகளையும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களில் உதவுவதற்கும் இம்மண்டபம் பயன்பாடுள்ளதாக அமைந்துள்ளது. இப்பணி சிறப்பாக என்றும் தொடர எல்லா வல்ல சிந்தாமணி விநாயகப் பெருமானின் திருவருளும் இந்து நிறுவனங்களின் உதவியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

உ
சிவமயம்

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

ஆலய பரிபாலன சபைப் பொருளாளர்

**திருமிகு. சி. க. அருந்தவராசா**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

கச்சேரியில் கடமையாற்றிய திரு.க.சண்முகலிங்கம் அவர்கள் வவுனியா வெளி வட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவராகத் தொண்டாற்றிய காலத்தில் 1979ம் ஆண்டளவில் என்னை அழைத்து கோயிலிலே நடைபெறும் திருப்பணி வேலைகளைப் பார்வையிடவும், கணக்குகளை ஒழுங்காக பேனுவதற்கு உதவி செய்யவும் வருமாறு அழைத்தார். அவருடன் சென்று வந்த என்னைச் சிந்தாமணி விநாயகர் தமது கோயிலுடன் பிணைத்துக் கொண்டார். திரு.சண்முகலிங்கம் ஐயா மூலம் என்னை ஆட்கொண்டு தனது அடியவனாக்கி விட்டார்.

அன்று முதல் ஆலயத்தோடு நெருங்கிய ஈடுபாட்டுடன் இருந்த என்னை 1982இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், ஆலய பரிபாலன சபையின் பொருளாளராக தெரிவுசெய்தார்கள். இற்றைவரை 28 வருடங்களாகத் தொடர்ந்து பொருளாளராக இருந்து எம்பெருமானுக்குத் தொண்டு புரியும் பேற்றினை விநாயகப் பெருமான் தந்தருளினார்.

1982 முதல் இன்று வரை ஆலய வளர்ச்சியில் எனது பங்கும் பணியும் செறிந்திருக்கின்றது. 1986 இல் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம், 1987 இல் மகோற்சவம், வவுனியா நகரில் முதன் முதலாகத் தேர்த்திருவிழா வன்று கட்டுத் தேரில் எம்பெருமான் வீதியுலா வந்தருளியமை, 1988 இல் தொடங்கப் பெற்று 1989 இல் வவுனியா நகரின் முதலாவது தீர்த்தக் கேணியாக ஸ்ரீ சிந்தாமணி தீர்த்தம் உருவாகியமை, 1992 இல் முருகன் ஆலய கும்பாபிஷேகம், 2002 இல் நிகழ்ந்த புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ மகா லட்சுமி ஆலய கும்பாபிஷேகமும், சண்டேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகமும், இடம்பெற்றமை, 1999 இல் தொடங்கப்பெற்று 2001 இல் சித்திரத்தேர் வெள்ளோட்டமும், மகோற்சவத்தின் போது புதிய சித்திரத்தேரில் எம்பெருமான் பவனியும், தேருக்கான கொட்டகை, தேர் முட்டி என்பன அமையப்பெற்றமை ..................

இவையெல்லாம் நிறைவுசெய்யப்பட்ட போதும், ஒரே ஒரு தற்காலிக கட்டடத்தில் அன்னதானம், திருமணம், அறநெறிப்பாடசாலை, கலாசா

நிகழ்வுகள் ஆகியன யாவும் நிகழவேண்டியிருந்ததால் அன்னதானத்துக்கும் கலாசார நிகழ்வுகளுக்கும் புதியதொரு மண்டபம் அமைக்க வேண்டும் என்னும் எண்ணம் நிர்வாக சபையினரிடம் உதயமான போது, இப் பாரிய பொறுப்பினைச் செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2006 இல் அத்திவாரக்கல்லு நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

அகில இலங்கை இந்து மாமன்றம் பெருந்தொகையான பணத்தையும், கடல் கடந்த நாடுகளில் இருந்து ஓரளவு நிதியையும், ஆலயத்தில் வழிபடுவோரிடம் இருந்தும், ஆலய வருமானத்திலிருந்து ஒரு பகுதியையும் பெற்றதோடு, நலன்விரும்பிகளது கடன் உதவியையும் பெற்று ஏறக்குறைய இரண்டரைக் கோடி ரூபா செலவில் மண்டபம் நிறைவடைந்து இருக்கிறது.

22.10.2010 இல் எம்பிரானின் திருவருளால் மண்டபம் திறக்கப்படவுள்ளது. திறப்பு விழா சிறப்பான முறையில் நடந்தேறவும், அதன் பின்னர் புதிய மண்டபம் ஆலயத்திற்கும் வழிபடுவோருக்கும் நல்ல முறையில் பயன்படத்தக்கவாறு அமையவும், திறப்பு விழாவன்று வெளியிடப்படவுள்ள சிறப்பு மலர் சிறப்பாக அமையவும், எல்லாம் வல்ல ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றேன்

வணக்கம்

ஐங்கரன் பணியில்
**சி.க.அருந்தவராசா**
கௌரவ பொருளாளர்

# கௌரவிப்புகள்

உ
சிவமயம்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின்

தலைவர்

**உயர்திரு.வி.கயிலாசபிள்ளை அவர்களுக்கு**

வவுனியா வெளிவட்ட வீதி

**ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்**

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# இந்து சிரோரத்தினம்

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் இந்துசமயப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து

வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

உ
சிவமயம்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
பொதுச் செயலாளர்

**உயர்திரு.கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு**

வவுனியா வெளிவட்ட வீதி

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# இந்து சிரோன்மணி

என்னும்
கௌரவ விருது
அன்னாரின் இந்துசமயப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து
வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

உ
சிவமயம்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
பிரதித் தலைவரும்
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவருமான
**உயர்திரு.சின்னத்துரை தனபாலா அவர்களுக்கு**
வவுனியா வெளிவட்ட வீதி
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்
22.10.2010 இல் நடாத்தப்பட்ட
வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# சிவநெறிக் காவலர்

என்னும்
கௌரவ விருது
அன்னாரின் இந்துசமயப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து
வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

இ

உ
சிவமயம்



## பிரம்மஸ்ரீ.கு.சுந்தரசர்மா அவர்களுக்கு

வவுனியா வெளிவட்ட வீதி

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# சர்வ சாதக கிரியாசாகரம்

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் வேதாகமத் தெய்வீகத் திருப்பணியைப் பாராட்டிக் கௌரவித்து வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

உ
சிவமயம்



உயர்திரு.மாதவர் மார்க்கண்டு
அவர்களுக்கு

வவுனியா வெளிவட்ட வீதி

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# புராண படனப் பெருஞ்சுடர்

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் புராண படனப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து வழங்கப்படுகின்றது.

ஞா.கேதீஸ்வரன்
செயலாளர்

வி.எஸ்.தேவகுமாரன்
தலைவர்

உ

உ
சிவமயம்



**உயர்திரு.அகளங்கன் (நா.தர்மராஜா)**

**அவர்களுக்கு**

வவுனியா வெளிவட்ட வீதி

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# செந்தமிழ்க் கொண்டல்

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் இந்துசமயப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து

வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

உ
சிவமயம்



**உயர்திரு.சு.சண்முகவடிவேல்**

**அவர்களுக்கு**

வவுனியா வெளிவட்ட வீதி

**ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்**

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# கலைஞான கேசரி

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் இந்துசமய சிற்பக் கலைப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து
வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

உ
சிவமயம்



## உயர்திரு.வெ.சண்முகதாஸ்
## அவர்களுக்கு

வவுனியா வெளிவட்ட வீதி

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# நாதஸ்வர ஜோதி

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் மங்கல வாத்தியக் கலைப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து

வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

உ
சிவமயம்



## உயர்திரு.பொ.நல்லையா
## அவர்களுக்கு

வவுனியா வெளிவட்ட வீதி

**ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்**

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# சிந்தாமணிச் செம்மல்

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் ஆலய, புராண படனப் பணிகளைப் பாராட்டிக் கௌரவித்து வழங்கப்படுகின்றது.

**ஞா.கேதீஸ்வரன்**
செயலாளர்

**வி.எஸ்.தேவகுமாரன்**
தலைவர்

ஐ

உ
சிவமயம்



## உயர்திரு.க.ஐயம்பிள்ளை
## அவர்களுக்கு

வவுனியா வெளிவட்ட வீதி

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால்

22.10.2010 இல் நடாத்தப்பட்ட

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

## கலாசார/ அன்னதான மண்டப

திறப்பு விழாவின் போது

# புராண படனச் செல்வர்

என்னும்

கௌரவ விருது

அன்னாரின் புராண படனப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து
வழங்கப்படுகின்றது.

| | |
|---|---|
| ஞா.கேதீஸ்வரன் | வி.எஸ்.தேவகுமாரன் |
| செயலாளர் | தலைவர் |

உ
சிவமயம்

## கௌரவிக்கப்பட்ட புராணிகர்கள்

சிவத்திரு.ஆ.தியாகராசா

சிவத்திரு.மாதவர் மார்க்கண்டு

சிவத்திரு.தமிழ்மணி அகளங்கன்

சிவத்திரு.சி.இரங்கநாத தேசிகர்

சிவத்திரு.ச.விஜயகுமார்

சிவத்திரு.சே.உலகநாதன்

சிவத்திரு.ஆ.நவரட்ணராசா

சிவத்திரு.க.பொன்ராசா

சிவத்திரு.வீ.சிவசிதம்பரநடராசா

சிவத்திரு.யாதவராசா

சிவத்திரு.க.கந்தசாமி

சிவத்திரு.க.தியாகராஜா

கலா குமரப்பா

சிவத்திரு.க.ஐயம்பிள்ளை

சிவத்திரு.பொ.நல்லையா

சிவத்திரு.இ.திருமேனி

# நினைவலைகள்



மூலஸ்தான பிள்ளையார்



எழுந்தருளி பிள்ளையார்



ஆலய முகப்புத் தோற்றம்



மகோற்சவப் பெருவிழாவில் சிந்தாமணி விநாயகர் தேரில்
எழுந்தருளி அருள்பாலிக்கும் காட்சி

# கும்பாபிஷேகப் பெருவிழாவில்



கும்பாபிஷேகக் குருக்கள் சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்களின் ஆசியுரை



தூபிகள் அபிஷேகம்




மகாலட்சுமி, சண்டேசுவரர் ஆகியோர்க்கு அருட்கலை வாரிதி சு.சண்முகவடிவேல் அவர்கள் கண்திறத்தல்



குருமார்கள்

## கும்பாபிஷேகப் பெருவிழாவில்



கதவு திறத்தல்



கும்பங்கள் வீதியுலா



ஆலய பரிபாலன சபையினரும் பிரதம குருக்களும்



பரிபாலனசபைச் செயலாளர் ஞா.கேதீஸ்வரன் நன்றியுரையாற்றுகிறார்.

## மகோற்சவப் பெருவிழாவில்


தமிழ்மணி அகளங்கன் அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்


சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்களுக்கு ஆலய பரிபாலன சபையின் சார்பாக சிவஸ்ரீ பாலசந்திரக் குருக்கள் வேதாகம சுரபி பட்டம் வழங்குகின்றார்.


இந்தியச் சுவாமிகளை திரு.பொ.நல்லையா அவர்கள் வரவேற்கிறார்


பூந்தண்டிகையில் வீதியுலா



வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ முத்து ஜெயந்தி நாதக் குருக்களுக்கு தலைவர் வீ.எஸ்.தேவகுமாரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்



வவுனியா பிரதேச செயலாளர் திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்களுக்கு தலைவர் திரு.வீ.எஸ். தேவகுமாரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்.



மகோற்சவ பெருவிழாவில் சத்தியசாயி சமித்தியினர் பஜனை செய்கின்றனர்.



மகோற்சவப் பெருவிழாவில் இந்தியச் சுவாமிகளும் பிரதம குருக்களும்



கலாசார/அன்னதான மண்டப அடிக்கல் நாட்டுகிறார்
திரு.சின்னத்துரை தனபாலா அவர்கள்



ஒரு மார்கழிமாதப் பூரணையில் திருவாசக முற்றோதல்



கந்தபுராண படன பூர்த்தி விழா ஒன்றில் பிரதம விருந்தினர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள்
தலைவர் திரு.வீ.எஸ்.தேவகுமாரன் அவர்களால் கௌரவிக்கப்படுகிறார் அருகில் செயலாளர்
ஞா.கேதீஸ்வரன், முகாமையாளர் ஆ.பொன்னம்பலம்



விவேகானந்த சபையுடன் இணைந்து நடாத்திய சமய விழாவில் அரச
அதிபர் சி.சண்முகம் திரு.இராஜபுவனீஸ்வரன்

# கந்தபுராண படனப் பூர்த்தி விழாவில்


கந்தபுராணபடிப்பின் போது


திரு மாதவர் மார்க்கண்டு அவர்களுக்கு வவுனியா இந்து மாமன்றத் தலைவர்
சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள் வாழ்த்துப்பா வழங்குகிறார்


புராணிகர் மாதவர் மார்க்கண்டு அவர்களுக்கு செயலாளர்
திரு.கு.மா.வேதீஸ்வரன் மகுடக் கிரீடம் சூட்டுகிறார்


கந்தபுராண படிப்பு பூர்த்தி விழாவில



கந்தபுராணபடிப்பு பூர்த்தி விழாவில் கந்தபுரான புத்தகம்
ஊர் வலமாக எடுத்துவருதல்



கந்தபுராண படிப்பு பூர்த்தி விழாவில் புராணிகர்களுடன்
வவுனியா பிரதேச செயலாளர் செல்வி.த.துரைசாமி



கந்தபுராணப் படிப்பு பூர்த்தி விழாவில் கிளிநொச்சி அரச அதிபர்
திரு.ந.வேதநாயகம் திரு.பொ.நல்லையா அவர்களைக் கௌரவிக்கிறார்.



கந்தபுராண படிப்பு பூர்த்தி விழாவில் காப்பாளர் திரு.பொ.நல்லையா
செற்பொழிவாற்றுகின்றார்

# அறநெறி விழாவில்



அறநெறிப் பாடசாலை மாணவர்கள்



பிரதேசச் செயலாளர் திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்கள் பரிசில் வழங்குகிறார்.



அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்பு வழங்குதல்



அறநெறிப்பாடசாலை விழாவில் அடியார்களும் மாணவர்களும் ஆசிரியைகளும்



கிளிநொச்சி அரச அதிபர் உரையாற்றுகிறார்



திருவாசகச் செம்மல் வை.செ.தேவராசா
அவர்கள் சொற்பொழிவாற்றுகிறார்



பிரதம விருந்தினர் திரு.கந்தையா நீலகண்டன்



கந்தசஷ்டித் திருவிழாவின் போது முருகன்



அறநெறிப்பாடசாலை அசிரியரிடம் மாணவர்கள்
ஆசீர்வாதம் பெறுகின்றனர்.




அறநெறிப் பாடசாலை ஆசிரியருடன்
மாணவர்கள்



கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசையின் போது ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சிவகுகநாதக்
குருக்கள் ஆசியுரை வழங்குகிறார்



அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சான்றிதழ்களுடன்



அறநெறிப் பாடசாலை



கந்தபுராண படன பூர்த்தி விழா ஒன்றில் பிரதம விருந்தினர் திரு.கந்தையா நீலகண்டன்
அறநெறிப் பாடசாலைக்கு அன்பளிப்பு வழங்குகிறார்.



அறநெறிப்பாடசாலை ஆசிரியைகளுடன் ஐயப்பதாசக் குருக்களும்
செயலாளர் ஞா.கேதீஸ்வரனும்


கந்தஷஷ்டித் திருவிழாவில்


இந்தியாவில் இருந்து வருகை தந்த சுவாமிகளுக்கு கௌரவம்


கிளிநொச்சி அரச அதிபர் திரு.ந.வேதநாயகம் அவர்களை தலைவர்
திரு.வீ.எஸ்.தேவகுமாரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்.


மகோற்சவப் பெருவிழாவில் ஆலய மகோற்சவ
பிரதம குருக்கள் கௌரவிக்கப்படுகிறார்



இந்தியச் சுவாமிகள் ஆசியுரை வழங்குகிறார்.



அகில இலங்கை இந்துமா மன்றத்தின் செயலாளர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் புராணிகர்களைக் கௌரவிக்கிறார்.



வவுனியா அரச அதிபர் திரு.சி.சண்முகம் அவர்கள் உபதலைவர் திரு.சி.தர்மபாலன் அவர்களால் கௌரவிக்கப்படுகிறார்.



சிவஸ்ரீ சாம்பசிவ சங்கரதாஸ் குருக்களுக்கு வேதாகம கிரியா கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கிறார் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான சாதகர் பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா

# வரலாறு

# பாமாலை

# கட்டுரைகள்

உ
சிவமயம்

# வவுனியா வெளிவட்டவீதி ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய வரலாறு

தோற்றுவாய்

இந்துமாகடலின் எழில்பெறு முத்தென இலங்கிடும் ஈழமணித்திருநாட்டின் வடபாலமைந்துள்ள வன்னிப்பெருநிலப்பரப்பின் சென்னியாய் விளங்கும் வவுனியா நகரின் மத்தியில் பிரதான வீதியாகிய யாழ்ப்பாணம் - கண்டிவீதி (ஏ-9)க்குமேற்கிலும் புகையிரத நிலையத்துக்கு கிழக்கிலும் அமைந்துள்ள பிரதேசத்தில் அரசாங்க அலுவலர்களது குடிமனைகள் செறிந்துள்ளன. இக்குடிமனைகள் அமைந்த இடத்தை இணைக்கும் வீதிகளாக உள்வட்ட வீதி, வெளிவட்ட வீதி, இரண்டுக்கும் இடையிலமைந்த மத்தியவீதி ஆகியன அமைந்துள்ளன. இவற்றுள் வெளிவட்டவீதியின் மேற்குத்திசையில் ஸ்ரீசிந்தாமணி விநாயகப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

இப்பிரதேசத்தில் அரச குடிமனைகளில் வசித்த அரச அலுவலர்கள் சிலர் தாம் வசிக்கும் பகுதியில் கோயில் ஒன்று அமைக்கவேண்டுமென்னும் எண்ணங் கொண்டவர்களாய் தற்போதைய ஆலயத்தின் தென்கிழக்குத்திசையில் வெளிவட்ட வீதியின் அருகில் காடுகளும் புதரும் மண்டிக்கிடந்த பள்ளமான அரச காணியில் பாலைமரத்தின் கீழ் கருங்கல் வைத்துப் **பிள்ளையார்** என அழைத்து வழிபாடு ஆரம்பித்தனர். 1960களில் ஆரம்பிக்கப்பெற்ற இக்கோயிலில் தினமும் விளக்கேற்றியும் வெள்ளிக்கிழமைகளில் பூசைகள் இடம்பெற்று காலப்போக்கில்,தகரக் கொட்டில் அமைத்தும் தேங்காய்நெய் விளக்கு நிரந்தரமாகப் பொருத்தப்பட்டும் ஆகமஞ்சாராத பூசைவழிபாடு நிகழ்ந்து வந்தது.

ஆலயத் திருப்பணிச் சபையின் தோற்றம்

இவ்வாறு வழிபாடு வளர்ச்சியடைந்து வழிபடுவோர் எண்ணிக்கையும் அதிகரித்தபோது இக்கோயிலை நிறுவனமயப்படுத்தவேண்டும் என்னும் எண்ணம் வழிபடுவோர் மத்தியில் முகிழ்த்தது. இதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் முயற்சியில் முனைப்புடன் செயற்பட்ட, வவுனியாக்கச்சேரியில் உணவு உற்பத்திக்கிளையின் தலைமை எழுது வினைஞராகப் பணியாற்றிய **அமரர் செ.கணேஷ்** அவர்கள் ஆலய திருப்பணிச்சபை அமைக்கும் நோக்கில் 11-02-1967ல் கூட்டமொன்றைத் தமது தலைமையில் கூட்டினார். இக்கூட்டத்தில் திருப்பணிச்சபை அமைக்கப்பட்டுப் பின்வருவோர்நிர்வாகசபையில் இடம்பெற்றனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - பிரம்மஸ்ரீ S.சதாசிவஐயர் | - மேலதிக அலுவலக உதவியாளர் (EX TRA OFFICE ASSISTANT)<br>கச்சேரி, வவுனியா. |
| செயலாளர் | - திரு.செ.கணேஸ் | - பிரதம எழுதுவினைஞர் உணவு உற்பத்திக்கிளை கச்சேரி வவுனியா. |

பொருளாளர் - திரு.M.பாலசிங்கம் - சிறாப்பர்,கச்சேரி,வவுனியா.

உப தலைவர் - டாக்டர்.J.சந்திரசேகரம் - வைரவர்புளியங்குளம், வவுனியா.

உபசெயலாளர் - திரு.சி.நாகராசா - SLDO காணிக்கிளை கச்சேரி, வவுனியா.

நிர்வாசபை உறுப்பினர்கள்

1. திரு.S.நடராசா - VCO.வைரவர்புளியங்குளம்,வவுனியா.
2. திரு.டேவிட் நாகநாதன் - உணவு உற்பத்திக்கிளை,கச்சேரி,வவுனியா.
3. திரு.மு.முருகையா - புகையிரதத்திணைக்களம்,வவுனியா.
4. திரு.த.நல்லதம்பி - கோவில்குளம், வவுனியா.

நிர்வாகசபை உறுப்பினராக இன்னுஞ்சிலர் இருந்திருக்கிறார்கள். அவர்களது சரியான விபரம் பெற இயலவில்லை.சைவஆலயமொன்றின் பரிபாலன சபையில் கிறிஸ்தவராக டேவிட் நாகநாதன் அவர்களும் இடம் பெற்றிருந்தமை இருபகுதியினரும் சமயக்காழ்ப்புணர்வற்ற சன்மார்க்க நெறியைப்பின்பற்றியமை புலப்படுத்துகின்றது.

ஓட்டுக் கொட்டகை

இக்காலத்தில் அமரர் செ.கணேஷ்,அமரர் சி.நாகராசாவும் ஆலய தர்மகர்த்தாக்களுள் ஒருவராகவும் இருந்து செயற்பட்ட பாராளுமன்றப்பிரதிநிதியாக அமரர் தா.சிவசிதம்பரம் ஆகியோர் கூட்டாக விடுத்த கோரிக்கைக்கமைய கண்ணகி புத்தகசாலை உரிமையாளரும் பிரபல கட்டிட ஒப்பந்தகாரராகவும் விளங்கிய திரு.வீ.எஸ்.தேவராசா அவர்களால் தகரக்கொட்டில் அகற்றப்பட்டு10 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட நிரந்தர கட்டிடம் அமைக்கப்பட்டு ஓட்டினால் கூரையிடப்பட்டது. இக்கட்டடத்தில் கருங்கல்லினாலான விநாயகர் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு **வெளிவட்ட வீதி பிள்ளையார் ஆலயம்** என்னும் திருநாமம் சூட்டப்பெற்றது. பரிபாலனசபைத் தலைவரராகவிருந்த பிரம்மஸ்ரீ.S.சதாசிவஐயர் அவர்களால் முறைப்படி மந்திர உச்சாடனத்துடன் கூடிய ஆகம முறையிலமைந்த வழிபாட்டு முறை இவ்வாலயத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா

வெளிவட்ட வீதிக்கு மிக அண்மையில் இவ்வாலயம் இருந்ததால் எதிர்கால வளர்ச்சிக்கு இடம்போதாதெனக்கண்ட பரிபாலன சபையினர் புதிய இடம் தெரிவு செய்து இப்போது எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடத்தைப் பொருத்தமானதெனத் தெளிந்து 1968ல் சுபவேளையொன்றில் அத்திவாரக்கல் நாட்டினர். வவுனியா பேயாடிகூழாங்குளத்தைச் சேர்ந்த திரு.நடராசா அவர்கள் மேஸ்திரியாக விளங்கிக் கட்டிடப்பணியை முன்னெடுத்தார். ஆலயபரிபாலன சபையினரின் ஊக்கமும் செயலாளராக விளங்கிய அமரர்செ.கணேஸ் அவர்களின் விடா முயற்சியும் அயலில் வசித்த அரச ஊழியர்கள், வர்த்தகப் பெருமக்களது ஆதரவும் சேர கட்டிடப்பணி வளர்ச்சி கண்டது.

இக்காலகட்டத்தில் உணவு உற்பத்திக்கிளையின் பிரதம எழுவினைஞராகவிருந்த அமரர்.செ.கணேஸ் அவர்களுக்கு வவுனியாக்கச்சேரியின் அலுவலக உதவியாளர் பதவிக்கான உத்தியோக உயர்வு கிடைத்தது. இதுவும் எம்பெருமானது திருவருளே எனலாம். மேலதிக அலுவலக உதவியாளராக (EXTRA OFFICE ASSISTANT)விருந்த திருப்பணிச்சபைத்தலைவர் திரு.சதாசிவஐயர் அவர்களது வேலைப்பளுகாரணமாக தொடர்ந்து ஒழுங்காகப் பூசையைச்செய்ய இயலாதநிலையில் இருந்ததால் வவுனியா கந்தசாமி கோவில் பிரதமகுருவான சிவஸ்ரீ.பாலச்சந்திரக்குருக்களின் சிபார்சின் பேரில்அவரது அக்காவின் கணவரான பிரம்மஸ்ரீ.S.சுப்பிரமணியஐயர் ஆலய அர்ச்சகராக நியமனம் பெற்றார். இவரே இவ்வாலயத்தில் சபையால் நியமிக்கப்பெற்ற முதலாவது அர்ச்சகராகும். இவரது காலத்தில் இடைக்கிடை சிவஸ்ரீ பாலச்சந்திரக்குருக்களும் பூசை செய்து வந்தார்.

பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் என்பவற்றின் வேலைகள் நிறைவெய்தி ம்காமண்டபம் தற்காலிக கட்டடமாக அமைக்கப்பட்ட நிலையில் 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நாலாந்திகதி (04-12-1970) கார்த்திகை மாதம் அவிட்ட நட்சத்திர சுபமுகூர்த்தத்தில் யாழ்ப்பாணம் நவாலியைச்சேர்ந்த **"கிரியா கிரம ஜோதி" "பிரதிஷ்டா சிரோன்மணி" சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்** அவர்களின் தலைமையில் முதல் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அரச அலுவலர்கள், வர்த்தகப்பெருமக்கள், கிராமத்தின் அயல்வாசிகள் பலரும் திரண்டு வந்து எம்பிரானது கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து அருள்பெற்றுய்ந்தனர்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து வவுனியா குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அர்ச்சகராகவிருந்த பிரம்மஸ்ரீ.கனக.கந்தசாமிஐயர் அவர்களாலும் அவரது உறவினராலும் காலை மாலை இருவேளை நித்திய பூசைகள் இடம்பெற்றன. ஆலயத்தில் வழிபடுவோர் எண்ணிக்கை அதிகரித்ததோடு விசேடபூசைகள், அபிஷேகங்கள் முதலியனவும் இடம்பெற்று ஆலயம் புதுப்பொலிவுடன் சிறந்து விளங்கியது.

**பாலையடிப்பிள்ளையார்** என்றும், **வெளிவட்டவீதிப்பிள்ளையார** என்றும் அழைக்கப்பட்ட பிள்ளையாருக்கு, பிரதிஷ்டா குருவாக இருந்த சிவஸ்ரீ சாமி விஷ்வநாதக்குருக்கள் அவர்கள் ''சிந்தாமணிப்பிள்ளையார்'' என நாமஞ்சூட்டினார்.அன்றுமுதல் **சிந்தாமணிப் பிள்ளையார்** என்னும் பெயர் நிலைத்துவிட்டது. எல்லாம் அவன் திருவிளையாடல்களேயாம்!

கபிலமுனிவர் கொடுத்த சிந்தாமணியைக் கழுத்தில்தரித்ததனால் "சிந்தாமணிப்பிள்ளையார்" என்னும் பெயர் பெருமானுக்கு அமைந்துவிட்டது. மேலும் பேரன்போடு வணங்கி கேட்போருக்கு எதையும் இல்லையென்னாது வழங்குவது சிந்தாமணியாகும். அவ்வாறே மெய்யன்பர் வேண்டுவனவற்றை வேண்டியவாறே எம்பெருமானும் வழங்குவதால் சிந்தாமணிப்பிள்ளையார் என அழைக்கப்பெறுதல் பொருத்தமானதே. நடப்பனவெல்லாம் இறைவன் திருவருளாலே நிகழ்வதால் நல்லனவாகவே

அமைந்துவிடும்.

மகாகும்பாபிஷேகத்தின் பின்னர் நிகழ்ந்த திருப்பணிச்சபைக்கூட்டத்தில் வவுனியாவில் பிரபல சட்டத்தரணியாக விளங்கும் **உயர்திரு.மு.சிற்றம்பலம்** அவர்கள் தலைவராகவும் கிராமசேவகர் **திரு.S.விசாகப்பெருமாள்** செயலாளராகவும் பணியாற்றித் தொடர்ந்தும் ஆலயத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்சென்றனர்.

1974ல் நடந்த திருப்பணிச்சபையின் பொதுக்கூட்டத்தில் **திருப்பணிச்சபை** என்னும் பெயர் "**ஆலயபரிபாலனசபை**" என மாற்றம்பெற்றதோடு சபையின் யாப்பில் பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : திரு.மு.காராளசிங்கம். | புகையிரதத் திணைக்களம் வவுனியா. |
| செயலாளர் | : திரு.ச.நாகராசா. | காணி உத்தியோகத்தர், கச்சேரி வவுனியா. |
| பொருளாளர் | : திரு.S.விசாகப்பெருமாள். | கிராமசேவகர் வவுனியா. |
| உபதலைவர்கள் | : திரு.T.நல்லதம்பி. | கோயிற்குளம், வவுனியா. |
| | திரு.V.S.தேவராசா. | வைரவபுளியங்குளம், வவுனியா |
| உபசெயலாளர் | : திரு.S.ஸ்ரீ விவேகானந்தராசா. | |
| உபபொருளாளர் | : திரு.V.M.நல்லதம்பி. | |

**நிர்வாகசபை உறுப்பினர்**

| | |
|---|---|
| அமரர் திரு.S.கணேஸ் | திரு.M.பாலசிங்கம் |
| திரு.S.மாயாதிரவியம் | அமரர்.திரு.M.முருகையா |
| திரு.M.சிவராஜா | திரு.V.ராஜரத்தினம் |
| திரு.S.பத்மநாதன் | திரு.A.C.குணம் |
| அமரர்.திரு.பொன்.நடராசா | |

கணக்காய்வாளர்: திரு.S.விக்னேஸ்வரமூர்த்தி

இவர்களோடு தர்மகர்த்தாசபை உறுப்பினர்களாக அமரர்.தா.சிவசிதம்பரம், அமரர்.S.M.கதிரமலை, அமரர்.J.சந்திரசேகரம் அவர்கள் தொடர்ந்து பணியாற்றினார்.

சொந்த விருப்பத்தின் பேரில், கோயில் அர்ச்சகராக பணியாற்றிய பிரம்மஸ்ரீ.க.கந்தசாமிஐயர் இராஜினாமாச் செய்ததால் 01-08-1975 தொடக்கம்

சிவஸ்ரீ.சிவ.ஞானானந்தக் குருக்கள் சிந்தாமணி ஆலயத்தின் பிரதமகுருவாக நியமனம் பெற்றுப் பணிபுரிந்தார்.

**இனக்கலவரமும் ஆலயசெயற்பாடுகள் இடைநிறுத்தமும்**

1977ல் இடம்பெற்ற இலங்கை நாடாளுமன்றப் பொதுத்தேர்தலையடுத்து நாடுதழுவிய இனக்கலவரம் வெடித்தது. அதன் தாக்கம் வவுனியாவிலும் பிரதிபலித்ததால் மக்களும், ஆலயஅர்ச்சகர், குருக்கள் முதலியோரும் தற்காலிக இடப்பெயர்வுக்கு ஆளாயினர். ஆலயபூசை வழிபாடுகள் இடைநிறுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகியது. மீண்டும் நிலைமை வழமைக்கு திரும்பிய போது யாழ்ப்பாணம் கொக்குவில், நந்தாவிலைச்சேர்ந்த பிரம்மஸ்ரீ.க.தர்மலிங்கம்ஐயர் அவர்கள் ஆலய நித்திய பூசையைப்பொறுப்பேற்றுச் சிறப்பாகப்பணியாற்றினார். இவரது காலத்தில் சிறப்பான பூசைகள், அபிஷேகங்கள், பரிவாரமூர்த்திகளுக்கான கோயில்கள் நிர்மாணம், ஆலயத்திற்கு தேவையான பூசைஉபகரணங்கள் ,தெய்வங்களுக்கான நகைகள், வெண்கலப்பாத்திரங்கள் குத்துவிளக்குகள் போன்றன அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்வதற்கு வழிபடுபவர்களோடு இவர் கொண்டிருந்த நல்லுறவு, ஊக்கம், ஆலோசனை என்பன பெரிதும் துணை நின்றனவெனில் மிகையாகாது.

பிற்காலத்தில் இவர் ஆச்சாரிய அபிஷேகம் பெற்று இதே ஆலயத்தில் தொடர்ந்து குருக்களாகப் பணியாற்றினார்.

புதிய பரிபாலனசபை முதலில் கச்சேரியிலும், பின்னர் கல்வித்திணைக்களத்திலும் கடமையாற்றிய திரு.K.சண்முகலிங்கம் அவர்கள் தலைமையில் செயற்பட்ட காலத்தில் ஆலயபூசைகள், வழிபாடுகள், அபிடேகங்கள் போன்ற நிகழ்வுகளோடு பஜனை என்றழைக்கப்பட்ட கூட்டுப்பிரார்த்தனை வெள்ளிதோறும் இடம்பெற்றது. ஆலயச் சூழலிலுள்ள சிறுவர்களை அழைத்து அறநெறி வகுப்புக்கள் நடாத்தியும் கூட்டுப்பிரார்த்தனைகளைத் தாமே முன்னின்று நடத்தியும் இவர் செயல்பட்டார். இக்காலத்தில் வவுனியா மகாவித்தியாலய ஆசிரியர்களான சங்கீதபூஷணம் பொன்.நடராஜா, கலைமாமணி பொன்.தெய்வேந்திரம் ஆகியோர் திருமுறைகளைப் பண்ணோடு கற்பித்தும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனைகளில் கலந்து பண்ணிசையோடு பஜனை செய்யும் பாணியை கடைப்பிடித்தும் இறைவழிபாட்டின் மற்றொரு பரிணாமத்துக்கு வித்திட்டு வளர்த்தனர்.

1977 இறுதியிலிருந்து அறநெறி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்ததன் மூலம் வளரும் பிள்ளைகளைச் சமயச் சூழலில் வளர்த்தெடுக்க ஊக்கமூட்டப்பட்டது. இம்மாணவர்களிற் சிலர் மாவட்டமட்ட தேசியமட்டப்போட்டிகளிற் கலந்தும் பரிசுகள் பெற்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெருங்கதை காலங்களில் பிள்ளையார் கதைபடிக்கப்படும் இறுதிநாளில் பிள்ளையார் புராணம் படிக்கப்பட்டுப் பயன்விரித்தும் திருவெம்பாவைக்காலத்தில் திருவாதவூரடிகள்

புராணம் படித்து பயன்விரிக்கப்பட்டும் வந்தன. நீர்ப்பாசனத்திணைக்களத்தில் கடமையாற்றிய நயினை ஆ.தியாகராஜா அவர்களும் திரு.ஐ.யாதவராசா அவர்களும் காலத்துக்காலம் மேற்குறிப்பிட்ட புராணங்களுக்குப் பயன்விரித்துதவினர். இவற்றால் பக்தர்களது ஈடுபாடும் புதிய உறுப்பினர் வரவும் அதிகரித்ததோடு கும்பமண்டபம், தம்பமண்டபம் ஆகியவற்றுக்குத் தற்காலிகக் கட்டடங்களும் அமைக்கப்பட்டன.

1982ல் ஆலய பரிபாலனசபையின் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பல புதியவர்கள் நிர்வாகசபையில் இடம்பெற்றனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு.த.தியாகலிங்கம் தங்கவேல். அரிசி ஆலை உரிமையாளர், வவுனியா. |
| செயலாளர் | - | திரு.ச.நாகராசா. காணி உத்தியோகத்தர், கச்சேரி, வவுனியா. |
| பொருளாளர் | - | திரு.சி.க.அருந்தவராசா. தேவகுணா அன்கொம் |
| உபதலைவர் | - | திரு.வ.த.கணேஷ். |
| உபசெயலாளர் | - | திரு.ச.குமாரசாமி. கச்சேரி வவுனியா |
| உபபொருளாளர் | - | திரு.க.முருகேசு. கச்சேரி வவுனியா. |

**நிர்வாகசபைஉறுப்பினர்கள**

| | |
|---|---|
| திரு.மு.முருகையா | திரு.கே.சண்முகராசா |
| திரு.து.பூபாலசிங்கம் | திரு.க.சந்திரன் |
| திரு.த.தர்மபாலன் | திரு.த.பாலதயானந்தன் |
| திரு.ந.செல்லையா | திரு.நா.செல்லையா |
| திரு.பீ.வள்ளிகாந்தன் | திரு.எஸ்.சுகுமார் |
| திரு.ந.பாலநாதன் | |

கணக்காய்வாளர் : திரு.க.மகேந்திரன்

நம்பிக்கைப் பொறுப்பாளராக முன்பிருந்த மூவரும் தொடர திரு.சீ.தேவகுமாரன், ஆ.தியாகராசா, திருமதி.ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர் காப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இக்குழு நிர்வாகப்பொறுப்பை மேற்கொண்டதும் செயற்பாடுகளில் துரித முன்னேற்றங் காணத்தொடங்கியது. நவக்கிரகங்கள்,வைரவர் போன்ற பரிவாரமூர்த்திகள் ஸ்தாபிக்கப்பட்டுப் பூசை வழிபாடுகள் 1984ல் ஆரம்பமாகியது.

**புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம்**

பிரதிஷ்டா மகாகும்பாவிஷேகம் நிகழ்ந்து 14 வருடங்கள் நிறைவடைந்ததால் விக்கிரகங்கள் பாலஸ்தாபனம் செய்யப்படவேண்டுமெனவும் அவசிய திருப்பணிகளாக மகாமண்டபம் நிரந்தரமாக அமைத்தல்,தம்பமண்டபம் ,தரிசனமண்டபம் ஆகியவற்றை மீளமைப்புச்செய்தல், மகாஜனமண்டபம் என்றழைக்கப்படும் வெளிமண்டபம் ஆகியன

அமைக்கப்படுவதோடு மகாமண்டபம்,கும்பமண்டபம் (ஸ்நபன மண்டபம்) ஆகியவற்றுக்குக் கொங்கிறீற் பிளாற் போடுதல், வர்ணந்தீட்டுதல், பண்டிகை வேலை, மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்தல், ஆகிய திருப்பணி வேலைகள் பூர்த்திசெய்யப்படவேண்டுமெனவும் இச்சபை தீர்மானித்ததற்கமைய 22-04-1984ல் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டது.

வைரவர் கோயில் அமரர் K.T.புலேந்திரன் நினைவாக அவரின் குடும்பத்தினரால் பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டது. நவக்கிரகக்கோயில் அமரர் திரு.M.முருகையா குடும்பத்தினரால் கட்டிப்பூரணப்படுத்தப்பட்டது. மணிக்கூட்டுக்கோபுரமும் கும்பாபிஷேகத்திற்கு முன்னர் கட்டிமுடிக்கப்பட்டு காண்டாமணி பொருத்தப்பட்டது.

எம்பிரானது கோயிற்கும்பாபிஷேகம் 1986ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 4ம் நாள்(17-03-1986) திங்கட்கிழமை ரோகினி நட்சத்திர சுபமுகூர்த்தத்தில், மட்டுவில் **ஜோதிடசிகாமணி சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள்** தலைமையில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இடம்பெற்று 25 நாட்கள் மண்டலாபிஷேகமும், மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு 25 நாட்கள் அபிஷேகமும் செய்யப்பெற்று, மண்டலாபிஷேக முடிவில் எம்பெருமானுக்குச் சகஸ்ரநாம சங்காபிஷேகமும் மணிக்கூட்டுக்கோபுரத்திற்கு அபிஷேகமுஞ் செய்யப்பெற்று விநாயகப்பெருமானின் திருவருளால் மகாகும்பாபிஷேகம் இனிதே நிறைவெய்தியது.

1986ல் நிகழ்ந்த பொதுச்சபைக்கூட்டத்தில் திரு.V.S.தேவகுமாரன் அவர்கள் தலைவராகவும் திரு.பொ.நல்லையா அவர்கள் செயலாளராகவும் திரு.சி.க.அருந்தவராசா அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். நீண்டகாலம் செயலாளராகவிருந்து ஆலயவளர்ச்சிக்குச் சிறப்பான சேவைபுரிந்த அமரர் திரு.ச.நாகராசா அவர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பெற்றார்.

மகோற்சவம்

மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறிய குதூகலத்தில் இருந்த விநாயகப்பெருமான் அடியார்கள், மகோற்சவம் நிகழவேண்டுமெனவும் அதற்குத் தம்மாலான உதவிகளைச்செய்து தருவோமெனத்தனியாகவும் குழுக்களாகவும் விடுத்த வேண்டுகோளைப்பரிசீலித்த ஆலயபரிபாலனசபையினரும் 1987 சித்திரை மாத பூரணைதினத்தன்று தீர்த்தோற்சவம் நிகழத்தக்கதாக மகோற்சவம் நிகழும் நாட்களைத் தீர்மானித்தனர். ஆலயத்துக்குத் தேவையான விளக்குகள், தீபங்கள், சருவக்குடங்கள், செம்புகள் போன்றவற்றை அடியவர்கள் அன்பளிப்புச் செய்தனர். நீர்ப்பாசன பொறியியலாளர் திரு.உருத்திராபதி அவர்களால் சண்டேஸ்வர எழுந்தருளிவிக்கிரகம் வழங்கப்பட்டது. மகோற்சவ காலத்தில் தேர்த்திருவிழா அன்று விநாயகப்பெருமான் தேரில் எழுந்தருளி அருள்பாலிக்கவேண்டுமென்னும் ஆவலால் சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டுத்தேரின் பாகங்களைப்பெற்று வந்து கட்டுத்தேர் உருவாக்கப்பட்டது. முல்லைத்தீவு குமுளமுனை நாகஞ்சோலைக்காட்டிலிருந்து நாகமரம் பெற்று பலஇடையூறுகளுக்கு மத்தியில் வவுனியா கொண்டுவரப்பட்டு கொடிமரம்

அமைக்கப்பெற்றது.

1987ஆம் ஆண்டு பிரபவ வருடம் சித்திரைத்திங்கள் 22ஆம் நாள்(04-05-1987) திங்கட்கிழமை சாவகச்சேரி சங்கத்தானையைச்சேர்ந்த பிரம்மஸ்ரீ குமார ஸ்ரீஸ்காந்தக குருக்கள் தலைமையில் கொடியேற்றுவைபவத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி 12-05-87 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 13-05-1987 புதன்கிழமை சித்திரைப் பூரணை தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெற்று, மகோற்சவம் இனிதே நிறைவேறியது. தீர்த்தத்திருவிழாவன்று அடியார்களுக்கு மகேஸ்வரபூசையெனப்படும் அன்னதானமும் இடம்பெற்றமை சிறப்பு அம்சமாகவிருந்தது.

தேர்பவனி

ஆலய பரிபாலனசபையினர், அவர்கள் சிறப்பாக அதன் பொருளாளர் திரு.சி.க.அருந்தவராசா அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியால் நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலய பரிபாலனசபையினரும் அதன் தலைவர் அருளாளர் திரு நமசிவாயம் அவர்களும் மனமுவந்து, தமது ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டுத்தேரின் முக்கிய பாகங்களைத் தந்துதவ, இறைவன் திருவருள் பாலித்தமையால், ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு தேர் கிடைத்து மகோற்சவம் தொடங்கிய முதலாமாண்டே விநாயகப்பெருமான் தேரில் எழுந்தருளிய காட்சி அடியவர்களின் நெஞ்சங்களைக் குளிரவைத்தது.

பெருந்திரளான மக்கள் பக்திப்பரவசத்துடன் ஆலயவீதியில் குழுமி நின்று அரோஹரா கோஷங்களுடனும் பஜனைப்பாடல்களுடனும் தேர்பவனியில் கலந்து கொண்டனர். தேர் வெள்ளோட்டத்தின் போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உயர் திரு.K.C.லோகேஸ்வரன் அவர்களும், பிராந்திய நீர்ப்பாசனப்பணிப்பாளர் உயர்திரு.மு.துரைராசரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பித்ததோடு இன்னல்கள் நிறைந்து மக்கள் வெளியே நடமாட அஞ்சுகின்ற சூழலிலும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமையை அரசாங்கஅதிபர் பாராட்டியதோடு பரிபாலனசபையினரின் விரைவான சிறந்த சேவையையும்பாராட்டித் தமது மகிழ்வைத்தெரிவித்தார்கள்.

இங்கு தேர்ப்பவனி நடைபெறுவதற்கு (40)நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (1947க்கு முன்னர்)இம்மாவட்டத்தின் ஓமந்தை மருதோடை கந்தசுவாமி கோயிலில் கட்டுத்தேரில் வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் ஆண்டு தோறும் பவனி வந்து துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தருளிய காட்சி அப்பகுதி மக்களது உள்ளத்தில் நீங்காது நிறைந்திருக்கின்றது.

ஆயினும், வவுனியா நகரில் ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்திலேயே முதன்முதலாக எம்பெருமான் தேரில் வீதிவலம் வந்தருள் புரிந்தமை இப்பகுதி மக்கள் அனைவரும் செய்த பாக்கியமேயாகும். எம்பெருமானது இரதோற்சவத்தைக்கண்டு களித்துப் பக்திப்பரவசத்திலிருந்த மக்கள் பலர் தம்மாலியன்ற உதவிகளைச்செய்ய முன்வந்தனர்.

### பாரிய திருப்பணிகள்

அடியவர்கள் நிதியுதவி, பொருளுதவி வழங்கிய சமயத்தில் பெரிய பெரிய திருப்பணி வேலைகளைச் செய்ய வளம்படைத்த சிலர் முன்வந்து திருப்பணிகளை நிறைவு செய்வித்தனர். 1988ல் கும்பமண்டபத்தின் மேற்பகுதி வேலையை வவுனியா மில்வீதி குகன் மோட்டர்ஸ் ஸ்தாபனத்தினரும், வசந்தமண்டப நிர்மாண வேலையை பிராந்திய நீர்ப்பாசனப்பணிப்பாளர் உயர்.திரு.K.துரைராசரத்தினம் அவர்கள் தலைமையில் நீர்ப்பாசத் திணைக்கள அலுவலர்களும், மடைப்பள்ளி நிர்மாணவேலையை, வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலர்களும் வில்வ அறை நிர்மாணவேலையை வவுனியா புதிய சந்தை வர்த்தகர் திரு.S.சிவபாதசுந்தரம் அவர்களும் முருகன் ஆலய நிர்மாணவேலையை டாக்டர்.J.சந்திரசேகரம் அவர்களும், பொறுப்பேற்றுச்செய்தனர். ஏனைய திருப்பணிகள் நிறைவுற்றபோதும் டாக்டர்.ஜே.சந்திரசேகரம் அவர்களும் அவரது துணைவியாரும் இறையடிசேர்ந்ததால் தாமதமாகிய முருகன் கோயில் நிர்மாணத்திருப்பணி பின்னர் அவர்களது மக்களால் தொடரப்பட்டு 1992 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அவ்வாண்டில் அருள்மிகு முருகன் சன்னிதானத்தில் **தமிழ்மணி அகளங்கன** அவர்கள் தலைமையில் கந்தபுராணபடனம் முழுமையாக நிகழ்த்த எம்பெருமான் திருவருள்பாலித்தருளினார்.

### தீர்த்தக்கேணி

மூர்த்தி,தலம்,தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்பாக ஒன்றிணைந்து விளங்குவது இந்து ஆலயங்களின் சிறப்பம்சமாகும். ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்திலும் மூர்த்தி,தலம் என்பன சிறப்பாக அமைந்து இருந்த போதும் தீர்த்தம் இல்லாதிருந்தமை அடியவர்கள் மனதில் குறையாக இருந்தது. ஆகவே தீர்த்தக்கேணி அமைக்க வேண்டுமென்னும் எண்ணங்கொண்டிருந்த அடியவர்கள் உள்ளத்தில் ,1987ல் மகோற்சவம் இனிதே நடந்தேறியபின் தீர்த்தக்கேணி அமைக்கும் சிந்தனை வலுப்பெற்று ஆலயபரிபாலனசபையினரைத் தூண்டுமளவுக்கு உற்சாகத்துடன் பக்தர்களால் நிதியுதவி செய்யப்பட்டது.

ஏற்கனவே தீர்த்தக்கேணி அமைக்கும் எண்ணங்கொண்டிருந்த பரிபாலனசபையினர் 1988ல் இத்திருப்பணியை நிறைவுசெய்யத்திட்டமிட்டு ஆரம்பித்தபோதும் 1989லேயே நிறைவுசெய்யப்பட்டு மகோற்சவகாலத்தில் தீர்த்தத்திருவிழா நிகழும் சித்திரைப்பூரணையன்று ஆலயத்தின் முன்னால் வடகிழக்கில் நீள்சதுரமாக அமைந்த தீர்த்தக்கேணியில் எம்பெருமான் தீர்த்தமாடியபோது அடியவர்களும் எமது வினைகளெல்லாம் இன்றுடன் **தீர்த்தோம்** எனும் குதூகலத்துடன் தீர்த்தமாடித்திளைத்த காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

1989ன் பின்னர் இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று அம்சங்களும் பொருந்திய சிறந்த ஆலயமாக விளங்குகின்றது. இம்மாவட்டத்தின் செட்டிகுளப்பகுதியில் வெளவாலை என்னும் இடத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த செட்டிமார்களால் கட்டப்பட்ட ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் என்னும் சிவன்கோவிலில் ஆலயத்தீர்த்தக்கேணி

அமைக்கப்பட்டிருந்தது. இக்கோவில் பழுதடைந்து காணப்பட்டபோதும் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் வரை இக்கேணியில் ஆடிஅமாவாசையன்று பிதிர்க்கடன் செய்யும் வழக்கம் நிலவியது. இது தவிர ஏனைய ஆலயங்களில், கிணறுகள், குளங்கள், சிற்றாறுகள் தீர்த்தத் தலங்களாக விளங்கின.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் இரண்டாவது தீர்த்தக்கேணியாகவும் வவுனியாநகரிலமைந்த முதலாவது தீர்த்தக்கேணியாகவும் அமைந்த ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயதீர்த்தக்கேணி இவ்வாலயத்திற்கு மேலுஞ் சிறப்பும் பெருமையும் சேர்ப்பதாக விளங்குகின்றது. இதனை அருட்கவிஞர் கல்மடு பொன் - தில்லையம்பலம் அவர்கள்

"சுந்தரஞ்சேர் வன்னிநகர் வெளிவட்ட வீதிச்
சூழலிலே கேணி யொடு சுகமாய்ச்சேர்ந்த
சிந்தைநிறை எழிற்சிந்தா மணிப்பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீரூஞ்சல்"

என எம்பெருமான் மீது பாடிய ஊஞ்சற்பதிகத்தில் படம்பிடித்துக்காட்டுதல் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்களாக விருந்த டாக்டர் ஜே.சந்திரசேகரம் அவர்கள் 1989லும் திரு.சி.மு.கதிரமலை அவர்கள் 1990இலும் திரு.ச.நாகராசா அவர்கள் 1991லும் இறையடிசேர்ந்தார்கள். ஆலய வளர்ச்சியின் தூண்களாக விளங்கிய இவர்கள் இயற்கையெய்திய பின்னர் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையும், ஆலய நிர்வாகக்கட்டமைப்பிலிருந்து நீக்கப்பெற்றுள்ளது.

பாராளுமன்றப் பிரதிநிதியாக விருந்த அமரர்.தா.சிவசிதம்பரம் அவர்கள், டாக்டராவிருந்து அரும்பணியாற்றியவரும், அறநிலையங்களைப் பரிபாலிக்கும் ஆற்றலைப்பெற்றவருமான அமரர் டாக்டர் ஜே.சந்திரசேகரம் அவர்கள், வர்த்தக சமூகத்தின் நன்மதிப்பைப்பெற்றவரும், எல்லோருடனும் கண்ணியமாக நடந்து கொள்பவரும், சிறந்த அடியவராகவும் விளங்கிய அமரர்.சி.மு.கதிரமலை அவர்கள், ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சி வரலாற்றில் ஆலயத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் நிர்வாகசபை உறுப்பினராகவும், உபசெயலாளராகவும், செயலாளராகவும் கடமைகள் ஆற்றி ஆலயவளர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் ஒருவராக விளங்கியவரும், கச்சேரியில் காணி உத்தியோகத்தராக விளங்கியவருமான அமரர்.ச.நாகராசாஅவர்கள் ஆகிய பெரியவர்கள் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையில் அங்கம் வகித்து ஆலயத்தினை சரியான பாதையில் வளர்ச்சிபெற நெறிப்படுத்திய பெரியவர்கள் இவர்கள்.

இவர்கள் நெறிப்படுத்தலில் வளர்ந்து நன்றாகப்பரிபாலனசபை இயங்கிக்கொண்டிருப்பதால் மேற்கூறிய பெரியவர்கள் இறையடிசேர்ந்ததன் பின்னர்

நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் தேவை உணரப்படாததால் ஆலயநிர்வாகக் கட்டமைப்பிலிருந்து இச்சபை நீக்கம்பெற்றது.

1998ல் நிகழ்ந்த ஆலய பரிபாலனசபையின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபைக்குத் தெரிவாயினர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.V.S.தேவகுமாரன். அவர்கள் |
| உபதலைவர் | : | திரு.K.நடராசா. அவர்கள் |
| | : | திரு.K.T.தர்மராசா. அவர்கள் |
| செயலாளர் | : | திரு.வ.குமாரசிங்கம். அவர்கள் |
| உபசெயலாளர் | : | திரு.s.நாகராசா. அவர்கள் |
| பொருளாளர் | : | திரு.சி.க.அருந்தவராசா. அவர்கள் |
| உறுப்பினர் | : | திரு.க.நா.பத்மநாதன். அவர்கள் |
| | : | திரு.ச.பரமகுலசிங்கம். அவர்கள் |
| | : | திரு.க.நமசிவாயம். அவர்கள் |
| | : | திரு.பொ.விஜயேந்திரன். அவர்கள் |
| | : | திரு.மு.விஜிதரன். அவர்கள் |
| | : | திரு.என்.ஸ்ரீ பாஸ்கரன். அவர்கள் |
| | : | திரு.தா.இராசையா. அவர்கள் |
| | : | திரு.என்.சிவானந்தராசா. அவர்கள் |
| | : | திரு.எஸ்.சிறிகரி. அவர்கள் |
| கணக்காய்வாளர் | : | திரு.கு.இரத்தினசிங்கம். அவர்கள் |
| காப்பாளர்கள் | : | திருமதி.இராஜமனோகரி புலேந்திரன். அவர்கள் |
| | : | திரு.த.தர்மபாலன். அவர்கள் |
| | : | திரு.க.முருகேசு. அவர்கள் |

இவ்வாலய வளர்ச்சிப்பாதையின் ஒரு மைல்கல்லாக விளங்கும் சித்திரத்தேர் உருவாக்கம், தேருக்கான கொட்டகை,தேர்முட்டி என்பன அமைக்கப்பட்டு நிறைவு செய்யப் பெற்று, ஆலயத்துக்குப் புதிய வனப்பும் ஐங்கரனின் வீதியுலாவுக்கு அணியூட்டும் சிறப்பும் பொருந்தச் சிறப்பான பணி இச்செயலவையின் காலத்தில் நிகழ்ந்தது அவர்கள் செய்தபாக்கியம் எனலாம். எந்த எந்தக் காலத்தில் யார்யாரைக் கொண்டு எவ்வெத் திருப்பணியை நிறைவேற்றுவதெனத் தீர்மானிப்பதும் செயற்படுத்துவதும் விநாயகப்பெருமானின் திருவிளையாடலேயாம்.அவர் ஆட்டுகின்ற விதத்தில் ஆடுகின்ற பம்பரங்களே பரிபாலனசபையினர் உள்ளிட்ட நாமனைவரும்!

பன்முகவளர்ச்சிகண்டு ஆன்மீகப்பணியோடு சமூகப்பணியையும் இணைத்துச் செயற்படும் இவ்வாலயத்தில் அடியார் தொகையும் திருப்பணிக்கான உதவியும் பெருகியதால் அடியார் வசதிகருதி மகாஜனமண்டபம் என அழைக்கப்படும் வெளிமண்டபம்,

திருமணமண்டபம்,உள்வீதி சுற்றுக்கொட்டகை என்பனவும் அமைக்கப்பெற்று ஆலயம் எழில் பெற்றுச் சிறப்பான பணிகள் தொடரக்கூடியதாக விளங்குகின்றமை எம்பெருமான் திருவருட்பேறேயாகும்.

**சித்திரத்தேர்**

படிப்படியாக ஆலயத் திருப்பணிகள் நிகழ்ந்து ஆலயம் புதுப்பொலிவுடன் மெருகூட்டப்பட்டு வருகின்றவேளையில் தொடர்ந்து கட்டுத்தேரில் எம்பெருமான் வீதியுலா வராமல் அவருக்கென அமைந்த புதிய தேரில் வீதியுலாவரவேண்டுமென்ற புதிய சிந்தனை பரிபாலன சபையினருக்கும் வழிபடுவோரில் பலருக்கும் தோன்றியதால் புதிய சித்திரத்தேர் அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தேர்த்திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. சரசாலை ஸ்ரீ சிதம்பரவிநாயகர் ஆலயத்தின் தேரினைச் செய்தவரான **சிற்பக்கலாரத்தினம் கி.கலாமோகன்** அவர்கள் தலைமையிலமைந்த குழுவினர் இத்திருப்பணியில் ஈடுபட்டு 1999 தைப் பூச தினத்திலன்று அச்சேற்றுவைபவம் நிகழ்ந்து அவ்வாண்டு ஆவணி விநாயகர் சதுர்த்தியன்று பவளக்கால் நாட்டு நிகழ்வும் இடம்பெற்றது. 1999 ஐப்பசி மாதஇறுதியில் ஏற்பட்ட திடீர் இடப்பெயர்வால் சிலமாதங்கள் திருப்பணிவேலைகள் தடைப்பட்டன.

நிலைமை வளமைக்குத்திரும்பி மக்கள் தமது இருப்பிடங்களுக்கு மீண்டபின்னர் திருப்பணி தொடர்ந்து நடைபெற்று 2001 ஆம் ஆண்டு பூர்த்தியடைந்தது. 29.04.2001 அன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டு அவ்வாண்டு நிகழ்ந்த மகோற்சவத்தின் போது தேர்த் திருவிழாவிலன்று (06.05.2001) எம்பெருமான் புதிய சித்திரத்தேரில் எழுந்தருளி வந்து அடியவர்களுக்குத் திருவருள் பாலித்த காட்சி கண்கொள்ளாக்காட்சியாக அமைந்தது. பெருந்திரளான மக்கள் திரண்டு வடம்பிடித்தும் "அரோகரா" கோஷமிட்டும், பஜனைகள் செய்தும் பக்திப்பரவசமாக வழிபட்டு எம்பெருமானது திருவருளைப்பெற்றுய்ந்தனர். ஏறக்குறைய (20) இருபது லட்ச ரூபா செலவில் அமைக்கப்பெற்ற புதிய சித்திரத்தேரினைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான தேர்க்கொட்டகை, தேர்முட்டி என்பன கட்டப்பெற்றுத் தேர்த்திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. தேர் வெள்ளோட்ட விழா மலச் ஒன்று வெளியிடப்பட்டது இம்மலரை **தமிழ்மணி அகளங்கன்** அவர்கள் மலராசிரியராக பணிபுரிந்து ஆக்கித்தந்தார்

2002ல் நிகழ்ந்த பரிபாலன சபையின் பொதுக்கூட்டத்தில் பெரும்பாலும் பழையவர்களே நிர்வாகசபைக்குத் தெரிவாகினர். செயலாளர் பதவிக்கு உதவிச் செயலாளராக விருந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் **திரு.ஞா.கேதீஸ்வரன** அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

இக்காலத்தில் ஆலயபூசைவழிபாட்டுடன் ஆன்மீக எழுச்சிக்கான செயற்பாடுகளும் சமூகப்பணியும் விரிவுபெற்றன.2004ல் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி வவுனியாவில் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சிவதொண்டர் மாநாட்டுக்கான ஒழுங்கமைப்பு, தொண்டர்களை உபசரித்தல், தங்குமிடவசதி

ஒழுங்குசெய்தல் போன்ற பணிகளை ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலனசபையும் வழிபடுவோரும் இணைந்து செயற்பட்டு மாநாட்டின் வெற்றிக்குப்பக்கபலமாக விளங்கினரென்பது குறிப்பிடத்தக்க ஓரம்சமாகும். ஆலயத்தின் பங்களிப்புத்தொடர்பான தகவல்கள் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 50வது நிறைவுவிழா தொடர்பாக வெளியிடப்பெற்ற சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளமை ஆலயத்துக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

**சமயதீட்சை**

சிவதொண்டர் மாநாட்டிலன்று 100க்கு மேற்பட்ட இந்துச் சிறுவர்களுக்குச் சமயதீட்சை வழங்கப்பட்டது. சைவக்குருமணி உயர்திரு க.சிவராசாக்குருக்கள் இத்தொண்டர்களுக்குச் சிந்தாமணிவிநாயகர் ஆலயத்தில் வைத்துச் சமயதீட்சை வழங்கிய நிகழ்வு மிகவுஞ்சிறப்பாகவும் பக்தியுணர்வோடும் இணைந்திருந்தமை பார்த்தோர் உள்ளத்தைப் பரவசப்படுத்தின.

**இந்து சமய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு**

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலனசபையினர் கொழும்பு விவேகானந்த சபையினருடன் இணைந்து இந்துசமய ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை வவுனிய சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்தினர். 2007ல் நிகழ்ந்த இக் கருத்தரங்கில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு கல்விவலயங்களைச் சேர்ந்த ஐம்பது (50) க்குமேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து பயன்பெற்றனர்.

**ஆலயக் குருக்களுக்கான புதிய இல்லம்**

ஆலயக்குருக்களுக்கென ஏற்கெனவே அமைக்கப்பெற்றிருந்த இல்லம் மிகவுஞ்சிறியதாகவும் வசதிக்குறைவாகவும் இருந்தமையால் புதிய இல்லம் அமைக்கவேண்டியதன் அவசியம் உணரப்பட்டு புதிய இல்லம் அமைக்கப்பரிபாலனசபையினர் தீர்மானித்தனர். ஆலயத்தின் தெற்குப்பகுதியில் மாடிக்கட்டிடமொன்று அமைக்கப்பட்டு மேல்மாடி ஒருகுடும்பத்திற்கும் கீழ்த்தளம் இன்னொரு குடும்பத்துக்குமாக இருகுடும்பங்களுக்கேற்ற குருமார் இல்லம் இக்காலத்திலே நிறைவுசெய்யப்பெற்று 15.07.2006ல் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் உயர்திரு.வி.கயிலாசபிள்ளை அவர்களாலும், இந்துமாமன்றத்தின் செயலாளர் உயர்திரு.கந்தையா நீலகண்டன் அவர்களாலும் திறந்து வைக்கப்பெற்றன.

இத்தகைய வசதிகள் ஆலயபரிபாலன சபையினரால் செய்து கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடக்கூடிய சிறப்பம்சம் எனலாம்.

**அன்னதான/கலாசார மண்டபம்**

இவ்வாலயத்தில் நிகழும் பல்வேறு சிறப்புநிகழ்வுகளுக்கு அடியவர்களால் அன்னதானம் வழங்கும் வழக்கம் வளர்ச்சியடைந்து வருகின்றது. அறநெறிப்பாடசாலை, திருமணவைபவம், கலாசாரநிகழ்ச்சிகள், அன்னதானம் ஆகியனயாவும் ஒரேயொரு தற்காலிக

மண்டபத்திலேயே இடம்பெறுவதால் கலாசார நிகழ்வுகளுக்கும் இடநெருக்கடியும் போதிய வசதியின்மையுங் காணப்பட்டதால் அன்னதான நிகழ்வுகளுக்கும் கலாசார நிகழ்வுகளுக்கும் தனியானதும் நவீன வசதிகள் பொருந்தியதுமான மண்டபமொன்று அமைக்கப்பட வேண்டுமென்று சபையினரால் தீர்மானிக்கப்பட்டது.

முதலில் மண்டபமொன்று அமைப்பதற்குப்பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டு அதனைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் வவுனியா பிரதேச செயலாளராக விளங்கியவரும் தற்போது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக விளங்குபவருமான திருமதி எமல்டா சுகுமார் அவர்களது தீர்க்கமான முடிவும், அவரைத் தொடர்ந்து பிரதேச செயலாளர்களாகப் பணியாற்றிய உயர்திரு.சி.சத்தியசீலன் அவர்களதும் செல்வி.த.துரைச்சாமி அவர்களதும் கூர்த்தமதிச்செயற்பாடுமே ஆலயத்தின் முன்பாக கிழக்குத்திசையிலே இம்மண்டபம் அமைப்பதற்கான காணி கிடைக்க வழியமைத்தன. இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிய வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் உயர்திரு.இராமச்சந்திரன் அவர்களதும், அவ்வலுவலக உத்தியோகத்தர்களதும் சிறப்பான செயற்பாடும் இவ்விடத்தில் மண்டபத்துக்கு அத்திவாரக்கல்நாட்டுவதற்கு அத்திவாரமாக அமைந்ததெனலாம்.

15-07-2006 அன்று சுபவேளையில் ஸ்ரீசிந்தாமணி விநாயகப்பெருமானது திருவருளால் அடிக்கல்நாட்டுவைபவம் இடம்பெற்றது. **அகில இலங்கை இந்து மாமன்றப் பிரதித் தலைவர் உயர்திரு சின்னத்துரை தனபாலா அவர்களும் இந்து சமய கலாசார அமைச்சின் செயலாளர் உயர்திரு க.பரமேஸ்வரன் அவர்களும** அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் **உயர்திரு.க.கணேஸ்** அவர்களும், இந்துசமய கலாசார அமைச்சின் மேலதிகசெயலாளர் **உயர்திருக.பரமலிங்கம்** அவர்களும் வவுனியா பிரதேச செயலாளர் **உயர்திரு.சி.சத்தியசீலன** அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர்.

மங்கலநன்னாளிலே மனம் நிறைந்த பக்தியுடன் பண்பின் இருப்பிடமாய் அமைந்த பெரியவர்கள் அடிக்கல் நாட்டிய திருப்பணி நிதானமாக முன்னேறியபோது காலத்துக்குக்காலம் அடியவர்கள் நிதியுதவி செய்து அன்னதானமண்டபத்திருப்பணியை முற்றுப்பெற உதவினார்கள். **அகில இலங்கை இந்துமாமன்றத்தின் துணைத்தலைவரான திரு.ஞா.கேதீஸ்வரன் அவர்கள்** ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைச் செயலாளராகப் பணியாற்றுவதும் இறைசித்தமேயாகும். பலநிறுவனங்களில் முக்கிய பதவிகளில் இருப்பதும் அவரின் சிறப்பான அணுகுமுறையும் இப்பாரியபணி இனிதே நிறைவேற வழிகோலியது என்றால் மிகையாகாது. ஏறக்குறைய இரண்டரைக் கோடிரூபா செலவில் இம்மண்டபத்திருப்பணி வேலைகள் நிறைவுற்றன.

அகிலஇலங்கை இந்துமாமன்றம் **எழுபதுலட்சம் (7000000)** ரூபாவினை மண்டப அமைப்புக்காக கட்டங்கட்டமாக வழங்கி இத்திருப்பணி நிறைவேறுவதற்கு உதவியது.

லண்டன் விம்பிளி விநாயகராலய பிரதம இணைப்பாளர் திருமதி.இரத்தினசிங்கம் அவர்களும, துணை இணைப்பாளர் டாக்டர்.மகேஸ்வரன் அவர்களும் முயன்று இம்மண்டபத்தில் அமையப்போகும் அறநெறிப் பாடசாலைக்கு 2500 ஸ்ரேலிங் பவுண வழங்கி ஊக்கமளித்தார்கள். இம்மண்டபத் திருப்பணிக்கு முதன் முறையாகக் கிடைத்த வெளிநாட்டு இந்துஆலயமொன்றின் நிதியுதவி இதுவேயாகும்.

இதன் பின்னர், பிரித்தானிய இந்து அறக்கட்டளை நிறுவனம்,கனடா இந்துமகாசபை போன்ற நிறுவனங்களிடமிருந்தும் இத்திருப்பணிக்கான அன்பளிப்புக்கள் கிடைக்கப்பெற்றமை ஆலயபரிபாலனசபையினருக்குப் பேருதவியாக அமைந்தது.

மிகுதிப்பணம் அடியவர்களின் அன்பளிப்புக்களாகவும் ஆலய செலவினங்களுக்கு மேலாகக்கிடைத்த வருவாய்களாகவும் நல்லுள்ளங்கொண்ட செல்வம் படைத்தவர்கள் வழங்கிய வட்டியில்லாக் கடன்களாகவும் பெறப்பட்டுத் திருப்பணி நிறைவேற்றப்பட்டது.

திராவிட இந்து கலாசாரக் கட்டிடக்கலை மரபைப் பின்பற்றி அமைக்கப்பட்ட மண்டபத்தில், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த திருச்சி,துறையூரைச் சேர்ந்த சிற்பக்கலைஞர் திரு.கோ.தினேஷ் தலைமையிலான குழுவினரால் அமைக்கப்பெற்ற சமயகுரவர் நால்வர் உள்ளிட்ட நாயன்மார்களது திருவுருவங்களைத்தாங்கியவாறு போதிகள் அமையப்பெற்ற தூண்களைக்கொண்ட பல வர்ணந்தீட்டப்பட்ட முகப்புடன் கூடிய மண்டபம் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

அறுநூறுக்கு (600) மேற்பட்ட இருக்கைகளைக் கொண்டதாகவும், கலாசார நிகழ்வுக்கு ஏற்றவகையில் நவீன வசதிகளையுடைய அரங்கு அமையப்பெற்றதும், அன்னதானத்திற்கேற்ற இடவசதி கொண்டதும் சமையற்பகுதி,மலசலகூடம், குளியலறை, வாகனத்தரிப்பிடம் போன்ற வசதிகளைக்கொண்டதாகவும் இம்மண்டபம் மிளிர்கின்றமை, வவுனியா நகர்ப்புறத்திலும் புறநகரிலுமுள்ளவர்களுக்கு ஒருவரப்பிரசாதமாகும்.

அரங்குக்கு வேண்டிய திரைகளை உயர்திரு.S.தியாகராசா அவர்களும் அவற்றை இயக்குவதற்குத் தேவையான மோட்டார் உபகரணங்களை வவுனியா குகன்மோட்டர்ஸ் உரிமையாளரும் வழங்கியுதவினர்.

இம்மண்டபம் விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் ஐந்தாம் திகதி (22-10-2010) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு ரேவதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபவேளையில் (பூரணை தினத்தன்று), நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் அருளாசியுடன், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் உயர்திரு வி.கயிலாசபிள்ளை அவர்களாலும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு கந்தையா நீலகண்டன் அவர்களாலும் பக்தி பூர்வமாக திறந்து வைக்கப்பெற்றது. திறப்புவிழாவின் போது வடமாகாண ஆளுநரின் செயலாளர் உயர்திரு.சி.இரங்கராஜா

அவர்கள் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள், வடமாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் உயர்திரு.தி.இராசநாயகம் அவர்கள், வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி திருமிகு.ஜி.விஸ்வநாதன் அவர்கள், வவுனியா மாவட்ட அரசாங்கஅதிபர் திருமதி.P.M.S.சாள்ஸ் அவர்கள், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலைவர் திருமிகு.ஆறு.திருமுருகன் அவர்கள், வவுனியா நகரசபைத் தலைவர் உயர்திரு.S.M.G.நாதன் அவர்கள் போன்ற பெரியவர்கள் ஆசிகள் மொழிந்தும், அருளுரை நல்கியும், வாழ்த்துரை வழங்கியும், அறிவுரை பகர்ந்தும் திறப்புவிழாவிற்குப் பெருமை சேர்த்தார்கள்.

கலாசார/அன்னதான மண்டபத் திறப்புவிழா தொடர்பான சிறப்புமலரொன்று வெளியிடப்பெற்றது. வடமாகாண ஆளுநரின் செயலாளர் உயர்திரு.சி.இரங்கராஜா அவர்கள் மலரினை வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை கிரி எலக்றோனிக் சுப்பர் மார்க்கட் உரிமையாளர் திரு.ராஜரட்ணம் கிரிதரன் அவர்கள் பெற்றுச் சிறப்பித்தனர்.

**கலாசார அன்னதான மண்டபத்தை உருவாக்க உழைத்த கலைஞர்கள்**

**மண்டப நிர்மாணம்**

கட்டிடக்கலை விற்பன்னர் திரு.செ.செல்வநாயம் குழுவினர், வவுனியா.

**கூரை வேலை**

கூரைவேலை,அரங்க அமைப்பு, ஏனைய மண்டப மரவேலைகள் யாழ்ப்பாணம் நவாலியூர் ஆசாரியார் திரு.நடராஜா இராசதுரை குழுவினர்

**தள அமைப்பு**

வவுனியா திரு.புண்ணியராசா பரமேஸ்வரன் (ஈசன்) குழுவினர்

**இரும்பு வேலை**

யன்னல்கள் முதலிய இரும்புவேலைகள் - திரு.சேரன்குமார் குழுவினர்.
சேரன் ஒட்டுவேலைத் தொழிலகம், வவுனியா

**வர்ணவேலைகள்**

1. திரு.பாலசுப்பிரமணியம் சிவரூபன் குழுவினர் தோணிக்கல் வவுனியா.
2. திரு.விநாசித்தம்பி பிரபாகரன் (குகன் ஆட்ஸ்) குழுவினர் நிவாசிபுர கொழும்பு

**நாயன்மாரது திருவுருவச்சிலைகள்**

சிற்பக்கலா வித்தகர் திரு.கோ.தினேஷ் ஸ்தபதி குழுவினர் இல.17, வடமலைப் பிள்ளை சந்து, துறையூர், திருச்சி, தென்னிந்தியா.

## விசேட பூசைகள், விரதங்கள், விழாக்கள்

இவ்வாலயத்தில் தினமும் மூன்றுவேளைப் பூசைகள் நடைபெறுகின்றன. தினமும் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி பாடப்படுவது இவ்வாலயத்தின் சிறப்பம்சம் எனலாம்.

### விசேடபூசைகள்

தைப்பூசம், சதுர்த்தி, சங்கடகரசதுர்த்தி போன்றவை தைமாதத்திலும், மாசிமகம், சதுர்த்தி, சங்கடகரசதுர்த்தி போன்றவை மாசிமாதத்திலும், பங்குனி உத்தரம், முதற்கும்பாபிஷேக தினமான பங்குனி ரோகிணி, சங்காபிஷேகம் போன்றவை பங்குனி மாதத்திலும், மகோற்சவ திருவிழாக்கள் சித்திரை மாதத்திலும், வைகாசி விசாகம், ஆனிஉத்தரம், ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம் போன்றவை அவ்வம் மாதங்களிலும் விநாயகர்சதுர்த்தி ஆவணிமாதத்திலும் நவராத்திரி விழாப் பூசைகள் புரட்டாதி மாதத்திலும், ஐப்பசி மாதத் தொடக்கத்திலும், திருக்கார்த்திகை கார்த்திகை மாதத்திலும், திருவெம்பாவை, பிள்ளையார் பெருங்கதை என்பன மார்கழி மாதத்திலும், இடம்பெறும் விசேட பூசைகளாகும். சதுர்த்தி, சங்கடகரசதுர்த்தி,கார்த்திகை போன்ற விசேட பூசைகள் ஒவ்வொருமாதமும் இடம்பெறுகின்றன.

### விரதம்

மாசிமாதத்தில் இடம்பெறும் மகாசிவராத்திரி விரதம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. பகற்பூசைகளோடு இரவு முழுவதும் நான்கு சாமப்பூசைகளும் ஒழுங்காக இங்கு நிகழ்கின்றன.

சித்திரைமாதத்தில் சித்திராப் பௌர்ணமியன்று விரதமனுஷ்டிக்கப்பட்டு விசேட பூசைகள் இடம்பெறும்.

ஆடிமாதத்தில் ஆடிச்செவ்வாய்,ஆடிஅமைவாசை விரதமும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றன. புரட்டாதிமாதத்தில் புரட்டாதிச்சனி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அடியவர்கள் பெருமளவில் பங்குபற்றி எள்ளெண்ணெய் சனீஸ்வரனுக்கு எரித்து வழிபடுவர். ஐப்பசியில் கந்தர்சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரதத்திற்கும் அடியவர்கள் அதிகளவில் பங்குபற்றுவர்

### விழாக்கள்

தைப்பொங்கல் விழா, சித்திரைவருடப்பிறப்பு, நவராத்திரி விழா, மார்கழித் திருவெம்பாவை, சித்திரையில் வருடாந்த மகோற்சவத் திருவிழா என்பன இங்கு நடைபெறும் விசேட விழாக்களாகும்.

### குருபூசை

**சித்திரைச் சதயத்தில் அப்பருடைய குருபூசையும், வைகாசி மூலத்தில் திருஞானசம்பந்தர் குருபூசையும், ஆனிமகத்தில் மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசையும், ஆடிச்சுவாதியில் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையும் இடம்பெறுகின்றன.**

புராணபடனம்

பிள்ளையார் பெருங்கதைகாலங்களில் பிள்ளையார் கதையும் விநாயகர்புராணமும் படிக்கப் பெறும். திருவெம்பாவைக்காலத்தில் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பட்டு பயன்விரிக்கப்படுகின்றது. இக்காலத்தில் திருவாசகம் முற்றோதல் இடம்பெற்று பங்குபெறும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். கந்தர்சஷ்டி விரதகாலத்தில் கந்தபுராணம், யுத்தகாண்டம், சிங்கமுகாசுரன் வதைப்படலம், சூரபத்மன் வதைப்படலம், இரணியன் புலம் புறு படலம். மீட்சிப்படலம் போன்றவை படித்துப்பயன் விரிக்கப்படுகிறது. மார்கழி மாததிருவாதிரை தொடக்கம் பங்குனி உத்தரம் வரை கந்தபுராணபடனம் முழுமையாக நிகழ்த்தப்பட்டு பங்குனி உத்தரத்திலன்று நிறைவு பெறும். நிறைவு நாளன்று பக்திப்பெரு விழாவாக நடாத்தப்பட்டு புராண படனத்தில் ஈடுபட்டவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெறுவதோடு அன்னதானமும் வழங்கப்படுகின்றது.

அறநெறிப்பாடசாலை

1977ஆம் ஆண்டு தொடக்கம் அறநெறிப்பாடசாலை நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் 6-7-1992ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலை மாணவர்களுள் சிலர் மாவட்ட, மாகாண, தேசியமட்டப்போட்டிகளிற் பங்குபற்றி பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்றுள்ளனர்.

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்குக் காலத்துக்குக்காலம் பயற்சிப்பட்டறைகள் நடத்தப்படுகின்றன. அறநெறிப்பாடசாலையின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்குச் சிறியதொரு நூலகம் இயங்குகின்றது.

ஆலயநிர்வாகம்

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் நிர்வாகசபையே ஆலயத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானதாகும்.தலைவர்,செயலாளர்,பொருளார் உட்பட(15)பதினைந்து பேர் நிர்வாகசபையில் இடம்பெறுவர். பரிபாலன சபையின் யாப்புக்கமைவாக ஆலயத்தின் நோக்கத்தை நிறைவுசெய்வதற்கேற்ற வகையில் நிர்வாகசபைசெயற்படும். நிர்வாகசபை பொதுச்சபைக்கே பொறுப்புடையது.

நிர்வாக சபையின் நிதிச்செயற்பாடுகளை ஆய்வு செய்து பொருளாளரால் தயாரிக்கப் பெற்ற கணக்குகளை செவ்வை பார்த்து, குறித்த கணக்கு ஆலயத்தின் நிதி நிலைமையைச் சரியாகவும் ஒழுங்காகவும் காட்டுகின்ற தென்பதை உறுதிப்படுத்திய பின்னர் தமது அறிக்கையில் அதனைக்காட்டியும் தவறுகள், பிழைகள் இருப்பின் அதனையும் பொதுச்சபையின் கவனத்திற்குத் தமது அறிக்கை மூலம் கணக்காய்வாளர் கொண்டுவருவார்.

பரிபாலனசபையின் செயற்பாடுகளை நன்றாகக் கவனிப்பதும், வழிபடுவோருக்கும் நிர்வாகத்துக்குமிடையில் இணைப்புப்பாலமாக செயற்படுவதும் பரிபாலனசபை தவறான போக்கில் செயற்படுகின்றதெனக்கருதினால் சரியானவழியில் செல்ல ஆலோசனை கூறி வழிப்படுத்துவதும் காப்பாளர் கடமையாகும். காப்பாளர் மூவர் இடம்பெறுகின்றனர்.

ஆலயப்பணிகள் விரிவடைந்து சென்றதால் தொண்டுள்ளத்தோடு செயற்படுகின்ற உறுப்பினர் தொடர்ந்தும் அப்பணிகள் அனைத்தையும் செய்ய இயலாததால் முழுநேரப் பணியாளரின் சேவை தேவைப்பட்டதால் முகாமையாளர் ஒருவரை நியமித்துக் கோயிற்கடமைகளை முன்னெடுத்துச்செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

தற்போது முகாமையாளராக மாதகல்லைச்சேர்ந்த திரு.ஆ.பொன்னம்பலம் பணியாற்றுகின்றார். இவர் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் ஆலயத்தின் அன்றாடச் செயற்பாட்டை முகாமை செய்தும், ஆலயத்தினதும் சுற்றுச்சூழலினதும் சுத்தம் பேணியும் மூன்றுவேளைப்பூசையும் ஒழுங்காக நடைபெறுவதை உறுதிசெய்தும் வழிபடுபவர்களோடு நல்லிணக்கத்துடனும் புரிந்துணர்வுடனும் செயலாற்றி வருகின்றார்.

நிறைவு

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களும் பெற்றுவிளங்கும் இவ்ஆலயம் முழுமையடைவதற்கு இராஜகோபுரம் அமைக்கப்பெற்று,மகாஜனமண்டபம் எனப்படும் வெளிமண்டபமும் நிரந்தரமாக்கப்பட்டு, ஆலயத்திற்கென பூரணமான நல்ல நூல்நிலையமொன்றும் உருவாக்கப்பட்டால் வவுனியா நகரில் சிறந்த முன்மாதிரியான ஆலயமாக இவ்வாலயம் திகழுமென்பதில் ஐயமில்லை.

தனக்குமேலோரு நாயகனில்லாதவரான விநாயகப்பெருமானது திருவுள்ளக்கருத்தெதுவோஅது அவ்வக் காலங்களில் பொருத்தமானவர்களைக்கொண்டு நிறைவேற்ற எம்பெருமான் திருவருள்பாலித்தருள்வார்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே? "

1967 தொடக்கம் 2010வரையுள்ள ஆலயவரலாற்றை ஓரளவு சுருக்கமாக நோக்கினோம். கிடைக்கக்கூடிய ஆவணங்கள், அவ்வக் காலங்களில் ஆலயத்தோடு தொடர்புபட்டவர்களோடு உரையாடிப்பெற்ற செவி வழிச்செய்திகள், நேரடியாகப்பெற்ற அனுபவங்கள் ஆகியனவே இவ் வரலாற்றுக்கட்டுரைக்கு உசாத்துணையாக அமைந்தன.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

வெளிவட்ட வீதி
வவுனியா
22-10-2010

ஆலய பரிபாலனசபையினர்
ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயம்

உ
சிவமயம்

# வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார்

## திரு ஊஞ்சற் பாமாலை

### அருட்கவிஞர் கல்மடு, பொன். தில்லையம்பலம்

திருச்சிற்றம்பலம்

சீரோங்கு வன்னிவள நாட்டில் உற்ற
சிறப்போங்கு வவுனியா நகரந் தன்னில்
பேரோங்கு வெளிவட்ட வீதி தங்கும்
பெருமைமிகு சிந்தாமணிப் பிள்ளை யார்மேற்
பாரோங்கு ஊஞ்சற்பா மாலை பாடப்
பயனோங்கு பராபரமாய்ப் பரந்து நிற்கும்
காரோங்கு கரிமுகனார் கருணை பொங்கிக்
கருத்தோங்க எமையென்றுங் காப்ப தாமே

திரு ஊஞ்சல்

1. கருதரிய நால்வேதம் தூண்க ளாகக்
காணரிய சாத்திரங்கள் மேற்தாம் பாகப்
பொருவரிய புராணங்கள் வடம தாகப்
போற்றரிய தத்துவங்கள் பலகை யாக
மருவரிய வெளிவட்ட வீதி தங்கு
மல்குகலைக் கோபுரத்துள் வந்து காணுந்
திருவரிய சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழந் தெழுந்தருளி ஆட ரூஞ்சல்.

2. சூரியனுஞ் சந்திரனும் வடந்தொட் டாட்டச்
சுரர்குருவுஞ் சுக்கிரனுஞ் சுபங்கள் சொல்லக்
காரியொடு புதன்செவ்வாய் இராகு கேது
கட்டியங்கள் கூறவெளி வட்ட வீதி
சேரிடமாய் இலங்குதிருக் கோயில் தங்கிச்
சிவதொண்டர் மனம்மகிழ அருள் பாலிக்குஞ்
சீருடைய சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆட ரூஞ்சல்.

3. ஆரணனும் நாரணனும் குடைபி டிக்க
அமரேசன் இந்திரன் ஆலவட்டந் தூக்கப்
பூரணியாஞ் செயமாது இலட்சுமி யினோடு
புகழரிய சாமரையும் வீசி நிற்பக்

காரணியாம் வெளிவட்ட வீதி உற்ற
கனகமணி ஆலயத்தில் களிப்பி னோடு
சீரணிசேர் சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

4. சித்தரொடு ரிசிகள்மெய் சிலிர்த்து நிற்கச்
சிறப்பினொடு தேவர்கிம் புருடர் வாழ்த்தச்
சத்தியொடு சரஸ்வதியும் மாலை தூக்கிச்
சரணமிடும் வெளிவட்ட வீதி தங்கும்
உத்தமர்கள் போற்றவரும் ஆல யத்தில்
ஒளிச்சுடராய் உவந்தினிதே உலகோர் ஏத்துஞ்
சித்திபுத்தி சேர்சிந்தா மணிப்பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

5. சங்கொலிக்க மணியொலிக்கத் தாள மேளத்
தவிலொலிக்க நாதஸ்வரக் குழல்கள் ஊத
மங்கையர்கள் மனவொருமைப் பாடு கொண்டு
மலர்விழிகள் நீர்சிந்திக் கரங்கள் கூப்ப
ஐங்கரனே தங்குவெளி வட்ட வீதி
ஆலயத்தில் அமர்ந்தடியார் ஆடிப் பாடத்
திங்களொளி தங்குசிந்தா மணிப்பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

6. அரனுமைக்குத் தலைமகனே அன்பர் போற்றும்
அருட்கடலே அனுதினமும் உனை நினைந்து
பரமுனக்கென் றுடல்பொருளோ டாவி தன்னைப்
பார்வாழ்வில் அர்ப்பணித்து என்றும் உன்னைக்
கரங்கூப்பும் அடியார்க்குக் கருணை காட்டுங்
கருதரிய வெளிவட்ட வீதி தங்குந்
திரமிகுந்த சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

7. கார்தங்கி மழைபொழியும் கழனிகள் சூழ்
கற்பகங்கள் நிறைந்தவன்னி எனுஞ் சிறந்த
ஊர்தங்கி ஒளிவீசும் ஓங்காரா நின்
ஒளிக்கிரணக் கதிர்வீச்சால் உலகில் உற்ற
பேர்தங்கு மடியார்கள் துன்பம் போக்கும்
பெருமையனே வெளிவட்ட வீதி தங்குஞ்
சீர்தங்கு சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழ் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

8. வானூர்தி புகையிரத நிலையத் தோடு
மக்கள்குறை தீர்க்கும் கச்சேரி கோடு
தானேக மாய்ப்பரந்த கட்ட டங்கள்
தக்கமணிக் கூட்டுக்கோ புரமுங் கொண்டு
மாநகராய்த் துலங்கவரு வவுனி யாவில்
வளமிகுந்த வெளிவட்ட வீதி தங்கு
தேனுலவு சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

9. மந்தியினம் மரந்தாவி மகிழ்ந்து காண
மயில்களெல்லாம் நடமாட மரத்தின் கொம்பில்
குந்தியிருந் தேகுயில்கள் கீதம் பாடக்
கோடைமழை மேகங்கள் முழவொ லிக்குஞ்
சுந்தரஞ்சேர் வன்னிநகர் வெளிவட்ட வீதிச்
சூழலிலே கேணியொடு சுகமாய்ச் சேர்ந்த
சிந்தைநிறை எழிற்சிந்தா மணிப்பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

10. எத்திசையும் புகழ்கொண்ட வவுனி யாவில்
இருக்கின்ற அடியார்கள் மனத்தி லூற்ற
பக்தியினால் பாடுமிந்தப் பாவிற் குற்றம்
படராமற் பரிவோடு பாது காக்கும்
வித்தகனே வெளிவட்ட வீதி தங்கு
விநாயகனே வேதனைகள் சூழ்ந்தி டாது
சித்திதரும் சிந்தாமணிப் பிள்ளை யாரே
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீ ரூஞ்சல்.

**வாழி**

திருநீறும் ஐந்தெழுத்தும் சிறந்து வாழி!
திருவோங்கி இல்லமெல்லாம் செழித்து வாழி!

பெருமைமிகு அடியார்தம் பெயரும் வாழி!
பேசரிய கணபதியின் தம்பி வாழி!

இருமைதரும் புராணஇதி காசம் வாழி!
இந்நிலத்தில் சிவஞானம் என்றும் வாழி!

கருமைமிகு யானைமுகக் கணப தியே
கணப்பொழுதும் அகலாதென் நெஞ்சில் வாழி!

## லாலி

| | | | |
|---|---|---|---|
| லாலி | லாலி | லாலி | லாலி |
| லாலி | லாலி | லாலி | லாலி |
| அச்சை முறித்தவரே | | லாலி | லாலி |
| அடியவர்க்கு அருள்பவரே | | லாலி | லாலி |
| | | லாலி | லாலி |
| இச்சைகளைத் தீர்ப்பவரே | | லாலி | லாலி |
| இன்பம் அளிப்பவரே | | லாலி | லாலி |
| | | லாலி | லாலி |
| சித்திகளைத் தருபவரே | | லாலி | லாலி |
| சிந்தாமணி விநாயகரே | | லாலி | லாலி |
| | | லாலி | லாலி |

## பராக்கு

மேருவிற் பாரதம் பொறித்தாய் பராக்கு
மேன்மைசேர் சித்திபுத்தி பாகா பராக்கு
கார்பொழியும் நீரேநற் கனலே பராக்கு
காற்றாகி மண்ணாகி வானாய் பராக்கு
பாருலகு தேவர்களைக் காத்தாய் பராக்கு
பராபரனே கஜமுகனைக் காய்ந்தாய் பராக்கு
சீருடைய தமிழருளும் செல்வா பராக்கு
சிவசக்தி யின்முதற் சேயே பராக்கு

மங்களம்

விக்கினங்கள் தீர்க்கு மெங்கள்
விநாயகர்க்கு மங்களம்
வீரனெனத் தேவர் தமைக்
காத்தவர்க்கு மங்களம்
இக்குவல யத்தில் உள்ள
எல்லோருக்கும் மங்களம்
இன்னருள்செய் தம்பியான
சண்முகற்கும் மங்களம்
பக்குவமாய் உலகு காக்கும்
பரமனுக்கு மங்களம்
பாலர்இரு வரையும் ஈன்ற
பராபரிக்கு மங்களம்
திக்குகளும் போற்று மெங்கள்
திருநகராம் வவுனியாச்
சிந்தாமணி விநாய கர்க்கும்
சேர்ந்தவர்க்கும் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்

*இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!*

உ
சிவமயம்

# இத்தரை மாந்தர் துன்ப இருள் கிழித்து உலாவ வேண்டும்

கவிஞர் அகளங்கன்

பல்லவி

விநாயகனைத் தொழுவேன் - சிந்தாமணி
விநாயகனைத் தொழுவேன்.
(விநாயக....)

அனுபல்லவி

வெளிவட்ட வீதிதன்னில்
எழில் கொட்ட வீற்றிருக்கும்
(விநாயக....)

சரணம்

வளம் மிக்க வன்னியிலே
உளம் மிக்க மகிழ்வுடனே
வீற்றிருக்கும் அவனைப்
போற்றி வணங்கி அன்பாய்
(விநாயக....)

கலைகளை அவன் கொடுப்பான்
கவலையை அவன் தடுப்பான்
நிலையான வாழ்வு தந்து
நித்தியம் வாழ வைப்பான்
ஆ...த...லி...னால்
(விநாயக....)

அலைபாயும் மனத்தி னையே
அடக்கிநல் அமைதி பொங்கும்
தலையாய வாழ்வு தந்து
தரணியில் ஓங்கச் செய்வான்
(விநாயக....)

சித்திரப் பொற்றேர் ஊர்ந்து
சிறப்புடன் உலாவும் வீரன்
இத்தரை மாந்தர் தூய
இதயத்தேர் ஊர வேண்டும்
(விநாயக....)

சித்திரைப் பதினாறாம் நாள்
திருவீதி உலாவும் வீரன்
இத்தரை மாந்தர் துன்ப
இருள் கிழித்து உலாவ வேண்டும்.
(விநாயக....)

உ
சிவமயம்

# சிந்தாமணிப்பிள்ளையார் துதி

*கலாபூஷணம், கவிசேகரன்,*
*அரியான் பொய்கை* **க.செல்லத்துரை**
*முள்ளியவளை*

## காப்பு

சிந்தாமணிப்பிள்ளை பதிகமது தான் சிறக்க
அந்தமில்லாதவர் பாதங் காப்பு

கற்பனைக்கு மெட்டாத கண்ணியஞ் சேர்
கவின் மிகுந்த புதுமைகளே நிறைந்த தானம்
கற்றறிந்தார் நிறைந்த வெளி வட்டவீதி
கலைவல்லார் நல்லறிஞர் ஆதியான
பொற்புடையோர் மிக வாழும் புவியே யாகும்
புகலரிய நற்றலத்தில் கோவில் கொண்டு
அற்புதங்க ளவைபுரியும் தன்மையாலே
அரிய சிந்தாமணியெனும் பேர் பூண்டாய் போற்றி

போற்றி செய்யும் அடியாரைக் காப்பாய் போற்றி
புகலரிய பிரணவத்தின் பொருளே போற்றி
நாற்றிசையும் நல்லருளே புரிவாய் போற்றி
நல்லடியார் வல்வினைகள் களைவாய் போற்றி
சாற்றரிய மெய்யன்பர் நாளும் வந்து
சரணமலர் பணிந்திடவே மகிழ்வினோடு
ஏற்றரிய இன்னலெல்லாம் நீக்கியின்பம்
எந்நாளுமருள் சிந்தாமணியே போற்றி

மணி மன்றி லாடு சிவன் மைந்தா போற்றி
மாங்கனியை வாங்க வலம் வந்தாய் போற்றி
அணி திகழுமைங்கரங்களுடையாய் போற்றி
அவுணனாம் கயமுகனை வென்றாய் போற்றி
பணி புரியு அமரரெல்லாம் பணிந்தே போற்ற
பகரரிய திருநடனம் செய்தாய் போற்றி
கணிக்கரிய நகை புரிந்த இரவோன் தன்னைக்
கண்டகனே யாவை யெனச் சபித்தாய் போற்றி

அண்டரெல்லாம் வந்து முறையிட்ட போது
அவர்கள் துயர் நீக்க வரனேறு தேரின்
திண்டிறல் சேர் அச்சதனை முறித்தாய் போற்றி
திருமுகங்க ளாறுடை யோனண்ணா போற்றி
வண்டினங்கள் பாடு செங்காட்டிற் தானே
வந்தரனைத் தாபித்த வடிவே போற்றி
பண்ணினொடு பாடிவந்து பாதம் போற்றும்
பக்தர்களை என்னாளுங் காப்பாய் போற்றி

நம்பியாண்டார் நம்பி நயந்தே வைத்த
நல்லமுதைத் திருவமுது செய்தாய் போற்றி
தும்பிமா முகமுடைய தூயோய் போற்றி
துதிக்கரிய தோர் கொம்புடையாய் போற்றி
அம்புவியோர் போற்று ஔவை யம்மையாரை
அரன் கையிலை மீது முனம் வைத்தாய் போற்றி
நம்புமடியார்கள் பாவம் தன்னைப் போக்கி
நல்ல சிவகதி சேர்க்கும் நம்பா போற்றி

இந்திரன் தன் பூஞ்சோலை சருகேயாக
இனியிதற்கென் செய்வே னென்றிரங்கி ஏங்கி
வந்தவனே பூசை புரிந் திரங்கி வேண்ட
மற்றவன்றன் சஞ்சலமே நீக்க வேண்டிப்
புந்திதனிற் கருணை கொடு காக்கையாகி
புகலரிய அகத்தியனார் கமண்டலத்தில்
வந்திருந்து கவிழ்த்திடக் காவிரியே யாகி
வளம் சிறக்க வைத்தவனே போற்றி போற்றி

மதியணி செஞ்சடையோன் தான் கொடுக்க வாங்கி
வந்த சிவலிங்கமதைக் கவரும் வண்ணம்
துதி பெறும் மந்தணர் தம் சிறுவன் போலத்
துயர் நீங்க வரம் பெற்ற இராவணன் முன்
அதி விரைவாய் வந்தவன் முன் நின்றே வாங்கி
அரன் கொடுத்த சிவலிங்கமதனையாங்கே
துதிக்குமடி யார்வினைகள் நீக்க வேண்டி
துரிதமாய்த் தாபித்த தலைவா போற்றி

வேதமதை நால்வகையாய் வகுத்த வேத
        வியாசரவர் விளம்பு பாரதத்தின் காதை
ஓது மகா மேரு எனும் மலையின் மீதே
        ஒரு கொம்பால் எழுதிய ஏரம்பா போற்றி
மாதரா மிலக்கணை யென்றோதும் பெண்ணாள்
        மாமுகன் தன் விரதமதை இகழ்ந்தாளாகி
ஓதுமவள் கணவனே வெறுத்து நீக்க
        உய்வதறியாது லைய வைத்தாய் போற்றி

அவ்வை மனைதன்னிலவள் வந்ததாலே
        அவ்வை பல அல்லல்களுக்காளே யாகி
கவ்வையுடனே மீண்டு வந்திலக்க ணையைக் கண்டு
        கன்னியவள் துயர் நீக்க விநாயகரைப் போற்ற
தெய்வ விநாயகரருளால் துன்பம் நீங்கித்
        தேவியிலக்கணை முன்போல் தேசே பெற்று
உய்வடையும் படியாக அவளை வைத்த
        உயர்களிறே யுன்பாதம் போற்றி போற்றி

ஆலமர நிழலதனில் அமர்ந்தாய் போற்றி
        அமரரிடர் தனையகற்றி யாண்டாய் போற்றி
சீலமுடன் திரு நடஞ்செய் தேவே போற்றி
        சிறந்தடியார் சிந்தனையில் உறைந்தாய் போற்றி
மேலான பதப்பேறே தருவாய்போற்றி
        மேன்மைபெறு வெளிவட்ட மமர்ந்தாய் போற்றி
சீலமுறு சிந்தாமணிப் பெயரே பூண்ட
        சிவகுமாரவுன் பாதம் போற்றி போற்றி

வாழ்த்து

அன்ன தானம் புரியுமழகான மண்டபமும்
பன்னுகலைப் பயிர்வளரும் பாங்கான மண்டபமும்
மன்னு சிந்தாமணிப்பிள்ளை மகிழ்ந்துறையும் கோயிலுமே
என்னாளும் வாழ்கவென என்றென்றும் வாழ்த்துதுமே.

உ

# விநாயகர் தத்துவமும் விநாயகர் வழிபாடும்

**சித்தாந்த இரத்தினம் டாக்டர் மா. வேதநாதன் M. A., Ph. D.,**

*தலைவர், இந்து நாகரிகத்துறை இணைப்பாளர்,*

*சைவசித்தாந்த முதுகலைமாணி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

அறிமுகம்

விநாயகர் வழிபாடு மிகவும் புராதனமானது. தனிப்பெருஞ் சிறப்புடைய இவ்வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் நிலவியதை அறிஞர் குறிப்பிடுகின்றனர். இருக்கு வேதத்தில் விநாயகர் "கணபதி" என்ற சொல்லினால் சுட்டப்பட்டுள்ளார். தேவாரங்களிலும் அவர் "கணபதி" என்ற சொல்லால் சுட்டப்படுவது இங்கு நோக்குதற்குரியது. விநாயகர் வழிபாட்டினைக் "கணபதி வழிபாடு" என்றும் வழங்குவர். விநாயகரைப் பரம்பொருளாகக் கொள்ளும் அவரின் தத்துவம் "காணாபத்தியம்" எனப்படும். விநாயகரின் திருவடிவங்களும், திருவுருவங்களில் காணப்படும் ஆயுதங்களும் அவர் சக்தியுடன் விளங்கும் திருக்கோலங்களும், அவர் எழுந்தருளியிருக்கும் வாகனங்களும், அவரின் திருநாமங்களும் விநாயகர் வழிபாட்டு முறைகளும் அறிவார்ந்த தத்துவப் பொருளை உணர்த்துபவையாக விளங்குகின்றன. அவற்றை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

விநாயகர் வடிவங்களின் தத்துவநிலை

விநாயகர் ஒருவரேயாயினும் "நிறுத்திடுவன் நினைத்த உரு நிமலன்தானே" என்ற சித்தாந்த சைவதத்துவ அடிப்படையில் அவர் அவ்வப்போது பற்பல வடிவங்கள் கொண்டதைச் சமய சாத்திர நூல்கள் நன்கு புலப்படுத்துகின்றன. **அகோர சிவாச்சாரியார** பத்ததி பதினாறு வகையான விநாயகர் வடிவங்களைக் குறிப்பிடுகின்றது. **ஸ்ரீ தத்துவநிதி** என்ற சிற்ப நூலில் விநாயகரின் முப்பத்திரண்டு வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. **கணபதி ஹ்ருதயம** என்ற நூல் விநாயகரின் ஐம்பத்தொரு பேதங்களைச் சுட்டுகின்றது. ஸ்ரீ தத்துவ நிதி கூறும் விநாயகரின் முப்பத்திரண்டு திருவடிவங்களின் தத்துவநிலை பற்றி முதலில் நோக்குவோம்.

1. பால விநாயகர்

இவர் குழந்தை வடிவத்தில் உள்ளவர். யானை முகத்தோடும் நான்கு திருக்கரங்களோடும் விளங்குகின்றார். மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும், கரும்பையும் தனது நான்கு திருக்கரங்களில் ஏந்தியுள்ளார். துதிக்கையில் ஒரு மோதகத்தைத் தாங்கியுள்ளார். இவர் இளம் சூரியனை ஒத்த நிறமுள்ளவர். பாலவிநாயகர் ஒரே இடத்தில் உட்காராமல் ஓடிவிளையாடும் இயல்பினர். ஆரம்ப நிலையில் ஞானத்திற்குச் சலனம் உண்டு என்பதையே இத்திருவடிவம் உணர்த்துகின்றது.

2. தருண விநாயகர்

இவர் இளம் பருவத் தோற்றம் உள்ளவர். யானை முகத்தையும் எட்டுத் திருக்கரங்களையும் கொண்டவர். பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம்,

ஒடிந்த கொம்பு, நெற்கதிர், கரும்பு என்பவற்றைத் தனது எண் கரங்களிலும் ஏந்தியுள்ளார். இவர் சிவந்த சூரியனின் நிறம் உடையவர்.

### 3. பக்தி விநாயகர்

இவர் யானை முகத்தையும், நான்கு திருக்கரங்களையும் உடையவர், தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், சர்க்கரைப் பாயாச பாத்திரம் ஆகியவற்றைத் தனது நாற்கரங்களிலும் ஏந்திய வராகக் காட்சி அளிப்பார். இவர் சரத்கால சந்திரனைப் போன்ற தூய வெண்மையான நிறம் உடையவர்.

### 4. வீர விநாயகர்

இவர் யானை முகத்தையும் பதினாறு திருக்கரங்களையும் உடையவர். கத்தி, வாள், வில், அம்பு, கேடயம், சம்மட்டி, தடி, அங்குசம், பாசம், சூலம், பரசு, குந்தம், வேதாளம், கதை, கொடி, சக்கரம் ஆகிய பதினாறையும் பதினாறு திருக்கரங்களில் ஏந்தி நின்ற கோலத்தில் பதினாறு பேறுகளைத் தருபவராக விளங்குகின்றார். உணவுப்பொருட்கள் இல்லாமல் ஆயுதங்கள் மட்டும் ஏந்தியுள்ள வீரத்திருவுருவம் இது ஒன்றே ஆகும்.

### 5. சக்தி விநாயகர்

இவர் யானை முகத்தையும் எட்டுக் கரங்களையும் உடையவர். தனது எட்டுக் கரங்களிலும் கிளி, மாதுளம்பழம் தாமரை, மணி, பொன்னால் செய்த நீர்ப்பாத்திரம், அங்குசம், பாசம், கல்பசாத்திரம் (மூப்பு வராமல் செய்யும் மருத்துவ நூல்) ஏந்தியவராய் விளங்குகின்றார். பச்சைத் திருமேனியுடைய தேவியை இடுப்பில் கை கொடுத்துத் தழுவிக் கொண்டுள்ள நிலையில் காட்சி தருகின்றார். இவர் அந்திவானம் போன்ற செம்மை நிறமுடையவர்.

### 6. துவிஜ விநாயகர்

நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். நான்கு யானை முகங்களை உடையவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன் போல் வெண்மையானவர்.

### 7. சித்தி விநாயகர்

இவர் மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு என்பவற்றைத் தனது ஐந்து கரங்களில் தரித்தவரும் பொன் கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குகின்றார்.

### 8. உச்சிஷ்ட விநாயகர்

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீல நிறத் திருமேனி உடையவருமாக விளங்குபவர். பிறிதொரு நிலையில் இவர் பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காம மோகிதராகவும், நீலவர்ணம் உடையவராகவும் விளங்குகின்றார். ஊச்சிஷ்டம் என்பதற்கு ஒருவர் உபயோகித்த பின் ஒதுக்கிய அசுத்தமான பொருள் என்பது கருத்தாகும். எச்சில் என்றும் அர்த்தம் உண்டு.

சுத்தமான நிலையை மட்டுமன்றி அசுத்தமான நிலையினையும் கடந்து நிற்கும் நிலையே எமது வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அசுத்தமான பொருள்களும் செடி கொடிகளுக்குப் பசளையாகி எமக்கு நலன் பயக்கின்றது. இவ்வாறு "அழுக்கை அழுக்காகக் கருதக் கூடாது அவையும் நன்மை செய்யும்'' என்ற தத்துவத்தை உச்சிஷ்ட விநாயகர் வடிவம் சுட்டி நிற்கின்றது. சிற்றின்பம் தெய்வீக நோக்குடன் அமையும்போது பேரின்பம் பெறப்படும் என்பதும் இத்திரு வடிவத்தின் நுண்பொருள் ஆகும்.

### 9. விக்ன விநாயகர்

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவராகவும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவராகவும் பொன் மேனியுடையவராகவும் விளங்குகின்றார்.

### 10. ஷிப்ர விநாயகர்

தந்தம், கற்பகக் கொடி, பாசம், ரத்ன கும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூ போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.

### 11. ஹேரம்ப விநாயகர்

அபயம், வரதமாகிய கைகளையுடையவர், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

### 12. இலட்சுமி விநாயகர்

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

### 13. மஹா விநாயகர்

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறமுடையவர். முக்கண்ணர், பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற - தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

### 14. விஜய விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

### 15. நிருத்த விநாயகர்

இவரைக் கூத்தாடும் பிள்ளையார் என அழைப்பர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் என்பவற்றைத் தரித்தவர். பொன் போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

16. ஊர்த்துவ விநாயகர்

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்பு, வில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன் வண்ண வண்ணர். பச்சை நிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

17. ஏகாட்சர விநாயகர்

செந்நிறமானவர்,. செம்பட்டாடையர், செம்மலர், மாலையர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம், இவை தாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர். பதுமாசனத்திருப்பவர். பெருச்சாளி வாகனர்.

18. வர விநாயகர்

செவ்வண்ணர், யானை முகவர், முக்கண்ணர், பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன் நிறைந்த கபாலத்தை உடையவர், பிறை முடியர்.

19. திரயாக்ஷ்ர விநாயகர்

அசைகின்ற செவிகளாகிய சாமரையணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களையுடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

20. ஷிப்ரபிரசாத விநாயகர்

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விடரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

21. ஹரித்திரா விநாயகர்

மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களையுடையவர், அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பத்தர்கட்கு அபயமளிப்பவர்.

22. ஏகதந்த விநாயகர்

பேழை வயிற்றுடன் நீலமேனியர். கோடரி, அடசமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

23. சிருஷ்டி விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தை உடையவர். சிவந்த திருமேனியர்.

24. உத்தண்ட விநாயகர்

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றை ஏந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சை மேனியாளாகிய தேவியால் தழுவப் பெற்றவர். சிவந்த

மேனியுடையவர்.

25. ரணமோசன விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம், இவற்றைத் தரித்தவர், வெண்பளிங்கு போன்ற மேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

26. துண்டி விநாயகர்

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

27. துவிமுக விநாயகர்

தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசு நீலமேனியர். செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

28. மும்முக விநாயகர்

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.

29. சிங்க விநாயகர்

வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர். யானைமுகர், சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

30. யோக விநாயகர்

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக் கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு பாசம் அட்சமாலை, யோகதண்டம் கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

31. துர்க்கா விநாயகர்

சுட்ட பசும் பொன்னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்ச மாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர், செந்நிற ஆடையர்.

32. சங்கடஹர விநாயகர்

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பக்கத்தில் தொடையில் சக்தியை உடையவராக விளங்குகின்றார். சக்தி பசியமேனியளாக நீலப்பூவினை ஏந்தியவளாக இருப்பாள். வலது கையில் அங்குசம், வரதம், உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீல நிறமான ஆடையணிந்தவர்.

மேலே காட்டப்பட்டுள்ள விநாயகரின் திருவடிவங்களை நோக்கும்போது அவர்

பொதுவாக யானை முகம் கொண்டவராகவும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கை உடைய திருமுகங்களை உடையவராகவும், நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு என்ற திருக் கரங்களைக் கொண்டவராகவும், அவற்றில் வெவ்வேறு ஆயுதங்களைத் தரித்துள்ளவராகவும், செம்மை, வெண்மை, மஞ்சள், கருநீலம், நீலம் ஆகிய நிறங்களை உடையவராகவும். தேவி அற்ற திருமேனியராகவும், ஒரு தேவியை உடையவராகவும், இரு தேவியர்களுடன் விளங்குபவராகவும் எலி, சிங்கம் ஆகிய வாகனத்தில் எழுந்தருளியிருப்பவராகவும் விளங்குகின்ற தத்துவநிலை தெரியவருகிறது. மேலும் விநாயகர் படிமங்கள் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், ஆடற்கோலத்திலும் அமையும் மெய்யையும் புலப்படுகின்றது. நின்ற கோலத்தில் இயற்றும்போது ஆபங்கம் அல்லது சமபங்கத்தில் விநாயகரின் படிமம் அமைதல் வேண்டும். அமர்ந்த கோலத்தில் அமைக்கும் போது உடலையும் தலையினையும் நேரியதாக அமைத்து வலது காலை ஆசனத்தில் தொடையுடன் சேர்த்து, மடக்கி ஊன்றி, இடது காலைக் கிடத்தியதாய் இருத்தல் வேண்டும். இல்லங்களில் வைத்து வழிபடுவதற்கும், கோயில்களில் பிரதிட்டை செய்வதற்கும், அமர்ந்த விநாயகர் கோலப் படிமமே ஏற்றதாகும். உற்சவங்களுக்கு அமர்ந்த கோலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் நின்ற.கோலமுடைய விநாயகரே விசேடமென்பது தத்துவமாகும்.

விநாயகரின் திருவுருவத் தத்துவம்

விநாயகர் திருவுருவத்தின் தத்துவ நிலை பரமரகசியமானதாகும். அவரின் தத்துவத்தையும் அவரின் வீரதீரச் செயல்களின் உட்பொருளையும் சிறப்பாகப் புலப்படுத்துவது **விநாயக புராணம்** ஆகும். ஔவையார் பாடியருளிய **விநாயகர் அகவல** விநாயகர் உருவம் பற்றியும் அவ்வுருவம் சுட்டும் தத்துவப் பொருளையும் விளக்கி நிற்கும் சைவத்தமிழ் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் விநாயகரின் திருவுருவத்தில் சிலம்பு அணிந்து விளங்கும் திருவடிகள், பொன்னால் செய்யப்பட்ட இடைக்கொடி, பெருவயிறு, ஒற்றைக் கொம்பு, சிவந்த குங்குமப்பொட்டு, ஐந்து கரங்கள், அங்குசமும் பாசமும் தரித்த கைகள், நீலமேனி பெரிய வாய், நான்கு திருத்தோள்கள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று திருக்கண்கள், கன்ன மதம், கைம்மதம், கோசமதம் என்னும் மதங்களைப் பொழிதலால் உண்டாகும் தழும்புகள், இரண்டு பெரிய காதுகள், பொன்னால் செய்யப்பட்ட கீரிடம், திரண்டு மூன்று வடமாக விளங்கும் பூணூல், பெருச்சாளி வாகனம் என்பன திகழ்வதையும் அவர் சொல்லும் பொருளும் கடந்த தத்துவப் பொருளாக விளங்குவதையும் தன் அடியவர்களுக்கும் தமது தத்துவப் பெருநிலையைக் கொடுத்து ஆட்கொள்ளும் பேரருட் திறத்தையும் தத்துவார்த்த ரீதியாக விளக்குகின்றது. இதனை ஔவையார் விநாயகர் அகவலில்.

**"சீதக் களபச் செந்தா மரைப்பூம்**
**பாதச் சிலம்பு பலஇசை பாடப்**
**பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்**
**வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்**
**பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்**
**வேழ முகமும் விளங்குசிந் தூரமும்**
**அஞ்சு கரமும் அங்குச பாசமும்**

நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூசிக வாகன!

..........................................................................................

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகர் விரைகழல் சரணே"

என்று குறிப்பிடுவதால் அறியலாம். திருமூலரும் விநாயகரின் திருவுருவத்தை "ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை" என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். அருணந்தி சிவாச்சாரியாரும் விநாயகரின் திருவுருவத் தத்துவத்தை

"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும் ஒருவா ரணத்தின் தாள்கள்"

என்று மொழிவர். விநாயகர் தனது திருக்கையொன்றில் மோதகம் ஏந்தி விளங்குவதை ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத்தின் முதற் பாடலில் "முதாகராத்த மோதகம்" என்று சுட்டுவதால் அறிய முடிகின்றது.

விநாயகரின் திருவுருவ உறுப்புக்கள் உணர்த்தும் மறைஞான தத்துவப் பொருளை இங்கு நோக்குவோம்.

**ஐந்து கரங்கள்**

விநாயகர் நான்கு கரங்களுடன் தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உடையவராக விளக்குகின்றார். பாசம் தரித்துள்ள கரம் படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது. அங்குசம் ஏந்திய கரம் அவரின் அழித்தல் தொழிலை அறிவிக்கின்றது. உயிர்களுக்கு அபயம் அளித்துக் காக்கும் அபய கரம் அவரின் காத்தல் தொழிலைச் சுட்டி நிற்கின்றது. மோதகம் ஏந்தி நிற்கும் வலது கரம் உயிர்களுக்கு அருள்புரியும் அருளற்றொழிலைப் புலப்படுத்துகின்றது.

தும்பிக்கை எனப்படும் துதிக்கை உறு உணர்ச்சி, மணம் அறிதல், உணவை எடுத்தல் என்ற முத்திறங்களை உடையது. அத்துதிக்கை காட்டியும் மறைத்தும் நிற்கும் திரோதானம் ஆகிய மறைப்புத் தொழிலை உணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் படைத்தல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்து தொழிலுக்கும் அவரே அதிபதி என்பதையும், இதனால் அவர் அளவில் ஆற்றல் உடையவராக விளங்குகிறார் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

யானை முகம்

விநாயகர் யானை முகம் உடையவராக விளங்குவது, அவரே "ஓம்" என்ற பிரணவப்பொருள் என்பதைச் சுட்டி நிற்கின்றது. அவர் ஓங்கார வடிவினன் என்பது,: அவரின் அட்டோத்திர சத நாமங்களில் "ஓங் காராய நம" என்று அவர் துதிக்கப்படுவதனால் உணரலாம். யானைக்கு நினைவு வன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிவு உடைமை, அளப்பரும் சாந்தமுடைமை, இதம் செய்பவர்களுக்கு வசமாய் உதவுவது ஆகிய இவை அருங்குணங்களாக உள்ளன. அதனாலேயே இக்குணங்களெல்லாம் ஒருங்கே அமைந்த விநாயகருக்கு யானைமுகம் அமைந்து விளங்குகின்றது.

கொம்புகள்

விநாயகரின் திருமுகத்தை நோக்கும்போது ஒரு பக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படுகிறது. இது ஆண் வடிவின் அடையாளமாகும். மறுபக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படவில்லை. இந்நிலை பெண் வடிவைச் சுட்டி நிற்கின்றது. இந்நிலையானது விநாயகர் ஆண்பாலா பெண்பாலா என்று கேட்பவர்களுக்கு அவர் எப்பாலுங் கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் இயல்பினர் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. ஒடிந்த கொம்பு அபரஞானமாகிய விந்துவைக் குறிக்கும். மற்றைய ஒற்றைக் கொம்பு இறைவனை உணர்வதற்கு வாயிலாகவுள்ள பரஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. விநாயகரின் திருவுருவத்தில் காணப்படும் கொம்புகளைப் பதிஞானம், பாசஞானம் என்று கூறுதலும் உண்டு. வலது கொம்பாக விளங்கும் ஓடிக்கப் பெற்ற கொம்பு பாசஞானம் ஆகும். பாசஞானம், உணர்வரிய கலைஞானமாகிய சிவஞானத்திற்கு வாயிலாக விளங்கும் தன்மையது ஆகும். அதன் காரணமாகவே அது பாரதம் எழுத உதவிய எழுத்தாணியாக உதவியது. இடது கொம்பு பதிஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. அதனாலேயே அது விநாயகரைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கின்றது.

மூன்று கண்கள்

சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களையும் கண்களாகக் கொண்டு அவற்றிற்கு ஒளியைக் கொடுத்து நிற்பவர் விநாயகர் என்ற தத்துவத்தை அவரின் மூன்று கண்கள் சுட்டி நிற்கின்றன. பகலில் சூரியன் என்ற கண்ணாலும், இரவில் சந்திரன் என்ற கண்ணாலும், அக்கினி என்ற கண்ணால் எந்நேரமும் அறியும் ஆற்றல் உடையவர் என்பதே விநாயகரின் மூன்று கண்கள் புலப்படுத்தும் தத்துவமாகும்.

மும்மதம்

விநாயகர் அறிவு, இச்சை, தொழில் என்ற மூன்றும் உடையவர் என்பது மும்மதம் என்ற சொல்லால் சுட்டப்படும். உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம், திருப்பெருகு சிவஞானம் என்ற மூன்று ஞானங்களும் மும்மதங்களாகச் சுட்டப்பெறுவதில் உண்டு. இதனடிப்படையில் இந்த மூன்று ஞானங்களையும் உணர்த்துகின்றவர். விநாயகர் என்பதே மும்மதம் எனபதன் தத்துவப் பொருளாகும்.

பெருவயிறு

விநாயகரின் பெரு வயிறானது (பேழை வயிறு) எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

பாம்பாபரணம்

விநாயகர் பாம்பை ஆபரணமாக அணிந்து விளங்குவது அவரின் திருவுருவத்தில் குண்டலினி சக்தியின் தரிசனத்தைக் காட்டி நிற்கின்றது. பாம்பு குண்டலினி சக்தியின் குறியீடாக விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இங்கு **"இருத்தியே நாகரூபம்"** என்று குறிப்பிடுவது நோக்குதற்குரியது. இருத்தி என்பதற்கு நல்ல செல்வம், ஐஸ்வரியம், மேலாந்தன்மை என்பது பொருளாகும். இதனடிப்படையில் நோக்கும்போது இவைகளை உடையவர் விநாயகர் என்பது மட்டுமன்றி அடியவர்களுக்கு அவற்றைத் தருபவர் விநாயகர் என்பதையும் அவர் அணிந்துள்ள பாம்பாபரணம் புலப்படுத்துகின்றது. விநாயகரின் பூணூலும், அரைநாணும் பாம்பாகவும் விளங்குவது உண்டு.

பிறை

விநாயகர் பிறை சூடியிருப்பது அறியாமை அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற உயிர்களை உயர் நிலைக்கு உயர்த்தி உய்விப்பவர் என்பதையும் அவர் ஞானமே வடிவினர் என்பதையும் உணர்த்துகின்றது.

பூணூல்

விநாயகர் பூணூல் அணிந்துள்ளமை, அவர் பிரம்ம ஞானஉபதேசத்திற்குரிய பிரம்மஞானி என்பதையும், அவர் முப்புரிநூல் தரித்துள்ளமையானது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற முப்பெரும் கடவுளர்களும் அவருள் உறைகின்றனர் என்ற பெரும் தத்துவத்தையும் சுட்டி நிற்கின்றது. எங்கும் நிறைந்த அக்கினி வடிவானவர் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

மோதகம்

விநாயகர் மோதகம் ஏந்திய திருக்கையானது அனைத்து உலகங்களும், அவ்வுலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் விநாயகரிடத்தில் அடங்கியுள்ளன என்பதை உணர்த்துகின்றது. மோதகம் பூரணப் பொருளின் ஓர் அடையாளமாகும். மேலும் அடியார்கள் பசு ஞானத்தைக் கவளமாக மோதக வடிவில் படைக்கின்றனர் என்பதையும், அவர் அதனை உண்டு தமது பேழை வயிற்றைத் திறந்து சிவஞானத்தை அவர்களுக்கு வழங்குகின்றார் என்பதையும் உணர்த்தவே கவள உணவாகிய மோதகத்தை அவர் கையில் கொண்டு காட்சி தருகின்றார் என்பது தத்துவமாகும். மேலும் விநாயகரின் திருக்கரத்தில் காணப்படும் மோதகம் அவருக்கு மோதகம் மீதுள்ள விருப்பத்தைப் புலப்படுத்துகின்றது. அவருக்கு மோதகம் படைத்து வழிபட்டால் அவ்வடியார்களுக்கு அவர் பேரின்பமாகிய முக்திப்பேற்றினைக் கொடுப்பார் என்பதை உணர்த்தவே ஆதிசங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தில் நுட்பமாக "முதாகராத்த மோதகம் ஸதாவி முத்தி சாதகம்" என்று அவரைப் பாடியுள்ளார் எனலாம்.

### திருத்தாள்கள்

விநாயகரின் திருவுருவமும் திருத்தாள்களும் ஞானத்தின் அடையாளங்களாகும். விநாயகர் ஞானக் குழந்தையாக விளங்குவதை "ஞானக் கொழுந்து" என்ற திருமந்திரக் குறிப்பால் அறிய முடிகின்றது. சிவபெருமானை ஞானத் திருவுருவாகக் காட்டும் குமரகுருபர அடிகள் அவரின் திருவடிகளும் ஞானம் என்பதைச் சுட்ட "ஞானம் திருவடி" என்றே குறிப்பிடுகின்றார். தத்துவ நோக்கில் உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களை இயக்கி அருமையின்பத்தை அளிப்பது ஞானம் ஆகும். இந்த ஞானம் ஏற்பட்டதும் உயிர்கள் விளக்கம் பெறுகின்றன என்பது சைவ தத்துவ முடிவாகும். இவ்வகையில் உயிர்களை உய்வித்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பப்பேற்றை அளிக்கும் சித்தாந்த சைவ தத்துவத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகரின் திருத்தாள்கள் விளங்குகின்றன.

### விநாயகர் ஏந்தியுள்ள ஆயுதங்களின் தத்துவம்

விநாயகர் பிரணவ தத்துவ வடிவமாவார். அவர் தமது திருக்கரங்களில் பல வகையான ஆயுதங்களை ஏந்தியவராக விளங்குகின்றார். அவ்வாயுதங்கள் நல்லவர்களைக் காப்பாற்றவும், தீயவர்களை அழிக்கவும், தம்மை வழிபடுகின்ற அடியவர்களின் இடையூறுகளைப் போக்கவும் பயன்பட்டதை விநாயகரின் தெய்வீக வரலாறு பற்றிய கதைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

தனது அடியவர்களுக்கு ஆன்மீக அழகுப் பொருட்களாகவும், அபயம் அளிக்கும் கருவிகளாகவும் காட்சி அளிக்கும் அவ்வாயுதங்கள் தீயவர்களுக்கு அச்சத்தைக் கொடுப்பனவாக விளங்குகின்றன.

விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களைக் கூர்ந்து நோக்கினால், அவர் வாழ்வில் வெற்றியீட்டித் தரும் வீரம்மிகு கடவுளாக விளங்குவது புலப்படுகின்றது. விநாயகர் தமது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் அவர் ஒரு வெற்றித் தெய்வம் என்ற விநாயக தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் சுட்டும் தத்துவப் பொருளை ஈண்டு நோக்குவோம்.

### பாசம்

இது விநாயகருக்குரிய சிறப்பான ஒரு போர்க் கருவியாகும். கயிறு என்றும் இதனை வழங்குவர். தீயவர்களின் கை, கால்களைக் கட்ட இது பயன்படுகின்றது. இது மூன்று வடமாக உள்ள கயிற்றை வளைத்துப் பிடித்த அமைப்பாகும். எளிதில் அவிழக்கூடிய முடிச்சாக முறுக்கி இதனை அமைப்பர். சுருக்கு இடாமல் வளையமாகவும் இது அமைதல் உண்டு. விநாயகருக்குச் சிறப்பான ஆயுதமாக அமையும் நாகமே, பாசமாக அமைவதும் உண்டு. இதனை "நாகபாசம்" என்பார். இது நான்கு வகைப்படும். யானையைப் பாசத்தால் கட்டுவது போல் ஆன்மாக்களின் ஆணவ மலத்தைக் கட்டி, அதனை வலிகுன்றச் செய்ய உதவும் கருவி பாசம் ஆகும். மூன்று வடமாகவுள்ள பாசக்கயிறு "பாசத்திரயம்" என்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும். விநாயகர் உயிர்களுக்குப் போகங்களைக் கொடுத்து, அதனோடு கட்டுண்டிருக்கச் செய்யும் கருத்தைப் பாசம் என்ற கயிறு சுட்டுகின்றது. பாசமாகிய பற்று அறுத்தலையும் பாசம் என்பது

புலப்படுத்துகின்றது.

அங்குசம்

விநாயகர் தாங்கியிருக்கும் சிறந்த கருவிகளில் அங்குசமும் ஒன்றாகும். இது யானையை அடக்கப் பயன்படுகிறது. யானைப் பாகன் இதனை யானையின் காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். உயிர்களைப் பாதிப்படையச் செய்யும் ஆணவ மலத்தை பாசக் கயிற்றால் கட்டி அங்குசத்தில் அதனை அடக்கி மறைத்தல் என்னும் அருளைப் புரிபவர் விநாயகர் என்பதை அங்குசம் என்ற கருவி உணர்த்துகின்றது. இது வயப்படாத பொருளை வயப்படுத்தும் ஆயுதமாகும். இது உயிர்களின் சித்த மலமாகிய ஆணவத்தை அடக்கி இறுதியில் உயிர்களைத் தன்வயப்படுத்துதலை உணர்த்தும் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

தந்தம்

இது ஒடிந்த யானைக் கொம்பு ஆகும். வேதவியாசர் மகாபாரதத்தை எடுத்துரைத்தபோது, அந்த இதிகாசம் அழியாது அதனை அனைவரும் படித்துப் பயன் பெறும் பொருட்டு விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதி வைத்தார். அந்த எழுத்தாணியே அவரது திருக்கரத்தில் விளங்கும் ஒடிந்த ஒற்றைக் கொம்பாகிய தந்தம் என்பதன் விளக்கம் ஆகும். இக்கொம்பானது "எழுத்தறிவித்தவன் விநாயகரே" என்ற விநாயக கல்வித் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

மேலும் விநாயகர் தந்தத்தைக் கையில் வைத்திருப்பது பிறிதொரு தத்துவ விளக்கத்தையும் தருகின்றது. ஓர் அரசன் தனக்கு எந்த ஆயுதத்தினாலும் மரணம் நேரக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான். வரம் பெற்ற காரணத்தினால் நல்லவர்களுக்கெல்லாம் சொல்லொணாத்துயர் விளைவித்தான். ஆயுதப் பிரயோகம் இன்றி அக்கொடிய அசுரனைக் கொல்வதெப்படி என்று தேவர்களெல்லாம் அஞ்சி நின்ற வேளையில் விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை முறித்து அதனால் அசுரனைக் கொன்ற தத்துவப் பொருளை நினைவுபடுத்துவதாகவும், அவர் திருக்கரத்தில் திகழும் ஒடிந்த கொம்பாகிய தந்தம் விளங்குகின்றது.

வேதாளம்

அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க தசை நாரில்லாத பூதவடிவாக இது விளங்குகின்றது. பகைவர்களை விழுங்கச் செய்ய இது ஏவப்படும். வீர விநாயகரின் ஒரு கரத்தில் இது இருக்கின்றது.

சக்தி

இதனை வேலாயுதம் என்பர். இது முருகனுக்கும் சிறப்பாக அமைந்த ஓர் ஆயுதமாகும். ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது. விநாயகர் வீர கணபதியாக விளங்கும்போது இதனைத் தாங்கியிருப்பார். இது எதிரியை எறிந்து அழிக்க உதவும் ஒரு போர்க் கருவியாகும். இதனை நடுவில் பிடித்து எறியலாம். இரு பக்கமும் குத்தும் இயல்பு இவ்வாயுதத்திற்கு உண்டு. இவ்வாயுதம் மூன்று சாய்சதுரங்களின் சோடிகள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்குமாறும் வரிசையாகவும் அமையப்பெற்று

அப்பகுதி ஒரு தண்டத்தின் நுனியில் பொருத்தப்பட்ட நிலையிலும் அமையலாம். இதன் மேற்பகுதி இச்சாசக்தியையும், நடுப்பகுதி ஞானசக்தியையும், கீழ்ப்பகுதி கிரியா சக்தியையும் குறிக்கும். இதனடிப்படையில் நோக்கும் போது இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளும் விநாயகருள் அடங்கும் என்பது இவ்வாயுதத்தின் தத்துவப்பொருளாகும்.

அம்பு

இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங் கருவி. நுனி கூரிய முள் போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். இதனது வால்ப் பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்றப் பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே இறகு கட்டப்படுகிறது.

வில்

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக் கூடிய நார் மரத்தால் செய்யப் பெறுவது. இந்த வில்லில் தோல் அல்லது நார்க் கயிற்றானியன்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக்கட்டி அதன் நடுவில் அம்பை வைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலிமையும் நாணின் உறுதியும், இழுத்து விடுபவனின் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறைமதி போலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

சக்கரம்

இது விநாயகருக்கும் விஷ்ணுவுக்கும் உரிய சிறப்பான ஆயுதம் ஆகும். விஷ்ணுவின் சக்கரத்திற்குச் "சுதர்சனம்" என்று பெயர். இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. இது வட்ட வடிவமாகவும், நான்கு திசைகளில் தீச்சுடர்களைக் கொண்டதாகவும் விளங்கும். சக்கரம் தர்மத்தின் அடையாளமாகும்.

கத்தி

இது இன்று அறவே மறந்துபோன ஒரு கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டைஓடு போலவும் கம்பி முழங்கால் எலும்பாகவும் கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக் கத்தியாகிய பிச்சுவா என்பாரும் உளர்.

கேடயம்

இது கத்தி வெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும். சதுரம், நீள்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பலவடிவங்களிற் செய்யப்பெறும். இன்னல், இடையூறுகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்தும். கேடயம் என்ற கருவி தர்மத்தின் ஓர் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.

சம்மட்டி

இது இரும்பாலியன்ற கனத்த தலைப் பகுதியை உடையது. இதன் நடுவில் துளையிடப்பட்டிருக்கும். இதில் கை பிடிக்கும் சிறு கழியைக் கோர்த்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்படும்.

கதை

குண்டாந்தடி, இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி காவலாக இருந்து உடையவனைப் பாதுகாப்பது.

நாகபாசம்

பாச வகைகளுள் "நாகபாசம்" என்பதும் ஒன்றாகும்.

சூலம்

இது மூன்று நுனிகளையுடையது. விநாயகர் தரித்திருக்கும் இவ்வாயுதம் சிவபெருமானுக்கும் சிறப்பாக உரியது. கரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப்பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோர்க்கப் பெற்றிருக்கும். இதனை மூவிலை நெடுவேல், முத்தலைவேல் என்றும் கூறுவர். இதன் மூன்று நுனிகளும் ஆரணி, ஜெனனீ, ரோதயித்ரி என்ற முச்சக்திகளைக் குறிக்கும். ஜெனனீ ஆக்கலையும், ஆரணி அழித்தலையும், ரோதயித்ரி காத்தலையும் குறிக்கும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும், சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்ற முக்குணங்களையும் சுட்டி உணர்த்துவதாகவும் இவ்வாயுதம் திகழ்கின்றது.

குந்தாலி

ன்று வன்மையான நிலப் பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும். இரும்பானியன்ற கருவி இது. இதில் பலவகைகள் உண்டு.

மழு

இன்று மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகின்றது. மிகக் கூர்மையானது. "வாய்ச்சி" என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பான கருவி. விநாயகரின் சத்தியம் என்ற உயர் குணத்தைச் சுட்டும் கருவி மழு ஆகும்.

கொடி

கொடி வெற்றிக்கு ஓர் அடையாளமாகும். துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக் கையில் தாங்கியிருக்கின்றார்.

தண்டம்

இது நீளமான கைத்தடி ஆகும். மரத்தாலானது. மரணத்தையும், தண்டனையையும் இது சுட்டிக் காட்டுகின்றது.

**கமண்டலம்**

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் உண்டானது. முனிவர்கள், அந்தணர்கள் தங்கள் நாட்கடன்களைக் கழிப்பதற்காக அதனை வைத்திருப்பார்கள். இது ஆயுதமாக இல்லாவிட்டாலும், திருவுருவ நிலையை அறிந்து கொள்ள உதவும் கருவியாகும். பரந்த ஞானம் தம்முள் நிறைந்தவர் என்பதைக் கமண்டலம் சுட்டி நிற்கின்றது.

**பரசு**

இது சற்றேறக் குறைய மழுப்போன்ற கருவியாகும். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும். விநாயகரின் சத்திய குணத்திற்கு இது ஓர் அடையாளமாகும்.

**கரும்புவில்**

கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி, போகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் இதனைத் தாங்கியிருப்பர்.

**சங்கு**

இது விநாயகருக்கு மட்டுமன்றி விஷ்ணுவுக்கும் சிறந்த ஆயுதமாகும். இது வெற்றியை அளிக்கும் கருவியாகும். பகைவர்கள் இதன் ஒலி கேட்டதும் ஒடுங்குவர். இது ஓர் அச்சக் கருவியாகும். இதிலும் பல வடிவங்கள் உள்ளன. சங்கு வலம் சுழித்ததாகவோ இடம் சுழித்ததாகவோ இருக்கலாம். சங்கிலிருந்து விநாயகரின் வடிவத்தைச் சுட்டும் ஓங்கார ஒலி எழும்புவதால் இது ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தத்துவச் சின்னத்தின் குறியீடு எனலாம்.

**புஷ்பபாணம்**

இது தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களால் இயன்ற பாணம் ஆகும். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைவூட்ட எய்பவன். இதனைப் போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு. காமத்தை எரிப்பவர் என்பது புஷ்ப பாணத்தின் நுண்பொருளாகும்.

**கோடரி**

மரம் பிளக்கப் பயன்படும் கருவியைப் போன்று பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இக்கருவி இரும்பாலானது.

**அட்சமாலை**

இது உருத்திராட்ச மாலையாகும். இது தனித்தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதுண்டு. மிகப் பழைமையான திருவுருவங்களில் இது ஆயுதம்போல் இருப்பதைக் காணலாம். அட்சமாலை காலதத்துவத்தின் ஓர்

அடையாளமாகும்.

சாமரம்

இது கவரிமானின் வால் மயிராலானதாகும். இது ஓர் ஆயுதமன்று. இருந்த போதும் விநாயகருடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இதுவும் இடம்பெற்றிருக்கின்றது.

கட்டுவாங்கம்

இது ஒரு நீளமான கத்தியாகும். போரில் பகைவர்களை வெட்டப் பயன்படுகின்றது. இதில் இரு முனையுடையதும் ஒரு முனையுடையதும் என இரு வகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியை உடையதாகவும் இது விளங்கும். இது உயிர்களின் மீது படிந்துள்ள பாசங்களை அழிக்கும் கருத்தைச் சுட்டி நிற்கின்றது.

தீ அகல்

இது ஒரு தீப்பிளம்பாகும். தீயகலாகிய மழுவின் வடிவும் இதைப் போன்றே இருக்கும். இது விநாயகரின் அளிக்கும் ஆற்றலைக் குறிக்கும். உயிர்கள் மீது படிந்துள்ள பாசங்களைச் சுட்டு உயிர்களைத் தூய்மைப்படுத்துகின்ற இறைவனின் ஆற்றலைக் குறிக்கும் ஓர் அடையாளமாகும்.

**வீணை**

இது ஓர் இசைக் கருவியாகும். போர்க் காலங்களில் தளர்ச்சியடைந்திருக்கும் படைவீரர்களுக்கு உணர்ச்சியூட்ட இக்கருவி பயன்படும்.

விநாயகர் தரித்திருக்கும் மேற்கூறப்பட்டுள்ள ஆயுதங்கள் சிவன், அம்பிகை, விஷ்ணு, முருகன் ஆகிய கடவுளர்களின் திருக்கரங்களிலும் விளங்கக் காணலாம். சிவனின் திருக்கரத்தில் திகழும், மழு, பரசு, சூலம் என்பன அம்பிகை கைகளில் ஏந்தியுள்ள அங்குசம், பாசம், அட்சமாலை, கரும்புவில், கத்தி, வாள், வீணை ஆகியவை விஷ்ணுவின் கரங்களில் விளங்கும் சங்கு, சக்கரம் என்பவை. முருகன் திருக்கரங்களில் தரித்துள்ள சத்திவேல், வில், அம்பு, தண்டம் போன்றவை விநாயகரின் திருக்கரங்களிலும் திகழ்வதைக் கண்டு மகிழ முடிகின்றது. கடவுள் ஒருவரே அவ்வப்போது பற்பல வடிவங்கள் எடுப்பார் என்ற ஓர் இறை தத்துவத்தைக் கடவுளர் எல்லோரிடத்திலும் ஒரே விதமாகக் காணப்படும் சிறப்புமிகு ஆயுதங்கள் நுட்பமாகப் புலப்படுத்துகின்றன எனலாம்.

**விநாயகர் வடிவங்களில் சக்தி தத்துவம்**

விநாயகர் வடிவங்களில் சக்தி இடம்பெற்றிருப்பதும் விநாயகரே சில இடங்களில் பெண் வடிவத்தில் காட்சி தருவதும் விநாயகரின் தத்துவச் சிறப்பை நன்கு புலப்படுத்துவதாகவுள்ளது.

தமிழகத்திலும், ஈழத்திலும் விநாயகரைப் பெரும்பாலும் பிரம்மச்சாரியராகவே வழிபடுவது பிரசித்தமான வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. **"பவன் பிரம்மச்சாரி"** என்ற சைவ சித்தாந்த தத்துவம் இங்கு நினைவு கூரத்தக்கதாகவுள்ளது. தமிழகம், ஈழம் போன்ற இடங்களில் விநாயகரைப் பிரம்மச்சாரியின் கோலத்தில் வழிபடுவதே

சிறப்புற்றிருப்பினும், தமிழகத்தில் விநாயகர், வல்லபை என்ற சக்தியுடன் கூடிய நிலையிலும் "சித்தி, புத்தி" என்ற இரு சக்திகளுடன் சேர்ந்த கோலத்திலும் தொழப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வட இந்தியாவில் விநாயகர் பெரும்பாலும் சக்தியுடன் சேர்ந்த நிலையிலேயே விளங்குகின்றார். இவ்வடிவத்தை அவர்கள் "லட்சுமி விநாயகர்" என அழைக்கின்றனர்.

தமிழகத்திலும், ஈழத்திலும் **"வல்லபை"** என்ற சக்தியுடன் விளங்கும் விநாயகரை "வல்லப விநாயகர்" அல்லது "வல்லப கணபதி" என்று வழங்குகின்றனர். வல்லபை என்ற சக்தியை விநாயகர் தனது இடது பக்க மடியில் அணைத்து வைத்திருக்கும் அமைப்பில் வல்லப விநாயகர் படிமம் காணப்படுகின்றது. சிவாகமங்கள் விநாயகரின் சக்தியாக வல்லபையைக் குறிப்பிடுகின்றன. வல்லபம் என்பதற்கு வல்லமை என்பது பொருளாகும். வல்லமை என்றால் ஆற்றல் என்பது கருத்தாகும். எனவே ஆற்றலின் ஓர் அடையாளத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகருடன் வல்லபை என்ற சக்தி விளங்குகின்றாள் எனலாம்.

உமாதேவியின் அம்சமான இவள் யமுனை ஆற்றின் அருகேயுள்ள ஒரு தடாகத்தில் ஒரு தாமரை மலரில் பெண் வடிவமாக அவதரித்து மரீசி முனிவரால் வளர்க்கப்பட்ட தெய்வீக சக்தியாவாள்.

விநாயகர் சித்தி, புத்தி என்ற இரு சக்திகளுடனும் "சித்தி விநாயகராக" விளங்குகின்றார். சித்தியும் புத்தியும் பிரம்மதேவனது புத்திரிகளாவர். விநாயகர் "சித்தி, புத்தி" என்னும் இரு சக்திகளுடன் விளங்குவது பெரும் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. சித்திதேவி கிரியா சக்தியின் வடிவமாவார். புத்திதேவி இச்சாசக்தியின் அம்சமாவார். விநாயகர் பிரம்ம ஞான வடிவமுடையவர். இச்சையும் கிரியையும் இருந்தால்தான் ஞானத்தின் மூலம் ஒரு காரியத்தைச் செய்ய முடியும் என்ற தத்துவத்தைச் சுட்டவே

விநாயகர் சித்தி, புத்தி என்னும் இரு சக்திகளுடன் விளங்குகின்றார். இந்நிலையில் இவர் இல்லற ஞானியாகத் திகழ்கின்றார் எனலாம். பிரபஞ்சம் ஒடுங்கும்போது இச்சை, கிரியை எனும் இரு சக்திகளை விநாயகர் தன்னுள்ளே ஒடுக்கிக் கொண்டு, தாம் ஞான வடிவமாகத் திகழ்கின்றார். அப்போதே விநாயகர் பிரம்மசாரியாக விளங்குகின்றார்.

உலகில் அவ்வப்போது அஞ்ஞானத்தின் உருவமாகச் சில அரக்கர்கள் தோன்றி தர்மத்தை அழித்து அதர்மத்தை மேலோங்கச் செய்து உலகில் பெரும் கொடுமைகளைச் செய்ய முற்படும்போது விநாயகர் சித்தி, புத்தி என்னும் தேவிகளின் பிரம்மச்சாரிய வடிவமாகத் தாம் மட்டுமே ஞான வடிவமாக நின்று, அதர்மம் செய்பவர்களை அழிக்கின்றார் என்று அவர் பற்றிய தெய்வீக வரலாறுகள் அமைந்து விளங்குகின்றன. அவருடன் பெண் அம்சமான சக்திகள் இருக்குமாயின் சக்தியின் இயல்பாக கருணை எண்ணமே மேலோங்கி நிற்கும். இதனால் அதர்மத்தை அழிக்க முடியாத நிலை ஏற்படும். தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றவேண்டிய வேளைகளில் கருணையின் அடையாளமாக சக்திகளின்றி தாம் தனியாகவே பிரம்மச்சாரியாக அவர் விளங்குகின்றார். துட்டநிக்ரஹ சிட்ட பரிபாலனம் செய்ய வந்ததே பிரம்மச்சாரிய விநாயகர் ஆவார். மேலும் விநாயகர்

திருமாலின் புத்திரிகளான **மோதை, பிரமோதை, சுமநசை, சுந்தரி, மநோரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருஹாலை, சுமத்தியமை, நந்தினி, சாமதை** என்ற பன்னிரு வரை மணந்தார் என்றும் சமய நூல்கள் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சக்தியுடன் விளங்கும் விநாயகர் படிமங்களாக சக்தி விநாயகர், லட்சுமி விநாயகர், மஹாவிநாயகர், ஊர்த்துவ விநாயகர், உத்தண்ட விநாயகர், ஸ்ரீசங்கடஹர விநாயகர், வல்லப விநாயகர், சர்ப்பாபரண விநாயகர் என்போர் காட்சி தருவது கண்டுகளித்தற்குரியதாகும்.

மஹாவிநாயகர், சித்திவிநாயகர், சக்திவிநாயகர், மோட்சவிநாயகர், வித்யாவிநாயகர் என்ற ஐந்து விநாயகர் வடிவங்களின் அரிய இணைப்பாகக் காட்சிதரும் "பஞ்சமுகவிநாயகர்" வடிவம் விநாயகரின் சத்தி தத்துவத்தை மேலும் பெருமைப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு விநாயகர் சத்தியுடன் சேர்ந்த நிலையிலும் சத்தியுடன் சேராத நிலையிலும், சத்தியாகவே விளங்குகின்ற நிலையிலும் காணப்படும் விநாயக தத்துவநிலை வியக்கத்தக்கதாக உள்ளது.

**விநாயகரின் வாகனத்தத்துவம்**

விநாயகர் நான்கு யுகங்களிலும் நான்கு வாகனங்களில் விளங்குகின்றார். அவர் கிருதயுகத்தில் சிங்க வாகனத்திலும், திரேத யுகத்தில் மயில் வாகனத்திலும், துவாபரயுகத்தில் எலி வாகனத்திலும், கலியுகத்தில் குதிரை வாகனத்திலும் விளங்குவதாகச் சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. நந்தி, பூதம், கருடன் என்பனவும் விநாயகருக்கு வாகனங்களாக விளங்கக் காணலாம். விநாயகரின் சிறப்பான வாகனம் மூஷிகம் ஆகும். இன்றைய காலகட்டத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் விளங்குவதையே பெரிதும் காண முடிகின்றது.

**மூஷிக வாகனம்**

விநாயகருக்கு மூஷிக வாகனன் என்று ஒரு பெயர் உண்டு. மூஷிகம் என்பது எலி, பெருச்சாளி என்பவற்றைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும். பென்னம் பெரிய விநாயகர் சின்னஞ்சிறிய மூஷிகத்தை (எலி, பெருச்சாளி) வாகனமாகக் கொண்டது பெருந்தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. நல்லவர்களைக் காப்பாற்றுதல், தீயவர்களை அழித்தல் என்ற இறை தத்துவத்தைச் சுட்டி நிற்பதே விநாயகர் எழுந்தருளியிருக்கும் மூஷிக வாகனமாகும்.

நல்லவர்களாகிய தேவர்களின் துயர் களைந்து, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவே அசுரனாக விளங்கிய கஜமுகாசுரனை விநாயகர் அழித்தார். அசுரனாகிய கஜமுகாசுரனை அழித்தபோது அவன் பெருச்சாளி வடிவம் (எலி) பெற்று விநாயகருக்கு வாகனமாயினன் என்பது விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகளால் அறியப்படும் செய்தியாகும். இக்கதை ஓர் அரிய சித்தாந்த சைவ தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது.

ஆணவ மலத்தின் அடையாளமாக விளங்கிய கஜமுகாசுரன், அம்மலம் வலிகுன்றிய நிலையில் சின்னஞ்சிறிய பெருச்சாளியாக விளங்க அதனை விநாயகர் வாகனமாகக்

கொண்டார் என்பது தத்துவமாகும். இவ்வகையில் நோக்கும் போது மூஷிக வாகனம் ஆணவமலத்தின் ஒரு குறியீடாக விளங்கும் தத்துவம் என்பது நன்கு புலப்படுகின்றது.

பாற்கடலில் தோன்றிய ஆணவமாகிய பெரும் விஷமானது சிவபெருமானின் திருமிடற்றிலடங்கி முதல் கெடாது வலிகெட்டு நிற்பதைச் சுட்டுவது போலவே, ஆணவமல வடிவமாகிய கஜமுகாசுரனும் முதல் கெடாது வலிகெட்டு மூஷிக வடிவில் (எலி) விநாயகரின் வாகனமாக விளங்குவது புலப்படுகின்றது.

### சிம்ம வாகனம்

விநாயகர் ஐந்து முகங்களுடன் விளங்கும் நிலையில் அவர் ஏரம்ப விநாயகர் என வழங்கப்படுகின்றார். ஏரம்ப விநாயகரின் வாகனம் சிம்மவாகனமாகும். விநாயகரின் திருநாமங்களுள் சிம்மவாகஹனாயக என்பது ஒன்றாகும். அம்பிகை காளியாக விளங்கும் நிலையில் அவள் சிம்மத்தை வாகனமாகக் கொண்டு விளங்குவாள். இதனால் அவளுக்குச் "சிம்மவாஹினி" என்ற பெயருண்டு. மிகக் கொடிய சிங்கத்தை அடக்கி ஆள்வதை சிம்ம வாகனம் காட்டுகின்றது. மிகக் கொடிய ஆணவ மலம் அழியாது அடக்கப்பட்டிருத்தலையே விநாயகரின் சிம்மவாகனம் சுட்டி நிற்கின்றது.

### யானை வாகனம்

யானை முகக் கடவுளாகிய விநாயகருக்கு யானை வாகனம் அமைந்து விளங்குவது பொருத்தமாக உள்ளது. திருச்செந்தூர் ஆவுடையார் குளக்கரையிலுள்ள அரசாள்வார் விநாயகர் முன்பும், ஸ்ரீவில்லி புத்தூர் (காமராசர்) மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி கோயில் நுழைவாயிலில் உள்ள கல்யாண விநாயகர் முன்பும் யானை வாகனம் காணப்படுகின்றது. யானை ஆணவ மலத்தின் ஓர் அடையாளமாகும். அதனை அடக்குவதைக் காட்டுவதே யானை வாகன விநாயகர் சுட்டும் தத்துவமாகும்.

### மயில் வாகனம்

திருச்சியிலுள்ள திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயிலில் காணப்படும் ஓவியத்தில் விநாயகர் மயில் வாகனத்தில் உள்ளார். பாண்டிச்சேரி மலைக்குகை விநாயகர் கோவிற் சுவரிலுள்ள சுதைச் சிற்பத்திலும் விநாயகர் மயில்மீது காட்சி தருகின்றார். அருப்புக்கோட்டை தாதன்குள விநாயகர் கோயிலிலும் மயில் வாகனம் உள்ளது. மயிலும் ஆணவ மலத்தின் ஒரு குறியீடாகும். மயில் வாகனம் இதையே சுட்டி நிற்கின்றது.

### குதிரை வாகனம்

குதிரையானது மூன்று விதமான கோலங்களில் வாகனமாகக் கொள்ளப்படும். நின்ற கோலம், பாய்ந்து நிற்கும் கோலம், நாட்டியக் கோலம் ஆகியவை அம்மூன்று கோலங்களாகும் குதிரை யோகத்தின் ஓர் அடையாளமாகும். குதிரைகள் திசைகளையும், புலன்களையும் குறிக்கின்றன. கடலூர் வட்டம், சென்னப்பநாயக்கன் பாளையம், மலையாண்டவர் விநாயகர் கோவிலில் குதிரை வாகனம் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் குருபதேசிக கவுண்டர் விநாயகர் கோயிலிலும் குதிரை வாகனம் உள்ளது.

### நந்தி வாகனம்

நந்தி, தர்மத்தின் அடையாளமாகும். சுசீந்திரம், வில்லிபுத்தூர் மடவார்வளாகம்,

இராச பாளையம் முதலிய இடங்களில் உள்ள விநாயகர் கோவில்களில் நந்தி வாகனம் உண்டு.

**பூதவாகனம்**

மதுரை திருப்பரங்குன்றம் பழைய சொக்கநாதர் கோயில் முன் மண்டபத் தூணில் போருக்குப் புறப்படும் நிலையில் விளங்கும் சிற்பம் ஒன்றைக் காணலாம்.

**கருட வாகனம்**

விநாயகர் விஷ்ணுவின் அம்சமாகவும் விளங்குவதால் அவருக்கு முன் கருடனை நிறுவலாம் என்று விஸ்வக்சேன சம்ஹிதை குறிப்பிடுகின்றது.

**விநாயகரின் நாம தத்துவம்**

விநாயகருக்குப் பல நாமங்கள் உள்ளன. அவற்றுள் அவரின் அருட்பேராயிரத்தைக் கூறும் "ஸ்ரீமஹா கணபதி ஸஹஸ்ரநாமாவளி"யும் முந்நூறு நாமங்கள் கொண்ட "த்ரிசதீ நாமாவளி"யும் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் வரும் திருநாமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவப்பொருளைப் புலப்படுத்துகின்றன. விநாயகரின் முக்கிய நாமங்கள் சுட்டும் தத்துவப்பொருள் பின்வருமாறு அமைகின்றது.

**விநாயகர்**

விநாயகர் என்ற பெயர் பல தத்துவப் பொருள்களைத் தந்து நிற்கின்றது. விநாயகர் என்பதற்கு தமக்கு மேலொரு நாயகரும் (தலைவரும்) இல்லாதவர் என்பது பொருளாகும். அதாவது தலைவரற்றவர் என்பது பொருளாகும். இதனை வி+நாயகர் = விநாயகர் - நாயகன் இல்லாதவர் என்று நோக்கி அறிய முடிகின்றது. (வி+மலன் = விமலன் மலமில்லாதவன் எனப் பொருள் படுவது போல) ஆதிசங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தின் முதலாவது சுலோகத்தில் "அநாயகைக நாயகம்" என்று விநாயகரைக் குறிப்பிடுகின்றார். இந்த "அநாயகைக நாயகம்" என்பது அநாயக, ஏகநாயகம் என்ற இரு சொற்களால் ஆனது. இதன் பொருள் "தனக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் எல்லா நாயகர்கட்கும் நாயகராகிய நிலையிலும் உள்ளவர் என்பதாகும். மேலும் 'வி' என்றால் கல்வி, நாயகர் என்றால் தலைவர். இதன்படி தன்னை வணங்குபவர்களுக்குக் கல்வியைத் தருபவர் என்பது பொருளாகும். இதனையே உமாபதி சிவாச்சாரியாரும் "நற்குஞ் நரக்கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்கன்று காண்" என்று திருவருட்பயன் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். அடுத்து 'வி' என்றால் திசை என்றும் "நாயகர்" என்றால் தலைவர் என்றும் பொருள் கொண்டு "எத்திசைக்கும் தானே தலைவர்" என்றும் விநாயகர் என்ற சொல்லுக்குப் பொருள் கூறலாம். விநாயகர் என்ற பெயரின் தத்துவப் பொருள் விநாயக புராணத்தில்

> **"விக்கின முழுது நீக்கி வேண்டிய வரங்கணல்கி**
> **மக்கள் விண்ணவர்கள் யாரும் வழிபடு தெய்வமாகி**
> **யெக்கடவுளர்க்கு முன்னர்ப் பூசனையேற்பா ராகி**
> **மிக்கவரின்மை தோன்ற விநாயகரெனும் பேர் தாங்கி"**

என வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வக்கிரதுண்ட விநாயகர்**

பிரளய முடிவில் தோன்றி பிரம்மன் விஷ்ணு உருத்திரன் என்ற மூவர்களைப் படைத்து, படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களைக் கற்பித்தமையால் "வக்கிர துண்ட விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**சிந்தாமணி விநாயகர்**

கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்து சென்ற கணராஜனை வென்று அதனை மீட்டு அவருக்கு அளித்தமையால் "சிந்தாமணி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**கஜானன விநாயகர்**

பிரமதேவனின் கொட்டாவியினின்றும் தோன்றிய சிந்தூரனைக் கொன்று தேவர்களைக் காத்தமையால் "கஜானன விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**விக்கினராஜ விநாயகர்**

காலரூபனென்கின்ற விக்கினனை அழித்து உலகத்தைக் காத்தமையால் "விக்கினராஜ விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்

**மயூரேச விநாயகர்**

பிரம்மதேவனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்ற கமலாசுரனையும், தேவர்களைச் சிறைவைத்த சிந்தாசுரனையும் கொன்று ஏனைய அவுணர்கள் செய்த மாயையினை ஒழித்து மீட்டும் அவ்வேதங்களைப் பிரம்மதேவனுக் கீந்து தேவர்களை மீட்டு உலகுக்கு இதஞ் செய்தமையால் "மயூரேச விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**பாலச்சந்திர விநாயகர்**

இயமனிடத்தினின்றும் உதித்த அனலாசுரனை ஒரு சிறு பிராமணப்பிள்ளை போல் சென்று அவ்வசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தமையால் "பாலசந்திர விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**கணபதி விநாயகர்**

கஜமுகாசுரனைக் கொன்று விஷ்ணுவின் சாபம் தீர்த்தமையால் "கணபதி விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**தூமகேது விநாயகர்**

மாதவராசனுக்கும் அவர் மனைவியாகிய தமதைக்கும் தீங்கு செய்த தூமராசனைக் கொன்று அவ்விருவரையும் காப்பாற்றியமையால் "தூமகேது விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**கணேச விநாயகர்**

தன்னிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்ற பெபி என்ற ஓரசுரன் மூவுலகங்களையும் அழிக்க முற்பட்டபோது தேவர்கள் விநாயகரை வேண்டுதல் செய்ய, அவர் ஐந்து முகங்களோடு தோன்றி அவ்வசுரனை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றியதால் "கணேச விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

### மகோற்கட விநாயகர்

நாராந்தகனையும், தேவாந்தகனையும் நாசம் செய்து காசிராஜனுக்கு முத்தி அளித்தமையால் "மகோற்கட விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

### துண்டி விநாயகர்

துராசதனை வென்று திவோதரசன் மனத்தை மகிழ்வடையச் செய்து விஸ்வநாத மூர்த்திக்குக் காசிமாநகரை அளித்தமையால் "துண்டி விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

### கணபதி

விநாயகருக்குக் கணபதி என்பதே தொன்மையான பெயராக உள்ளது. கணபதி என்பதற்குப் பிரம்மகணம், தேவகணம், பூதகணம், அசுரகணம், மனிதகணம் முதலிய எல்லாக் கணங்களுக்கும் தலைவர் என்பது பொருளாகும். "கணபதி என்ற பெயரில் உள்ள 'க' என்பது புத்தி, 'ண' என்பது ஞானம், 'பதி' என்பது தலைவர். இதனடிப்படையில் நோக்கும் போது, "கணபதி" என்பதற்குப் புத்திக்கும் ஞானத்திற்கும் தலைவர் (அதிபதி) என்பது பொருளாகும். இதனால் புத்தியையும் ஞானத்தையும் வளர்த்துக் கொள்ளுதலே உண்மையான கணபதி வழிபாட்டின் தத்துவப் பொருள் என்பது புலப்படுகின்றது.

### விக்கினேஸ்வரர்

விக்கினேஸ்வரர் என்பதற்கு விக்கினங்களை (இடையூறுகளை) ஆக்கவும், நீக்கவும் வல்லவர் என்பதே மெய்ப்பொருளாகும்.

### பிள்ளையார்

விநாயகரைப் பொதுவாக எல்லோரும் "பிள்ளையார்" என்றே அழைப்பர். சிவசக்திக்கு முதற்பிள்ளை என்பதால் முதலில் பிள்ளை என்னும் பெயர் பெற்றார். மரியாதைக்காகப் 'பிள்ளை' என்துடன் 'யார்' என்ற விகுதி சேர்க்கப்பட்டு "பிள்ளையார்" என்று பின்னர் இவர் அழைக்கப்பட்டார். பிள்ளை என்றால் "குழந்தை" என்ற எண்ணமே முதலில் வருகின்றது. இதனைக் கருதியே அவரை "ஞானக்கொழுந்து" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். பொதுவாக ஒரு கிராமத்திலோ அல்லது சிற்றூர்களிலோ இருக்கும் பெரிய குடும்பத்துப்பிள்ளை, எல்லோருக்கும் குழந்தையாகவே செல்வாக்கின் காரணத்தால் செல்லமாகக் கருதப்பட்டு அழைக்கப்படுவதைக் காண்கின்றோம். இவ்வாறே அனைத்து உலகங்களுக்கும் தந்தையான சிவபெருமானின் முதற்பிள்ளை என்ற காரணத்தால் அவர் பிள்ளையும் அனைவராலும் "பிள்ளை" என்றே அழைக்கப்பட்டு பின்பு மரியாதைக்காக "யார்" என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு "பிள்ளையார்" என அழைக்கப்படுகின்றார். எனக் காஞ்சிப் பெரியவர் குறிப்பிடுவதும் இங்கு எண்ணி மகிழ்வதற்குரியது. பிள்ளைச் செல்வத்தை வழங்கும் தெய்வம் என்பதாலும் "பிள்ளையார்" என்னும் பெயர் பெற்றார்.

### நவக்கிரக விநாயகர்

விநாயகரை வணங்கினால் நவக்கிரக வழிபாடும் நிறைவுறுமென்பது நவக்கிர விநாயகர் சுட்டும் தத்துவமாகும். இதனைப் புலப்படுத்தும் விதத்தில் விநாயகரின் திருவுருவத்தில் ஒன்பது நவக்கிரகங்களும் அமைந்து விளங்கக் காணலாம். இத்தகைய

வியத்தகு விநாயகர் வடிவத்தினையே 'நவக்கிரகவிநாயகர்' என அழைக்கின்றனர். இவ்வாறான நவக்கிரக விநாயகரின் திருவுருவத்தில் அவர் தனது நெற்றியில் சூரியனையும், நாபிக்கமலத்தில் (தொப்பூழ்) சந்திரனையும், வலது தொடையில் செவ்வாயினையும், இடது தொடையில் கேது வையும், வலது மேற் கையில் சனியையும், வலது கீழ்க் கையில் புதனையும், இடது மேற் கையில் இராகுவையும், இடது கீழ்க் கையில் வெள்ளியையும், தலையில் வியாழனையும் கொண்டவராகக் காட்சியளிக்கின்றார். நவக்கிரக தோசம் உடையவர்கள் விநாயகரை வழிபடுவதன் மூலம் தோச நிவர்த்தி பெறுவர் என்பது நவக்கிரக விநாயகர் வழிபாட்டின் தத்துவநிலை ஆகும். தமிழகத்திலுள்ள சில விநாயகர் ஆலயங்களில் நவக்கிரக விநாயகர் வடிவத்தை ஓவிய வடிவத்தில் கண்டு வணங்க முடிகின்றது.

### விநாயகரின் வழிபாட்டுத் தத்துவம்

விநாயகரின் வழிபாட்டுத் தத்துவத்தில் விநாயகர் விரதங்கள், அறுகம்புல்லினால் அர்ச்சித்தல், தோப்புக்கரணம் போட்டு வழிபடல், சிதறு தேங்காய் உடைத்தல் என்பன தத்துவப் பொருள் உணர்த்துகின்றனவாக விளங்குகின்றன.

### விரதங்கள்

விநாயகர் வழிபாட்டிற்குரிய விரதங்களில் ஆவணிச் சதுர்த்தியும், மாசிச் சங்கடஹர சதுர்த்தியும் விசேடமானவையாகும். குற்றம் செய்கின்றவர்களை மன்னித்து அவரவர் விரும்பிய போக மோட்சங்களை விநாயகர் அளிக்கின்றார் என்பதே ஆவணி மாத விநாயகர் சதுர்த்தியின் உட்பொருளாகும்.

### அறுகால் அர்ச்சித்தல்

விநாயகரை அறுகு மற்றும் வன்னிப் பத்திரங்கள், மந்தாரைப்பூ என்பவற்றால் அர்ச்சித்தல் வழக்கமாயினும் அறுகம்புல் அர்ச்சனை மிகு சிறப்புடையதாகும் எனக் கூறப்படுகின்றது. அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்ததால் இடபம், கழுதை, புலைச்சி என்போருக்குச் சாலோக முத்தி கிடைத்ததாக விநாயக புராணம் குறிப்பிடுகின்றது. எனவே அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் பெறுதற்கரிய முத்திப் பேரின்பம் கிடைக்கும் என்பது அறுகம்புல்லின் தத்துவச் சிறப்பாகும். அறுகு ஓரிடத்தில் முளைத்துக் கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிப்படர்ந்து கொண்டே போகும் இயல்புடையது. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாக விளங்கும் விநாயகர் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆஞ்ஞை என்ற ஆறிடங்களிலும் பரந்து விளங்கி சகஸ்ரதளத்தில் விளங்கி அருளுகின்றார் என்பது அறுகம்புல் உணர்த்தும் தத்துவப்பொருளாகும். ஆறிடங்களில் படர்ந்து வேரூன்றும் இயல்பு அறுகுக்கு மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் இருப்புத் தன்மை உறுதியானது என்பதையே "அறுகுபோல் வேரூன்றி" என்ற பழமொழியும் சுட்டி நிற்கின்றது.

### தோப்புக்கரண வழிபாட்டுமுறை

விநாயகரை வழிபடுகின்றவர்கள் முதலில் தோப்புக் கரணம் போட்டு அவரை வழிபடத் தொடங்குவர். வலக்கையால் இடக் காதின் கீழ்ப்பகுதியையும், இடக்கையால் வலக்காதின் கீழ்ப்பகுதியினையும் பிடித்துக் கொண்டு நின்ற நிலையில் மூன்று முறை

அல்லது பலமுறை உட்கார்ந்தும் எழுந்தும் வழிபடுவர். தோர்பி, கர்ணம் என்ற இரண்டு சொற்களும் இணைந்தே தோப்புக்கரணம் என மருவி வந்துள்ளது. தோர்பி என்றால் கைகளினால் என்றும் கர்ணம் என்றால் காது என்றும் பொருளாகும். எனவே தோர்பிகர்ணம் எனின் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது என்பது கருத்தாகும். இதுவே மருவி தோப்புக்கரணம் என வழங்குகின்றது. தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வழிபடும் வழிபாட்டு முறையானது உடலின் நரம்புமண்டல நல்லியக்கத்திற்கு வழிவகுக்கும் ஆன்மீக தத்துவ சாதனை முறையாக விளங்குகின்றது.

**சிதறுதேங்காய் உடைத்தல்**

விநாயகரை வழிபடும் முறைகளுள் "சிதறு தேங்காய் உடைத்தல்" சிறப்பிடம் பெறுகின்றது. சிதறு தேங்காய் உடைத்தல் என்பது ஒன்று அல்லது பல தேங்காய்களை எடுத்து அது பல சிறு துண்டுகளாகச் சிதறுமாறு விநாயகர் ஆலயமுகப்பில் உள்ள ஒரு கல்லில் அல்லது அதற்குரிய இடத்தில் எறிந்து உடைத்தல் எனப் பொருள்படும். சிதறு தேங்காய் உடைத்தல் என்பதே இன்று எல்லோரும் செய்யும் விநாயகர் வழிபாடாக விளங்கக் காணலாம். உயர்வு, தாழ்வு எதுவும் இன்றி எவரும் செய்கின்ற விநாயகர் வழிபாட்டு முறையாக இது நடைபெறுகின்றது. சிதறு தேங்காய் உடைக்கும் வழிபாட்டு முறை பற்றிய தத்துவ விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

விநாயகர் ஒருமுறை தன் தந்தையாகிய சிவனிடம் சென்று அவரது தலையைத் தனக்குப் பலியாகத் தரவேண்டும் என்று கேட்டாராம். "மூன்று கண்கள் உடைய எனது தலையைத்தானே வேண்டும்" என்று சிவன் விநாயகரிடம் கேட்டபோது, விநாயகர் அதற்கு "ஆம்" என்று பதில் கூறினார். இதன் பிரகாரம் சிவனே மூன்று கண்களை உடைய தேங்காயை எறிந்து உடைத்தார். இந்த விளக்கத்தின் பிரகாரம் சிதறுதேங்காய் உடைத்தல் என்பது, ஒருவன் தனது கண்கள் உள்ள தலைப்பகுதியை இறைவனுக்குத் தியாகம் செய்யும் மாபெரும் வழிபாட்டுத் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. இது பலி வழிபாட்டின் ஒரு வளர்ச்சி நிலையாகும். இன்று விநாயகர் ஆலயங்களில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் முறை காணப்படுகின்ற போதும், ஈழத்தில் உள்ள "திருமுறிகண்டி விநாயகர்" கோயிலில் நாளாந்தம் ஆயிரக் கணக்கில் சிதறுதேங்காய் உடைத்து வழிபடும் மரபு சிறப்பாக நடைபெறுகின்றது. தமது பிரயாணம் தங்கு தடையின்றி நடைபெறவேண்டும் என்பதற்காக இவ்வாலய வீதியால் செல்லும் பயணிகள் சிதறுதேங்காய் அடித்து முறிகண்டி விநாயகரை வழிபட்டு வருகின்றனர். சிதறுதேங்காய் உடைத்தல் என்பது மக்களின் உளநல தத்துவ வெளிப்பாடாகவே விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக விநாயகர் வியக்கத்தக்க விதத்தில் பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழ்வதையும், அவரின் திருவுருவ உறுப்புக்களும், அவர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களும், அவரின் திரு நாமங்களும், அவர் எழுந்தருளும் வாகனங்களும், மற்றும் அவரின் வழிபாட்டு முறைகளும் விநாயகர் தத்துவத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதையும் அறிய முடிகின்றது.

இந்து மதத்திற்குரிய கடவுளருள் மிக்க முதன்மைச் சிறப்புடையவர் விநாயகர் எனலாம். "முன்னவனே யானை முகத்தவனே" என இராமலிங்க அடிகள் குறிப்பிடுவது

நோக்குதற்குரியதாகும். அம்மையப்பனையே அகிலமாகக்கண்டு அவர்களைச்சுற்றியே மாங்கனி பெற்றதை விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகள் குறிப்பிடுகின்றன. தாய், தந்தையரையே தரணியாக கணபதி கண்டபோதும் "உலகை வலம்வந்த விநாயகர்" எனத்தக்க வகையில் விநாயகர் வழிபாடானது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றது. உலகளாவிய விநாயகர் வழிபாடு பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விநாயகர் இந்து மதத்தில் மட்டுமன்றி பௌத்தம், சமணம், ஆகிய மதங்களிலும் சிறப்பாகப் போற்றி வழிபடப்படுகின்றார். இந்து, பௌத்த இணைப்புப் பாலமாக விநாயகர் விளங்குகின்றார். இவரது வழிபாடு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமேயன்றி பர்மா, சயாம், சம்பா, கம்போடியா, ஜாவா, பாலி, போர்னியோ, சீனா, ஜப்பான், நேபாளம், திபெத்து, கொரியா முதலிய நாடுகளிலும் சிறப்புற நிகழ்கின்றது. அமெரிக்க நாட்டிற் பெரு, மெக்சிகோ முதலிய பகுதிகளிலும் விநாயகர் வழிபாடு இருந்தமைக்குரிய சான்றுகள் பல காணப்படுகின்றன.

மேல் பர்மாவில் மாகாயான பௌத்த மதம் நிலவிய இடங்களிலெல்லாம் விநாயகர் வழிபாட்டினைக் காணமுடிகின்றது. விநாயகரைப் பௌத்த கோயிலுக்குள் வைத்து "மகாபின்னே" என்ற பெயரால் மேல் பர்மா மக்கள் பூசிக்கின்றனர்.

சயாம் நாட்டிலுள்ள பௌத்தர்கள் மத்தியிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்குகின்றது. அவர்கள் விநாயகருக்குக் கோயில்களினுள்ளே இருக்க இடம் அளிக்காவிடினும் கோயிற் பிரகாரங்களில் விநாயகரை வைத்து வழிபடுகின்றனர்.

சைவமதம் தழைத்திருந்த சம்பா, கம்போடியா போன்ற இடங்களில் விநாயகர் வழிபாடு உன்னத நிலையிற் காணப்பட்டது. கி.பி நான்காம் நூற்றாண்டிலிருந்து விநாயகரின் திருவுருவங்கள் அகப்படுகின்றன. இந்தோனேசியாவில் அகப்படும் கல்வெட்டுக்கள், விநாயகர் பல கடவுளர்களுடன் இருக்கும்போது "கணேசர்" என்றும் லிங்கரூபத்திலுள்ள பரமசிவனுடன் காணப்படும்போது "திருவிநாயகர்" என்றும் குறிப்பிடுகின்றன. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் கல்வெட்டொன்று "சந்தனகிரி கணேசர்" என ஒரு கணபதியைக் குறிப்பிடுகின்றது.

இந்தியாவில் உள்ள "மலைக்கோட்டைக் கணபதி"யைப் போல இங்கும் விநாயகர் வணக்கம் இருந்திருக்க வேண்டுமெனலாம். ஜாவாத் தீவில் பழங்காலத்திற் சைவம், வைணவம், பௌத்தம் ஆகிய சமயங்கள் மிகுதியாகப் பரவியிருந்தன. கி.பி 13 ஆம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய மதமே அங்கு பெரிதும் தலையெடுத்தோங்கியது. எனினும் அங்கே விநாயகரின் செல்வாக்குச் சிறிதும் குன்றாமல் நிலவி வருகின்றது.

ஜாவாவிற் கணேசர் விக்கினேஸ்வரராகக் கருதப்பட்டார். ஆறுகளைக் கடக்கும் இடங்கள், செங்குத்தான மலைச் சாரல்கள் போன்ற அபாயகரமான இடங்களில் விநாயகருடைய உருவங்கள் காணப்படுகின்றன. மண்டை ஓடுகளினால் ஆக்கப்பட்ட ஆபரணங்களை விநாயகருக்கு அணிகலன்களாக அணியும் வழக்கத்தை இந்த நாட்டில்தான் காணலாம்.

பாலித் தீவில் கி.பி 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளிற் சைவசமயம் பிரபல்யம் பெற்று விளங்கியது. சிவனுடன் துர்க்கை, விநாயகர், நந்தி என்ற மூவரும் கூடிய சிற்பங்களே மிக அதிகமாகப் பாலித்தீவிற் காணப்படுகின்றன. இம்மாதிரிக் காட்டப்படும்போது விநாயகர் லிங்க உருவத்திலேயே அநேகமாகக் காணப்படுவதும் கவனிக்கத் தக்கது. விநாயகர் இங்கு துவாரபாலகராகவும் காணப்படுகின்றார்.

போர்னியோவில் கி.பி 5ஆம் நூற்றாண்டிற் சைவசமயம் சிறந்து விளங்கியதாகக் கல்வெட்டுக்களிலிருந்து அறியமுடிகின்றது. மடிந்த கால்களின் உள்ளங்கால்கள் ஒன்றையொன்று தொடும்படி உட்கார்ந்த நிலையில் இங்குள்ள விநாயகரின் உருவங்கள் காணப்படுகின்றன.

சீனாவில் கி.பி 531 ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டுக் கொண்ட யானைமுகக் கடவுளின் சிற்ப வடிவம் ஒன்று உள்ளது. ஆனால் ஜப்பானில் ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகே இவர் தெரிய வந்துள்ளார். இந்த இரண்டு தேசங்களிலும் விநாயகர் இரண்டு கைகளுடன் காணப்படுகின்றார். இரண்டு விநாயகர்கள் நிற்கும் நிலையில் காணப்படும்போது ஒருவர் மற்றொருவரைப் பார்ப்பது போலவும் காட்சி தருகின்றார். இம்மாதிரியான இரு வடிவங்கள் சீனா, ஜப்பான் தவிர வேறு எங்குமே கிடையாது. இவ்விடங்களில் விநாயகர் வழிபாடு மந்திர, தந்திர முறைகளில் நடைபெறுகின்றது. இதனால் "அவலோகித ஈச்வரபோதி சத்வர்" மாதிரி விநாயகரும் சீனாவிலும், ஜப்பானிலும் எல்லோருக்கும் தெரியவந்துள்ளார். நாளடைவில் போதி சத்துவருடன் இவரையும் சேர்த்தனர். சீனாவிலும், ஜப்பானிலும் விநாயகர் இருவகையாக அமைக்கப்படுகின்றார். முதலாவது தனி வடிவமாகவும் இரண்டாவதில் இருவடிவமாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. ஜப்பானிய மக்கள் விநாயகரை "முழெ முவைவநெ" என வழங்குகின்றனர்.

நேபாளத்தில், அசோக சக்கரவர்த்தியின் குமாரி விநாயகருக்கு ஒரு கோயில் எடுத்ததாகக் கூறப்படுகின்றது. கி.பி 10ஆம், 11ஆம் நூற்றாண்டுகளில் இங்கு விநாயகர் வழிபாடு பிரபல்யம் பெற்று விளங்கியது. விநாயகர் பௌத்தக் கடவுளாக, நர்த்தன கணபதியாக நேபாளத்திலும், திபெத்திலும் தெரிய வந்துள்ளார். சாதாரணமாகப் பன்னிரண்டு கைகளுடனும் எலி வாகனத்தின் மீது நடனமாடுவது போலவும் காணப்படுகின்றார். நேபாளத்தில் மகாயான பௌத்தரிடையே விநாயகர் சிங்கத்தில் அமர்ந்தவராக "ஹேரம்ப விநாயகராக" விளங்குகின்றார். இவை தவிர ஒரு யானைத் தலையுடனும், நான்கு முதல் பதினாறு கைகளுடனும் மூன்று கண்களுடனும் உட்கார்ந்தோ அல்லது நின்ற மாதிரியாகவோ விளங்கும் அவரின் உருவங்களும் நேபாளத்தில் காணப்படுகின்றன. நேபாளத்திலும், இந்தோனேசியாவிலும் நான்கு முகங்களை உடைய விநாயகர் திருவுருவங்கள் அதிகம் காணப்படுகின்றன.

ஆப்கானிஸ்தானில் மிகப் பழைமை வாய்ந்த விநாயகர் திருவுருவங்கள் இரண்டு தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தென் அமெரிக்காவிலும் இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பரவியதாகக்

கூறப்படுகின்றது. இந்துத் தெய்வங்கள் பல அங்கே வழிபடப்படினும் முக்கியமாக இந்திர - கணேசரின் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது.

மேற்கு திபெத்தில் பல விநாயகர் வடிவங்கள் காணப்படுகின்றன. இவர் துஷ்ட தேவதைகளை அடக்கிக் காப்பாற்றுகின்றவராகக் கருதப்பட்டு, வீட்டு வாசற் படிகளுக்கு மேல் வைக்கப்பட்டுள்ளார்.

விநாயகர் பல இடங்களில் துவாரபாலகராக வணங்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. வடஇந்தியாவிலும், சீனாவிலும், துருக்கிஸ்தானிலும் விநாயகர் துவாரபாலகராகக் காட்டப்படவில்லை. விநாயகர் மகாயான பௌத்தக் கோயில்களுள்ள வட ஆசிய பாகத்தில் மிகவும் வணங்கப்பட்டார்.

பிரிட்டிஸ் பொருட் காட்சிச் சாலையில் ஐந்து முகங்களுடனும், பத்துக் கரங்களுடனும் "மகாராஜ லீலாசனம்" என்னும் நிலையில் தாமரை மலரை ஏந்திய இடக்கையை உடைய வல்லபை என்னும் சக்தியைத் தமது இடப்பக்கத் தொடையில் அமரச் செய்து தழுவிக் கொண்டுள்ள ஏரம்ப கணபதியின் திருவுருவம் காணப்படுகின்றது.

விநாயகருக்கு மூஷிகம் என்னும் பெருச்சாளியே வாகனமாகும். ஆயினும், சிங்கமும் அவருக்கு வாகனமாகக் கூறப்பட்டுள்ளது. சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டு ஐந்து தலைகளுடன் கூடிய பஞ்சமுக விநாயகர் திருவொற்றியூர்த் தியாகேசுவரர் கோயிலிலும், நாகபட்டினம் காயாசோ கணேசுவரர் கோயிலிலும் எழுந்தருளியுள்ளார். திருவொற்றியூரில் ஐந்து தலைகளும் ஒரே வரிசையில் உள்ளன. நாகபட்டினத்தில் நான்கு திசைகளிலும், நான்கு தலைகளும் மேலே ஒரு தலையும் உள்ளன.

விநாயகர் திருவுருவங்களிற் பொதுவாகத் துதிக்கையானது இடப்புறமாகவே இருக்கும். ஆனால் திருவலஞ்சுழி என்னும் தேவாரப்பாடல் பெற்ற தலத்தில் வலப்புறமாகச் சுழித்துள்ள தும்பிக்கையுடன் கூடிய வலம்புரி விநாயகர் திருவுருவம் காணப்படுகின்றது.

தமிழகத்தல் விநாயகர் வணக்கம் சதுக்கப்பூதத்திலிருந்து தோன்றியதென்றும், புத்தமத வழிபாட்டினின்று தோன்றிய வேழமுகத்தான் தமிழக உழவர்களின் தெய்வமெனவும், புத்தருக்குக் கட்டப்பட்ட கோயில்களனைத்தும் தமிழகத்தில் விநாயகர் கோயில்களாக மாறினவென்றும், யானைகள் மிகுந்த பண்டைத் தமிழ் நாட்டில் விளங்கிய வழிபாட்டின் அடிப்படையில் விநாயகர் வணக்கம் தோன்றியதென்றும், தமிழக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழகத்தில் "தும்பிக்கை ஆழ்வார்" என்ற பெயரில் வைணவத் திருத்தலங்களில் விநாயகர் வழிபடப்படுகின்றார்.

ஜேனஸ் (Janus) என்னும் உரோமக் கடவுளுக்கும், துவிமுக கணபதி வடிவத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. மேலும் கூத்தாடுகின்ற நர்த்தக கணபதிக்கும், நடனமாடுகின்ற தயோனிசஸ் (Dienysus) என்னும் அயோனியக் கடவுளுக்கும் இடையேயும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் இந்துக்கள் மத்தியில் மட்டுமன்றிப் பௌத்தர்கள் மத்தியிலும்

விநாயகர் வழிபாடு நடைபெறுகின்றது. கி.மு இரண்டு தொடக்கம் கி.பி முதலாம் நூற்றாண்டுக்குரியவை எனக் கூறப்படும் விநாயகரின் சிற்பம் பௌத்த வழிபாட்டுத் தலமான மிஹிந்தலையிற் காணப்படுவதனைப் பேராசிரியர் பரணவிதான போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் பொலனறுவையிற் கிடைத்த வெண்கல விநாயகர்சிலை, திருகோணமலையிற் கிடைத்த விநாயகர்சிலை ஆகியன இலங்கையில் நிலவிய விநாயகர் வழிபாட்டின் புராதனத்தை அறிய உதவுகின்றன. இலங்கையில் முறிகண்டிப் பிள்ளையார், கற்பக விநாயகர், முத்துவிநாயகர், செல்வவிநாயகர், வீரகத்திவிநாயகர் எனப் பல்வேறு பெயர்களில் விநாயகர் வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது.

இவ்வாறு தொகுத்து நோக்குகின்றபோது, உலகை வலம் வந்த விநாயகர் எனக் கூறத்தக்க வகையில் விநாயகர் வழிபாடானது பாரெங்கும் பரந்து விளங்குவது நோக்குதற்குரியதாகும்.

**துணை நூல்கள்**

01. ஏகாம்பரநாதன், ஏ., **கோயிலும் இறைவழிபாடும்,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட், சென்னை. 1986.

02. கணபதி ஸ்தபதி, வை., **சிற்பச் செந்நூல**, தொழில்நுட்பக் கல்வி இயக்க வெளியீடு, சென்னை. 1978.

03. கல்யாணசுந்தரம், ந., **தமிழ்நாட்டில் கணபதி வழிபாடு**, திருக்குமரன் பதிப்பகம், திருச்செந்தூர். 1994.

04. சுவாமி சித்பவானந்தர்,**கடவுளின் வடிவங்கள**, திருச்சி. 1956.

05. சுப்பையா, மு., **பிள்ளையார**, பாரி அச்சகம், சென்னை. 1975.

06. செந்தில் துறவி, **காணாபத்யம், (கணபதி வழிபாடு)**, சாஸ்தா பதிப்பகம், சென்னை

07. தண்டபாணி தேசிகர் ச., **கணபதி**, திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை. 1992.

08. நடராஜன் எஸ்., **கணபதி** ஹ்ருதயம, பிரதிபா பிரசுரம், சென்னை. 1978.

09. பிள்ளை கா.சு., **தமிழர் சமயம்**, சென்னை. 1969.

10. மறைமலையடிகள், **தமிழர்மதம**, சென்னை. 1958.

11. வடிவேலன் சு., **கணபதி** வரலாறு, தருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை. 1984.

12. வெற்றிக் கடவுள் பிள்ளையார, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிம்ட்டெட், சென்னை. 1976.

13. ஜெயா பி., விநாயகர் வழிபாடு, நாகர்கோவில். 1972.

14. Ramasubramaniam V. "The origin and Development of Ganapatyam" Sankare and shanmata, Madras. 1969.

**விநாயகரின் ஆயுதங்கள்**

01. பாசம்
02. அங்குசம்
03. தந்தம்
04. வேதாளம்
05. சத்தி
06. அம்பு
07. வில்
08. சக்கரம்
09. கத்தி
10. கேடகம்
11. சம்மட்டி
12. கதை
13. நாகபாசம்
14. சூலம்
15. குந்தாலி
16. மழு
17. கொடி

சக்தி கணபதி



த்விஜ கணபதி



சிருஷ்டி கணபதி



உத்தண்ட கணபதி



சித்தி கணபதி



உச்சிஷ்ட கணபதி



ருணமோசன கணபதி



துண்டி கணபதி



துர்கா கணபதி



சங்கடஹர கணபதி



நிருத்த கணபதி



ஊர்த்துவ கணபதி



மகா கணபதி



விஜய கணபதி



ஏகாக்ஷர கணபதி



வீர கணபதி













யோக கணபதி



பக்தி கணபதி



வீர கணபதி





க்ஷிப்ர ப்ரசாத கணபதி







ஹரித்ரா கணபதி



ஏகதந்த கணபதி




ஹேரம்ப கணபதி





# விநாயகரின் ஆயுதங்கள்

1. பாசம்
2. அங்குசம்
3. தந்தம்
4. வேதாளம்
5. சத்தி
6. அம்பு
7. வில்
8. சக்கரம்
9. கத்தி
10. கேடகம்
11. சம்மட்டி
12. கதை
13. நாகபாசம்
14. சூலம்
15. குந்தாலி
16. மழு
17. கொடி
18. தண்டம்
19. கமண்டலம்
20. பரசு
21. கரும்புவில்
22. சங்கு
23. புஷ்பபாணம்
24. கோடரி
25. அக்ஷமாலை
26. சாமரம்
27. கட்டுவாங்கம்
28. தீ அகல்
29. வீணை




38

உ

# இந்துப் பண்பாட்டு மரபில் சிவாகமங்கள் ஒரு சமயநிலை நோக்கு

**பிரம்மஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா M.A,M.Phil**

சிரேஷ்ட விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், மட்டக்களப்பு.

இந்திய சநாதன தர்மத்தின் ஆணி வேராகத் திகழ்வது நான்கு வேதங்களாகும். அவ்வேதங்கள் அனைவருக்கும் பொதுவென்றும், அதனினும் சிறந்ததாக எழுந்த சிறப்பு நூல் ஆகமம் என்றும் கூறப்படுகின்றது. ஆகமங்கள் சிவபெருமானால் அருளப் பெற்றதாகும்.

ஆகமம் என்ற சொல்லுக்குப் பல வகையான விளக்கங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. முதலில், ஆகமம் என்பதற்கு வந்தது என்பது பொருளாகும். எங்கிருந்து வந்தது என்றால் பரம ஆப்தரது வாயில் இருந்து வந்தது என்பதாகும். பரம ஆப்தராகிய சிவபெருமான் மனத்தால் எண்ணித் திருவாயால் அருளியதே ஆகமம் ஆகும்.

மேலும் இச் சொல்லுக்கு நெறிப்படுத்துதல் என்பதும் பொருளாகும். மனிதனின் ஆன்மா கட்டுக்கடங்காமல் மனம் விரும்பிய வழியெல்லாம் செல்லாமல் குறித்த வரையில் ஒழுகி இவ்வுலகில் சகலமேன்மைகளையும் அடைந்து பரவுலகில் நிலையான முத்தியின்பத்தை அடைந்து இன்பத்தை அனுபவிக்கச் செல்லும் வழிநெறிகளை ஒழுங்குபடுத்திக் கூறுவதாகும்.

மேலும் ஆகமம் என்பதற்கு ஆன்மாவைத் தனது வசத்தில் நிலைப்படுத்தி இகவாழ்வில் மேன்மையும் பரத்தில் இன்பத்தில் நிலைபெறச் செய்தல் என்பதும் பொருளாகும். இதனையொத்த அனேக விளக்கங்களைச் சைவ நூல்களில் காண்கின்றோம்.

ஆகமங்கள் என்ற சொல் "சிறப்பான சமயக்கலை நூல்களைக் குறிப்பதாகும். சைவர்களின் சமயக்கலை நூல்கள் சிவாகமங்கள், வைணவர்கள் வைஷ்ணவ ஆகமங்கள் என்று அழைக்கின்றனர். இதையொட்டி கிறிஸ்தவர்கள் பைபிளை வேதாகமம் என்றும் அழைக்கின்றனர். ஜைனர்கள் தமது நூலை ஜினாகமங்கள் என்று அழைக்கின்றனர்.

சிவாகமங்களைச் சிவபெருமானே அருளிச் செய்தார். அவர் இந்த உலகம் நன்மை அடையும் பொருட்டுப் பல சமயங்களில் அதனை மறுபடி மறுபடி பலருக்கும் அருளிச் செய்ததைக் காண்கின்றோம்.

ஆதியில் சிவபெருமான் ஓர் ஊழிக்காலத்தின் முடிவில் சிவாகமங்களை உமாதேவியாருக்கு அருளிச் செய்தார். அவள் உலகநலப் பொருட்டு முனிவர்களுக்கும் அவர்கள் வழியாக உலகினருக்கும் உபதேசித்தார். சிவபெருமான் உமையை மடிமீது அமர்த்திக் கொண்டு சிவாகமங்கள் அருளிச் செய்த திருக்கோலம் உமேசர் என்று அழைக்கப்படுகின்றது. அவர் ஆறு திருக்கரங்களுடன் விளங்குகின்றார்.

ஆதிநாளில் பார்வதிக்கு, சிவபெருமான் ஆகமங்களை அருளிச் செய்த இடம் மகேந்திர மலையாகும். இதனைத் திருவாசகம் **"மன்னு மாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்"** என்று குறிக்கின்றது. மேலும் மாவேட்டாகிய **ஆகமம் வாங்கியும் மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து உற்ற ஐம் முகங்களாற் பணித்தருளியும** எனும் பகுதிகளும் இதனைக் குறிப்பிடுகின்றன.

ஆதியில் பரவெளியிலிருந்து மெல்லிய ஒளியாகவும், ஒளியிலிருந்து திரண்ட தூணாகவும், அத்தூணிலிருந்து சதுர்புஜங்களுடன் கேவல மூர்த்தியாகவும், அவரிடமிருந்து மகாசதாசிவ மூர்த்தியாகவும், ஆதிசிவம் உருப்பெற்றது. அந்த சதாசிவமூர்த்தி ஐந்து முகங்களும் பத்துத் திருக்கரங்களும் கொண்டவர். பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றார். இவர் தனது ஐந்து முகங்களால் சிவாகமங்களை அருளிச் செய்தார். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கிய சத்யோஜாதம், அகோரம், தத்புருஷம், வாமதேவம் ஆகிய நான்கு முகங்களால் முகத்திற்கு ஐந்து ஆகமங்கள் வீதம் இருபது ஆகமங்களை அருளினார். மேலேயுள்ள ஈசானம் என்ற ஐந்தாவது முகத்தால் எட்டு ஆகமங்களை அருளிச் செய்தார்.

இவற்றை ஆதிநாளில் சிவபெருமான் குருவாக இருந்து உமாதேவியாருக்கு அருளிச் செய்தார் என்பதை திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவில், மகேந்திரப் பொன்மலையில் **"மலைமகளுக்கு அருளும் குரு நீ"** என்று குறிப்பிடுகின்றார். இதனால் அம்பிகைக்கு சிஷ்யபாவ கௌரி என்பது பெயராயிற்று. பின்னர் சிவபெருமான் சனகாதி நால்வருக்கு ஒரு முறையும், முனிவர்களுக்கு ஒரு முறையும் ரிஷிகளுக்கு ஒரு முறையும் என்று பல சமயங்களில் பலருக்கும் சிவாகமங்கள் உபதேசித்தார்.

இப்போதுள்ள ஆகமங்கள் சிவபெருமானால் உமாதேவியாருக்கும், பிறகு உருத்திரர்களுக்கும் சிவர்களுக்கும் அருளிச் செய்யப் பெற்றதாகும். இவை இருபத்தெட்டாகும். இவை முறையே 1.காமிகம் 2.யோகஜம் 3.சிந்தியம் 4.காரணம் 5.அஜிதம் 6.தீத்தம் 07.சூட்கமம் 8.சகத்திரம் 9.அம்சுமான் 10.சுப்ரபேதம் 11.விஜயம் 12.நிசுவாசம் 13.சுவாயம்புவம் 14.ஆக்னேயம் 15.வீரம் 16.சௌரவம் 17.மகுடம் 18.விமலம் 19.சந்திரஞானம் 20.முகபிம்பம் 21.புரோற்கிதம் 22.லளிதம் 23.சித்தம் 24.சந்தானம் 25.சர்வோத்தம் 26.பாரமேசுவரம் 27.கிரணம் 28.வாதுளம் என்று பெயர் பெறுகின்றன.

இவற்றில் முதல் பத்து ஆகமங்களை சிவபெருமான் பிரணவர் முதலான பத்துப் பேர்களுக்கு ஒவ்வொன்றாக அருளிச் செய்தார். அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு இரண்டு பேருக்குத் தாம் அறிந்த ஆகமங்களை விளக்கிக் கூறினர். இதன் படி இந்தப் பத்து ஆகமங்களைக் கேட்டவர்கள் முப்பதின்மராவர்

உருத்திர பேதமான பதினெட்டு ஆகமங்கள் சிவபெருமானால் அநாதிருத்திரர் முதலான பதினெண்மருக்கு ஒவ்வொருவருக்கு ஒன்றாக அருளிச் செய்தனர். இவ்வகையில்

ஆதியில் கேட்ட பதினெண்மர் அவரிடம் கேட்ட பதினெண்மர் ஆக முப்பத்து அறுவராவர்

இதனையொட்டி ஆதியில் ஆகமங்களைக் கேட்டவர்கள் அறுபத்தறுவர் என்னும் மரபு உண்டாயிற்று. இவர்கள் மூலமாக உலகமெங்கும் சிவாகமங்கள் பரவின.

சிவாகமங்கள் நான்கு பகுதிகளாகும். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று பெயர் பெறுகின்றன. சரியாபாதத்தில் ஆலயநிர்மாணம், கிராமநிர்மாணம், தேர்கள் செய்தல், விழாக்கள், புஸ்பவிதிகள். பூசை முறைகள், பிராயச்சித்த விதிகள் முதலிய அனேக செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

கிரியாபாதத்தில் தெய்வத்திருவுருவங்களை அமைத்தல், வழிபடுதல், மந்திரங்களை உச்சரிக்கும் முறை, யாகசாலைகள், யாகமேடைகள், வேள்விச்சாலைகள், முதலியவற்றை அமைத்தல். பூஜை, ஜெபம் முதலியவற்றிற்கான விதிகள் விளக்கப்பட்டுள்ளன. சமயத்திலுள்ள தீட்சா விதிகள், தனிவாழ்விலும், பொதுவாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள், சடங்குகள், ஆகியவற்றின் விளக்கம் முதலியன இடம் பெற்றுள்ளன.

யோகபாதத்தில் இயமம், நியமம் முதலான அட்டாங்க யோகச் சிறப்புகள், மூலாதாரம் முதலான ஆறாதாரங்களின் இயல்பும் விரிவாகப் பேசப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஞான பாதத்தில் அனுபவத்தால் அறிவதை யோகபாதம் பாவனையால் காண்பதை விளக்குகின்றது.

ஞானபாதத்தில் உயிர்களின் இயல்பு இறைவனின் பஞ்சகிருத்தியங்கள் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களின் இயல்பு, அண்ட கோடிகளின் இயல்பு, வினைவகை, வினைப்பயன், ஞானத்தின்படி நிலைகள் முக்திநெறி முதலியவை விரிவாகப் பேசப்பட்டுள்ளன. உயிர்கள் இறுதியில் அடைய வேண்டிய முக்தி நெறியைப் போதிக்கின்றது.

இந்த சிவாகமங்களின் எண்ணிக்கை அளவிறந்ததாகும். இவை அனைத்தையும் ஒருவன் வாழ்நாளில் படித்துப் பயன் பெறுதல் இயலாத ஒன்றாகும். சிவன் அருளால் இவற்றை ஒரு நொடியில் அறிந்து கொள்ள முடியும்.

சிவாகமங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகச் சொல்லப்பட்ட விரிவானது. அவற்றை எல்லோராலும் எளிதில் கடைப்பிடிக்க முடியவில்லை. ஆதலின் அது படிப்படியாக மறைந்து விட்டது. சரியா, யோக, ஞானபாதங்களை விட கிரியாபாதங்களைச் சிவாசாரியார்கள் போற்றியதால் அதன் ஒரு பகுதி பாதுகாக்கப்பட்டுள்ளது. மற்றைய பகுதிகள் பெரும்பாலும் மறைந்து விட்டன.

இப்போது ஆகமங்கள் எதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்தவை

வரை அச்சாக்கப்பட்டுள்ளன. பாண்டிச்சேரியிலுள்ள பிரஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆப் இண்டாலஜியினர் ஆகமப்பகுதிகளை அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆகம நூல்களைத் தொடர்ந்து அதிலுள்ள செய்திகளை அடியொற்றிச் சுருக்கமாகக் கருத்துக்களை விளக்கிப் பல நூல்கள் எழுந்தன. இவை உபாகமங்கள் என்று பெயர் பெறுகின்றன. ஒவ்வொரு ஆகமங்களுக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட உபாகமங்கள் இருப்பதைக் காண்கின்றோம். இவ்வகையில் 28 ஆகமங்களுக்கும் 207 நூல்கள் உபாகமங்களாக உள்ளன. இவற்றின் பட்டியலைத்தனியே காண்க. உபாகமங்களும் சிவபெருமானாலேயே அருளப்பட்டதாகும்.

சிவாகமங்களில் உள்ள பூஜாவிதிகளை அடியொற்றி, பராசக்தி, சுப்பிரமணியர் முதலான பரிவாரதேவதைகளுக்கும் கிரியா நூல்கள் இயற்றப்பட்டன. இவை தந்திரங்கள் என்று அழைக்கப்பட்டன. சக்தி வழிபாட்டை விளக்கும் நூல்கள் சாக்ததந்திரங்கள் என்று பெயர் பெற்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கது தேவிசூக்தம் ருத்ரயாமளம், மேருதந்திரம், டமாரதந்திரம், காத்யாயனீ தந்திரம் முதலியனவாகும்.

முருக வழிபாட்டை விளக்கும் நூல்கள் குமார தந்திரம் எனப்பட்டது. இதுவே இப்போது சுப்பிரமணியர் ஆலயங்களில் கடைப்பிடிக்கப்படும் நூலாகும்.

ஆகமங்கள் பரந்து விரிந்த கடலைப் போன்றவை, சுருக்கமாக எளிய சொற்களில் ஆக்கப்பட்டிருந்த போதிலும் ஆழமான கருத்துக்களைக் கொண்டதாகும். அதனைக் கடைப்பிடிப்பது எளிதல்ல. அதனால் அவற்றிலுள்ள கருத்துக்களில் மாறுதலில்லாமல் எளிதில் கடைப்பிடித்து ஒழுக உதவப் பல நூல்கள் எழுந்தன. இவை ஆகமக் கருத்துக்களை நிரல்படி வரிசைப்படுத்திக் கூறுதலின் **"பத்ததிகள்"** என்று பெயர் பெற்றன. தென்னாட்டில் பதினெட்டுப் பேர்கள் செய்த பத்ததி நூல்கள் வழக்கில் இருந்தன. இந்நூல் ஆசிரியர்கள்

1.துர்வாசர் 2.பைங்களர் 3.உக்ரஜோதி 4.ஸ்ரீகண்டர் 5.விஷ்ணுகண்டர் 6.சுபோதர் 7.வித்யாகண்டர் 8.இராமகண்டர் 9.ஞானசிவர் 10.ஞானசங்கரர் 11.சோமசம்பு 12.பிரம்மசம்பு 13.திரிலோசனா 14.அகோரசிவா 15.வருணசிவர் 16.பிரசாதசிவர் 17.இராமநாதசிவர் 18.ஈசான சிவர் என்பவர்களாவர்.

இலங்கையில் இருபத்தொரு பத்ததி நூல்கள் வழக்கில் இருந்ததாகக் கூறுவர். இத்தகைய பத்ததி நூல்களும் காலப்போக்கில் மறைந்து விட்டன. இப்போது அகோர சிவாசாரியாரின் பூஜைபத்ததியும் சோமசிவரின் சோமசம்பு பத்ததியும் அதிகமாக வழக்கில் உள்ளன.

சிவபெருமானால் அருளப்பெற்ற ஆகமங்கள் சிவபெருமானாகவே போற்றி

வழிபடப்பட்டன. இதனால் இது இமயம் முதல் குமரிவரை பரவி இருந்தது. தென்னகத்திலிருந்து சிவாகமங்களுக்குக் காஷ்மீரத்திலுள்ள பண்டிதர்கள் பெரிய உரைகள் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவாகமங்கள் மக்களுக்கு ஏற்ப அறிவுறுத்தும் வகையில் இன்றுவரை நிலைபெற்றுள்ளன. சிவாகமங்களை எண்ணுவதும் பூசிப்பதும் கடைப்பிடிப்பதும். புண்ணியமாகும். வேதங்கள் ஆதியில் எழுத்து வடிவில் இல்லை. அவை வழிவழியாக வாயால் கூறப்பட்டு செவியால் கேட்கப்பட்டு மனத்தால் கிரகிக்கப்பட்டுப் போற்றப்பட்டன. இதனால் எழுதாக்கிளவி எனப்பட்டது. ஆனால் ஆகமங்கள் ஆதியிலேயே எழுத்து வடிவம் பெற்றுவிட்டன. கிரந்த எழுத்துக்களால் அது எழுதப் பெற்றிருந்தது. தட்சிணாமூர்த்தியின் கரத்தில் இருப்பது ஆகமச் சுவடியே ஆகும்.

சிவகாம ஓலைச் சுவடிகளைச் சிவலிங்கமாகப் பாவித்து வணங்குவது மரபு. ஆகம நூல்களைத் தனியிடத்தில் வைத்து வழிப்பட்டனர். இதற்கு ஆகமக் கோயில் என்பது பெயர்.

விருத்தகாசி எனப்படும் விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் ஆலயத்தில் வடமேற்கு முனையில் பெரிய உள் ஆலயம் உள்ளது. இதில் இருபத்தெட்டு லிங்கங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆகமத்தைக் குறிக்கின்றது. இவ்வரிசையில் விநாயகரும் பைரவரும் இடம் பெற்றுள்ளனர்.

சிவாகமங்களுக்குச் சித்தாந்தம், தந்திரம் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன. சிவாகமக் கருத்துக்களைச் சுருக்கமாக விளக்கப் பல நூல்கள் எழுந்தன. இவை ஆகம சாரசங்கிரகம், ஆகம சாராவளி, என்று பெயர் பெற்றன. சதாசிவ மூர்த்திக்கு ஆகமங்களே அங்கங்கள்

சிவாகமங்கள் சிவபெருமானின் திருவடிவமாகும். அவருடைய ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு ஆகமமாகத் திகழ்கின்றது. இதன்படி அவருக்கு ஒவ்வொரு ஆகமத்தின் பெயரைச் சொல்லியும் அங்க பூஜை செய்யப்படுகின்றது. இதன் படி காமிகாகமம் தொடங்கி 1.திருவடிகள் 2.கணைக்கால் 3.அங்குலி 4.கெண்டைக்கால் 5.முழந்தாள் 6.ஊரு 7.குவற்யம் 8.தடித்தானம் 9.முதுகு 10.கொப்பூழ் 11.வயிறு 12.ஹிருதயம் 13.ஸ்தனங்கள் 14.கண்கள் 15.கண்டம் 16.செவிகள் 17.கீரிடங்கள் 18.கரங்கள் 19.மார்பு 20.முகம் 21.நாக்கு 22.கன்னம் 23.நெற்றி 24.குண்டலங்கள் 25.உபவீதம் 26.ஹாரம் 27.ஆபரணங்கள் 28.ஆயுதங்கள் ஆகிய அங்கங்களில் ஆகமங்களின் பெயர்களின் பெயர் சொல்லி பூஜை செய்யப்படுகின்றன.

உ
சிவமயம்

# வல்லபா கணேசமூர்த்தி

மதுரசாதகர், சாதககலாமணி
**பிரம்மஸ்ரீ குருசாமி சுந்தரசர்மா (கைதடி)**
**(Dip in maths, special trd. maths)**

முன்னொரு காலத்திலே பிரமா சத்திய உலகத்தில் மரீசி முதலிய முனிவர்களும், தேவர்களும் சூழ வீற்றிருந்தனர். அவர்களுள் மரீசி முனிவர் பிரமாவை வணங்கி, "படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளுக்கும் தலைவரும், உலககாரணரும் சர்வ வியாபியுமாய் உள்ள கடவுள் எவர் என்பதை எமக்குச் சொல்ல வேண்டும்." என்றார். பிரமா தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கும் விநாயகக் கடவுளைத் தியானித்து ஆனந்த பரவசராய் வேதங்களினால் துதித்தார். பின்பு மரீசி முனிவரை நோக்கி "மைந்தனே! முன்னொரு காலத்தில் ஆணவமல மறைப்பினால் நானும் விட்டுணுவும் தனித்தனி நாமே பரப்பிரமம் என வாதித்து யுத்தம் செய்தோம். அப்போது எங்கள் நடுவில் ஒரு சோதி தோன்றியது. அவரே கணேசர். அவரே மும்மூர்த்திகளுக்கும் தலைவர்." என்று சொன்னார். மரீசி முனிவர் திரும்பவும் நமஸ்கரித்து "படைத்தல் காத்தல்களைச் செய்கின்ற உம்மோடு ஒருவராய் இருந்து அழித்தல் தொழிலைச் செய்கின்ற உருத்திரர் உங்களுக்குத் தலைவராய் இருப்பதற்குக் காரணம் என்ன? என்று வினவினார்.

பிரமா புன்னகை புரிந்து "புதல்வனே! சிவபெருமான் எங்களை முன்னாளில் சிருஸ்டித்து படைத்தல், காத்தல் என்னும் தொழில்களைத் தந்து எம் இருதயங்களில் இருந்து அவைகளை நடாத்துவிக்கின்றார். அவர் பிரளய காலத்தில் எங்களையும் அழிக்கின்றார். மீளவும் சிருட்டித்து எல்லாச் சுகங்களையும் தந்து அருள்கின்றார். வேத ஆகமங்களை உண்டாக்கி எங்களுக்கு உபதேசித்தவரும் அவரே. "பரமான்ம சிவபெருமான் எள்ளில் எண்ணெய் போன்றும் தயிரில் நெய் போன்றும் நதியில் நீர் போன்றும் அரணியில் (தீக்கோலில்) அக்கினி போன்றும் மறைந்துள்ளார். இங்ஙனம் ஆன்மாவிலே பரம ஆன்மா அறியப்படுகின்றார். ஆகையால் சங்காரகர்த்தாவாகிய அச்சிவபெருமானே எங்களுக்கும் முதல்வர். சிவபெருமானே தீயவர்களை அழித்தல் பொருட்டும், நல்லவர்களைக் காத்தற் பொருட்டும் விநாயகராகத் திரு அவதாரம் செய்தார்" என்று உபதேசித்தார்.

மரீசி முனிவர் தமது உள்ளத்தில் கொண்ட சந்தேகத்தை நீக்கி மானச வாவிக் கரையில் இருந்து கணேச மூர்த்தியைத் தியானித்து அருந்தவம் செய்தார். விநாயகர் மூஷிக வாகனத்தின் மீது காட்சி கொடுத்து அருளினார். முனிவர் எழுந்து நமஸ்காரம் செய்து துதித்து நின்றார். விநாயகக் கடவுள் முனிவரை நோக்கி "உனக்கு யாது வரம் வேண்டும்?" என்றார். "அடியேனுக்கு உலக அரசாட்சியையும், வேதங்களில் வல்லுனராய், மிகுந்த சற்குணமுடையவராய், பேரறிவுடையவராய், பாவங்களை சிறிதும் சிந்தியாதவராய் விளங்குகின்ற பல புத்திரர்களையும் தந்து உதவ வேண்டும். உம்மிடத்தில் நீங்காத

அன்பைத் தரல் வேண்டும். வள்ளலே! உம்முடைய இடப்பக்கத்தில் இருக்கின்ற ஈசுவரியே எனக்குப் புத்திரியாக வரவேண்டும். அவரை நான் தத்தம் செய்து தர நீரே கொள்ளல் வேண்டும்'' என்று மரீசி முனிவர் பிரார்த்தித்தார். விநாயகர் "அவ்வாறே ஆகுக" என்று மறைந்தருளினார். முனிவர் பிரமாவினால் உண்டாக்கிக் கொடுத்த பிரம நகரத்திலிருந்து இந்திரன் முதலியோர் நமஸ்கரிக்க அரசு செய்தார். பின்பு தேவவல்லியை விவாகம் செய்து பல புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று வாழ்ந்து இருந்தார்.

மரீசி முனிவரது தவத்தை நிறைவேற்றத் திருவுளங் கொண்டு மகேஸ்வரன் மகேஸ்வரிக்கு அனுக்கிரகித்தார். உமாதேவியார் மகேசுவரரிடம் அனுக்கிரகம் பெற்றுக் கொண்டு யமுனையை அடைந்து அதில் பூத்திருந்த தாமரை மலர்களுள் ஒரு மலர் மீது சங்கு வடிவமாய் சிவத் தியானத்துடன் இருந்தார்.

மரீசி முனிவர் ஒரு நாள் தமது மனைவியுடன் யமுனையை அடைந்து விதிமுறைப்படி ஸ்நானம் செய்து நித்திய கருமத்தை முடித்தார். அப்பொழுது நதியில் உள்ள புஸ்பம் சிறப்புற்று விளங்குவதையும் அதில் தெய்வத் தன்மை பொருந்திய ஒரு சங்கு இருப்பதையும் கண்டார்.

அதைக் கண்ட முனிவர் அதை எடுப்பதற்காக அதன் அருகில் போனார். அது ஒரு பெண் குழந்தை வடிவமாக மாறியது. முனிவர் அக்குழந்தையைப் பார்த்து சகல தீவினைகளையும் நீக்கி நற்கதி அடைவித்தல் காரணமாக மகேஸ்வரியே தோன்றினார் என்று நினைத்து ஆவலோடு அவரைக் கையில் தாங்கி கரை ஏறினார். முனிவர் தமது மனைவியான தேவ வல்லியை நோக்கி "ஆணவ இருளால் கட்டுண்டு இருக்கும் ஆன்மாக்களைப் போல இக்குழந்தையை நினையாதே. இது மேலான பேற்றினைக் கொடுத்த குழந்தை. அன்பாக இக்குழந்தையை வளர்ப்பாயாக'' என்று கொடுத்தார். தேவவல்லி அக்குழந்தையைக் கையில் ஏந்த உடனே அவள் தனங்களிலிருந்து பால் சொரிந்தது. அவர் அதை உலக மாதாவிற்கு ஊட்டினாள். பின்பு முனிவரும் மனைவியாரும் பரிவாரம் சூழ நகரத்தை அடைந்தனர். அப்புதல்விக்கு வல்லபை எனும் திருநாமத்தைச் சூட்டிப் போற்றி வணங்கினார்.

வல்லபாதேவிக்கு ஐந்து வயதாகியது. அவர் "சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்வதற்கு அனுமதி தரல் வேண்டும்.'' என்று தாய், தந்தையரிடம் விண்ணப்பித்தார். மரீசி முனிவர் ஒரு தவச்சாலை அமைத்துக் கொடுத்தார். வல்லபை அத்தவச்சாலையை அடைந்து சிவபெருமானின் திருவடிகளைத் தியானித்து ஏகஅட்சர மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு அரிய தவத்தைச் செய்தார். சிவபெருமான் சிவசின்னங்களை அணிந்த சிவபிராமண வேடம் பூண்டு வந்து தவத்தைச் சோதித்து நல்லருள் செய்து பின் அவ் உருவத்தை மாற்றிக் கணேசமூர்த்தியாய் காட்சி கொடுத்து அருள் செய்தார்.

இதனை அறிந்த மரீசி முனிவர் விவாகத்திற்கு உரிய கருமங்களை நிறைவேற்றித்

தேவர் முதலியோருக்குத் திருமணப் பத்திரங்களை அனுப்பி முனிவர்கள் புடைசூழ தவச்சாலையை அடைந்து வேதங்களாலும் அறிதற்கரிய விநாயகக் கடவுளை நமஸ்காரம் செய்தார். விநாயகக் கடவுள் அவருக்கு அருள் செய்தார். சுவாமியை அழைத்துக் கொண்டு சென்று மண்டபத்தில் இருத்தினார்கள். தெய்வப் பெண்கள் வல்லபையை அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று மணக்கோலம் செய்து கணேசமூர்த்தி இருக்கும் மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அவரின் பக்கத்தில் இருத்தினார்கள். அப்பொழுது விட்டுணு முதலிய தேவர்களும் தெய்வ மகளிர்களும் கணேசரையும் வல்லபையையும் துதித்தார்கள். கின்னரர் யாழ் வாசித்தார்கள். அரம்பையர்கள் நடித்தார்கள். தேவவல்லி நீர் வார்க்க மரீசி முனிவர் வல்லபையினுடைய திருக்கரத்தை விநாயகக் கடவுளுடைய திருக்கரத்தில் வைத்துத் தத்தம் கொடுத்தார். பிரமா அக்கினியைக் கொணர்ந்து விவாகக் கிரியைகளை முடித்தார்.

விநாயகக் கடவுள் அவரவருக்கு ஏற்றவாறு அருள் செய்து மரீசி முனிவருக்குப் பல வரங்களையும் கொடுத்து அருளினார். பின்பு பல வகைப்பட்ட வாத்தியங்கள் ஒலிக்க கணேசரும் வல்லபையும் மணித்தீபம் எனும் ஆலயத்தை அடைந்து ஆன்மாக்கள் உய்ய இனிது வீற்றிருந்து அருளினார்கள். தேவர் முனிவர் முதலியோர் வல்லபா சமேதராகிய விநாயகரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தத்தம் நகரங்களை அடைந்து வாழ்ந்தார்கள்.

விநாயக பரத்துவம் முற்றிற்று

அகரம் என அறிவாகி உலகம் எங்கும்
அமர்ந்(து) தகர உகர மகரங்கள் தம்மால்
பகரும் ஒரு முதலாகி வேறுமாகிப்
பல வேறு திருமேனி தரித்துக் கொண்டு
பகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்ந்(து) எய்த
போற்றுநருக்கு (கு) அறக்கருணை புரிந்(து) அல்லார்க்கு
நிகரில் மறக் கருணை புரிந்(து) ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வோம்.

பிரம்மஸ்ரீ கு. சுந்தரசர்மா,
"சர்வசாதகர்" - ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயம்
வெளிவட்ட வீதி,
வவுனியா.

உ
சிவமயம்

# சைவ சித்தாந்த வளர்ச்சியில் ஈழத்தறிஞர் வரிசையில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார்.

**மு.கௌரிகாந்தன** B.A, M.A, M.Ed. S.L.T.E.S - III
விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கலாசாலை கோப்பாய்.

## அறிமுகம்/நோக்கம்

சைவசித்தாந்தத்தை உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் பிரகாசிக்கச் செய்து வருவதிலே ஈழத்துத் தமிழ்ச் சைவ அறிஞர்களுக்கு முக்கியமானதோர் இடமிருக்கிறது. காலந்தோறும் இவர்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றிவந்த பணிகள் இன்று பல காரணிகளால் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வரும் நிலை காணப்படுகின்றது. உயர் கல்வியில் இந்து சமயம், இந்துநாகரிகம் என்னும் பாட நெறிகளுக்குள் சைவசித்தாந்தம் ஒரு சிறு பகுதியாக உள்ளடக்கப்பட்டுவிட்டதன் மூலம் இதன் முக்கியத்துவம் மழுங்கடிக்கப்பட்டு விட்டதனைப் பலரும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. எனவே கடந்த காலங்களிலே சைவ சித்தாந்த வளர்ச்சிக்காகப் பெறுமதி மிக்க தொண்டினை ஆற்றியுள்ள எமது பெரியோர்களது பணிகளை எமது இளந் தலைமுறையினர்க்கு எடுத்துக் கூறுவதன் மூலமாக அவர்கள் இத்துறையில் ஆர்வங் கொள்ளவும் மேலும் விரிவான தேடலை மேற்கொள்வதற்காகவும் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

## சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவரின் பங்களிப்பு - பொது

ஈழத்தைச் சிவபூமி என்றார் திருமூல நாயனார். எமது நாட்டில் சைவசித்தாந்தம் தமிழ் நாட்டைப் போலவே தொன்மையான காலத்திலிருந்து வளர்ந்து வந்திருக்கிறது. சைவ சித்தாந்தத்திற்குத் தனித்துவம் கொடுத்து விரிவான முறையிலே நூல் எழுதும் முயற்சி 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீஞானப்பிரகாச முனிவருடன் தான் ஆரம்பமாகியதாகத் தெரிகிறது. இவர் வடமொழியிலும் தமிழிலும் சைவசித்தாந்த நூல்கள் செய்துள்ளார். வடமொழியில் எழுதப்பட்ட நூல்களில் சிவஞானபோத விருத்தி, பௌட்கராகமவிருத்தி, சித்தாந்தசிகாமணி, சிவயோகசாரம், சிவயோகரத்தினம் என்பனவும், தமிழில் சிவஞான சித்தியார் உரை, தீட்ஷாலட்சணம் முதலானவையும் குறிப்பிடத்தக்கவை. இவருடைய சைவ சித்தாந்தப் பணிகளை விரிவாக அறிய சைவப்புலவர் க.சிகுலரத்தினம் அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரம்" எனும் நூலைப் பார்க்க வேண்டும்.

ஞானப்பிரகாசர் வழியில் வந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் (1822 - 1879) எமது இளஞ்சிறார்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் முதலாம் இரண்டாம் சைவ வினா விடைகள் முதலானவற்றின் மூலமும், எல்லோருக்குமாக சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனாரால் அருளிச்செய்யப்பட்ட சைவ சமய நெறி என்ற நூலுக்கு எழுதப்பட்ட உரை மற்றும் கந்த புராண வசனம் முதலான நூல்கள் மூலமும் பிரசங்கங்கள் மூலமும் சைவசித்தாந்தத்தைப் பரப்பினார்கள். பிரபல்யமான

"சித்தியளிக்கும் சிவ நெறி" (1985) என்ற நூலை எழுதிய புலியூர்க் கேசிகன் அவர்கள் ஆறுமுக நாவலருடைய சைவ வினா விடை நூற் செய்திகளைக் கொண்டே எழதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதலாம் சைவ வினா விடையை எடுத்துக் கொண்டால் அது வளர்ந்து சென்று சிவஞானபோதச் சிற்றுரையில் முற்றும்" என்று இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

சைவ சித்தாந்தத்தை ஆர்வத்துடன் தேடி ஆராய்ந்து கற்போர்க்காக இத்துறையில் அரும் பணியாற்றிய மேலும் பல ஈழத்துப் பெரியோர்களையும் அவர்கள் செய்த சித்தாந்தம் தொடர்பான நூல் விபரங்களையும் முதலில் கீழே தருகின்றேன்.

**01. "சைவ சிகாமணி" ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் (1821 -1891)**

1. சைவப்பிரகாசனம்
2. சிவ பூசையந்தாதி உரை
3. சமஸ்கிருத சிவஞானபோதத் தமிழுரை

இப்பெரியார் தொடர்பான விரிவான தேடலுக்கு நீர்வேலி சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த சபை வெளியீடான, நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சரித்திரம் (1654) என்ற நூலைப் பார்க்க.

**02. கோப்பாய் சபாபதி நாவலர் (1844 - 1903)**

1. சித்தாந்த மரபு கண்டன கண்டனம் (1893)
2. சிவகர்ணாமிர்தம் - மொழி பெயர்ப்பு (1885)
3. ஞான சூடாமணி

சிவஞான சுவாமிகள் இயற்றிய "சிவ சமவாத உரைமறுப்பு" (பதி) இவரின் சைவ சித்தாந்தப் பணிகளை விரிவாக அறிய வடகோவை அ. சிவகுருநாதன் பதிப்பித்த "சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம்" (1955) நூலைப் பார்க்கவும்.

**03. "சைவ சித்தாந்த மகாசரபம்" மேலைப் புலோலி நா. கதிரவேற்பிள்ளை (1844 - 1907)**

1. சைவ பூஷண சந்திரிகை (1957) 2ஆம் பதி, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை.

2.சைவ சித்தாந்தச் சுருக்கம்

**04. நல்லூர் த. சைலாசபிள்ளை (1855 - 1939)**

1. சிவஞான சித்தியார் - சுபக்கம் (பதி)

**05. இணுவில் நடேசையர் (1844 - 1905)**

1. சிவஞான சித்தியார் - சுபக்கம், ஞானப்பிரகாசர் உரை (பதி)

**06. வேலணை வி. கந்தப்பிள்ளை (1840 - 1913)**

1. தத்துவப் பிரகாச உரை (பதி)
2. சிவநெறிப் பிரகாச உரை (பதி)

**07. மட்டக்களப்பு ச. பூபாலபிள்ளை (1856 - 1921)**

1. முப்பொருள் ஆராய்ச்சிக் கட்டுரை

08. சு.ஏரம்பையர் (1847 - 1917)

1. சிவபூசா விதி (பதி)
2. தருப்பண விதி (பதிப்பாசிரியர்)

09. வண்ணார்பண்ணை வித்துவான் சி. தாமோதரம்பிள்ளை (1863 - 1921)

1. சைவ சித்தாந்த சாரமான மரபு
2. சிவஞானசித்தியார் உரை

10. கொக்குவில் சபாரத்தின முதலியார் (1858 - 1922)

1. ஈச்சுர நிச்சயம்
2. சீவான்ம போதம்
3. பிரபஞ்ச விசாரம்
4. Essentials of Hinduism (இந்து சமய சாரம்)

11. கொழும்பு மு. திருவிளங்கம் (1859 - 1922)

1. சிவஞான சித்தியார் - சுபக்கம், பதவுரை, குறிப்புரை (1925) சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.
2. சிவப்பிரகாசம் - புத்துரை (1974), கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம்.

12. "சைவ சித்தாந்த ஞானபானு" "சித்தாந்த சிகாமணி" காசிவாசி சி. செந்திநாதஐயர் (1848 - 1924)

1. நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழி பெயர்ப்பு
2. சைவ வேதாந்தம் (1920) ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சகம், மதுரை.
3. சிவஞான போத வசனாலங்காரம், வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை.
4. வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பாடம்
5. வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பாட வினாவிடை
6. கந்தபுராண நவநீதம் (1969), கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

சைவ சித்தாந்தத்தை நிலை நிறுத்துவதற்காக இவரால் எழுதப்பட்ட கண்டன நூல்கள்

I. ஞானபோத விளக்கச் சூறாவளி
II. சிவனுந் தேவனா என்ற தீயநாவுக்கு ஆப்பு
III. வக்கிரடங்கம்
IV. கிருஸ்தவமத கானகுடாரி.

ஐயரவர்களின் வரலாற்றோடு அவர்தம் சைவசித்தாந்தப் பணிகளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு "குப்பிழான் கிராமோதய விழா மலர்" (1964), காசிவாசி செந்திநாதையர் எனும் கட்டுரைத் தொகுப்பு (1978) க. சி குலரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட நூலாகிய மகான் காசிவாசி செந்திநாதையர் (1983) என்பன உதவும்.

13.நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் (1878 - 1953)

1. உயிரிளங்குமரன் நாடகம் (சைவசித்தாந்த உள்ளடக்கம்)
2. கந்தபுராணக் கதைகளும் அவைகள் உணர்த்தும் உண்மை நூற் கருத்தும்

(1938) திருச் சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

3. சைவசித்தாந்தக் கட்டளைக் கும்மி (1984), சிவ தொண்டன் சபை, யாழ்ப்பாணம்.

14. கோப்பாய் ச. கந்தையாபிள்ளை (1880 - 1958)

1. குமாரதேவரின் சுத்த சாதகம், நந்தி வெளியீட்டு மன்றம். (பதிப்)

2. உண்மை முத்தி - விளக்கம்

விரிவாக அறிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி தமிழ் மன்றம் வெளியிட்ட "வித்தகம் ச. கந்தையாபிள்ளை" (1977) எனும் நூலைப் பார்க்க.

15. சிவயோக சுவாமிகள் (1872 - 1964)

1. நற்சிந்தனை (1959), சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.

16. சிவஸ்ரீ.சு.குமாரசுவாமிக் குருக்கள் (1886 - 1971)

1. முப்பொருள் விளக்கம் (1959), கலாநிதி யந்திரசாலை, பருத்தித்துறை.

17. க.சா. முருகேசுப் போதகர் (கிறிஸ்தவர்)

1. சிவஞான சித்தியார் சுபட்ச வசனம் (1993) இரண்டாம் பதிப்பு. காந்தளகம் சென்னை.

18. பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை (1899 - 1986)

1. கந்தபுராண கலாசாரம் (1959), ஸ்ரீசண்முகநாத அச்சகம்., யாழ்ப்பாணம்.

2. கந்தபுராண போதனை (1960), திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

3. சமய கட்டுரைகள் (1961)

4. கந்தபுராணம் தசஷ்காண்டம் - உரை (1967)

5. சைவ நற்சிந்தனைகள் (1981) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

6. அன்பின் ஐந்திணை (1983) திருமகள் அழுத்தகம் சுன்னாகம்.

19. மாவிட்டபுரம் பொ. சங்கரப்பிள்ளை (1913 - 1990)

1. சைவசித்தாந்தம் (1985), குமரன் பதிப்பகம், சென்னை.

20. ஏழாலை சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் (1911 - 1996)

1. தமிழகமும் சைவமும்

2. தத்புருஷா

சைவசித்தாந்தம் தொடர்பான சிவதொண்டனில் இவரால் எழுதப்பட்ட பத்துக்கட்டுரைகள் ''ஞானகாவியம்'' என்னும் இவருடைய நினைவு மலரிலே வெளிவந்துள்ளது.

21. இலக்கிய கலாநிதி ஏழாலை மு. கந்தையா (1917 - 2002)

1. சித்தாந்தச் செழும் புதையல்கள் (1978), ஈழத்துச் சித்தாந்தச் சைவவித்தியாபீடம், யாழ்ப்பாணம்

2. சிவாலய சேவை ஏன்? எப்படி? (1986), சைவ சமய அபிவிருத்திச் சங்கம், ஏழாலை.

3.சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்.

22. புலவர் நா. சிவபாதசுந்தரனார்

1. பதியிலக்கணம் (1982), சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்.

23. திரு.செ.தனபாலசிங்கன் (1924 - 1976)

1. கந்தபுராணச் சிந்தனைகள் (1976)

இவர்களுடன் சேர். பொன். இராமநாதன் (1851 - 1930), சேர். கந்தையா வைத்தியநாதன், கலாநிதி சு. நடேசபிள்ளை (1895 - 1965), சுவாமி விபுலானந்தர் (1892 - 1947), வித்துவான் ந.சுப்பையாபிள்ளை (1900 - 1978), கலாநிதி ஆ.சதாசிவம் (1926 - 1988), சைவப் புலவர் க.சி.குலரத்தினம் (1916 - 1994), ஆவரங்கால் பண்டிதர் ச.சுப்பிரமணிம் (1924-2005) கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (1925-2008), திருமதி.சு.இராமநாதன் என்போரும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை, சிவதொண்டன் நிலையம் முதலான சமய நிறுவனங்களும் சைவ சித்தாந்தத்தை வளர்ப்பதிலே முக்கிய பங்கினை ஆற்றியுள்ளன.

**அண்மைக்கால அறிஞர்களின் பங்களிப்புக்கள்**

**01. சித்தன்கேணி சி. முத்தையா**

சைவ வேதாந்த, சித்தாந்த ஆராய்ச்சி (1969), உறுநாவளை, சித்தன்கேணி.

**02. வித்துவான் பொன். அ. கனகசபை**

திருவுந்தியார் சிவப்பிரகாசர் உரை விளக்கம் (1970), கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு, விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

**03. திரு.ச.தியாகராசா**

1. சித்தாந்த சைவநெறித் திறவுகோல் (1971), அருளொளி அச்சகம், கொழும்பு.
2. சமயங்களின் தாயனைய சிவநெறி (1966), சிவதொண்டன், யாழ்ப்பாணம்.

**04. திரு. மு. இளையதம்பி**

முப்பொருள் உண்மை விளக்கம் (1978), சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்

**05. திரு. இளையதம்பி சுப்பிரமணியம்**

வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் (1987), (தொகுப்பாசிரியர்) 107, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**06. திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம்**

சைவ சித்தாந்தமும் விஞ்ஞான உலகமும் (1990), சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

**07. சைவப்புலவர் கா. அருணாசல ஆசிரியர்**

சைவ சமய சிந்தாமணி (1993) இரண்டாம் பதிப்பு, இந்து இளைஞர் மன்றம், மட்டக்களப்பு

**08. திருமதி. கலாதேவி பொன்னம்பலம் அவர்களின் மாணவர்கள்**

மெய்கண்ட சாத்திரம் வினாவிடைத் தொகுப்பும் சிவஞானபோதமும் (1999), ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

**09. கலாநிதி திருமதி. கலைவாணி இராமநாதன்**

வேத பாரம்பரியமும் சைவ சித்தாந்தமும் (1992) ஸ்ரீரெங்கா பிரிண்டர்ஸ், மதுரை.

**10. சட்டத்தரணி திரு.R.நமசிவாயம்**

Vedantham VS Saivasiddhantham (2002), Kumaran Book House, Colombo.

**11.பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம்**

1. நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும் (2007), தமிழ்த்துறை பேராதனைப்

பல்கலைக்கழகம்.

2. நாவலர் மரபு (2008), ரெக்னோ, அச்சகம், கொழும்பு - 06.

**12. திருமதி. ஏ. என். கிருஷ்ணவேணி**

சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம். சேமமடு பொத்தகசாலை, கொழும்பு (2008)

**13. கலாநிதி மா. வேதநாதன்**

சந்தானாச்சாரியார் சரிதையும் சைவசித்தாந்த சாத்திரங்களும், சைவசித்தாந்த ஆய்வு நிறுவகம். ஏழாலை. (2008)

**சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் (1878-1953) அவர்களின் சைவ சித்தாந்தப் பங்களிப்பு சிறப்பு நோக்கு**

சைவ சித்தாந்தம் ஈழத்திலே இன்றளவும் சிறப்புப் பெறுவதற்குப் பங்களிப்புச் செய்தோரில் ஆறுமுக நாவலருக்குப் பின்னர் முதன்மை பெறுபவர் சைவ சித்தாந்த மகோத்தாரணர் புலோலி சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் அவர்கள் எனலாம்.

தமழ் நாட்டிலே பெரியார் என்றால் (தந்தை பெரியார்) ஈ.வே.இராமசாமி (1879 - 1973) அவர்களைக் குறிப்பது போல, இலங்கையில் பெரியார் என்றால் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரையே குறித்து நிற்கும். செயற்கரியன செய்தவர்கள் பெரியார் என்பர். நமது பெரியார் இவற்றோடு சைவ சித்தாந்த வளர்ச்சிக்காக 'செய்யத்தக்கவற்றை' இறுதிக் காலம் வரை செய்து கொண்டிருந்தவர். சைவ சித்தாந்தத்தின் தோற்றத்திற்கு உடனடிக் காரணராக விளங்கியவர் மாணிக்க வாசக சுவாமிகள் என்று அண்மைக்கால ஆய்வாளர் கருதுவர். திருவாசகத்திலே மிகுந்த பற்றுடைய சைவப் பெரியார் ஐந்தாம் குரவராகிய ஆறுமுக நாவலர் அவர்களைத் தொடர்ந்து சைவ சித்தாந்தத்தை முன்னெடுத்துச் சென்ற "ஈழத்தின் இரண்டாங்குரவர்" என்ற சிறப்புக் குரியவர்.

"சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயம்" என்று நமது சமயத்திற்கு நல்லதொரு வரையறையைத் தந்தவர் நாவலர் பெருமான். அத்துடன் "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்று சமயத்தையும் தத்துவத்தையும் நாவலர் இணைத்துக் காட்டுவதனையும் காண்கின்றோம். நாவலர் வழியில் தாமும் வாழ்ந்ததுடன் பேசியும் எழுதியும் எம்மவரை சமய தத்துவ நெறியில் சிறப்பாக வழி நடத்திச் சென்ற பெருமை பெரியாருக்குரியது.

**பெரியாரின் பின்புலம்**

பெரியாரின் சைவ சித்தாந்தப் பணிக்குப் பாரம்பரியமானதும் பலமானதுமான ஒரு கல்விப் பின்புலம் இருக்கிறது. "கல்லாமற் பாதி குலவித்தை" என்பது பழமொழி "எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தான் மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும். மொழித்திறத்தின் முட்டறுத்த நல்லோன் முதல் நூல் பொருள் உணர்ந்து கட்டறுத்து வீடு பெறும்" என்கிறது திருக்குறள். பரிமேலழகர் உரை மேற்கோள். இந்தத் தத்துவத்தைப் பெரியாரின் வரலாற்றிலே நாம் காணலாம். பெரியாரின் தந்தையாரான சுப்பிரமணியம் அவர்களின் சகோதரர்களிலே ஒருவரான வ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை, உடுப்பிட்டி அ.சிவசம்புப்

புலவர் ஆகியோரிடம் கற்றவர். தமிழ், ஆங்கில மொழிப் புலமையாளர், நன்னூற் காண்டிகை உரைக்கு விளக்கம் எழுதியவர். இன்னொரு சகோதரர் வ. கணபதிப்பிள்ளை அவர்கள் காஞ்சிபுரம் பச்சையப்பன் வித்தியாசாலை திருவனந்தபுரத்து மகாராஜா கல்லூரி என்பனவற்றிலே தமிழ், சமஸ்கிருத பண்டிதராயிருந்தவர். இரகுவம்சம், விஸ்வகுணாதர்சம் என்பவற்றை மணிப்பிரவாள நடையில் மொழிபெயர்த்தவராம். சகோதரி பார்வதியம்மை தமிழ், வடமொழியில் வல்லவர். பாலாம்பிகை, பத்மாசனி என்னும் இருவரையும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராக்கியவர். இத்தகைய தகைமைகளை உடையோரிடம் பெற்ற தமிழ், சமஸ்கிருத, ஆங்கிலக் கல்வியறிவும் அவர்களின் முன்மாதிரியான நல்வாழ்வும் பெரியாரின் உயர்வுக்கும் பணிகளுக்கும் உதவியிருக்கின்றன. இவர் சென்னைப் பல்கலைக்கழக B.A பட்டதாரி. கணிதம், தர்க்க சாஸ்திரம், உளவியல் முதலான துறைகளிலும் தேர்ந்தவர்.

### பெரியாரின் சைவ சித்தாந்தப் பணிகள்

பெரியாரின் சைவ சித்தாந்தப் பணிகளை வசதி கருதி முக்கியமாக மூன்று பிரிவுகளுக்குள் அடக்கி நோக்கலாம்.

1. கற்பித்தற் பணி
2. நூலாக்கப் பணி
3. பிரசங்கப் பணி

### கற்பித்தற் பணி

சைவப் பெரியார் கற்பித்தற் பணியிலே ஈடுபட்டிருந்த காலத்திலேதான் அவரது சைவ சித்தாந்தப் புலமை செழுமைப்பட்டதாகத் தெரிகிறது. யாழ் பரமேஸ்வராக் கல்லூரியிலே ஆசிரியராகவும் உப அதிபராகவும் விக்ரோறியாக் கல்லூரியிலே முதலில் உப அதிபராகவும் நீண்டகாலம் அதிபராகவும் பணியாற்றியவர். அக்காலத்திலே மாணவர் தூய சைவ வாழ்வு வாழ்வதற்கான முறையில் இவரது கற்பித்தல் அமைந்தது. மதம் என்பது கல்வி, செல்வம் என்பவற்றினால் ஒருவனிடம் இயல்பாக எழக்கூடிய மமதையை இல்லாமற் செய்து மேநிலை அடையச் செய்வதற்கான வாழ்கைக்கு வழிகாட்டுதாக இருக்க வேண்டும் என்பது பெரியாரின் கருத்தாக இருந்திருக்க வேண்டும். "குழப்படி காரங்கள்" என்று பாடசாலைகளில் இருந்து இடைவிலக்கப்பட்டவர்கள், வீட்டிலிருந்து துரத்தப்பட்டவர்கள் என்போரும் பெரியாரின் நன்மாணவராகி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமது சமூகத்திற்கு நற் பணியாற்றி வந்துள்ளமைக்கு பல எடுத்துக் காட்டுகள் உண்டு. யாழ் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இருந்த திரு.ந.சபாரத்தினம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அதிபராக இருந்த திரு.க.கிருஷ்ணபிள்ளை, வழக்கறிஞராகவும் இந்து சாதனை பத்திரிகையின் (Hindu Organ) ஆசிரியராகவும் இருந்த நம சிவப்பிரகாசம் (1906 - 1995) அவர்கள், வித்துவான் க.கி.நடராஜன் அவர்கள், சைவ சித்தாந்தம் என்னும் அரிய நூலைத்தந்த பேரறிஞர் பொ.சங்கரப்பிள்ளை, சைவப்புலவர் க.சி.குலரத்தினம், சுழிபுரத்திலே பதிவாளராக இருந்த திரு. அ.சின்னையா போன்றோர் பெரியாரின் குறிப்பிடத்தக்க மாணவர்கள். இவர்கள் அனைவரினதும் நடத்தைகளிலே பெரியாரின் செல்வாக்கு இருந்தது. மாணவர்கள் வகுப்பறைக்கு வரும்பொழுது திருநீறு அணிந்து

கொண்டே வரவேண்டும் என்பது பெரியாரின் கட்டளையாக இருந்தது. வீபூதி தரிக்க மறந்து பெரியாரை தூரத்தே கண்டதும் கரும்பலகையினைக் கையால் அழித்து அதனை வீபூதியாகப் பூசிக் கொண்ட மாணவர் ஒருவர் பிற்காலத்தில் பெரும் சமயப்பணி ஆற்றியுள்ளார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" - கடவுள் வாழத்து - குறள் 02

என்ற வள்ளுவரின் திருக்குறளுக்கும் பெரியாரது கல்வியின் நோக்கிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. "தமிழ் படிப்பது வேறெதற்கு? சமயம் படிப்பதற்குத் தானே?" என்று வினவி இலக்கியப் பணியாற்றிக் கொண்டிருந்த பண்டிதமணியை சமயத்தின்பால் திசை திருப்பிய பெருமை பெரியாரையே சாரும். பெரியார், அவருடைய **சைவ போதம்** முதற் புத்தக முதற் பதிப்பின் (1915) முகவுரையில் கூறிய

"சமயத்தின் நோக்கம் ஆன்மா கடவுளைப் பற்றுதலாம். இதற்கு இன்றியமையாத சாதனம் ஆன்மா கடவுளிற் பற்று வைத்தல். நாம் நல்லவரொருவரைப் பலமுறையும் கண்டு பேசிக் கூடித் திரிதலால் அவரிலே நமக்கு பற்று வளர்தல் போல, கடவுளைக் காலையிலும் மாலையிலும் வேறு நேரங்களிலும் அன்போடு தியானிப்பதாலும் கோயில் வழிபாட்டினாலும் திருத்தொண்டுகள் செய்வதனாலும் கடவுளிலேயுள்ள பற்றை வளர்த்துக் கொள்ளுதல் சாலும். சிறு வயதிலே பழகிய பழக்கம் நிலைக்கத்தக்கதாதலால் இந்தப் பழக்கங்களைச் சிறுவருக்குப் பழக்குவது ஐங்குரவருக்குமுள்ள கடனாகும்" என்னும் கூற்றில் மாணவர்களை சைவ சித்தாந்த வாழ்வின்பால் நெறிப்படுத்தும் அரிய கருத்துக்கள் உள்ளன.

### பெரியாரின் கற்பித்தல் முறைமையும் சிறப்பும்

சைவ சித்தாந்தம் சந்தான பரம்பரை மூலம் வெளிப்படுத்தப்பட்டு வந்தது. ஈழத்திலும் நீண்டதொரு சந்தான பரம்பரை வளர்ந்து வந்திருக்கிறது. இது குரு - சீடக் கல்வி முறையானது. இக்கல்வி முறை மூலம் பெரிய பல உச்ச விளைவுகளை நமக்குப் பெற்றுத் தந்திருக்கிறார். இவரது கற்பித்தல் பற்றி இவரது மாணவர் கூறுவதைப் பார்ப்போம்.

"பெரியார் அதிகப் பிரசங்கம் செய்யார். அமைதியான சத்தமற்ற சூழ்நிலை வகுப்பில் நிலவும். ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசுவார். சுருங்கச் சொல்லி விளங்கவைப்பார். முதலிற் பாடத்தின் அடிப்படை மூலங்களையும் கொள்கைகளையும் தெளிவாகக் கூறுவார். பின்பு அவற்றின் சிக்கல்களையும் உட்கிடைகளையும் நுட்பமாகச் சுட்டிக் காட்டுவார். பின்பு மாணவர்கள் தான் கூறியவற்றை விளங்கிக் கொண்டனரா என்பதைப் பரிசோதிப்பதற்குச் சில கேள்விகள் கேட்பார். பின்பு தெளிவாகச் சிந்தித்துத் தர்க்க ரீதியான முடிவுகள் காண்பார். பாடத்திலே கவர்ச்சியூட்டி அவர்களுடைய ஆர்வத்தை எழுப்பி அவர்களைச் சிந்திக்கச் செய்வார். படிப்பதும் ஓர் இன்பகரமான விளையாட்டாக இருக்கும். இவர் படிப்பிக்கும் போது பரம்பரைக் குரு - சீட கல்வி முறை போல இருக்கும். (சு. சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா மலர் 1978 பக் 11) நமது ஆசிரியர்கள் இத்தகைய பாரம்பரியக் கற்பித்தல் முறைகளையும் கவனத்திற் கொள்வது நன்று.

சைவப் பெரியாரது தலைசிறந்த கற்பித்தல் முறைமைகளினால் விசுவாசம் மிக்க மாணவர் பலர் இவருடன் நின்றனர். சித்தாந்தச் செம்மலாகிய பெரியார். சைவாலயங்களில் நடைபெற்று வந்த பலியிடலைத் தீவிரமாக எதிர்த்தவர். பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் மாத்திரம் நிற்கவில்லை. செயற்பாட்டு ரீதியாகவும் இயங்கி தடை செய்து காட்டியவர்.

பெரியார் விக்ரோரியா செல்வதற்கு முன்பு கல்லூரியைச் சூழுவுள்ள ஆலயங்களிலே வேள்வி (பலியிடல்) நடைபெறுங் காலங்களில் மாணவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காகப் பாடசாலை செல்வதில்லையாம். பெரியார் அங்கு சென்ற பின்பு தமது மாணவர்களின் உதவியுடன் பெரிய கலகம் ஒன்றை நடாத்தி அக்காலத்தில் அதிபராக இருந்த பிறிமன் (ர். R. freeman) என்பவர் மூலம் முதலில் வழக்கம்பழை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பலியிடலை நிறுத்தியிருந்தார்.

காளுவன் வைரவர் கோவிலில் நடைபெற்று வந்த பலியிடலைப் பெரியாரால் நிறுத்த முடியவில்லை. பெரியார் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவருடைய பிரியாவிடை வைபவத்திற்கு அழைக்கச் சென்றவர்களிடம் "காளுவன் வைரவர் கோவிலில் நடைபெறும் பலியிடலை முதலில் நிறுத்தச் செய்யுங்கள். அதன் பின்பு வருகிறேன்" என்று கூறி மறுத்து விட்டாராம். மாலை, புகழுரைகளில் பெரியார் மயங்காது சைவ சித்தாந்தத்தை வளர்க்கும் இலட்சியத்துக்காகப் போராடிய கர்மவீரர் இவர்.

சைவ சமயத்திலே கண்ணகிக்கு இடமில்லை என்பதனை நடைமுறையிலே சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை. கண்ணகி வழிபாடு சிவபரத்துவக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது. மானிடப் பெண்ணாகத் தோன்றி மறைந்த கண்ணகிக்குச் சிவதெய்வம் பரிவார தெய்வமாக இருக்க முடியாது. "செட்டிச்சியும் புறச் சமயத்தவரும்" என்று நாவலர் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள பல கண்ணகி அம்மன் ஆலயங்கள் சிவசக்தி ஆலயங்களாக மாற்றப்பட்ட போதும் அதன் செல்வாக்கை இல்லாமற் செய்துவிட முடியவில்லை. கண்ணகி வழிபாட்டில் பெரியார் காட்டிய வெறுப்பை அவர் மாணவர்களும் காட்டி வந்திருக்கிறார்கள். கண்ணகி கோவிலைக் கண்டால் பெரியார் எப்படி நடந்து காட்டினாரோ அப்படித்தான் தாங்களும் நடப்பதாக அதிபர் க. கிருஷ்ணபிள்ளை கூறுகின்றார்.

**நூலாக்கப் பணி**

பெரியாரின் சமய, சைவ சித்தாந்தப் புலமையை அவரால் எழுதப்பட்ட நூல்கள் மூலம் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. இவ்வகையில்,

◆ சைவபோதம் முதற் புத்தகம். சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம். (1915)

◆ சைவபோதம் இரண்டாம் புத்தகம் (1983) 15 ஆம் பதிப்பு

◆ திருவருட்பயன் விளக்க உரை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 2001 மீள் பதிப்பு

◆ சைவக் கிரியை விளக்கம், தையல் நாயகி அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம். (1928)

◆ திருவாசகமணிகள், கொழும்பு விவேகானந்த சபை, விஜயவருடம்.

- கந்தபுராண விளக்கம், இலங்காபிமானி அச்சியந்திரசாலை, சாவகச்சேரி, 1952, 5ஆம் பதிப்பு.
- சைவ சமய சாரம், ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
- ஏரம்பமூர்த்தி, வை. (மொழிபெயர்ப்பு) சு. சிவபாதசுந்தரனார் எழுதிய ஆறுமுகநாவலர், திருவள்ளுவர் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம் 1992
- Sivagnanabodham With a rejoinder to a charistian critic
- An out line of Sivagnanabodham
- The saiva school of Hinduism, 1934
- Arumukha Navalar, Kandavanam, 1950
- Glories of shaivaism,s saiva prakasa press, 1954

என்பன சைவசமயம், சைவ சித்தாந்தம் என்பவற்றின் தெளிவுகளாகும். மேற்படி நூல்களைப் படித்துப் பார்க்கையில் பெரியாருக்கிணையாக 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டுகளில் சைவ சித்தாந்தம் தொடர்பாக விரிவாகவும் அழகாகவும் எடுத்துக் கூறியவர், கூறக் கூடியவர் எவருமில்லை என்று கூறத் தோன்றுகிறது.

சைவ சித்தாந்த முதல் நூலாகிய சிவஞானபோதத்தினுடைய வரலாற்றைத் தெளிவாக எடுத்துக் கூறும் ஆற்றல் பெரியாரிடம் தான் இருந்தது. இவர் எழுதுகிறார். "சிவாகமங்களுள் ஒன்றாகிய இரௌரவ ஆகமத்தின் எங - வது (73வது) பாச விமோசனப் படலத்தில் கஉ - வது (12வது) அத்தியாயமாகிய சிவஞானபோதமானது பன்னிரு சூத்திரங்களிற் சித்தாந்த சைவ உண்மைகளனைத்தையும் அடக்கியது. முதனூலைத் தமிழ் மக்கட் கூட்டுமாறு மெய்கண்டதேவ நாயனார் இதனை மொழி பெயர்த்து விளக்கிச் சிவஞான போதமென்னும் தமிழ் நூலை இயற்றியருளினார்."((முன்னுரை, சிவஞான சித்தியார் - சுபக்கம், மு. திருவிளங்கம் உரை, (1925) "ஆகமாந்தம் சைவ சித்தாந்தம்" என்பர். சிவாகமங்களிலே பெரியார் புலமை பெற்றமையால் சைவ சித்தாந்தத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

**சைவபோதம் முதலாம் இரண்டாம் மூன்றாம் புத்தகங்கள்**

பெரியாரின் சைவபோதம் முதலாம், இரண்டாம், புத்தகங்கள் சைவ சமயத்தினதும் சைவ சித்தாந்தத்தினதும் அடிப்படைகளைப் பல மேற்கோள்களுடன் இலகுவான வசன நடையில் கூறுவன. சைவபோதம் முதற் புத்தகத்திற்கு பாயிரம் வழங்கிய சேர். பொன். இராமநாதன் அவர்கள் இதனைத் தக்க எடுத்துக் காட்டுக்களுடன் கூறியிருக்கிறார். சைவ சித்தாந்த அடிப்படை எண்ணக்கருவை இராமநாதனுக்குப் பெரியார் தெளிவுபடுத்திய பின்புதான் அவரிடமிருந்து இப்பாயிரத்தைப் பெற்ற உண்மை பலரறியாதது. இந்த நூலிலே வரும் உள்ளடக்கங்களான சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை, சிவபெருமான் மண் சுமந்தமை, சிவபெருமான் விறகு விற்றமை, கிரிசாம்பாள், துளசித்தாமர், இரந்திதேவர், அரசன் வண்ணானைக் கும்பிட்டமை, ஒரு வேளாளன் சீராளச் செட்டி என்பவற்றை இராமநாதன் அவர்கள் ஒரு தடவை படித்துவிட்டு, பெரியாரிடம் "பிள்ளைகளுக்குக் கொம்யூனிசம் போதிக்கப்படுகிறது மாதிரி உள்ளடக்கங்கள் உள்ளன" என்று கூற, அதற்குப் பெரியார் கூறிய பதிலை நோக்க வேண்டும். "நீங்கள் சொல்லும்

கொம்யூனிசம் மனிதனைப் பற்றித்தான் பேசுகின்றது. சைவ சித்தாந்தம் மனிதனை மட்டுமல்ல சகல பொருட்களையும் பற்றிப் பேசுகின்றது'' என்றார். சிவபெருமான் ஞானசம்பந்தருக்கு மட்டும் பாலைக் கொடுக்கவில்லை. பன்றிக் குட்டிகளுக்கும் கொடுத்தவர்தான். (ஏனக்குருளினைக் கருளினை போற்றி - திருவாசகம்) சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாச்சாரியாரை மெய்கண்ட தேவர் ஆட்கொண்டார். சேர். பொன். இராமநாதன் Kt. Kc. அவர்களை சு. சிவபாதசுந்தரனார் B.A ஆட்கொண்டார். முப்பொருளின் சாரத்தை இலகுவாக உபதேசித்தவர் நமது பெரியார்.

**திருவருட்பயன் விளக்கவுரை**

இது சைவபோதம் மூன்றாம் புத்தகம் எனப்படும். பெரியார் விக்ரோரியாக் கல்லூரியிலே அதிபராக இருந்த காலத்திலே இந்த நூல் எழுதப்பட்டதாக க.சி.குலரத்தினம் கூறுகின்றார். கலாயுத்தி வருடம் ஆனி மாதம் என்று பெரியுார் தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். திருவாசகம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், வாயுசங்கிதை, சர்வஞ்ஞானோத்திரம், பௌஷ்கரம், வாதுளம், சுப்ரபேதம் என்பனவற்றிலிருந்து மேற்கோள்கள் அடிக்குறிப்பு விளக்கங்களாக தரப்பட்டுள்ளமை சிறப்பம்சம். “இதிலுள்ள பதவுரை நிரம்பவழகிய தேசிகரது பொழிப்புரையைத் தழுவியும் விசேஷவுரை சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றின் பேருரைகளையும் துணையாகக் கொண்டு எழுதப்பட்டன'' (திருவருட்பயன் விளக்கவுரை-முகவுரை) என்று பெரியாரும் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் பயன்பாடுகளிலே முக்கியமானதொன்று இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. இன்றுவரை பெரியாரின் திருவருட்பயன் உரையை அடிப்படையாகக் கொண்ட உரைகளே இலங்கைப் பாடசாலைகளுக்கான சைவசமயப் பாடநூல்களில் எழுதப்பட்டு வருகின்றமையே அது.

திருவருட்பயன்மீது பெரியார் கவனஞ் செலுத்தியதற்குக் காரணம் உண்டு. வடமொழி மரபிலே உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை, மூன்றையும் “பிரஸ்தானத் திரயம்” என்பர். பண்டிதமணியின் படி சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் நான்கும் பிரஸ்தான சதுட்டயம். (மேநிலை அடையச் செய்யும் நான்கு நூல்கள்) இவற்றிலே திருவருட்பயன் சைவசித்தாந்தத்தின் திறவு கோல் எனும் தகுதி கொண்டது. “முதலில் திருவருட்பயன் படிக்கத் தொடங்கலாம்” என்று பண்டிதமணிக்கு வழிகாட்டிய பின்புதான் பண்டிதமணி சைவசித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டு கற்றதாக அறிகிறோம்.

பெரியாரின் திருவருட்பயன் உரை 1953 ஆம் ஆண்டு 7 ஆம் பதிப்பாக வெளிவந்துள்ளது. 1994 ஆம் ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர். நா. பாஸ்கரன் அவர்களும் திருவருட்பயனுக்கு ஓர் உரை எழுதியிருக்கிறார். அதன் முன்னுரையில் டாக்டர் பாஸ்கரன் அவர்கள் “சென்னை பல்கலைக் கழகச் சித்தாந்தத் துறையின் வெளியீட்டு வரிசையில் இந்நூல் வெளிவருகின்றது. சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. இந்தச் சாத்திரங்கள் பதினான்கையும் கற்றோரும் மற்றோரும் எளிதில்

புரிந்து கொள்ளும் வகையில் சந்தி பிரித்து முதல் வெளியீடாக 1988 ஆம் ஆண்டு இத்துறை வெளியிட்டுள்ளது. அதனையடுத்து சைவசித்தாந்தக் கொள்கையைப் புரிந்து கொள்ள முதற்கண் கற்றுணரப் பெறுவதாக அமைந்துள்ள உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயனுக்கு எளிய புத்துரை ஒன்றை எழுதி தற்போது வெளியிடுகின்றது.'' என்று எழுதியுள்ளார். டாக்டர்.பாஸ்கரன் அவர்கள் பெரியாரின் திருவருட்பயன் உரையினையும் படித்தால் மேலும் தெளிவைப் பெறக் கூடியதாக இருக்கும்.

பெரியார் சமயபாடத்தைக் கலைத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று 1943 ஆம் ஆண்டுக்கு முதல் வலியுறுத்தி வந்ததுடன் சைவசமயப் பாடத்திற்கு ஏற்ற பாடத் திட்டங்களையும் தயாரித்துக் கொடுத்தார். 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் தனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் சமய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1963 ஆம் ஆண்டு முதல் சைவப் புலவர்களான வீ.எஸ்.சுந்தரசிங்கம், க.சி.குலரத்தினம், வித்துவான்களான க.சொக்கலிங்கம், க.வேந்தனார், பண்டிதர்களான க.வீரகத்தி, பஞ்சாட்சரசர்மா, திரு.சோமசுந்தம் போன்ற தனியாராலும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை, போன்ற சமய நிறுவனங்களாலும் வெளியிடப்பட்ட சைவசமய பாடம், இந்து சமயப் பாடத் திரட்டு, சைவபோதினி, சைவநெறி, சைவசமயம், போன்ற நூல்களிலே பெரியாரின் சைவ சித்தாந்தம் தொடர்பான நூல்களின் குறிப்பாக முதலாம், இரண்டாம், சைவபோதம், திருவருட்பயன் விளக்க உரை, சைவக்கிரியை விளக்கம் என்பவற்றின் செல்வாக்கைக் காணலாம்.

**திருவாசக மணிகள்**

சைவ சித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெறத் திருவாசகம் காரணமாக இருந்ததென்பது ஆய்வாளர் கருத்து. இலங்கையில் நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்கள் திருவாசகத்துக்குச் சிறந்ததொரு உரை எழுதியுள்ளார். சுவாமி சித்பவானந்தர் அவர்கள் உபநிடதங்களுடன் ஒப்பிட்டு திருவாசகத்துக்கு உரை எழுதியுள்ளார். திருவாசகம் மரண பயத்தை இல்லாமல் செய்யும். என்பதிலே பெரியார் நம்பிக்கை உள்ளவராக இருந்தார். மணிவாசகத்துக்கான திறவுகோல் பெரியாரின் **திருவாசக மணிகள்**. இம் மணிகளுக்கான விளக்கம் சித்தாந்த நோக்கில் எழுதப்பட்டது.

**சைவ சமய சாரம்**

திருவாசகத்துக்குத் திருவாசக மணிகள் போல சைவ சித்தாந்தத்திற்கு **சைவசமய சாரம்**. இந்நூலின் பயன்பாட்டைப் பற்றிப் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள், மு.இளையதம்பி என்பவரின் "முப்பொருள் விளக்கம்'' என்னும் நூலின் மதிப்புரையில் "புலோலி நகர் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் இயற்றிய சைவசமய சாரம் (1947) சாமானியக் கல்வி அறிவுடையோரும் அனாயாசமாகப் படித்துணரக் கூடிய வகையில் அமைந்தது. இதுவரை ஏறத்தாழ இருபதாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியிருக்கிறது. ஆயினும் அதன் பொருட்பரப்புக் குறுகியதே.'' என்று கூறியுள்ளமையும் நோக்குதற்குரியது.

**கந்தபுராண விளக்கம்**

எமது சமய மரபிலே அன்பால் நிறைந்த காவியமாகப் பெரியபுராணம் விளங்குவது போல அறிவால் நிறைந்த களஞ்சியமாகத் திகழ்வது கந்தபுராணம் "கந்தபுராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை." என்பது பழமொழி. சைவ சித்தாந்த சத்காரிய வாதத்திற்கு எடுத்துக் காட்டாக கந்த புராணத்தில் வரும் சூரபன்மன் வதையைக் கூறுவார்கள். "கந்தபுராணம் சைவசித்தாந்தப் பொக்கிஷம்" என்று கூறி கந்தபுராண விளக்கத்தைப் பெரியார் தந்திருக்கிறார்.

### ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை

பெரியாரால் ஆங்கிலத்தில் சைவசித்தாந்தம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" எனும் பொருளை உணர்த்துவதாக எழுதப்பட்டனவாகத் தெரிகின்றன. "Sivagnanabodham with a rejoinder to a christian critic" எனும் நூல் எழுதப்பட்டதற்கு ஒரு வரலாற்றுப் பின்புலம் உண்டு. இதுபற்றிப் பண்டிதர் செ. சிவப்பிரகாசம் பின்வருமாறு கூறுகின்றார். ஒரு சமயம் தமிழ் நாட்டில் கிறிஸ்தவ மாது ஒருவர் தமது பி.எச்.டி. பரீட்சைக்காக சித்தாந்தத்தைப் பற்றி ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதினார். அவர் அந்தக் கட்டுரையில் சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் குறைத்து மதிப்பிட்டுக் கிறிஸ்தவக் கருத்துக்களை உயர்த்தியும் எழுதினார். சிவபாத சுந்தரனார் அமச்சமயம் தமிழ் நாட்டில் இருந்ததனால் உடனே 48 பக்கங்களுக்குச் சிவஞான போதத்தில் அமைந்துள்ள கருத்துக்களை எடுத்துக் காட்டி அருமையான நூலொன்றை எழுதினார். (புலோலியூர் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா மலர், பக் 35 - 36)

பெரியாரின் Saiva school of Hinduism (இந்து மதத்தில் சைவ சித்தாந்தம்) என்ற நூல் காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் பாட நூலாக இருப்பதாக அறிகிறோம். இந்நூல் சிவஞானபோதத்தையும் சிவஞான சித்தியாரையும் அடிப்படையாகக் கொண்டது.

### பிரசங்கப் பணி

சைவப் பெரியார் தலைசிறந்த ஆசிரியராக இருந்தமையால் சிறந்த பிரசங்க வல்லுநராகவும் திகழ்ந்தார். வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிகழ்த்திய பல பிரசங்கங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் (1945) பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (1901 - 1980) தலைமையில் நிகழ்த்திய பேச்சு என்பன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தன. பல சைவ மாநாடுகளுக்கும் தலைமை வகித்துச் சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்பியுள்ளார். "கந்தபுராணத்தில் சுக்கிரனுபதேசம் பேசும்போது ஏகான்மவாதமாகிய மாயாவாதம் பற்றி வருமிடத்தில் 'கிழிகிழி' என்று கிழித்திருக்கிறார் என்று கிராமிய நடையில் கச்சியப்பர் பெருமை பேசுவது சுவை சொட்டுவதாயிருக்கும்" என்று பண்டிதமணி பெரியாரின் பிரசங்க நயத்தை எடுத்துக் கூறுவார்.

பெரியார் 1929 - 1930 ஆண்டுக் காலத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திலும் 1947 - 1952 காலப்பகுதியில் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையிலும் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றியுள்ளார். நவக்கிரகங்கள் சிவபெருமானின் ஏவலுக்கு உட்பட்டவையாதலால் தேவாரத் திருத்தலமாகிய திருக்கேதீச்சர ஆலய உட்பிரகாரத்தில்

அவற்றைப் பிரதிட்டை செய்யக் கூடாது. என்பதில் விடாப்பிடியாக நின்றார்.

பெரியாரை மீறி நவக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டமையால் பெரியார் தமது பதவியில் இருந்து விலகினார். இதன் பின்னர் கந்தவன திருக்கோவிலின் அருகில் அமைக்கப்பட்ட தவச்சாலையில் இருந்து கொண்டு சரியைத் தொண்டு புரிந்து வரும் காலத்திலேதான் டாக்டர் கு.சிவப்பிரகாசம் (பெரியாரின் சிறிய தந்தையின் புத்திரர்) அவர்களின் வேண்டுகோளின்படி ஆங்கிலத்தில் Glories of Shaivaism (சைவத்தின் மேன்மை) என்ற நூலை எழுதி முடித்தார். எழுதும் காலத்திலே நோய் வாய்ப்பட்டுப் படுக்கையாய்க் கிடந்து முத்தி பஞ்சாட்சர செபத்தைக் கேட்டவாறே முத்திப்பேற்றை அடைந்தார்.

சைவப் பெரியாரின் சைவ சமய - சைவ சித்தாந்தப் பணிகளின் மேன்மையினைப் பண்டிதமணி அவர்களின் வார்த்தையில் கூறுவதாயின் "பெரியார் அவர்களின் வாழ்க்கை சமய வாழ்க்கை, அவர்களின் ஒவ்வொரு மூச்சும் சைவ சித்தாந்த மூச்சு.

முன் மொழிவுகள்

இக்கட்டுரையின் நிறைவாகப் பின்வரும் முன்மொழிவுகளைக் கூறலாம்.

- சைவசமயத்தின் முடிந்த முடிபாகிய சைவ சித்தாந்தத்தை தமிழகத்திலே வளர்ப்பதற்கு முக்கியமாக சென்னை சைவ சித்தாந்த சமாஜம் உள்ளது போன்று இலங்கையிலும் பலம் மிக்கதும் செயற்பாடுடையதுமான சைவசித்தாந்தக் கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.
- இலங்கையில் ஆண்டுதோறும் சைவ சித்தாந்த மாநாடு நடாத்துதல்.
- தமழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் உள்ளது போன்று இலங்கைப் பல்கலைக் கழகங்களிலும் சைவ சித்தாந்தத்துறை மிக விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
- சித்தாந்த பண்டிதர் வகுப்புக்களை ஒழுங்காக நடாத்தி சித்தி பெற்றோருக்கு உரிய கௌரவம், தொழில் என்பவற்றை வழங்கல்.
- இலங்கையில் எங்கெங்கு சைவத் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சைவ சித்தாந்தத் தொண்டர்கள் சென்று சைவ சமயப் பணிகளை ஆற்ற வேண்டும்.
- சைவப் பெரியார் முதலானோரது அருமையான சைவ சித்தாந்த நூல்களை பதிப்புச் செய்து குறைந்த விலையில் விநியோகம் செய்தல்..
- திங்கள் தோறும் "சைவ சித்தாந்தம்" என்னும் பத்திரிகை ஒன்றை வெளியிடல்.
- ஒன்பது வயதுக்கு மேற்பட்ட எல்லாத் தமிழ்ச் சைவர்களும் குறைந்தது சமய தீட்சையையாவது பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

இவை போன்ற பணிகள் மூலமாக பெரியார் முதலானோர் கண்ட கனவை நனவாக்க முடியும்.

உ

# பிள்ளையாருக்கு முன் தோப்புக்கரணம் போடுவது ஏன்

திரு.கு.நவரத்தினராஜா

எல்லாவற்றிற்கும் மூலமாக இருப்பது ஓங்காரம். விநாயகர் ஓங்கார வடிவமானவர். ஓங்காரத்திலிருந்து அகில உலகமும் தோன்றி அதிலேயே ஒடுங்குகின்றன. ஆகவே உள்ளே நுழைகின்ற போது பிரணவப் பொருளான பிள்ளையாரை வணங்கிவிட்டுப் போவது சம்பிரதாயம். அதாவது முதன் முதலில் பிரணவத்தை வணங்க வேண்டும்.

விநாயகரை எப்படி வணங்கவேண்டும் என்றால், முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் சிரசிலே மூன்று முறை குட்டி வலக் காதை இடக் கையாலும் இடக் காதை வலக் கையாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து வணங்க வேண்டும். அன்றி குற்றம் செய்த ஒருவன் தனக்குத்தானே தண்டனையை விதித்துக் கொள்வது போல இறைவன் அருகில் செல்லத் தகுதி இல்லாத படி குற்றங்கள் நிறைந்த மக்கள் தம் குற்றத்திற்குத் தாமே தண்டனைகளை அனுபவிக்க மேற் கூறியவாறு தோப்புக் கரணம் போட்டு இனி எவ்விதப் பிழைகளையும் புரிய மாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்வதாகவும் கருதலாம்.

இதை விளக்க இரண்டு கதைகள் உண்டு. "கஜமுகன்" என்னும் அசுரன் தவம் செய்து சிவபெருமானிடம் மிகப் பல வரங்களைப் பெற்றான். அதனால் இந்திரன், பிரமன் மற்றுமுள்ள தேவர்களையெல்லாம் படாதபாடுபடுத்திக் கொண்டிருந்தான். காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் இந்தத் தேவர்கள் தம்முன் வந்து தோப்புக் கரணம் போடவேண்டும் என்று ஆணையிட்டிருந்தான்.

இந்தத் தொல்லை பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் ஆனைமுக அசுரனை அடக்கித் தேவர்களுக்குத் தன்னருள் புரியும்படி பிள்ளையாருக்குக் கட்டளையிட்டார். பிள்ளையாரும் அந்த அசுரனைக் கொல்லத் தம் பூத கணங்களுடன் போருக்குப் புறப்பட்டார். போர் கடுமையாக நடைபெற்றது. கஜமுகன் சாகாவரம் பெற்றதனால் அவனை எளிதில் கொல்ல முடியவில்லை. பார்த்தார் பிள்ளையார். தன்னுடைய வலக் கொம்பை ஒடித்தார். சில மந்திரங்களை உச்சரித்து அவன் மீது ஏவினார். அக்கொம்பு அவனுடைய மார்பைப் பிளந்தது. ஆயினும் அவன் சாகவில்லை. பெருச்சாளியின் வடிவெடுத்து வந்து மீண்டும் எதிர்த்தான்.

இனி இவனைக் கொல்ல முடியாது, மெய்யறிவு புகட்டிக் கருணை புரிவோம் என எண்ணி விநாயகர் அவனுக்கு அருள் புரிந்தார். அவனும் அறிவு திருந்தப் பெற்றான். "ஐயனே யான் உனக்கு அடிமை" என அடி பணிந்தான். பெருச்சாளி வடிவில் இருந்த அவன் அகந்தை அடங்கியமையால் அவனைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டார் பிள்ளையார்.

தேவர்கள் மகிழ்ந்தனர். பிள்ளையாரை வணங்கி அருள் செய்ய வேண்டினர். தாங்கள் அசுரனுக்குத் தோப்புக்கரணம் இட்டதுபோல் 1008 முறை இடுவோம் என்றனர். பிள்ளையார் அதற்கு அவ்வளவு தோப்புக்கரணம் போடவேண்டியதில்லை. "மூன்று முறை போட்டால் போதும்" என்று கூறினார். அதிலிருந்து தோப்புக்கரணம் போடும் வழக்கம் ஏற்பட்டது.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக் கரணம் போடுகிறோமே அதை நமக்குச் சொல்லிக் கொடுத்தவர் மகாவிஷ்ணுதான் என்று ஒரு கதை இருக்கிறது. ஒரு சமயம் மகாவிஷ்ணுவின் சக்கரத்தை அவரது மருமகனான பிள்ளையார் விளையாட்டாகப் பிடுங்கி வாயில் போட்டுக் கொண்டுவிட்டாராம். பிள்ளையாரிடம் இருந்து திரும்பப் பிடுங்குவது முடியாது. அவர் மிகுந்த பலமுடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால் அவரைச் சிரிக்க வைத்து அந்தச் சந்தோசத்தில் சக்கரம் வாயிலிருந்து கீழே விழுந்தால் எடுத்துக் கொண்டுவிடலாம். என்று மகாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டு விட்டார். "தோர்பி கரணம்" என்பதே தோப்புக் கரணம் என்று மாறியது. 'தோர்பி' என்றால் கைகளினால் என்று பொருள். 'கரணம் என்றால் காது. 'தோர்பி கரணம்' என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஒரு முதுமொழி. இங்கே கோயில் என்பது பெரும்பாலும் பிள்ளையார் கோயிலையே குறிக்கும். ஏனெனில் மற்றெந்தக் கோயில் இல்லாவிடினும் பிள்ளையார் கோயில் இல்லாத ஊரோ சிற்றூரோ காணமுடியாது. அந்த அளவுக்குப் பிள்ளையார் நம் நாட்டில் கண்கண்ட கடவுளாக வீடுகள், ஆற்றங்கரை, குளத்தங்கரை, தெருக்கள், மரத்தடிகள் ஆகிய எல்லா இடங்களிலும் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார்.

இப்படி அங்கிங்கு எனாதபடி வியாபகமாக நிற்கும் பிள்ளையாரை எல்லோரும் வழிபடுகிறோமே அன்றி ஏன் வழிபடுகிறோம். பிள்ளையார் யார்? அவர் தோற்றம் என்ன? பிள்ளையார் சுழி ஏன் போடுகின்றோம்? தோப்புக் கரணம் எப்படித் தோன்றியது? என்ற விபரங்களை நம்மிற் பலர் அறிவதில்லை.

விக்னேஸ்வரனுடைய அனுக்கிரகம் இருந்தால்தான் உலகத்தில் எந்தக் காரியமும் தடையின்றி நடக்கும். தடைகளை நீக்கிப் பூரண அநுக்கிரகம் செய்கின்ற குழந்தைத் தெய்வம் பிள்ளையார். அவரைப் பிரார்த்தித்துப் பூஜை செய்து நாம் விக்கினங்கள் இல்லாத நல்வாழ்வு வாழ்வோமாக.

நன்றி: ஞானச்சுடர்
ஐப்பசி மலர் 2007

உ

# சமயம் காட்டும் சில வாழ்வியல் உண்மைகள்

**ந.பார்த்திபன்**
*ஆசிரிய கல்வியியலாளர் வ/தே. க. கல்லூரி*

சமை என்ற சொல் பக்குவம் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. சமையலறை என்றால் உணவை உண்பதற்கேற்ப பக்குவப்படுத்தும் அறை. அரிசி, மா, தூள், உப்பு, தானியம், காய்கறி என்பவற்றைச் சமைத்து அதாவது பக்குவப்படுத்தியே உண்ண முடியும். இல்லையெனில் அது உணவாகாது. இது போன்றதே பெண் "சமைஞ்சிட்டாள்" என்பதும். குடும்ப வாழ்க்கைக் கேற்ப பக்குவப்பட்டுவிட்டாள் என்பதும் அமைகிறது. உடலாலும் உள்ளத்தாலும் நல்ல பக்குவ நிலையைப் பெண் அடைவது சமைந்து விட்டாள் என்னும் அர்த்தத்தில் கூறப்படுகிறது. இந் நிலையில் சமையம் என்பதும் உலகியல் வாழ்க்கைக் கேற்ப பக்குவப்பட்ட மனிதனை உருவாக்கித் தருவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. மனிதனை மனித நேயமிக்க புனிதனாக்குவதற்கு உதவுவதே சமையத்தின் பிரதான பணியாகும். இதனால் சமையம் என்றே அழைக்கப்படுவதும் பொருந்தும் எனலாம்.

சமயக் கல்வி, சமய பாடம் உலகில் இலங்கையைத் தவிர வேறு எந்த நாடுகளிலும் பாடசாலைகளிலோ கல்வி நிலையங்களிலோ போதிக்கப்படுவதில்லை. Moral - ஒழுக்கம் - சமயம் என்ற நிலையில் ஒழுக்கம் பற்றி பாடசாலைகளில் போதிப்பது அவசியமற்றது எனக் கருதப்படுகிறது. உண்மையில் வீடுகளில் சமய வாழ்க்கை ஒழுக்க நெறி வாழ்வியல் முறையாக பேணப்பட்டு வருமாயின் பாடசாலைகள் இப்பணியை நடைமுறைப்படுத்தத் தேவையில்லை என்பது இதன் நோக்கமாகும். வீட்டிலுள்ளோர் சமய நெறிப்படி வாழ்வதோடு பிள்ளைகளையும் அதன்படி ஒழுக வழிப்படுத்த வேண்டும். அறநெறிப் பாடசாலைகளினூடு போதிக்கப்படும் விடயங்கள் யாவும் வீடுகளில் முன் மாதிரியாகப் பெற்றோர்களாலும் மூத்தோர்களாலும் வாழ்ந்து காட்டப்படுமாயின் பிள்ளைகள் அதனைப் பின்பற்றி நடப்பார்கள். இந்த முன்மாதிரி எமது நாட்டில் இல்லை.

சமயம் பற்றிய பல விடயங்கள் எம்மால் கருத்தில் கொள்ளப்படுவதோ பின்பற்றப்படுவதோ இல்லை. கற்க, அதன்படி நிற்க என்பது சமயம் தொடர்பான நிலையில் வெறும் ஏட்டளவில்தான் உள்ளது. அர்த்தங்களை விளங்கிக் கொள்ளாமல் சடங்குகளாக நடைமுறைப்படுத்துவதால்தான் இந்நிலைமை காணப்படுகின்றது. சூரனை, நரகாசூரனை, கஜமுகாசூரனை அழித்த நாள்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் நாங்கள் சூரர்களாகவே

உலா வருகின்றோம். அடுத்தவன் துன்பத்தைப் போக்குபவர்களாக இருப்பதற்குப் பதிலாக அடுத்தவனுக்குத் துன்பம் தருபவர்களாகவே உலாவுகின்றோம். கோயில்களில் நடைபெறுகின்ற உற்சவங்கள் செயற்பாடுகள் யாவும் உண்மையான அர்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல் வெறும் சடங்குகளாகப் போகின்ற துர்ப்பாக்கிய நிலைமை வருந்தத்தக்கதுடன் சகலராலும் உணரப்பட வேண்டியதும் திருத்தப்பட வேண்டியதுமாகும்.

சமயவாதிகள் ஒவ்வொரு சொல்லுக்கும் செயற்பாட்டிற்கும் பொருள் பொதிந்த நற்கருத்துக்களைச் சொல்லி வைத்தார்கள். குறிப்பாக ஓம் என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இது பிரணவ மந்திரம். இதனை எப்போதும் நாம் உச்சரித்து வருகிறோம். எம்மை அறியாமலே எதற்கும் ஓம் செய்கிறேன், ஓம் தருகிறேன், ஓம் போகிறேன் என்று எப்போதும் சொல்கிறோம். ஓம் என்பதை உச்சரிக்கிறோம். எமது வாயில் பிரணவ மந்திரம் எத்தனை முறை உச்சரிக்கப்படுகின்றது என்பதை எண்ணிப் பாருங்கள். இதே போல் மதம் என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் அது எவ்வளவு அர்த்த புஷ்டியானது. ஆடு, மாடு, மான் துள்ளினால் துள்ளி ஓடுகின்றது. என்றே சொல்கிறோம். ஆனால் யானை துள்ளினால் மதம் கொண்டுவிட்டது என்று கூறுகிறோம். யானை துள்ளி ஓடினால் அழிவுகள்தான் ஏற்படும். மதம் கொண்டுவிட்டது என்று கூறினால் அழிவு. இந்த மதம் என்ற சொல்லை நினைக்கும் போதெல்லாம் மதம் கொள்ளக் கூடாது என்பது எதிரொலிக்க வேண்டும். மதவாதியாக, மதப்போதகராக, மதநெறியாளனாக என்று சொல்லுகின்ற போதெல்லாம் மதங்கொள்ளாத பற்றுள்ளவராக அன்றி வெறியாளராக மாறிவிடாதே என்பது அர்த்தமாகின்றதல்லவா.

இந்து சமயம் இரண்டாகப் பிரிந்தது. ஒன்று சைவம் மற்றையது வைஷ்ணவம். இரண்டிலும் ஒற்றுமைகள் அதிகம். இங்கே விபூதி சந்தனம் அங்கே நாமம். இவர்கள் ஐயர் அவர்கள் ஐயங்கார். சைவத்திற்குச் சிவன் வைஷ்ணவத்திற்கு விஷ்ணு. ஒரு மனிதனின் ஆரம்பச் செயற்பாட்டில் இரண்டிற்குமுள்ள ஒற்றுமையைப் பார்ப்பின், காலை எழுந்ததும் கடவுளை நினைத்து திருநீறும் நாமமும் அணிவார்கள். திருநீறு - சுடலைப்பொடி. சுடலை ஞானம் என்று கூறுவார்கள். திருநீறைக் கையிலெடுத்து சிவசிவா என்று ஒரு கணம் பார்க்கும்போது பிறக்கின்ற ஞானம்தான் என்ன. நீயும் இறுதியில் சாம்பல்தானே. அது எப்போது என்பதுதான் தெரியாது. ஆனால் நிச்சயமானது. இப்பவோ எப்பவோ என்று தெரியாத நீறாகிப்போகும் வாழ்வில் நிதானமாக வாழ்வதற்கான உபதேசத்தைத் திருநீறு தருகின்றது. இதே போல் நாமம். இது மண்ணைத் தோண்டி எடுக்கப்படுகின்றது. வாழ்வே இது மாயம். நீ மண்ணாவது திண்ணம் என்ற உண்மையை நாமம் மண்ணுக்குள்ளிருந்து வருவது எமக்குப் புகட்டுகிறது. இப்பவோ எப்பவோ மண்ணுக்குப் போகின்ற இந்த உடலை அதுவரையான உயிர் வாழ்வை எப்படி வாழப்போகிறோம்

என்று கேட்கிறதல்லவா.

உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது. மலையளவு சுவாமிக்குத் தினையளவு புஷ்பம். மனமது சுத்தமானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம். "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டி பூசனை ஈசனார்க்குப் போற்றுவிக் காட்டுவோமே....." என்றெல்லாம் எவ்வளவோ சிறந்த கருத்துக்கள் தத்துவங்கள் வாழ்க்கை நெறிகள் அர்த்தத்துடன் சொல்லப்பட்டுள்ளன. நாங்கள் இதனைப் பின்பற்றத் தவறுகின்றோம். பலர் மூன்று வேளை கோவிலுக்குப் போவது அனைத்து விரதங்களையம் அனுஷ்டிப்பது பக்தி நிரம்பியவர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்வது போன்ற இன்னோரன்ன செயல்களைச் சடங்குகளாகத்தான் செய்கின்றார்கள். அவற்றின் அர்த்தங்களைச் சரிவரப் புரிந்தோ முறைப்படி மேற்கொண்டால் கிடைக்கும் பயன்களைத் தெரிந்தோ செய்வதில்லை.

அன்பே சிவம் அன்பே சிவம் என்று போதிக்கப்பட்டதன் பின்னும் அது வெறும் வாய் வார்த்தையாக எல்லோராலும் சொல்லப்படுகின்றதே தவிர அதன்படி எத்தனை பேர் ஒழுகுகின்றோம். கோயில்களைக் களியாட்ட நிகழ்வுகளுக்காகவும் கௌரவத்தை வெளிப்படுத்தும் களங்களாகவும்தானே எம்மில் பலரும் பயன்படுத்துகிறோம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என்பதால் வீதிகள் தோறும் கோயில், வீடுகள் தோறும் சுவாமி அறை, சுவரெல்லாம் சுவாமிப் படங்கள், மனங்கள்.......? பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட பிறருக்கு உதவும் கைகள் மேலானவை என்பர். மனிதம் என்பதே என்மதம் என்று கூறினார் கவிஞர் தாகூர். இவ்வாறான அர்த்தம் பொதிந்த ஆழமான கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன. என்ன பயன். சொல்பவன் போதிக்கிறான். செய்பவன் சாதிக்கிறான் என்பர். நாங்கள் போதிப்பவர்களாகவே இருக்கின்றோமே தவிர சாதிப்பவர்களாக இருக்கிறோமா...? சிந்திப்போம். இவை தொடர்பாய்.

**ந.பார்த்திபன்**

உ

# தேரின் அமைப்பும் தத்துவங்களும்

*அருட் கலை வாரிதி, கலாபூஷணம்*

**ஸ்தபதி சு.சண்முகவடிவேல்**

மரச் சிற்பக் கலையிலும், தத்துவ நோக்கிலும் சித்திரத்தேர் சிறப்பிடம் பெறுகின்றது. பண்டைக் காலம் தொட்டே தேரோட்டம் நடைபெற்று வந்திருக்கின்றது. இறைவனுக்குத் தேர் அமைத்து வடம்பிடித்திழுத்து ஆடிப் பாடி போற்றி மகிழ்ந்தனர் தமிழ்மக்கள். இறைவன் தேரேறி ஆடி அசைந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

தேரின் அமைப்பை ஐந்தாக வகைப் படுத்தலாம். எண்கோண வடிவிலமைந்துள்ளது "திராவிடம்" என்றும், சதுர வடிவிலமைந்தது "நாகரம்" என்றும், வட்டவடிவிலமைந்தது "வேஸரம்" என்றும் அறுகோண வடிவிலமைந்தது "அந்திரம்" என்றும், குதிரை லாடம் போன்ற வடிவில் அமைந்ததை "கஜப்ருஷ்டம்" என்றும் அழைப்பர்.

சித்திரத்தேர் செய்வதற்கான மூலப் பொருள் மரமாகும். மருது, இலுப்பை, வேம்பு, பலா, மஞ்சள்நுணா, போன்ற மரங்கள் மிகச்சிறந்தவையாகும். தற்போது மகோகனி போன்ற மரமும் பயன்படுகிறது. தேர்ச்சில்லுகள், அச்சு, பூதப்பார் என்பன மருத மரத்திலும், தேர்ச்சிற்பங்கள், இலுப்பை, வேம்பு, பலா போன்ற மரங்களிலும் செதுக்கப்படுகின்றன.

தேர், தீச்சுவாலையின் தோற்றத்தில் அமைக்கப்படுகின்றது. தேர் நடமாடும் ஆலயமாகும். இது கீழிருந்து மேல் நோக்கி ஒடுங்கிக் காணப்படும். நான்கு தொடக்கம் பத்துச் சில்லுகள் வரையில் அமையும். தேரின் ஆதாரம் அச்சாகும். இதன்மேல் ஒன்பது தளங்கள் அக்கப்படும். தேரின் அளவுக்கேற்றபடி சிற்பங்களும் அமையும். கடவுள், புராண, இதிகாச, சிற்பங்களும், யானை, யானைவீரர், குதிரை, குதிரைவீரர், அன்னம், மகரம், யாழி, சிங்கம், சங்கநிதி, பதும நிதி முதலானவை வரிவர்க்கங்களில் அமையும். ஒரு வரி, மூன்று வரி, ஐந்து வரி என வரிசைப்படுத்தியும் அமைக்கலாம். இவைகள் பூவுலக வாழ்வையும், சுவர்க்க வாழ்வையும் குறிப்பனவாகும்.

தேர் அமைத்தபின் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பது "வெள்ளோட்டம்" எனப்படும். அத்துடன் தேரை அமைத்த கலைஞர்களை ஊரறிய கௌரவப் படுத்துவதும் வெள்ளோட்டத்தில்த்தான்.

தேர் உணர்த்தும் தத்துவங்கள் பலவாக அமையும். இப்பிரபஞ்சமும், தேவர்களும்,

பிரம்மா, விஸ்ணு, உருத்திரனும் தேரினுள் அடக்கம் பெறுகின்றார்கள்.

இப்பூவுலகே தேராகவும், சூரிய சந்திரர்கள் சக்கரங்களாகவும், மந்திரகேசரிமலை அச்சுகளாகவும், பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுக்களாகவும், ஆகாயம் ஆசனமாகவும், நட்சத்திரங்கள் விதானங்களாகவும், நதிகள் கொடிகளாகவும், யாகம் சட்டங்களாகவும், நாட்கள் குறுக்கு மரங்களாகவும், அஷ்டமலைகள் தூண்களாகவும், அஷ்டதிக்கு யானைகள் தாங்கும் ஆதாரமாகவும், ஏழு கடல்கள் தேர்ச்சீலைகளாகவும், வேதங்கள் உபாங்கங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும் வேதங்கள், குதிரைகளாகவும், மேருமலை வில்லாகவும், வாசுகி நாணாகவும், வி'ணு அம்பாகவும், அக்கினி அம்பின் நுனியாகவும் விளங்கி பெரும் தத்துவப் பொருளை உணர்த்தி நிற்கின்றது.

உடல் தேராகவும், உயிர் தேர்த்தலைவனாகவும் புலன்கள் குதிரைகளாகவும், புத்தி தேர்ப்பாகனாகவும் இன்னொரு வகையில் உருவகிக்கப்படுவதுண்டு.

தேர்த்திருவிழா இறைவனின் ஐந்தொழிலில் அழித்தலைக் குறிப்பதாகும். ஆன்மாக்களின் ஆணவத்தை நீக்குவது அழித்தலாகும். இதனால் இறைவன் ஆன்மாக்களிடத்தில் வைத்துள்ள பெருங்கருணையை உணரலாம். சிவபெருமானின் திரிபுரதகன தத்துவமும் இதையே உணர்த்துகின்றது. வானில் உலாவிய பொன், வெள்ளி, இரும்பு ஆகிய முப்புரங்கள், மும்மலங்களைக் குறிப்பதாகும். தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி ஆகிய மூவசுரர் மூவகை ஆன்மாக்களைக் குறிப்பதாகும்.

இறைவன் உருவத்திருமேனி கொண்டு அருள் பாலிக்கும் இடம் ஆலயமாகும். ஆலயத்தில் நடைபெறும் பிரதிஷ்டை, மகோற்வசம் என்பன மிகவும் சிறப்பானவையாகும். மகோற்சவம் ஆண்டுக்கு ஒரு முறை நடப்பவை. மகோற்சவத்தில் நடைபெறும் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பானதாக கருதப்படுகின்றது. மக்கள் அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது. எல்லோரும் வடம் பிடித்திழுப்பதினால் சமத்துவம் பேணப்படுகிறது. திருக்கோவிலுக்கு வர இயலாதவர்களுக்காக இறைவனே தேரேறி வீதி வலம் வருகிறார்.

தேர் அமைப்பதும், தேர்பவனி நடத்துவதும், மிகப்பெரிய திருத்தொண்டாகும். இத்தொண்டு செய்பவர்கள் இறைவனின் திருவருளைப் பெறுவார்கள். மேலான வாழ்வு வாழ்வார்கள்.

உ

# வெளி வட்ட வீதி விநாயகருக்கு முகபத்திர வட்டத்தேர் (வேசரம்)

*சிற்பக்கலைச் செல்வன், சிற்பகலாமணி, சிற்பகலாரத்தினம்*

**விஷ்வப்பிரம்மஸ்ரீ க.கலாமோகன்.**

கலைகளை வளர்ப்பதில் ஆலயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. அந்த வகையிலே வவுனியா சிந்தாமணிப் பிள்ளையாருக்கும் பெரும் பங்கு உண்டு. ஒரு கலைஞனின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய பங்கை வகிப்பதில் ஆலயம் முதன்மை பெறுகின்றது என்றால் மிகையல்ல.

இந்தியாவிலே சிற்ப வல்லுனர்கள் சிற்ப சாஸ்திரப்படி கட்டிடக் கலையை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று பாணிகளாக வகுத்தார்கள். அதன் அடிப்படையாகவே கோவிலில் சித்திரத் தேர்களையும் வேறு கலைப் படைப்புக்களையும் உருவாக்கினார்கள்.

நாகரம் என்பது சதுர வடிவமுடையதாகவும் வேசரம் வட்ட வடிவமுடையதாகவும், திராவிடம் எண்கோண வடிவமுடையதாகவும் உருப்பெற்றது. பிறிதோர் கோட்பாட்டின்படி இரண்டாம் பகுதியாக ஆந்திரம் என்னும் அறுகோண வடிவமுடைய தேர்களையும் வடிவமைத்தார்கள். அந்த வகையிலே இன்று இங்கு கம்பீரமாகக் காட்சி அளிக்கும் சித்திரத் தேரானது விநாயகப் பெருமானுக்கே உரிய வேசர மரபுத்தேராகும். இது மற்றப்பாணிகளைவிட முற்றிலும் மாறுபட்டது. வேசர வடிவில் முகபத்திரங்கள் மீட்கப்பட்டுள்ளதால் தனிச் சிறப்புப் பெற்றுள்ளது. தேரினுடைய மூலாதாரமாகிய அச்சுக்கள், சக்கரங்கள் மருதமரத்தினால் ஆக்கப்பட்டுள்ளன. ஆதாரமாகிய பூதப்பார்களை சற்பங்கள் தாங்குகின்றன. மற்றும் சிறப்பம்சமாக ஆதி கூர்மம், பூமாதேவி, ஆதிநாகம் என்பன தேரைத் தாங்கி நிற்கும் பாணியில் அமையப்பெற்றுள்ளன. உபபீடகபோதகம் வேசரவடிவில் அட்ட கறணைக் கூடுகள் மூலம் முகபத்திரம் மீட்கப்பட்டு அதில் கஜங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சிற்றூர் மட்டம் நாகர அமைப்பில் தெய்வீகச் சிற்பங்கள் தெய்வீகலீலைகள் புடைப்பு உருவங்களாக உருப்பெற்றுள்ளன. பேரூர் மட்ட திராவிட மரபில்

அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டிலும் யாழிகள் குதிரைகள் மகரங்கள் அன்னப்பட்சிகள் என்பன அணிவகுத்து காட்சி அளிக்கின்றன.

மேலண்டமாகிய விமானம் வேசர வடிவம் பெற்றுள்ளது. மேல் பண்டிகை எழுதக வடிவில் இருந்து முற்றிலும் மாறுபட்டு திரணை வடிவம் பெற்றுள்ளது. 24 மாடங்கள் அமைக்கப்பெற்று முகபத்திரங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. பிரம விஸ்ணு, உருத்திர பாகங்கள் அடக்கப்பட்டு விநாயகப் பெருமானுக்கே உரிய தாமரை மொட்டினை ஒத்த அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் நாம் கற்றுக் கொண்ட சிறிய கலைப் பயிற்சியில் ஒரு வளர்ச்சியை வவுனியா சிந்தாமணிப் பிள்ளையாரின் அருளால் பெற்றதன் மூலம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தேரின் உண்மைத் தத்துவத்தை நோக்கும் போது, ஆன்மாக்களாகிய நாம் உபாயமார்க்கம், உண்மை மார்க்கம் ஆகிய இரு மார்க்கங்களிலொரு மார்க்கத்தில் நின்று சுழலுவதையே தேரின் கீழண்டத்தையும் மேலண்டத்தையும் தாங்கும் சரியா, கிரியா, யோகா, ஞான மார்க்கங்களாகிய நான்கு சில்லுகளும் உணர்த்துகின்றன. உபாயமார்க்கத்தை அனுட்டிக்கும் போது எமது அவாவின் விரிவையும், பாதாள, பூலோக, விண்ணுலோக வாழ்க்கைகளின் விரிவையும், சிற்றின்ப துன்ப நுகர்ச்சிகளையும் தேரின் கீழ்க்கண்டம் உணர்த்துகிறது. தேரின் தோவாசனம் தேவர்கள் நின்று இறைவனை வழிபடுவதாகவும், பீடம் (சிம்மாசனம்) இதயப்பகுதியில் இறைவன் வீற்றிருந்து அருள் பாலிப்பதாகவும், தேரின் பீடம் ஆன்மாக்கள் திருவருள் விளக்கம் பெறுவதையும் குறிக்கின்றது. எமது அவாவெல்லாம் ஒடுக்க நிலையாகி பேரின்ப நிலையை நோக்கி நிற்பதை தேரின் மேலண்டம் புலப்படுத்துகின்றது. அத்துடன் நான்கு வேதங்களை உணர்த்தி நான்கு குதிரைகளும் திகழ்வதே தேரின் தத்துவத்தைக் குறிப்பிடுகின்றது.

உ

# நடராசர

## கலாபூஷணம், அருளுரைவாரிதி மாதவர் மார்க்கண்டு

மண்ணு நீ விண்ணு நீ மலையு நீ கடலு நீ
எண்ணு நீ எழுத்து நீ இரவு நீ பகலு நீ
பண்ணு நீ பாவு நீ பாட்டு நீ தொடரு நீ
அண்ணநீ அமலநீ அருளு நீ பொருளு நீ

-சுவாமி விபுலானந்தர்.

தமக்கு முதற்காரணமான பொருள் பிறிதொன்று மில்லாத சுத்தமாயாதீதரான சிவபெருமான். கருவியாகியிருக்கின்ற மெய்மையாகிய ஐம்புலனும், காட்டுவான், காண்பான், காட்சிப் பொருள், வரும்பயன் ஆகியன சாதன சதுட்டயங்கள். உடலை உயிர் இயக்குவது போல் உயிரை இயக்குபவன் நடராசர். உலகத்திற்கு நடுவாகவும் விராட புருடனின் இருதய ஸ்தானமாகவும் விளங்கும் சிதம்பரத்திலே உலகமாதா சிவகாமி அம்மை தரிசிக்க தூக்கிய திருவடியுடன் ஞான நடனமாடி உலகை இயக்குகின்றார்.

சிவமூர்த்தங்களில் முதன்மையாகத் திகழ்வதும், அழகிலும், தத்துவ நோக்கிலும், கலைச் செறிவிலும், மிகச் சிறந்ததாக விளங்குவது நடராசதத்துவம். வலக்காலைச் சிறிது மடக்கி, முயலகன் மீது சிறிது ஊன்றி, இடக்காலை வலப்பக்கமாகச் சிறிது தூக்கி, இடதுமுன் கரத்தை வலப்பக்கம் நேராக நீட்டி, கைத்தலத்தை கீழ்நோக்கித் தொங்கவிட்டு, வலதுமுன்கரத்தில் அபய முத்திரை காட்டி, இடது மேற்கரத்தில் அக்கினியும், வலது மேற்கரத்தில் துடியும் (டமருகம்) கொண்டு, கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும் பொங்க, மூன்று கண்களுடன் சாந்த சொரூபியாக விளங்க, தலையில் கொக்கின் இறகும், ஊமத்தை, கொன்றை, எருக்கு மலர்கள் அணிந்து, கங்கையும் பிறையும் சூடிக்கொண்டு, இடக்காதில் குழையும், வலக்காதில் மகரகுண்டலமும் பூண்டு தீச்சுடர் கொண்ட திருவாசி துழ்ந்திருக்க, அதன் நடுவே நின்றாடும் நடராசரின் திருக்கோலமே ஆனந்த தாண்டவ வடிவமாகும். சிவன்:- உத்தனாகி தாண்டவமாடும் நடனத் திருக்கோலங்களை நாயன்மார்களும் கவிஞர்களும் அனுபவித்துப் பாடியிருக்கின்றார்கள். நாட்டியக் கலைஞர்கள் அபிநயத்துடன் ஆடிக்காட்டியிருக்கிறார்கள். சிற்பக்கலைஞர்கள் நிலையாக வடித்துக் கண்முன்னே காட்டியிருக்கிறார்கள். அண்டசராசரங்களின் இயக்கமே சிவனின் திருக்கூத்தாகும். இதுவே நடராசனின் திருநடனமாகும். இயற்கையே இந் நடனத்தின் முக்கிய பொருளாகும். இயற்கையே சிவகாமி என்ற நாணமுள்ள அழகிய பெண்வடிவமாகும். சிவன் ஆடும் கூத்து சிவகாமியுடன் சேர்ந்து ஆடும் கூத்தாகும். இதனால் தான் நடராச படிமத்தின் அருகே சிவகாமியின் படிமமும் அமைக்கப்பட்டிருகின்றது........ சிவனின் திருக்கூத்து அங்கு எப்பொழுதும் நிகழ்கின்றது. எமதுள்ளத்திலும் நிகழ்தல், பலதத்துவ உண்மை உணரத்துகின்றது.

பஞ்ச கிருத்தியம்

படைத்தலை துடியும் மறைத்தலை ஊன்றிய திரு அடியும்

காத்தலை அபயமும் அருளலை தூக்கிய திரு அடியும்
அழித்தலை அக்கினியும் ....................உணர்த்துகின்றன.

இவ்வைந்து தொழில்களையும் ஒருங்கே தோற்றுவிப்பதே சிவனின் ஆனந்தத் தாண்டவமாகும். ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியான தாண்டவமும் உண்டு. சிவதாண்டவங்கள் மொத்தம் 108 ஆகும். ஆனந்தத் தாண்டவத்தில் இது நமது இதய கமலத்தில் நின்றாடுவதைக் குறிக்கின்றது. முயலகன் மீதும் நின்றாடுகின்றான். முயலகன் மும்மலங்களின் உருவாகும். தூக்கிய திரு அடி அருளலைக் குறிக்குமாதலின் அதனை அடைவதே ஆன்மாக்களின் குறிக்கோள் என்பதை வீசிய கரத்திலுள்ள சுட்டு விரல் சுட்டிக்காட்டி நிற்கின்றது. மற்றைய நான்கு விரல்களும் முயலகனைச் சுட்டிக் காட்டி மும்மலங்கள் அறவேண்டும் என்பதை உணர்த்தும். அபயகரம் இறைவன் உயிர்கள் மேல் கொண்ட கருணையின் அபிநயக் குறிப்பாகும். குமிழ் சிரிப்பு திருவுள்ளத்தின் கருணை வெளிப்பாடாகும். திருவாசி இயற்கையைக் குறிப்பதாகும். திருவாசிக்குள் நின்றாடுவது இயற்கையுடன் இணைந்தும் அவற்றின் உடனாகியும் இருப்பதைக் குறிப்பதாகும். விரிந்த சடை, பறக்கும் ஆடை, ஆட்டத்தின் வேகத்தைக் காட்டுகின்றது. எத்தகைய வேகத்திலிருந்தாலும் அதிலிருந்து வேறுபட்டு விகாரமடையாதவனாய் இறைவன் உள்ளான் என்பதை சாந்த முகமும் கருணை பொங்கும் விழிகளும் காட்டுகின்றன.
படைத்தல் என்பது, உயிர்களைப் படைப்பதல்ல. ஏனெனில் கடவுளைப் போலவே உயிர்கள் அனாதியானவை. உயிர்களின் மீட்சிக்காக தநுகரண புவன போகங்களைக் கொடுத்தலே "படைத்தல" ஆகும்.

காத்தல் என்பது, உடம்பு பெற்ற உயிரானது, தான் செய்த தீவினை நல்வினைக்கேற்றபடி வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்தல்.
அழித்தல் என்பது, உயிர்களுக்கு இறைவன் கொடுத்த தனு, கரண, புவன போகங்களை நீக்குதலே "அழித்தல்" ஆகும்.

மறைத்தல் என்பது, உயிர்கள் தாம் செய்த நல்வினை தீவினைப் பயன்களை ஒரே பிறவியில் தீர்த்துக் கொள்ள முடியாது. ஆகவே உயர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்க வேண்டும். இப்பிறப்பினால் உயிர்கள் வெறுப்படையாது பாசம் தேயுமளவும் வினைப்பயன்களைத் துய்க்குமாறு ஆழ்த்துவதே "மறைத்தல" ஆகும்.

அருளல் என்பது, உயிர்கள் மீது படிந்த பாசம் அகன்ற பின்னர் ஞானம் பிறக்கின்றது. கடவுளை **உயிர் நாடுகிறது. தூய்மையடைந்த ஆன்மாவை இன்பம் துய்க்கச்செய்தலே "அருளல்" ஆகும்.**

ஆனந்த தாண்டவத்திற்கு ஓங்கார தாண்டவம் என்ற பெயரும் உண்டு. நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தின் வடிவம் தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் என்ற இருவகையையும் ஆனந்தத் தாண்டவத்தில் திருநடனம் உணர்த்தும். ஒவ்வொரு தத்துவக் கருத்தையும் புரிந்து காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி, மெய் தானரும்பி விதிர் விதிர்த்து வழிபடல் வேண்டும். இறைபாதம் கிட்டும்.
**பெயர் பலவும் பரவும் பெம்மான்:-** சிவன், சங்கரன், அரவணிந்தமூர்த்தி வாமதேவன்,

பூதநாதன், மங்கையோர்பாகன், சதாசிவன், மகேஸ்வரன், சம்பு, நீலகண்டன், மாதேவன், நிருமலன், சூலபாணியன், பசுபதி, சுடலையாடி, காலகாலன், கபாலி, உருத்திரன், கைலையாளி, ஆலமர்கடவுள், காலகேது, ஐம்முகன், பரசுபாணி, முக்கண்ணன், ஆதி, தற்பரன், நந்தி, ஈச்சுரன், நீறணிந்தோன், நக்கன், பரமன், யோகி, பகவான், ஞானமூர்த்தி.

நடராசவடிவம், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களுக்காகத் தைப்பூச நட்சத்திரத்தில் சித்தயோகம் கூடிய நந் நாளில் அருளப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. சிதம்பரம் என்பது சித் + அம்பரம் "சித்" என்பது ஞானம் என்றும் "அம்பரம்" என்பது பெருவெளி என்றும் பொருள் கோடும். ஆகவே தில்லைத்திருக்கூத்து ஞானப்பெருவெளியில் ஆருமறியாமல் ஆடுகின்ற முத்தித் தாண்டவத்தின் குறிப்பினை மண்ணுலகத்திலுள்ளோரும் கண்டு மனதில் பதிக்கும் வண்ணம் உள்ளது. இதனையே சேக்கிழார் பெருமான் "சிற்பரவியோமம் ஆகும். திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்யும்" என வருணித்தார்.

தில்லையம்பரத்திலே ஐம்புல நுகர்ச்சியால் உணரும் வண்ணமாக ஆடுகின்ற இந்நடனம் உண்மையில் உணர்வில் உணர்தற்குரிய சிவபோகமேயாம். தில்லையில் நடனதரிசனத்தைக் கண்ணுற்ற களிவெறியில் அப்பர் பெருமான் "மனித்தப்பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே" எனக் குறிப்பிட்டாராயினும், உண்மையில் அல்லற்பிறப்பறுத்துக் காண்டற்குரிய தரிசனமே இது. மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பர நடராசரை "தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே அல்லற்பிறவி அறுப்பானே ஒவென்று, சொல்லற் கரியானைச் சொல்லி" நிற்கின்றார்.

ஆகவே தில்லைத் திருக்கூத்து உயிர்களை உலகில் உழலா வண்ணம், அலலற் பிறப்பினை அறுத்து அவற்றை ஈடேற்றுவதைக் குறிப்பாகக் கொண்டது. "ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச் சாருமால்" என சேக்கிழார் பெருமான் கூறியது போன்று ஆன்ம ஈடேற்றமே எச்சமயத்தினதும் முதல் நோக்கமாகும். ஆன்மாக்கள் மீது கொண்ட அளவிறந்த கருணையால் அவற்றை மலபரிபாகம் செய்து ஈடேற்றும் நோக்கோடு அப்பரம் பொருள் நிகழ்த்தும் ஞான நடனமே இத்திருக்கூத்து. அண்ட சராசரங்களையெல்லாம் தன் ஆனந்தத் தாண்டவத்தினால் இயங்கச் செய்யும் நடராசப் பெருமானை இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காமல் நிறைக்க வேண்டுமாயின் பன்னிரு திருமுறைகளை மனமுருகி ஒதி உய்வோமாக. பிறவாப் பெருவாழ்வு பெறுவோமாக.

நாள்தோறும் தவறாமல் நடராச வழிபாடு செய்து வர மனம் தெளிவு பெறும் புத்துணர்வடையும் ஆணவம் மெல்ல மெல்ல அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப்பெறும் சாந்தி தவழும் பிறவாப் பேரின்ப நிலையும் வந்தடையும்.

**மாதவர் மார்க்கண்டு (-சுழிபுரம்)**
33, கதிரேசு வீதி,
வவுனியா.

உ
சிவமயம்

# பஞ்ச (5) அட்சரத்தின் மகிமை

பஞ்ச கிருத்திகம்:- படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்
பஞ்ச சபைகள்:- சிதம்பரம் - பொற்சபை, மதுரை- வெள்ளிசபை, திருநெல்வேலி - தாமிரசபை, திருவாலங்காடு - இரத்தினசபை, திருக்குற்றாலம் - சித்திரச்சபை
பஞ்சதருக்கள்:- சந்தனம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம்
பஞ்ச புலன்- ஓசை ஊறு, ஒளி, சுவை, நாற்றம்.
பஞ்ச பதிகளில் முத்தி:- தில்லையைக்காண, காசியில் இறக்க, திருவாரூரில் பிறக்க, காஞ்சியில் வசிக்க, அருணகிரியை நினைக்க
பஞ்ச புகை:- அகிற்பொடி, குங்கிலியம், சந்தனப்பொடி, இலாமிச்சவேர்ப்பொடி, பச்சைக்கற்பூரப்பொடி
பஞ்ச கணைமலர்:- தாமரைப்பூ, அசோகப்பூ, மாம்பூ, முல்லைப்பூ, நீலப்பூ
பஞ்ச பூதங்கள்:- நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.
பஞ்ச ஈசுவரன் முகம்:- சந்தியோசாதம், வாமம், அகோரம், தத்புருடம், ஈசானம்.
பஞ்ச குரவர்:- அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமயன்
பஞ்சாங்கம்:- திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்
பஞ்ச பால்:- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
பஞ்ச மாபாதகம்:- கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குருநிந்தை
பஞ்சவர்ணம்:- வெள்ளை, மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு
பஞ்சதொழில்:- கற்றல், கற்பித்தல், பசுவளர்த்தல், பயிர் வளர்த்தல், வாணிபம்.
பஞ்ச இசைக்கருவி:- யாழ், நாதஸ்வரம், தவில், துடி, மத்தளம்
பஞ்ச உலோகம்:- பொன், வெள்ளி, தாமிரம், பித்தளை, இரும்பு
பஞ்ச வர்க்க உணவு:- உண்ணல், நக்கல், சப்பல்,உறுஞ்சல், மெல்லல்.
பஞ்சவேள்வி:- சைவவேள்வி, அசைவவேள்வி, அக்கினிவேள்வி, பசுஆகுதி வேள்வி, அக்கினியில் தன்னை ஆகுதி செய்யும் வேள்வி.
பஞ்சதாய்:- தாய், வளர்ப்புத்தாய், செவிலித்தாய், பெரியதாய், சிறியதாய்.
பஞ்சநியமம்:- வைகறைத் துயில் நீத்தல், காலைக்கடன், ஸ்நானம், கடவுள் வணக்கம், கற்றல்.
பஞ்ச வகைநிலம்:- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
பஞ்ச ஒழுக்கம்:- புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல்
பஞ்ச நேரம்:- காலை, மதியம், மாலை, முன் இரவு, பின் இரவு
நாட்டின் பஞ்ச (5) நிலை:- வரப்பு, நீர், நெல், குடி, முடி.

நன்றி

**மாதவர் மார்க்கண்டு**

உ
சிவமயம்

# அன்பு - ஆணவம் - இன்பம்

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**

(சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர். யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாகம்)

அன்புக்கும் ஆணவத்துக்கும் இடையே நடைபெறும் போட்டியில்தான் உலகம் ஆடி வருகின்றது. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ கண்ணா" என்னும் வரிகளுக்கு ஏற்ப ஆடும் மனிதர்களும் இந்த உலகமும் "ஆடும்வரை ஆட்டம் ஆயிரத்தில் நாட்டம். கூடும் வரை கூட்டம் கொள்ளிவரை வருமா" என்னும் கண்ணதாசனின் தத்துவ வரிகளில் கட்டுண்டு கிடக்கின்றது.

மனிதர்களின் ஆட்டத்திற்கு ஆணவம் என்னும் குணாம்சம் வகிக்கும் பங்கு முக்கியமானது. தன் முனைப்பு என்பது இல்லாவிடின் எப்படி இந்த உலகு இயங்கும். அணுவுக்குள் இருக்கும் மூலங்களின் அசைவுதான் அகிலத்தையே அசைக்கின்றது. எமது இந்து தத்துவ அடிப்படையை நோக்கும்போது சிவதாண்டவத்தின் தத்துவம் கூறும் ஆழம் வியக்க வைக்கிறது. அண்ட சராசரங்களும் அதிர ஆடும் ஆனந்தக் கூத்தனின் அழகில் கட்டுண்டு கிடக்கும் பக்தி மான்கள் ஒருபுறம் என்றால், அது வழங்கும் தத்துவத்தில் தம் சிந்தனையைச் செலுத்தும் உலக தத்துவ வல்லுநர்கள் மறுபுறம்.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்தமுடைய வெடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே**

என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியதன் காரணம் என்ன? ஒரு அழகியல் சித்திரிப்புடன் கூடிய மேற்படி சிற்பத்தின் வருணனைக்குள் மனித வாழ்வின் தேவையை உணர்த்தி நிற்கும் தத்துவம் ஒருபுறம் என்றால் அதன் பின்னால் உள்ள சிவ தத்துவம் மறுபுறத்தில் நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறது.

"விரைகழல் சரணே" எனப்பாடும் பின்னணி என்ன? சரணடைதல் என்பது என்ன? எமது ஆணவம் நீங்கி அல்லது விடுபட்டு சரணாகதி என இறைவனை அடையும்போது நமது செயலில் ஒரு ஒளி வீசும். இதனைத்தான் பக்தி மார்க்கம் ஊடாக ஞானிகள் கூற முற்படுகின்றனர்.

மகாபாரதத்திலே தருமர் சூதில் நாடு, நகரம், வீடு, வாசல், மனைவி, தம்பிகளை எல்லாம் இழந்த நிலையில் துரௌபதையை சபைக்கு இழுத்து வந்து துச்சாதனன் துகிலுரியும் போது இரு கைகளையும் நீட்டி கண்ணா! எனக் கதறும் போது ஆபத்பாந்தவன்

ஓடி வருகின்றான். மானம் காக்கின்றான். இதன் மூலம் ஒன்று தெளிவாகின்றது. எமது செயலில் எவ்வித மாசுமறுவற்ற நிலைப்பாட்டை எடுக்கும்போது எச்செயலும் சித்திக்கும். இதனை நாம் வாழ்வின் எல்லாப் படிநிலைகளுக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

ஆணவ முனைப்பு நீக்கி, தற்பெருமை அகற்றி, தன்னலம் தலிர்த்து, பொது நிலைப்பாட்டில் பூரண சரணாகதி நிலையில்தான் நமது செயல்களுக்கு ஓர் அர்த்தம் பிறக்கும். அதேவேளை அச்செயல்கள் இறைவன் மீதான இறைவனின் பிள்ளைகள் மீதான ஒரு அன்பின் பாற்பட்டு அமையுமாயின் அது சாலச் சிறந்தது. அதனால் மேலும் இரட்டிப்பு அர்த்தம் உண்டாகின்றது. செயற்பாடுகளுக்கு. ஆனால் அச்செயல்களில் இறங்கி ஈடுபடும்போது ஒருவித பிடிப்பு நமக்கு வந்துவிடுகின்றது. அது நாசத்திலும் கொண்டு சென்று தள்ளிவிடும். இக்காரணங்களினால்தான் "பற்றற்ற அன்பு வேண்டும்" என்று கூறுகின்றார் எழுத்தாளர் ஜெயகாந்தன்.

"அன்புதான் இன்ப ஊற்று. அன்புதான் உலக மகாசக்தி" எனும் புத்தர் பெருமானின் கருத்துக்களுக்கு இணங்க நாம் "அன்பே உருவானவர். தாயாக மாறவேண்டும்." அதுவே "அன்பே சிவம்" என்னும் தத்துவத்தில் திருமூலரின் வரிகள் இப்படி அமைகிறது.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

அன்பினாலேதான் சகாதேவன் கிருஷ்ணபரமாத்மாவைக் கட்டிப்போட்டான். நாங்களும் எமக்கு வேண்டியவர்களையும் வேண்டாதவர்களையும் அன்பினாலே கட்டிப் போடலாம். இயேசு கிறிஸ்துவும் "அயலவரை நேசி" என்று கூறியது அன்பினாலே உலகத்தை கட்டியாளத்தான்.

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புண்கண்ணீர் பூசல் தரும்**

அன்பினாலே இறைவனை கட்டிப்போட்டு வரங்களை பெற்ற எத்தனையோ அசுரர்கள், பின்னர் அசுரக் குணம் தலைக்கேற அட்டகாசம் புரியத் தொடங்கி ஆண்டவனாலேயே அடக்கப்பட்டார்கள். இரணியனின் கதையை எடுத்துப் பாருங்கள் நிலத்திலோ, வானிலோ, வெளியிலோ, ஆயுதங்களினாலோ, மனித, மிருகங்களினாலோ இறப்பு வரக்கூடாது என்று வரம் வாங்கிவிட்டுத் தானே கடவுள் எனப் பிரகடனம் பண்ணித் தனது மகன் பிரகலாதனையும் அவ்வாறு கூறச் சொன்னான். ஆனால் மகனோ மறுத்து நிற்க "எங்கே உன் கடவுள்" என இரணியன் கேட்க "தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான்" எனப் பிரகலாதன் கூறுகிறான். "இத்தூணிலும் இருப்பானா" எனக்கேட்டு அதனை இரணியன் உதைக்க நரசிங்கம் வெளித் தோன்றியது. மனிதனாக மிருகமாக அல்லாமல் நரசிங்கமாக

வந்து இரணியனை அள்ளி எடுத்து வாசற் படியில் மடியில் வைத்து உள்ளேயும் இல்லாமல் வெளியேயும் இல்லாமல் நிலத்திலும் இல்லாமல் அண்டவெளியிலும் இல்லாமல் மடியில் வாசற்படியில் வைத்து ஆயுதங்கள் இல்லாமல் தனது பற்களாலும் நகங்களாலும் இரணியனின் உடலை பிடுங்கியது. அந்த நரசிங்கம். அதன் பின் இரணியனுடைய கர்வம் அடங்கியது.

இப்படித்தான் நரகாசுரவதம், மகிடாசுரவதம், இராவணேஸ்வரவதம், கஜமுகாசுரவதம், துரியோதனன் அழிவு என எல்லா ஐதீகக் கதைகளிலும் இந்த ஆணவ அழிவு எனபது அழுத்தமாக எடுத்துச் சொல்லப்படடுள்ளது. எனவே செயலுக்கு தன்முனைப்பு அவசியம் என்னும் அதே வேளை அதுவே ஒருவனின் செயலை அழிப்பதாயும் இருக்கக்கூடாது. அதுமடடுமல்லாமல் அச்செயல் ஆண்டவன் என்னும் பொது அன்பிற்காகச் செய்யப்படுவதாக அமைய வேண்டும். அந்தப் பொது அன்பும் பற்றற்றதாக இருத்தல் அத்தியாவசியமாகிறது.

அன்பர் பணிக்கு எம்மை
ஆளாக்கி விட்டு விடாமல்
இன்ப நிலை தானே வந்து
எய்தும் பராபரமே

இதனை இன்னொருபுறம் பார்த்தால் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" எனும் தொடரின் முழு அர்த்தம் புரிந்து விடும். இந்த நிலையைத்தான் கீதையில் கண்ணனும் கூறும் வாக்கியமான கடமையைச் செய, பலனை எதிர்பாராதே' எனும் திவ்வியமொழி கூறிச் செல்கிறது. சேக்கிழாரும் தனது பெரிய புராணத்தில் கூறும் இன்னுமொரு தொடர் இவ்விடத்தில் கச்சிதமாகப் பொருந்துகிறது. அதாவது

**கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"**

பக்தி மார்க்கத்தின் அடிப்படையான வீடுபேற்றையும் (முக்திப் பேற்றையும்) கருதாது கூடும் அன்பில் கும்பிடுதல் ஒன்றே ஆனந்தம். என்று பக்தர்கள் கொண்டாடுகின்றார்கள். ஆமாம் நாமும் 'ஓடும் புளியம் பழமுமாக' வாழ வேண்டிய இவ்வாழ்வில் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஆணவம் நீக்கி ஆதரவுடன் வாழ்வாங்கு இவ்வையகத்தில் வாழ்வோமாக.

உ
சிவமயம்

# திருக்குறள் ஓர் ஆன்மீக நூலா?

தமிழ்மணி அகளங்கன்.

இன்று உயர்தனிச் செம்மொழியாகப் போற்றப்படுகின்ற எமது தாய்மொழியாம் தமிழ் மொழியில், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் இன்றும் உயிர்ப்போடு விளங்குவதைப் பார்த்து இறும்பூதெய்துகிறோம்.

எமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் இலக்கிய நூல்களாகிய பாட்டு நூல்கள் பத்தும், தொகை நூல்கள் எட்டும் கிறீஸ்துவுக்கு முந்திய காலத்தன என்று இன்று பரவலாகச் சில தமிழறிஞர்கள் கருதுகிறார்கள்.

திருக்குறளையும் கிறீஸ்துவுக்கு முந்திய நூலாகத் தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். திருவள்ளுவர் ஆண்டைக் கிறீஸ்துவுக்கு முந்தியதாகக் கொண்டாடவும் தொடங்கிவிட்டனர்.

எமது, சங்க இலக்கிய நூல்களாகிய பழைய நூல்களிலே அகம், புறம் என்ற இரண்டு பாடுபொருள்கள் முக்கியத்துவம் பெற்றாலும், ஆன்மீகம் புறக்கணிக்கப்படவில்லை. இருப்பினும் புறத்திணைக்குள்ளே தான் ஆன்மீகம் அடக்கப்பட்டது.

பத்துப் பாட்டு நூல்களுள் தலையாய நூலாகவும், முதல் நூலாகவும் விளங்கும் திருமுருகாற்றுப்படையை புறத்திணைக்குள் புகுத்திப் பார்த்ததைவிட தனியாக ஆன்மீகத்திணை என்ற ஒரு புதிய பாகுபாட்டிற்குள் அடக்கியிருக்கலாமோ என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

எட்டுத் தொகை நூல்களில் பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றில் கடவுளர்கள் சார்ந்த சில பாடல்கள் இடம் பெற்றிருப்பினும் அவை ஆன்மீகம் சார்ந்தவையாக கருதப்படுவதில்லை. கருதப்பட வேண்டியவையாகவும் அவை இல்லை.

திருக்குறளையும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுக்குள் அடக்கியதைத் தவிர்த்து ஆன்மீகத்திற்குள் அடக்கியிருக்கலாமோ என எண்ணத்தோன்றுகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் தலையாய நூலாக விளங்குகின்ற திருக்குறளை, அறநூல்களில் ஒன்றாகத் தனிப்பிரிவுக்குள் அடக்குவதை விட ஆன்மீகத்துக்குள் அடக்குவது மிகவும் பொருத்தமானது போல் தெரிகிறது.

தேவை கருதி அல்லது நோக்கம் கருதி நூல்களை மறுவாசிப்புச் செய்யும் பொழுது இத்தகைய சிந்தனைகள் எழுவது இயற்கையே.

திருக்குறளின் அதிகார வைப்பு முறையைச் சீர் செய்ய வேண்டும் என்றும்

திருக்குறட் பாக்களை அதிகாரம் மாற்றி மீள் ஒழுங்கு செய்யவேண்டும் என்றும் கவியரசு கண்ணதாசன் குறிப்பிட்டமை சரியான சிந்தனை தானோ என்று எண்ணிப் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

**ஆன்மீகம் - உலகியல்:**

ஆன்மீக நூல்கள், உலகியல் நூல்கள் என்று நூல்களைப் பாகுபடுத்தும் போது, உலகியல் நூல்களாகச் சொல்லப்பட்ட சில நூல்கள் ஆன்மீக நூல்களாக உணரப்படுவதிலும் உண்மை இல்லாமலில்லை. திருக்கோவையாரை எந்தவகைக்குள்ளும் பொருத்திப் பார்க்கலாம் அல்லவா.

அறநூல்கள் உலகியல் நூல்களா ஆன்மீக நூல்களா என்று வாதிட முயன்றால் முடிவில்லாமல் தொடரும். அறத்தின் நோக்கம் உலகியலும் தான், ஆன்மீகமும் தான், என்று முடிவு வழங்கினாலும் அறத்தின் இறுதி இலக்கு ஆன்மீகமே என்பதை உணராமல் இருக்க முடியவில்லை.

"தமிழிலக்கியம் பெருமளவுக்கு சமய இலக்கியங்களை அல்லது ஆன்மீக இலக்கியங்களையே கொண்டுள்ளது" என்ற கூற்று பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சமயம் சாராத அல்லது ஆன்மீகம் சாராத இலக்கியங்கள் தமிழில் போற்றப்படுவது குறைவு என்றே கூறலாம். ஏனெனில் படைப்பாளிகள் பெருமளவுக்குச் சமயம் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். படைப்பாளிகளை ஊக்குவிப்பவர்களும் பெரும்பாலும் சமயம் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள்.படைப்புக்களை அறிமுகம் செய்து பரப்பியவர்களும் பெரும்பாலும் சமயம் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள்.

சமயம் தான் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதில் தலையாய பாத்திரத்தை வகித்தது. "அரசனுக்கு மதம் தேவையில்லை. ஆனால் மக்களை அடக்கி ஆள்வதற்கு அரசுக்கு மதம் தேவைப்படுகிறது" என்ற மாக்கிய வல்லியின் அரசியல் தத்துவம் முடியாட்சிக் காலத்தில் முக்கிய தத்துவமாக விளங்கியது.

எனவே மன்னர்கள், பெரும்பான்மை மக்கள் கடைப்பிடித்த சமயத்தைத் தாங்களும் கடைப்பிடித்து, தாம் கடைப்பிடித்த சமயத்தை வளர்க்க வேண்டிய காட்டாயத்திற்கு உள்ளானார்கள்.

இஸ்லாமிய மொகலாய மன்னனான அக்பர், தனது இராச்சியத்தில் இருந்த பெரும்பான்மை இந்துக்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தன் சமயத்துக்குமாறான இந்து சமயச் சார்பான காரியங்களை செய்திருக்கிறான். இஸ்லாமிய மதவாதிகள் அவனது போக்கைக் கண்டித்த போது இந்து இஸ்லாம் கலப்புச் சமயமாக "தீன் இலாகி" என்ற கோட்பாட்டோடு ஒரு புதுச்சமயத்தையே உருவாக்கமுனைந்தான். சீக்கியர்களை ஆதரித்தான். தான் மொகலாயன் (அந்நியன்) இல்லை இந்தியன் என்று முழங்கினான். தன் அரண்மனையிலேயே தனது இந்து மனைவியாகிய ஜோதிபாய்

விக்கிரக வழிபாடுசெய்ய அனுமதியளித்தான் என்பதெல்லாம் பிற்கால வரலாறுகள்.

இந்துவாகிய பல்லவமன்னன் மக்கள் சமணத்துக்கு மாறியபோது தானும் சமணத்துக்கு மாறினான். சிம்மவிஷ்ணு என்ற அவனது பெயர் அவனை இந்துவாகக் காட்டியது. அவனது மகன் மகேந்திரபல்லவன் சமணத்திலிருந்து சைவத்துக்கு இந்துவாக மாறினான். ஏனெனில் மக்கள் சமணத்திலிருந்து சைவத்துக்கு மீள அவன் சமணனாக இருந்து ஆட்சிசெய்ய முடியாது. திருநாவுக்கரசர் காலத்தில் மகேந்திர பல்லவன் சைவனாக மாறினான் என்பது வரலாறு. அவன் மகன் நரசிம்ம பல்லவன் பெயரளவில் மட்டுமன்றி இந்துவாகவே வாழ்ந்தான்.

இத்தகைய மாற்றங்களைக் கூன்பாண்டியன் என்று அழைக்கப்பட்ட நின்றசீர் நெடுமாறனோடும் பொருத்திப் பார்க்கலாம். மன்னர்கள் தமது சமயநம்பிக்கைக்கு மேலாக, மக்களின் சமய நம்பிக்கைக்கு மதிப்பளித்து வளர்க்கவேண்டிய தேவைக்கும் உள்ளானார்கள்.

வெறும் உலகியல் நூல்கள் ஒரு அறிவு மட்டத்தின்மேல் பயன்பாடற்றவையாக மாறிப்போக, ஆன்மீக நூல்களோ அறிவின் எல்லைவரை ஈடுகொடுக்கும் நூல்களாக விளங்கின. ஆன்மீக நூல்களில் உலகியல் பெரிதும் பேசப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

உலக இன்பங்களையும், இயற்கை அழகுகளையும், கலை நயங்களையும் வெறுத்த சமயங்கள் கூட, தமது இலக்கியங்களில் அவற்றை எல்லாம் அழகாகச் சொல்லியே இருக்கின்றன. குறிப்பாக சமண, பௌத்த இலக்கியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை முதலான ஐம்பெருங்காப்பியங்களில் உலகியல் பெரும் பங்கு வகித்திருப்பதை மறுக்க முடியாது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்நிலையை அடைய வலியுறுத்திய இந்து சமயம் உலகியலைப் போற்றியதில் வியப்பில்லை. துறவுச் சமயங்களே கலையையும், இயற்கையையும் போகங்களையும் விபரித்து வர்ணித்துள்ளன என்பது தான் வியப்பானது.

“வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்” என்று உலகியலை வெறுத்துச் சைவசமய குரவர்களில் ஒருவரான சுந்தரர் தேவாரம் பாடினாலும், அவரது பாடல்களிலே உலகியல் போற்றப்பட்டிருப்பதை காணலாம்.

“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்” என்று சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய இன்னொரு சமய குரவரான சம்பந்தரின் பாடல்கள், இயற்கையை இயன்ற அளவு அற்புதமாகக் காட்டி, உலகியலை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அப்பரும் கூட இயற்கையிலே இறைவனைக் கண்டு காட்டியவர்தான்.

சமண, பௌத்த சமயங்கள் அறத்தின் மூலம்தான் பிறவாத நிலையை அடையலாம் என்று வலியுறுத்துவதாக எடுத்துக்கொண்டால் கூட இற நூல்கள் ஆன்மீக நூல்கள்தானே.

அந்தவகையில் பார்த்தால் அறநூல்களுக்குள்ளே தலையாய நூலான திருக்குறளை ஏன் ஆன்மீக நூல் என்று கருதக்கூடாது.

ஆன்மாவை உயர் நிலைக்குக் கொண்டுசெல்வது தானே ஆன்மீகம். அறம் அப்பணியைச் செய்யுமாயின் அறம் ஆன்மீகம் என்ற பெயரால் அழைக்கப்படலாம்.

சமய நூல்களாக அல்லது ஆன்மீக நூல்களாக அங்கீகரிக்கப்பட்டவற்றில் எப்படி உலகியல் போற்றப்பட்டுள்ளது என்பதைப் பார்த்துவிட்டு திருக்குறள் அறம் என்ற அளவில் மட்டுமன்றி முன்னோர் கருதிய ஆன்மீகம் என்ற அளவிலும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பார்ப்போம்

கம்பராமாயணம்

கம்பராமாயணம் ஒரு சமயநூல் அல்லது ஆன்மீகநூல் என்று குறிப்பிடுவதில் தவறேதும் இருக்கமுடியாது. ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பலர் கம்பராமாயணத்தைப் படிக்கிறார்கள். ஆனால் அதேவேளை இலக்கிய நுகர்ச்சிக்காகவும் உலகியல் அறிவுபெறுவதற்காகவும் கூட கம்பராமாயணத்தைப் படிப்பவர்கள் பலர்.

கம்பராமாயணத்தைப் படிப்பதால் உண்டாகக்கூடிய பயன் என்ன என்று கேட்டால் இன்று பலரும் பலவிதமாகச் சொல்லக்கூடும். கம்பராமாயணத்தைப் படிப்பதால் உண்டாகும் பயன் என்ன என்பதை நூற்பயன் என்ற பகுதியில் கம்பன் பின்வருமாறு கூறுகிறான்.

**நாடிய பொருள்கை கூடும். ஞானமும் புகழு முண்டாம்.**
**வீடியல் வழிய தாக்கும். வேரியங் கமலை நோக்கும்.**
**நீரிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை**
**சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே**

(க.கஉ.நூற்பயன்)

அழிவில்லாத இராட்சத சேனை, சாம்பராய் அழிந்து போக வெற்றி வாகை சூடிய, வில்லை ஏந்திய இராமபிரானது தோளாற்றலைப் பாராட்டி எடுத்துச் சொல்பவர்கட்கு, அவர்கள் விரும்பிய சகலவிதமான பொருள்களும் கைவசமாகும். மனத்தெளிவாகிய ஞானமும் புகழும் உண்டாகும். அவர்களை, மோட்சத்தை அடைவதற்குரிய வழியை உண்டாக்குகின்ற நறுமணமுள்ள அழகிய தாமரைமலரில் வாழும் இலக்குமியும் திரு அருட்பார்வை புரிவாள்.

நூற்பயனில், இராமாயணத்தைப் படிப்பதனால் அல்லது இராமனது தோளாற்றலை மற்றவர்க்குப் புகழ்ந்து கூறுவதனால் விரும்பிய சகலவிதமான பொருள்களும் வந்து சேரும் என்பதே முதலில் சொல்லப்பட்டதாகும். கருதிய பொருள் கைவசமாவது உலகியலே ஆகும். அத்தோடு புகழ் சேரும் என்பதும் உலகியலே. ஞானம் உண்டாகும் என்பது ஆன்மீக முதற்படி எனத்தக்கது.

எனவே கம்பராமாயணமாகிய ஆன்மீக நூலைப்படிப்பதால் உலகியல் இன்பங்கள் யாவும் கிட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் ஆன்மீகநூல் உலகியல் இன்பங்களையும் தரவல்லது என்று பொருள்.

கந்தபுராணம்

கச்சியப்ப சிவாச்சாரியார் பாடியருளிய கந்தபுராணம் ஓர் ஆன்மீக நூலே. இப்புராணத்தைப் படிப்பவர்களுக்கு என்னென்ன கிடைக்கும் என்று கச்சியப்ப சிவாச்சாரியாரே நூற்பயன் என்றபகுதியில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

**இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்**
**சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனிற்சேர்வர்**
**அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்**
**கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.**

(கந். நூற்பயன்.ச)

முடிவில்லாத அசுரர்களது வலிமை கெடும்படி கோபித்து அழித்த, சிவந்த வேலாயுதத்தைத் தரித்த கந்தசுவாமியினது இந்தப் புராணத்தை விரும்பிப் படிப்பவர்கள் இந்திர சம்பத்தை உடையவர்களாய் இப்பூவுலகத்திற் சுகானுபவத்தைப் பெற்று நன்றாக வாழ்ந்திருந்து மனத்தில் நினைத்த கருமங்கள் நிறைவேறப்பெற்றுத் தேகாந்தத்தில் சிவபதத்தில் புகுவர்.

இந்த நூற்பயனில், இதனைப்படிப்போர் இந்திரப் பெருவளம் எய்தி, எல்லா இன்பங்களையும் குறைவில்லாமல் அனுபவித்து, மனதில் நினைத்தவை யாவும் நிறைவேறப் பெற்று நன்றாக வாழ்ந்திருந்து.... எனச் சொல்லப்பட்டுள்ளதால் ஆன்மீக நூலாகிய கந்தபுராணம் உலகியலை எவ்வளது சிறப்பித்துள்ளது என்பதனை உணரமுடிகிறதல்லவா.

தமிழின் மிகப்பெரும் **மாக்கதை** களாகிய வைணவக் கம்பராமாயணத்திலும், சைவக் கந்தபுராணத்திலும் நூற்பயன் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. உரைகாரர் இன்னும் விளக்கி, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பயனையும் தரவல்ல நூல்கள் என்பர். அது பெருங்காப்பிய இலக்கணமாகிய "நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி" என்பதற்கிணங்க விளக்கப்படுவதாகக் கொள்ளலாம்.

பெரியபுராணம்

கம்பராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகியவற்றை அந்தந்த நூலாசிரியர்கள் **"மாக்கதை"** என்றே குறிப்பிடுகிறார்கள். கம்பன்

**நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்**
**இடை நிகழ்ந்தஇவ் விராமாவ தாரப்பேர்த்**
**தொடை நிரம்பிய தோமறு** மாக்கதை
**சடையன் வெண்ணெய் நல்லூர்வயிற் தந்ததே.**

(கம்.அவை.கக)

இராமாவதாரம் என்பதுதான் கம்பன் தனது இராமாயணத்திற்கு இட்ட பெயர். **இராமாவ தாரப்பேர்த் தொடைநிரம்பிய தோமறு மாக்கதை** என்கிறான் தனது இராமாயணத்தை. இருப்பினும் வான்மீகி இட்ட இராமாயணம் என்ற பெயர் கம்பன் பெயரோடு பொருந்தி கம்பராமாயணமாயிற்று.

கச்சியப்ப சிவாச்சாரியார் தனது நூலுக்குக் கந்தபுராணம் என்றே பெயரிட்டார். அப்பெயராலேயே இப்புராணம் இப்பொழுதும் வழங்கப்படுகிறது.

**தோற்றம் ஈறின்றித் தோற்றிய சூர்ப்பகைக்**
**கேற்ற காதைக் கெவன்பெய ரென்றிடின்**
**ஆற்றும் ஐம்புலத் தாறுசென் மேலையோர்**
**போற்று கந்த புராணம தென்பதே**

(கந்.அவை-17)

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தின் அவையடக்கப் பாடல்களின் முதற் பாடலில் கந்தபுராணத்தை **மாக்கதை** என்றே குறிப்பிடுகிறார்.

**இறைநில மெழுதுமுன் இளைய பாலகன்**
**முறைவரை வேனென முயல்வ தொக்குமால்**
**அறுமுகம் உடையவோ ரமலன் மாக்கதை**
**சியதோர் அறிவினேன் செப்ப நின்றதே.**

(கந். அவை-01)

பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம் என்ற பெயரில் தனது நூலைப் பாடினாலும் தனது நூலை **மாக்கதை** என்றே குறிப்பிடுகின்றார்.

**எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்**
**நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்**
**தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்**
**கடக் களிற்றைக் கருத்துள் இருத்துவாம்**

(பெரி.வாழ்-03)

பெரியபுராணத்திற்கு நூலாசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இதனையும் இந்நூலைப்படிப்பதால் பெறும் பயனையும் சேக்கிழார் சுவாமிகள் நூற்பெயர் என்ற பகுதியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னாள்**
**தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற**
**பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்கு கின்ற**
**செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்ப**

(பெரிய நூற்)

தான் செய்த நூலின் பெயர் திருத்தொண்டர் புராணம் என்றும், தனது நூலின் பயன்பாடு அகஇருளை நீக்குதல் என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வுலகத்துத் தொன்று தொட்டு புற இருள் அகஇருள் என இருவகை இருள்கள் உண்டு. அவற்றில் புற இருளைப் போக்குவது சூரியன். மனிதரின் உள்ளத்தில் பொருந்தி இருக்கும் அகஇருளைப் போக்குவது திருத்தொண்டர் புராணம் என சூரியனோடு தமது நூலை ஒப்பிட்டுப் பாடுகிறார் சேக்கிழார்.

கந்தபுராணத்தில் போல **"சிவகதி அதனிற் சேர்வர்"** என்று சொல்லாமல், கம்பராமாயணத்தில் போல **"வீடியல் வழியதாக்கும்"** என்றும் சொல்லாமல் அகஇருளைப் போக்கும் நூல் என்றே சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார்.

பெரியபுராண நூற்பயனில் உலகியற்பயன் எதுவும் சொல்லப்படவில்லை. ஆன்மீகப்

பயன் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. ஏனைய புராணங்களைவிட பெரியபுராணம் வித்தியாசமாகவே நூற்பயன்பாடு சொல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

**திருவிளையாடற் புராணம்**

சிவபெருமான் மதுரையில் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் பெரும்பற்றப் புலியூர் நம்பியும், பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணம் என்ற பெயரில் பாடியுள்ளனர். வடமொழி ஆலாசிய மான்மியம் என்ற நூலையே தமிழில் திருவிளையாடற் புராணம் என்ற பெயரில் பாடினர் என்பது வரலாறு.

இரு திருவிளையாடற் புராணங்களிலும் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணமே சிறந்ததென்பதால் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்தில் நூற் பயன்பற்றிய பாடலைப் பார்ப்போம்.

**திங்களணி திருவால வாயெம் அண்ணல்**
**திருவிளையாட் டிவைஅன்பு செய்து கேட்போர்**
**சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்**
**தகைமைதரு மகப்பெறுவர். பகையை வெல்வார்.**
**மங்கலநன் மணம் பெறுவர். பிணிவந் தெய்தார்.**
**வாழ்நாளும் நனிபெறுவர். வானா டெய்திப்**
**புங்கவராய் அங்குள்ள போகம் மூழ்கிப்**
**புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.**

(திருவிளை. புரா 03)

திருவிளையாடற் புராணத்தை அன்போடு கேட்போர் பெருஞ் செல்வங்களான சங்கநிதி பதுமநிதி ஆகிய இருநிதிகளையும் பெறுவர். நல்ல பிள்ளைகளைப்பெறுவர். பகையை வெல்வர். நல்ல மணப்பேறடைவர். நோய் பொருந்தாது. நீண்ட ஆயுளைப் பெறுவர். என உலகியற் பயன்களைக் கூறி விட்டு, வானுலகெய்தித் தேவர்களாய் அங்குள்ள போகங்களில் மூழ்கிப் பின் சிவனடிக்கீழ் சென்று சேர்ந்து வாழ்வர் என்கிறார் பரஞ்சோதி முனிவர்.

திருவிளையாடற் புராணத்தைக் கேட்போரின் பயன்பாடு பெருமளவிற்கு உலகியற் பயன்பாடாகவே காணப்படுகின்றது. அதனால் இதை உலகியல் நூல் என்று கூறமுடியுமா? இதனை ஆன்மீக நூலாகவே தான் சைவர்கள் கொள்கின்றனர்.

**திருவாதவூரடிகள் புராணம்**

கடவுள் மாமுனிவர் அருளிச் செய்த திருவாத வூரடிகள் புராணம் மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாற்றைச் சொல்லுகின்ற புராண நூல். இது ஒரு ஆன்மீக நூல் என்பதில் ஐயமில்லை. இந்த நூலில் பாயிரம் என்ற பகுதியில் நூற்பயன் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

**இந்தவள நற்கதை இயம்பினர், நயந்தே**
**சிந்தையில் நினைப்பவர் செவிப்புலம் நிறைப்போர்**
**புந்திமகி ழப்புவி புரப்பர்உடல் விட்டால்**

**அந்தஉல கந்தனில் அரன் சபையில் வாழ்வார்.**

(திருவாத.பாயி.07)

இந்த வளம்மிக்க நல்ல கதையினைச் சொன்னவர்களும், அன்போடு மனத்தில் நினைப்பவர்களும், கேட்பவர்களும் இம்மையில் மனம்மகிழப் பூமியைப் பாதுகாப்பர். தேக நீக்கத்தின் பின் அந்தச் சிவலோகத்தில் சிவ சந்நிதியிலே வாழ்வர்.

திருவிளையாடற் புராணத்தின் பயன்பாடும் முதலில் இப்பூமியில் இப்பிறவியில் போகங்களை அனுபவித்தலாகவே இருக்கிறது.

இந்த வகையில் சில முக்கியமான ஆன்மீக நூல்களின் பயன்பாடு பற்றிப் பார்த்தோம். வில்லிபாரதத்தில் நூற் பயன்பாடு சொல்லப்படவில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி என்பவற்றிலும் நூற்பயன்பாடு சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**திருக்குறள் நூற் பயன்பாடு**

திருவள்ளுவர் தமது திருக்குறளில் நூற்பயன் என்று தனியாக அதிகாரம் வகுக்கவில்லை. இருப்பினும் முதலாவது அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குறளில்

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழஅர் எனின்.** (குறள்.02)

என்று குறிப்பிடுகிறார். இக்குறளிற்கு டாக்டர் மு.வரதராசனார் பின்வருமாறு உரை எழுதியிருக்கிறார். "தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?"

கற்றதனால் என்ற சொல் இறந்த காலத்தைக் குறித்தது. நூல்களை இதுவரையில் கற்றதனால் உண்டாகிய பயன் என்று கொண்டாலும் அல்லது திருக்குறளைக் கற்று முடித்தபின் இக்கேள்வியைக் கற்றவரிடம் கேட்டுப் பார்த்ததாகக் கொண்டாலும் கல்வியின் பயன் கடவுளை வணங்குதல் என்றே பொருள்தரும்.

**"கற்றதனால் ஆய பயன்"** என வள்ளுவர் தொடங்குவதனால் இதை நூற்பயன் என்ற வகையில் கொள்ளலாம். வள்ளுவரின் இக்குறட்படி எந்த நூலைப் படித்தாலும் அதனால் உண்டாகின்ற உச்சப்பயன்பாடு அல்லது இறுதிப் பயன்பாடு ஆன்மீகமே என்பது உணரப்படுகிறது.

இருப்பினும், ஆன்மீகப் பயன்பாடில்லாத வெறும் உலகியல் நூல்கள் இருந்ததையும், மக்கள் அவற்றைப் படித்துப் பொழுதை வீணாக்கியதையும் வள்ளுவர் அறிந்திருக்காமல் இல்லை.

கல்வி என்ற அதிகாரத்தின் முதற்குறளில் நல்ல நூல்கள், அல்லது கற்கவேண்டிய நூல்கள் என்ற பாகுபாட்டை வள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** (குறள்-391)

“கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும்.” என்பது இக்குறளுக்கு டாக்டர் **மு.வரதராசனாரின** உரை.

**கற்பவை** என்பதற்கு கற்கத் தகுந்த நூல்கள் என்றுதான் யாவரும் பொருள் கொள்கின்றனர். இதிலிருந்து கற்கத்தகாத நூல்கள் இருந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. நாலடியார் என்ற நூலில் கல்வி என்ற அதிகாரத்தில் பலவகை நூல்கள் இருப்பதையும் பலவகைக் கல்வி இருப்பதையும் பின்வரும் பாடல் மூலம் காணமுடிகிறது.

**கல்வி கரையில கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்**
**ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீர்ஒழியப்**
**பாலுண் குருகின் தெரிந்து** (நாலடியார்)

“கல்வியின் பரப்புக்கு எல்லையில்லை. கற்பவரின் வாழ்நாள் எல்லையோ சிறிது. அச்சிறு வாழ்நாளிலும் நுட்பமாக நினைத்துப் பார்த்தால் தோன்றும் நோய்களும் பல உள. ஆதலால் கலந்த பாலில் நீரை நீக்கிப் பாலை மட்டும் உண்ணும் அன்னம்போலத் தெளிவாக ஆராய்ந்து சாரம் மிக்க நூல்களை மட்டுமே சான்றோர் கற்பர்” என இப்பாடலுக்கு உரைவகுத்துள்ளார் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்.

நீர் கலந்த பால்போல, ஆன்மீக நூல்களோடு வெறும் உலகியல் நூல்களும் கலந்துள்ளன. நீரை விலக்கிப் பாலை உண்ணும் அன்னம்போல உலகியல் நூல்களை விலக்கி ஆன்மீக நூல்களைக் கற்றுப் பயன் பெறவேண்டும் என்பது இவரது கருத்து.

எனவே **கற்பவை** என்று வள்ளுவர் குறிப்பிடும் நூல்களும், **தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே**’ என்பதில் நாலடியார் குறிப்பிடும் நூல்களும் ஒரே வகையான நூல்களே என்பது புலப்படுகிறது.

இந்த நூல்களைக் கசடறக் கற்றபின் கற்றபடி ஒழுகவேண்டும், ஷஅதற்குத் தக நிற்க வேண்டும்’ என்ற தொடரில் வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார் என்பதைக் “கற்றதனால் ஆய பயன் என்கொல்” என்ற குறளில் வள்ளுவர் விளக்கியிருக்கிறார். வாலறிவன் நற்றாள் தொழுதலே கற்றபின் அதற்குத் தக நிற்றலாகும்.

இந்த வகையில் மட்டுமின்றி மெய் உணர்தல் என்ற அதிகாரத்தில் அறிவின் பயன்பாடு பற்றித் தனியாகப் பின்வருமாறு சொல்கிறார்.

**பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு.** (குறள்-358)

“பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்புணர்வு” என டாக்டர் மு.வரதராசனார் இக்குறளுக்கு உரைவகுத்துள்ளார்.

இங்கு அறிவு என்பதை அதிகாரத் தலைப்புக்கு ஏற்ப மெய்யுணர்தல் என்று குறிப்பிட்டாலும் அறிவின் பயன்பாடு செம்பொருள் காண்பதே. பிறப்பு என்னும், அறியாமையினால் வரும் துன்பத்தைப் போக்கும் செம்பொருளாகிய இறைவனைக் காண்பதே அறிவு என்பது கருதத் தக்கது.

திருக்குறளில் 70 அதிகாரங்கள் பொருட்பால். 25 அதிகாரங்கள் இன்பத்துப்பால், அறத்துப்பால் 38 அதிகாரங்கள் மட்டுமே. அறத்துப்பாலிலும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறனில் விழையாமை, என்ற வரிசையில் இல்லற இயல் உலகியலையே பேசுகிறது. துறவறவியலிலும் நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், ஊழ் தவிர்ந்த ஏனையவை அறத்தை வலியுறுத்துவனவாகவே இருக்கின்றன.

வள்ளுவர் உலகியலைச் சொன்னாலும், அறத்தை வலியுறுத்தினாலும் அவருள்ளம் ஆன்மீகத்திலேயே நிற்கிறது. உலகில் ஒழுக்கம் சரியாக இருந்தால் தான் ஆன்மீகம் தளைக்கும். உலகியல் ஒழுக்கத்திற்கு அறம் அவசியம். அறத்தை உணர்ந்து உலகியலில் ஈடுபட்டால் ஆன்மீகம் சிறக்கும் என்பது பொதுவான கருத்து. வள்ளுவரும் இதனை மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

"உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்'' என்று இக்குறளுக்கு டாக்டர்.மு.வரதராசனார் உரைவகுத்துள்ளார்.

உலக வாழ்வை அறவாழ்வாக வாழ்ந்தால், அறத்தோடு பொருந்த உலகியலை அனுபவித்து வாழ்ந்தால், ஆன்ம ஈடேற்றம் கிட்டும் என்பதே வள்ளுவரின் கருத்தாகும்.

வள்ளுவர் சமணரா, பௌத்தரா, இந்துவா என்ற சர்ச்சைகளுக்கு அப்பால் வள்ளுவர் ஆன்மீகவாதியாக இருந்திருக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

அவர் திருக்குறளில் கூறிய கருத்துக்களுக்கேற்ற வாழ்க்கையை வாழ்ந்தால், கற்றபடி நின்றால் இறையருள் கிடைக்கும். தூய அறிவினனாகிய கடவுளது நல்ல பாதங்களை வழிபடச் செய்வதே திருவள்ளுவர் பாடிய திருக்குறளின் பயன்பாடு என்பதால் **திருக்குறள் ஓர் ஆன்மீக நூல்** என்று குறிப்பிடுவதில் தவறேதும் நிகழாது.

எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்ற பொதுவான ஆன்மீக நூலாகத் திருக்குறளை ஏற்றுக்கொள்வதில் எந்தச் சங்கடமும் இல்லை.

(நன்றி: வவுனியா சேக்கிழார் மன்றம். திருக்குறள் ஓர் ஆன்மீக நூலா உலகியல் நூலா' பட்டிமண்டபம். செல்வி. பண்டிதை யோகலக்சுமி சோமசுந்தரம். இவ்வாய்வுக்கு வித்திட்டவர்)

உ
சிவமயம்

# பக்தி இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும்

செல்வி.தர்மராஜா அநிந்திதை B. A (Hons) Dip. in. English

மனித உணர்ச்சிகளுக்கு உருக் கொடுக்கும் ஓர் உன்னத முயற்சியாக அமைகின்ற இலக்கியப் பரப்பிலே, பக்தி இலக்கியங்கள் உள்ளத்தை உருக்கும் சிறப்பு வாய்ந்தவை. தமிழ் மொழிக்கே உரித்தான சிறந்த மரபாகப் பக்தியைப் போற்றுமளவிற்குத் தமிழிலக்கியங்களிலே பக்தியுணர்வு ஊற்றெடுத்துப் பிரவாகித்துள்ளது.

பக்தி அனுபவத்தில் ஈடுபடும் புலவன் ஒருவனின் உணர்ச்சி வெளிப்பாடான தன்னுணர்ச்சிப் பாடல் வகையினையே பக்தி இலக்கியங்களில் அதிகம் தரிசிக்க முடிகின்றது. இவை தற்சார்பு, நேரடித் தன்மை, எளிமை, தங்கு தடையற்ற இயல்பான வெளிப்பாடு, சொற்சுருக்கம் போன்றவற்றின் மூலம் தன் மனதிற்குத் திருப்தியையும் கேட்போரைப் பிணிக்கும் தன்மையையும் கொண்டு விளங்குகின்றது.
பக்தி இலக்கியத்திற்கெனச் சில பிரதான பண்புகளைக் கூற முடிகின்றது.

- வடிவ வழிபாடு
- குறிப்பிட்ட தெய்வத்தின் பால் நீங்கா பேரன்பு
- பலனை எதிர்பாராத மனநிலை
- திருவடிப் பேற்றினையே விரும்பல்
- புராணச் செய்திகளில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்தல்
- அவனே அனைத்தும் என்ற சரணாகதி நிலை
- இறைவனைப் புகழ்ந்து பாடுதல்

போன்றவற்றைக் கூறலாம்.

இவ்வாறான பக்தி இலக்கியத்தின் பண்புகள் சங்ககாலப் பிற்பகுதியில் தோற்றம் பெற்றவையாகிய திருமுருகாற்றுப்படை, பரிபாடல் இலக்கியங்களிலே ஊடுருவியிருக்கும் தன்மையைச் சுட்டிச் செல்வதாக இக்கட்டுரை நகர்கின்றது.

சங்க காலத்தில் அக, புற இலக்கிய மரபின் தொடர்ச்சியாகப் பக்தி தோற்றம் பெற்றதை இவ்விரண்டு இலக்கியங்களிலும் காண முடிகின்றது. மேலும் நிறுவன மயப்படுத்தப்படாத ஒரு தனித்துவத்தையும் அடையாளம் கண்டு கொள்ளலாம். அதாவது இயற்கை வழிபாடு அச்சத்தை உண்டு பண்ணிய எல்லாப் பொருட்களிலும் பக்தி கொள்ளும் நிலை, பண்டமாற்றான பக்தியுணர்வு, கூட்டு வழிபாடு போன்றதான ஒரு சூழ்நிலையிலேயே இவை தோற்றம் பெற்றிருப்பது, பக்தி இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

திருமுருகாற்றுப்படை

சங்க இலக்கியங்களிலே முருகன், திருமால் முதலியோரைப் பற்றிய பாடல்கள் ஆங்காங்கே காணப்பட்ட போதிலும், நீண்ட ஒரு பக்திப் பாடலாகத் திருமுருகாற்றுப்படையினையே கூறலாம்.

தமிழ் மக்களின் தனித்துவமான வழிபாடாக இருந்த முருக வழிபாட்டிலே ஆரியக் கலப்பு ஏற்படத் தொடங்கியிருந்த நிலையைத் திருமுருகாற்றுப் படையில் காணலாம். திராவிடத் தெய்வமாகிய முருகனும் ஆரியக் கடவுளாகிய ஸ்கந்தனும் இணைகின்ற முருக - ஸ்கந்த இணைப்பைக் காட்டி நிற்கின்றது. இப் புதிய மரபினைப் பக்தி இலக்கியங்களில் ஏற்பட்ட ஒரு மறுபரிமாணம் எனலாம்.

திருப்பரங்குன்றம் முதல் பழமுதிர்ச்சோலை வரையுள்ள ஆறு படைவீடுகளிலும முருகப்பெருமான் உறைந்து அடியார்க்கருளும் இயல்பையும் அவனை வழிபடும் முறையையும் திருமுருகாற்றுப்படை விளக்கி நிற்கின்றது.

முதற் பகுதியாகத் திருப்பரங்குன்றத்தின் மலைக் கோயில் பற்றியும் அதனைச் சூழ்ந்துள்ள இயற்கை வளம் பற்றியும் சூரர மகளிரின் நிலை பற்றியும் முருகனின் திருக்கோல வர்ணனை பற்றியும் சூரனுடன் செய்த போரின் சிறப்புப் பற்றியும் அழகாகக் காட்டப்பட்டுள்ளன.

வடமொழிப் புராணக் கதைகளின் தாக்கம் இதில் நிறையவே உண்டு. முருகன் சூரனைச் சங்கரித்தமை, மாமரத்தை இரு கூறாக்கியமை போன்ற புராணச் செய்திகள் எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே கூறப்பட்டுள்ளன.

"பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடித்த சுடர்இலை நெடுவேல்......

புராணக் கதைகளில் வரும் முருகன் பற்றிய வர்ணனையை அடிப்படையாகக் கொண்டு அவனை ஆறு திருமுகங்கள் கொண்டவனாக வர்ணிக்கும் போக்கையும் காணலாம். திருச்செந்தூர் பற்றிய பகுதியில் ஒவ்வொரு முகமும் எவ்வாறு செயற்படுகின்றது என்று விளக்கப்பட்டுள்ளது.

"மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத் தன்றே....."

திருவாவினன்குடி பற்றிய பகுதியில் முருகனை வழிபடும் முனிவர்களின் பெருமையும் வழிபாட்டுக்கு வரும் மகளிரின் இயல்பும் கூறப்பட்டிருப்பதோடு, முருகன் தெய்வானையம்மையோடு உறையும் சிறப்பும் விளக்கப்பட்டுள்ளது.

முருகனை அனுதினமும் வணங்கிப் பூசனை புரியும் அடியார்களையும் அவ்வழிபாட்டு முறைகளையும் திருவேரகம் பற்றிய பகுதியில் கூறப்பட்டுள்ளது. ஆலயத்தினுள்ளே நடைபெறுகின்ற தூப, தீப ஆராதனை, பூக்களைக் கொண்டு மந்திரங் கூறி நிகழ்த்தப்படுகின்ற ஒரு ஆரியக் கலப்பிலான வழிபாட்டு முறையினையே காணமுடிகின்றது.

குன்றுதோறாடலில் மலைநாட்டுக் குறுவர்களின் வழிபாடும் குரவைக் கூத்து ஆடி வழிபடும் முறைகளும் அவர்களுக்கு அருள்பாலிக்கும் திறமும் விளக்கப்பட்டுள்ளன. இங்கு பூவும் நறும் புகையும் இட்டு, தவமும் விரதமும் அனுஷ்டித்துப் பண்கலந்த பாடல்கள் பாடி முருகனை வழிபடும் கோயில் அமைப்புக்கு வெளியே இடம்பெறுகின்ற மறத்தமிழரது வழிபாட்டு நிலையினைத் தரிசிக்க முடிகின்றது.

பழமுதிர்ச்சோலையில் முருகனை வழிபடும் நிலை கூறப்பட்டுள்ளது. சிறிய தினை அரிசியையும் பூக்களையும் பரப்பி வைத்து, ஆட்டை அறுத்துக் கோழிக் கொடியை நிறுவி விழாக் களம் அமைக்கப்படுகின்றது. குறமகள் ஆவேசம் கொண்டு தன்மேல் முருகனை வரவழைக்கின்றாள். இதன் பின்பு பலம் பொருந்திய ஆட்டுக் கடாய்களை வெட்டி, அவற்றின் இரத்தத்தோடு தூய வெள்ளை அரிசியைக் கலந்து நிவேதனம் செய்கின்றாள். இவ்வாறான வெறியாடு களத்திலே முருகன் உறைவதாகவும் நம்பிக்கையுடன் வழிபடுகின்றனர்.

பரிபாடல்

திருமுருகாற்றுப் படையில் நடைபெறத் தொடங்கிய முருக - ஸ்கந்த இணைப்பு பரிபாடலில் ஒரு முக்கிய கட்டத்தை அடைவதைக் காணலாம். முருகனின் வரலாற்றுடன் தொடர்புபட்ட புராணக் கதைகள் பரிபாடலின் செவ்வேள் பற்றிய பாடல்களில் நிறையவே வருகின்றன.

பரிபாடலிலே இன்று நமக்குக் கிடைத்துள்ள பாடல்களிலே திருமாலுக்குரிய பாடல்கள் ஏழும் முருகனுக்குரிய பாடல்கள் எட்டும் வையைக்குரிய பாடல்கள் ஒன்பதும் அடங்குகின்றன.

"நீயே வரம்பிற்றிவ் வுலக மாதலிற்
சிறப்போய் சிறப்பின்றிப் பெயர்குவை......"

போன்ற அடிகள் முருகன் சர்வமும் தானேயாகி எங்கும் வியாபித்து நிற்கும்

எல்லையற்ற தன்மையை விளக்கி நிற்கின்றது. முருகனின் தோற்றப் பொலிவும் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது.

"மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமு மரனும் வாளும்...."

பரிபாடல் காலத்திற்குப் பின்னரே தெய்வயானையம்மை மனைவியாக இடம் பெற்றமையையும் அறிய முடிகின்றது. முருகனின் பராக்கிரமத்தைப் புகழ்ந்து பாடி வாழ்த்துப் பாடல்கள் பல காணப்படுகின்றன.

"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச்
சேயுயர் பிணிமுகம் ஊர்ந்தம ருழக்கித்........."

உலகியல் வாழ்வு இன்பமளிப்பவை என்னும் உணர்வை இக்கால மக்கள் கொண்டிருந்ததால் தாமும் தமது சுற்றமும் பாதுகாப்பான இன்ப வாழ்வைப் பெறவேண்டுமென இறையிடம் அவாவியதைப் பாடல்கள் சான்று பகர்கின்றன.

பரிபாடலில் பெருமளவிலான பாடல்கள் இம்மைப் பயனை வேண்டிய மக்களின் வழிபாட்டு முறைகளையே குறிப்பிடுகின்றன. முருகனிடம் அன்பு, அருள், அறம் ஆகிய மூன்றையுமே வரமாகக் கேட்டு மகிழ்ந்துள்ளனர்.

"....... யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனு......"

அக்கால மக்களின் இறை சிந்தனை, நம்பிக்கை, வேலனாக, முருகனாக, கந்தனாகச் செவ்வேளை ஏற்கும் திறன் பல்வேறு வழிபாட்டு முறைகள், சமூக நல்லிணக்கம் அவற்றையே வரமாக வேண்டும் பரந்த மனப்பாங்கு போன்றவற்றையெல்லாம் பரிபாடலின் உள்ளே தரிசிக்க முடிகின்றது.

எனவே பக்தி இலக்கியத்தின் ஆரம்ப கட்டத்தைச் சங்க இலக்கியங்களான திருமுருகாற்றுப் படை, பரிபாடல் வழியாக அறிந்து கொள்வதோடு பக்தியுணர்வினுள் ஆழ்ந்து பரவசிக்கவும் முடிகின்றது.

உ
சிவமயம்

# அன்னதான விஷேசமும் செய்யும் முறையும்

பண்டிதை செல்வி. யோகலக்சுமி சோமசுந்தரம் B.A Dip. in Edu

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமைஅமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையா மெனில்உலகர் முன்வருக எனஉரைப்பார்

- என்பது பெரியபுராணம் -

எனவே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுடம்பைப் பெற்ற காலத்தில் தம்மால் இயன்ற அளவு தான விஷேசங்களைச் செய்ய வேண்டும். தானங்கள் அன்னதானம், பானதானம், கோதானம், வஸ்திரதானம், படுக்கைதானம், குடைதானம், ஆசனதானம், பாதுகாதானம் என எட்டு வகைப்படும். இவற்றுள் தலையாயது அன்னதானமேயாகும். **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தேரே.** என்றார் குட புலவியனார்.

அதாவது அன்னத்தைக் கொடுத்தவன் பிராணனைக் கொடுத்தவன் ஆகின்றான். எனவே உணவு கொடுத்தவன் சகல தானங்களையும் கொடுத்தவனாகக் கருதப் படுகின்றான்.

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்"

ஆதலின் பசி அதிகரித்த காலத்தில் ஜீவ அறிவு, விளக்கம் இல்லாமல் மங்குகிறது. அறிவுக்கு அறிவாகிய இறைவனைப் பற்றிய எண்ணம் மறைபடுகிறது. குணங்கள் பேதப்படுகின்றன. மனம் தடுமாறுகின்றது. புத்தி கெடுகின்றது. சித்தம் கலங்குகின்றது. அகங்காரம் அழிகின்றது. கை, கால் சோர்வடைகின்றது.

எனவே பசி எல்லோருக்கும் பொதுவானது. உலகம் முழுவதையும் ஆளும் மன்னராயினும், அஞ்சாது போரிடுகின்ற ஆற்றல் மிக்க வீரனாயினும் முற்றும் துறந்த முனிவராயினும் பசி நேரிட்ட போது தங்கள் தங்கள் இலட்சியங்களை மறந்து உண்ணும் உணவுக்காக ஓடித்திரிகிறார்கள்.

ஔவையார் சிறந்த மதிநுட்பம் வாய்ந்த புலவர். பழுத்த ஞானி. எனினும் அவர் உணவுக்காகப் பட்ட கஷ்டம் சொல்லும் தரம் அன்று. வழுதி கல்யாணத்தில் உணவு உண்பதற்காகத் தான் பட்ட கஷ்டத்தை அழகான பாடல் ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**நெருக்குண்டேன். தள்ளுண்டேன், நீள்பசியினால் வயிறு**
**சுருக்குண்டேன் சோறு உண்டிலேன்.**

எல்லாம் உண்டேன். ஆனால் சோறு மட்டும் உண்ணவில்லை. அவர் மட்டுமா? காளமேகப் புலவரையும் கேட்டுப் பாருங்கள்.

**கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போதில் அரிசிவரும் - குத்தி**
**உலையிலிட ஊர்அடங்கும் ஓர்அகப்பை அன்னம்**
**இலையிலிட வெள்ளி எழும்**

எனவே பசி மனிதனைக் கட்டிப் போடுகிறது. அதனாலேயே பசியைப் '**பசிப்பிணி**' என்றார் வள்ளலார்.

பசி என்ற நெருப்பை ஆற்றுவதே ஜீவகாருண்யம். பசி வந்திட மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காமம் ஆகிய பத்துக் குணங்களும் பறந்துவிடும். ஆதலால் பசியை நிவர்த்தி செய்வதே சிறந்த வழி.
**அன்ன விசாரம் அதுவே விசாரம்**

மனிதன் மனிதனாக வாழவேண்டும். அவனது அமைதிக்கும் நிம்மதிக்கும் இடையூறாக இருப்பது பசி.
**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பாடு அரிது**

என்பது குறள் எனவே பசி வந்துள்ள போது ஒருவரால் எதையும் செய்ய முடியாது. இதனாலேயே பாரதியார்.
**தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்.**

- என்றார்.

எனவே ஒருவர் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமானது. என்பது யாவரும் அறிந்த உண்மை. பசி மனிதத்தன்மைகளோடு கூடிய மனித விழுமியங்களை அழித்துவிடும். அதனால் சமூகம் சீரழிந்துவிடும். எனவே சமூகத்தில் ஏற்படும் சீர்கேடுகளுக்கு எல்லாம் மூலகாரணம் பசிப்பிணியே.

மனிதனுக்கு மட்டுமே சக்தியும் புத்தியும் உண்டு. அவன் அவற்றைப் பயன்படுத்தி நல்வழியில் சென்று நற்காரியங்களைச் செய்யவேண்டும்.
**அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**

**தன்நோய்போல் போற்றாக் கடை**

- என்பது குறள் -

எனவே அறிவின் பயன், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ஆகும்.

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"**

என்பதை உணர்ந்து மனித விழுமியங்களைக் கடைப்பிடிப்பதால் சமூகத்தில் உறுதிப்பாட்டையும் ஒருமைப்பாட்டையும் நல்லுறவையும் பேணமுடியும்.

**ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்**
**இருநாளுக் கேலென்றால் ஏலாய் - ஒருநாளும்**
**என்னோ அறியா இடும்பைகூர் என்வயிறே**
**உன்னோடு வாழ்தல் அரிது** - நல்வழி -

எனவே உணவின்றி வாழமுடியாது என்பது யாவரும் ஏற்றுக் கொண்ட உண்மை. ஆகவே நம்மால் செய்யப்பட வேண்டிய தானம் அன்னதானம் ஆகும்.

தர்மம் தலை காக்கும்

ஆகவே நாம் அறச் செயல்களில் ஈடுபடவேண்டும். என்பது தெளிவு

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று**

- என்றார் வள்ளுவர் -

பகுத்தறிவும் சிந்திக்கும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவன் மனிதன் மட்டுமே. நல்லவற்றை இனங்கண்டு கொள்ளவும் தீயவற்றை உணர்ந்து தவிர்த்துக் கொள்ளவும், பலவற்றை ஆய்வு செய்யவும் புதியனவற்றைப் படைக்கவும் ஆற்றல் பெற்றவன் மனிதன்தான். அதனாலேயே

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது

- என்றார் ஔவையார் -

எனவே பிறவிகளில் எல்லாம் தலையாயது மானிடப் பிறவியே. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாரறிவார்? சீட்டுக்கட்டு நம் கைவசமே உள்ளது. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தி செயல்களைத் தெரிந்து செய்ய வேண்டியது நம் கடமை. நாம் செய்கின்ற செயல்களே எமது கர்ம வினைகளிற்குக் காரணம்.

அறத்தால் வருவதே இன்பம்

என்பதனை உணர்ந்து அறவழியில் எம்மைத் திசைதிருப்பி வழிநடத்த வேண்டும்.

**படமாடக் கோயில் பரமர்க்கொன் றீயின்**

நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில் பரமர்க் கதாமே - என்றார் திருமூலர்

இளையான் குடிமாற நாயனார் அப்பூதியடிகள் ஆகியோர் அடியார்க்கு உணவு அளிக்கும் பணியில் முனைப்புடன் செயற்பட்டவர்கள்.

ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடு -ஆராதனை, அடியவர்களுக்குச் செய்யும் வழிபாடு சமாராதனை, சம - நன்றாக, ஆராதனை - வழிபாடு செய்தல்.

விண்ணுற அடுக்கிய விறகுக் கட்டில் நெருப்புப் பொறி ஒன்று விழுமானால் அவ்வளவும் எரிந்தும் கரிந்தும் சாம்பலாகும். அது போல நாம் செய்யும் பாவங்கள் அனைத்தும் அடியார்க்கு அன்னமிடுவதால் சாம்பராகும்.

கட்டத் துணியற்றுக் காந்துபசிக் கன்னமற்று
எட்டி மரமொத் திருந்தயான் - ஒட்ட
எறும்பிற்கு நொய்யரிசு இட்டேன் அதனால்
சிறிதுபொருள் ஈந்தான் ஈசன்

அப்பொருள் கொண்டீசன் அடியார்க்கு அன்னமிட்டேன்
ஒப்புவமை இல்லான் உளமுவந்தே - இப்பார்
அளகேசன் என்றே அதிசயிக்கச் செல்வம்
அளவிலா ஈந்தான் அவன்

என்ற வெண்பாக்கள் அன்னதானத்தின் பலனை எடுத்துக் கூறுகின்றன.

அன்னதானம் சகல தானங்களிலும் விஷேசமானது. புண்ணிய ஆத்மாக்களும் அன்னதானம் செய்தவர்களும் இயமலோகத்தைக் கடந்து செல்கையில் கிழக்கு வாசல்வழி செல்கிறார்கள். கிழக்கு வாசல்வழி மிகவும் சுலபமானதும் அதிக தூரமில்லாததுமாகும். அத்துடன் அவர்களுக்கு யமபயம், பசி, தாகம், களைப்பு ஏதும் இல்லை. எனவே நரக வேதனைகளில் இருந்து விடுபட சுலபமான வழி அடியார்க்கு அன்னமிடுதல் ஆகும்.

ஆகார சுத்தே ஸத்வ சுத்தி

ஆதலால் நாம் உண்ணும் உணவின் தன்மையைப் பொறுத்ததே எமது மனதின் நிலையும் உடம்பின் தன்மையும் காரியங்கள் செய்வதும் அமையும். எனவே தூய உணவு தூய எண்ணங்களைத் தரும்.

பீஷ்மரும் துரோணரும் நன்மக்கள். பெருமையிற் சிறந்தவர்கள். சிறப்பான தகுதி பெற்றவர்கள். எனினும் தவறான வழியில் பாரதப் போரில் துரியோதனனுக்காக நின்று

போரிட்டார்கள். தவறான எண்ணம் நிறைந்தவர்கள் வீடுகளில் தயாரித்த உணவைச் சாப்பிட்டால் எண்ணங்களும் பாதிக்கப்பட்டு புத்தியும் கெட்டுப் போகும். இதற்கு இவர்களும் விதிவிலக்கல்ல.

எனவே உணவு நல்ல முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை நிச்சயம் செய்து கொள்ள முடியாத நிலையில் இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைத்துவிட்டுப் பிரசாதமாக அதனை ஏற்றுச் சாப்பிடலாம். இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்படும்போது யக்ஞத்தில் ஆகுதி அளிக்கப்படுவதைப் போல உணவு தூய்மையடைகிறது. எனவே ஆலயங்களில் அன்னதான மண்டபம் அமைக்கப்படும் போது அங்கு வழங்கப்படும் உணவு இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்படுவதால் அவ்வுணவு தூய்மையானதாக அமைகிறது. இதனால் பலரும் பயனடைவர்.

அதிதி தேவோ பவ

என்பது எமது பாரம்பரியப் பண்பு. அதிதி என்பவர் முன்னறிவிப்பு இல்லாமல் வருபவர். திதி - குறிப்பிட்ட நாள். அதிதி என்பவர் ஒரு நாளைக் குறிப்பிடாமல் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி வருபவர். விருந்தோம்புதல் இந்து மதத்தின் சம்பிரதாயம். இந்த சம்பிரதாயம் காலங்காலமாகப் பேணப்பட்டு வருகின்றது.

எனவே உறவினரோ நண்பரோ சம்பந்தப்படாத ஒருவரை வரவேற்றுக் கௌரவப்படுத்த வேண்டும். அன்ன சத்திர மடங்களே இதற்குப் பெரிதும் உதவுகின்றன. மனிதத் தன்மைகளோடு கூடிய மனித விழுமியங்களைப் பேணி வாழும்போதே மனிதன் பெறுமதி மிக்கவனாகிறான். அதிதி பூசை, மகேஸ்வர பூசை எனப்படும். ஆலயங்களை அடுத்து அன்னதான மடங்கள் அமைக்கப்படும் போது இப்பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கு அவை உதவுகின்றன.

**பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைபிறந்து மண்மேல்**
**இறக்கும் பொழுது கொடுபோவது இல்லை - இடைநடுவில்**
**குறிக்கும் இச்செல்வம்**

ஆகவே எமது பணத்தை நற் காரியங்களில் செலவிடுதல் சிறந்த தலையாய பணி.

**அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே**

மகேஸ்வர பூசையின் போது ஓத வேண்டிய தேவாரம் ஓதிப் பயன்பெறுக.

உ
சிவமயம்

# பண்டிகைகளின் தத்துவங்கள்

இந்து மதத்தில் தான் எத்தனை யெத்தனை பண்டிகைகள்! அத்தனையுமே அரிய பல தத்துவங்களைத் தன்னகத்தே கொண்டவைகளாகும். தத்துவங்களைச் சொல்வதுடன் மட்டும் இல்லாமல் நம்முடைய பண்பாடு கலாசாரம் போன்றவைகளை நமக்கு அவ்வப்போது நினைவு படுத்துவது கூடவும் பண்டிகைகள் தான்.

எல்லாவற்றையும் விட பண்டிகைகளின் தனிச்சிறப்பு, எல்லோரையும் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்று எந்த ஒரு பேதமும் இல்லாமல் எல்லோரையும் மகிழ்ச்சி அடைய வைப்பது தான். பொருளாதார ரீதியில் வேண்டுமானாலும் மகிழ்ச்சியின் பரிமாணம் கூடக் குறைய இருந்தாலும் அடிப்படையானது மனதின் மகிழ்ச்சி தானே! இப்படி எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்த எத்தனை பண்டிகைகள் வேண்டுமானாலும் கூட நாம் விமரிசையாக கொண்டாடலாம்.

இப்போதைக்கு நாம் கொண்டாடக் கூடிய பண்டிகைகள் என்னென்ன தத்துவங்களை, நெறிமுறைகளை நமக்கு நினைவுறுத்துகின்றன என்பதை தீபாவளி கொண்டாடும் நேரத்தில், சிந்தித்துப் பார்க்கலாமே!

பிரணவ ஸ்வரூபியான பிள்ளையாரைப் போற்றிக் கொண்டாடும். விநாயக சதுர்த்தியில் ஆரம்பிப்போம். உலக இயக்கத்தின் ஆதாரமே ஓம்காரம் தான். அந்த ஓம்கார வடிவினனாகத் தோன்றும் பெருமானே விநாயகப் பெருமான். ஆண்டு தோறும் ஆவணி மாதம் சுக்கில பட்ச சதுர்த்தியன்று நாடெங்கிலும் விநாயக சதுர்த்தி விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. எல்லோரும் தங்கள் சக்திக்கேற்ப களிமண்ணால் செய்யப்பட்ட பிள்ளையார் திருவுருவங்களை வாங்கி வீட்டில் வைத்து, சுண்டல், கொழுக்கட்டை என்று நிவேதனம் செய்து வணங்கி, மகிழ்ச்சி அடைகிறார்கள். இதனால் விநாயகர் திருவுருவம் செய்பவர்கள், கூடை செய்பவர்கள் என்று பலதரப் பட்டவர்களுக்கு உழைக்கவும், அதன்மூலம் பொருள் ஈட்டவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

எனக்குத் தெரிந்து, ஏழைச்சிறுவர்கள் பிள்ளையார் சதுர்த்திக்கு முந்தினநாளே, பல இடங்களில் கேட்பாரற்றுக் கிடக்கும் எருக்கம் செடிகளில் உள்ள எருக்கம் பூக்களைப்பறித்து, பொறுமையாகத் தொடுத்து விற்பதையும், அதன் மூலம் கிடைக்கும் பணத்தில் பள்ளிப் புத்தகங்களோ அல்லது சீருடை வாங்கவோ பயன்படுத்திக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன்.

நம் நாடு அந்நியரின் ஆதிக்கத்தில் இருந்த போது, இந்திய மக்களை ஒருங்கிணைக்கவும், அவர்கள் உள்ளத்தில் ஒற்றுமையுணர்வை ஏற்படுத்தவும் வேண்டி மகாராஷ்டிராவில் பாலகங்காதர திலகர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது தான்

விநாயகர் ஊர்வலம். இன்றைக்கும் அது அவசியம் தான் என்றாலும் கூட, சூழலுக்கேற்ப சமயப் பெரியோர்கள் வகுத்துத்தர வேண்டியது அவசியம் என்பதே என் எண்ணம்.

பெரிய பெரிய அளவுகளில் பிளாஸ்டர் ஆ.ஃப் பாரிஸில் செய்யப்பட்ட பிள்ளையார் சிலைகளைக் கடலில் கரைக்கும் போது சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. அதை தவிர்த்தால் மட்டுமே வருங்கால சமுதாயத்திற்கு வளமான சுற்றுச் சூழலை பொக்கிஷமாக நம்மால் விட்டுச் செல்ல முடியும்.

அடுத்து நவராத்திரி. எனக்குத் தெரிந்த வரையில் உலகில் பெண்களைத் தெய்வமாக மதிக்கும் ஒரே நாடு நம்முடைய இந்தியா தான். உள்ளபடியே நாம் பெருமிதப்படவேண்டிய விஷயம் இது. இயக்கத்திற்கு அடிப்படையான சக்தியையே நாம் அன்னையாக, அம்பிகையாக வழிபடுகிறோம்.

ஜகன்மாதாவின் குழந்தைகளான நாம் அம்பாளை மட்டுமே புரட்டாசி மாதத்தில் ஒன்பது இரவுகள் மகிழ்ச்சிப் பூரிப்புடன் கொண்டாடி மகிழ்கிறோம்.

நாம் எல்லோருமே அம்பாளின் குழந்தைகள். ஒரு குழந்தை பொழுதெல்லாம் ஆடிப்பாடி, ஓடித்திரிந்திருந்தால் இரவு வந்துவிட்டால் அம்மாவின் மடியைத் தஞ்சம் அடைந்து விடும். அதே போல் புரட்டாசி மாதம் உலக மக்களாகிய நமக்கு இரவின் தொடக்கப் பொழுதாகும். எப்படி யென்றால் நம்முடைய ஓர் ஆண்டானது தேவர்களுக்கு ஒரு நாள். அந்த வகையில் நம்முடைய ஒரு மாதம் அவர்களுக்கு இரண்டு மணி நேரம். மார்கழி மாதம் அதிகாலை 4 மணி முதல் 6 மணி ஆகும். புரட்டாதி மாதம் இரவு 10 மணிமுதல் 12 மணியாகும் ஆக சரியான வேளையில்தான் ஜகன்மாதாவின் குழந்தைகளான நாம் அம்பிகையைச் சரணடைகின்றோம். நவராத்திரியின் தாற்பரியம் மற்றும் தத்துவம் பற்றியும் பார்ப்போம்

நவராத்திரியின் தாற்பரியமே 9 நாள் கொலுவில் அடங்கி விடகிறது. கொலுவில் படிப்படியாக அமைக்கப்படும் பொம்மைகளின் வரிசையைப் பார்த்தால் உயிர்த் தோற்றத்தின் பரிணாம வளர்ச்சியை உணர்த்துவதை காணலாம். மரம், செடி, கொடிகள், மலர், காய் , கனிகள், விலங்குகள், மனிதர்கள், தேவர்கள் என்று படிப்படியாக உயர்ந்து மேலாக அம்பாள் இராஜ இராஜேஸ்வரியை கலசத்தில் ஆவாகனம் செய்து வழிபடுகிறோம்.

இந்த 9 நாட்களும் மற்றவர்களை நம் வீட்டுக்கு அழைக்கவும், நாம் மற்றவர் வீடுகளுக்குச் செல்லவும் செய்கிறோம். இதனால் ஒற்றுமையும் நட்புணர்வும் வலுப்படுவதுடன் முன்னதாக ஏற்பட்டிருந்த சிறு சிறு கருத்து வேற்றுமைகளும் கசப்புணர்வுகளும் கூட மறக்கடிக்க படுகின்றன.

சில நேரங்களில் நவராத்திரி கொலுவில் வைத்துப் பெண் பார்க்கும் வைபவங்களும், திருமணங்கள் நிச்சயம் ஆவதும் கூட நடைபெறுகிறது. சிறு பெண் முதல் முதிர்ந்த சுமங்கலிப் பெண் வரை பெண்களை அம்பாளின் வடிவமாகக் கருதி பூசைகளும்,

சிறப்புகளும் செய்வது தான் நவராத்திரியின் தனிச்சிறப்பு என்று சொல்லலாம். ஒன்பதாவது நாள் கல்விக் கடவுளான சரஸ்வதியை வழிபட்டு, அதன் மூலம் நாம் பெறும் அறிவைக் கொண்டு வாழ்க்கையை நல்லபடி அமைத்துக் கொள்ளச் செய்யும் செயல்கள் யாவும் வெற்றிகரமாக நடைபெற மறுநாள் விஜயதசமி அன்று ஆதி சக்தியை துர்க்கையாக எண்ணி வழிபடுகிறோம்.

இனி தீபாவளிப் பண்டிகையைப் பார்ப்போம். தாய் மிக மிகப் பொறுமையானவள் தான். ஆனால் அதற்காகத் தன் பிள்ளை கொடூரனாக இருந்தால் விட்டு விடுவதில்லை. பொறுக்கும் வரை பொறுக்கிறாள். பொறுமை எல்லை மீறிப் போகும் போது அவனை அழிக்கவும் துணிகிறாள். இதனையே நரகாசுரனின் வதம் நமக்கு உணர்த்துகிறது.

பூமி தேவியின் மகனாகப் பிறந்த நரகாசுரன் தன் தாயின் முன்னிலையில் தன் தாயின் துனையுடனே தன்னைக் கொல்ல முடியும். என்பதாக வரம் பெற்றான். பெற்ற வரத்தினால் பெரும் பெரும் பிழைகள் செய்யத் தொடங்குகிறான். பொறுக்க முடியாத அளவிற்குச் சென்றதும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவனை வதம் செய்யப் புறப்படுகிறார். அவன் பெற்ற வரத்தின் தன்மையினை உணர்ந்திருந்த கண்ணபிரான், பூமி தேவியின் அம்சமான சத்ய பாமாவைத் தேரோட்டிச் செல்லப் பணித்து, அவள் முன்னிலையில் அவள் துணையுடன் நரகாசுரனை வதம் செய்கிறார். தாயின் முன்னிலையில் இறக்க நேரிட்ட காரணத்தினால் மரணத் தருவாயில் அவன் மனம் மலர்ச்சி பெற்றது. அதன் அடையாளமாகக் கடவுளாம் கண்ணனிடம் அவன் பெற்ற வரத்தின் பயனாகவே நாம் தீபாவளி கொண்டாடுகிறோம்.

தீய குணங்களை அழித்ததன் அடையாளமாக எண்ணெய் தேய்த்துத் தலை முழுகி, பட்டாசு வெடித்து, இனிப்புகளுடன் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொள்கிறோம். நம்மிடம் இருக்கும் தீய குணங்களின் உருவகம் தான் நரகாசுரன். அவைகளை அகற்றி அழித்தால் நம்முடைய வாழ்க்கையே கொண்டாட்டம் தான்.

தீபாவளி அன்று ஏழை எளியவர்கள் கூடத் தங்களால் இயன்ற அளவு புத்தாடைகள் வாங்குவதிலும், இனிப்புக்கள், பட்டாசுகள் வாங்குவதிலும் பணம் செலவிடுவர். அவர்கள் வருடத்திற்கு ஒரு முறையேனும் புத்தாடைகள் வாங்குவதற்கு தீபாவளி நல்ல வாய்ப்பாகத் திகழ்கிறது. புதுமணத் தம்பதிகளுக்குத் தலைத் தீபாவளி என்றால் கொண்டாட்டத்திற்குக் கேட்கவே வேண்டாம். புகுந்த வீடு சென்ற மகளையும் அழைத்துப் பெண்ணின் பெற்றோர் கோலாகலமாகக் கொண்டாடுவர்.

அடுத்த முக்கியமான பண்டிகை பொங்கல். எந்தப் பண்டிகைக்கும் இல்லாத தனிச்சிறப்பு பொங்கலுக்கு உண்டு. பொங்கலை நன்றி சொல்லும் திருவிழா Festival of thank giving என்று சொல்லலாம்.

தைமாதம் முதல் நாள் வரும் பொங்கல் திருநாள் தான் இன்றைக்கும் கிராமப் புறங்களில் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. உலக மக்களின் வாழ்க்கைத்தேரின்

அச்சாணி போன்றவர்கள் உழவுத் தொழில் புரியும் விவசாயிகள். அவர்களை நன்றியுடன் சிறப்பிக்கும் திருநாள் என்பதனாலேயே பொங்கல் பண்டிகையை உழவர் திருநாள் என்று போற்றுகிறோம்

தெய்வப் புலவர் திருவள்ளுவர்

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்**

என்றெல்லாம் சிறப்பித்துப் பேசிய உழவர்களை மட்டும் நன்றியுடன் போற்றிக் கொண்டாடுவதில்லை. அவர் தம் உழைப்பு, உரிய பலனை அளிக்க உறுதுணையாகத் திகழும் கண்கண்ட தெய்வமான சூரிய பகவானைப் பிரார்த்தித்து வணங்கி, அவர் அருளால் பெற்றதை அவருக்கு நன்றியுடன் நிவேதனம் செய்கிறோம்.

உழவர் பெருமக்களுக்கு உடுத்த புத்தாடை, பணம் என்று தாராளமாக வழங்கி அவர்களை மகிழ்வித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அத்துடன் நிற்பதில்லை. ஏர்க்காலில் பூட்டப்பட்டாலும் பிணங்காமல், சுணங்காமல் உழவுப் பணியை உவப்புடன் செய்யும் மாடுகளைக் கூட நன்றியுடன் போற்றிக் கொண்டாடுகிறோம்.

இதனால் பொங்கல் பண்டிகையை நன்றி கூறும் திருநாள் என்று போற்றுவது பொருத்தம் தானே! மொத்தத்தில் இந்துக்களாகிய நாம் கொண்டாடும் பண்டிகைகள் எல்லாமே அர்த்தமுள்ளதாவும், நம் வாழ்க்கையின் நெறிமுறைகளை நமக்கு எடுத்துக்காட்டுவதாகவும் திகழ்கின்றன.

பொருள் பொதிந்த பண்டிகைகளைக் கொண்டாடும் போது பொருளாசை மற்றும் அரசியல் மத மார்ச்சர்ய குறுக்கீடுகள் இல்லாத படி மிக்க கவனமாக இருக்கும் போத, பண்டிகைகளின் உண்மையான மகிழ்ச்சியை நம்மால் அனுபவிக்க முடியும்.

பண்டிகைகளின் மகிழ்ச்சியை இதை விடவும் சிறப்பாக அனுபவிப்பதற்கு இன்னும் ஒரு வழியும் இருக்கிறது. அன்றாடம் இல்லாவிட்டாலும் பண்டிகை நாட்களிலாவது, ஏழை, எளியவர்க்கும், ஆதரவற்ற முதியோர்க்கும் நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற அளவு அவர்களும் பண்டிகையின் கொண்டாட்டத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்க வழி செய்தோமானால் உண்மையில் அங்கே தான் பண்டிகைகள் நமக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கின்றன.

**M. பாலச்சந்திரன**
நன்றி ஞானபூமி

உ
சிவமயம்

# போற்றி! அருளுக!

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கடவுளை, தமிழில் ' போற்றி! போற்றி! ' என்று வாழ்த்துதல் மரபு. போற்றி - என்ற சொல்லிற்கு 'போற்று' என்றும் பொருள் கொள்ள இயலும். .போற்றி என்ற சொல்லில் உள்ள இகர ஈற்றை வியங்கோள் எனக் கொண்டால் போற்று என்றாகும். 'போற்றுக' என்ற சொல்லுக்குக் 'காப்பாயாக' என்பது பொருள். இடம் நோக்கிப் பொருள் கொள்ளவேண்டும்.

'போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்'' என்ற தொடரில்"போற்றி" வினையெச்சம். இறைவன் எப்பொருளுக்கும் முதலாக விளங்குபவன். "வாழ்முதலே!" என்றும் அருள்வது காண்க! இந்த உலகத்தின்-உலகப் பொருள்களின் ஆதியே! நின் திருவடிகளை அருளுக! அதாவது திருவடி ஞானத்தை அருள்க! திருவடி இன்பத்தை அருள்க! எம்மைக் காத்தருள் செய்க! முத்தி நெறியறியாத மூர்க்கரொடு கூடாமலும், எறும்புகளால் அரிக்கப்படும் புழுக்களைப் போல், புலன்களால் அரித்து அழிக்கப் பெறாமலும் "நான்" "எனது" என்ற செருக்கால் தலையால் நடக்காமலும் சிந்தையுள் சிவம்வைத்து வாழ்ந்திட அண்ணித்தருள் செய்க! எமக்கு வாழ்நிலையின் முடிவான பேறாகிய நின் செந்தளிர் போன்ற திருவடிகளைத் தந்தருள்க. செம்மை சேர்ப்ப தால் செந்தளிர்கள்! 'செம்மலர்' என்று சிவஞான போதமும் கூறும்! சிவம் ஆதியாக நிற்றல்போல அந்தமாகவும் நிற்கிறது. உலகம் அனைத்தும் ஒடுங்கும் கடையூழிக் காலத்திலும் உள்ளவன் சிவன். அவனே உயிர்கள் களைப்பாறிப் புத்துயிர்ப்புப் பெறுவதற்குக் கடையூழியில் உலகத்தை ஒடுக்கிப் பின் புதுப்பித்தருளுகின்றான்.ஆதலால்,சிவனே அந்தம், ஆதி, முதலும்நடுவும் ஈறும் அவனே!

எல்லா உயிர்களின் தோற்றத்திற்கும் காரணம் இறைவனே! எல்லா உயிர்களும் இறைவனிடத்தில் தோற்றம் என்பது படைப்பு என்று பொருள் தராது. தோற்றம் = தோன்றுதல். புலப்படுதல். "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற திருக்குறளுக்குத் "தோன்றின்" என்ற சொல்லுக்குப் பொருள் கொள்ளும் பாங்கே இங்கேயும் கொள்ள வேண்டும். அதாவது பலரறிய மக்கள் மன்றத்தில் தோன்றும் பொழுது புகழொடு தோன்றுக. அங்ஙனம் புகழ்பட வாழும் தகுதி பெறாவிடின் தோன்றாதே என்பதுதான் அந்தக் குறளுக்குரிய உண்மைப் பொருள். என்றும் உள்ள உயிர் ஆணவத்தால் கட்டுண்டு செயலற்றுக் கிடந்த நிலை, தோன்றா நிலை. இறைவன் கருணையால் செயற் கருவிகளுடன் கூடிய உடலையும் அறிவுக் கருவி, கருவிகளாகிய (கரணங்களை) புலன்களையும் கொண்டு அறிவு விளக்கமுறும் நிலையில் தோன்றியதே தோற்றம்.
எல்லா உயிர்களும் பொன்னும் பொருளும் பெற்று வாழும் வாழ்வளிப்பதால்"பொற்பாதம்" என்றார்.

"பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை"

என்னும் நம்பியாரூரர் வாக்கும் அறிக. பொன் வேறு பொருள் வேறு. பொன்-

தங்கம். இன்று பணம் முதலியனவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம்.பொருள்-நுகர் பொருள்கள். உடலோடியைந்த உயிர்களுக்கு உயிர்வாழ உணவு தேவை. மருந்து தேவை. உடை தேவை. களிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் உரியன தேவை. இவையெல்லாம் நுகர்பொருள்கள். திருவள்ளுவரும்

**"பொருளில்லார்க்கும் இவ்வுலகு இல்லை"**

என்றார். இங்குப் பொருள் என்பது உயிர் வாழ்தலுக்குத் தேவையான உணவையே குறிக்கும்.

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"**

என்றும் கூறுவார். உணவு, உயிராகாது. உணவால் உயிரைக்கொடுக்கவும் இயலாது. உடலில் உயிரைக் காத்து வைத்து வாழ்வளிப்பது உணவு. போகம்- இன்பம். மானிக்கவாசகர் **"போகமாம் பூங்கழல்கள்!"** என்று பாடுகின்றார். போகம் என்பது விரிந்த பொருளைத் தரவல்லது. போகம்- இன்பம். உயிர்க்குலத்துக்கு இன்பம் தரும் வாயில்களும் இன்பம் தருபவையும் பலப்பல. ஆன்மாக்கள் வளர்ச்சி அடைய, அடைய இன்பத் துறைகளும் மாறும். குழந்தைப்பருவத்தில் தேவை விளையாட்டுப்பொருள்கள் இனிப்புமிட்டாய்கள்! இளமையில் தேவை கல்வி கற்றோர் வாய்க் கேட்டல். வாலிபப்பருவத்தில் காதலின்பம். வாலிபப் பருவத்தில் இன்பத் துறைகள் ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்பப் பலப்பலவாகிவிடும். சாதனை செய்தல் ஆகியவற்றிலும் இன்பம் காண்பர். முதிர்ந்த- ஆன்ம முதிர்ச்சி நிலையில் இறைவன் கழலேத்தும் இன்பத்தையே இன்பமெனக் கொள்வார். **"ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே! என்னுடை அன்பே!** என்றும் மாணிக்கவாசகர் அருளிச் செய்தார்.

இறைவனுடைய திருவடி யின்பமே இன்பம். உயிர்கள் - ஆன்மாக்கள் அடையும் முடிவிலா இன்பம் திருவடியின்பமேயாம். திருவடியின்பத்தை 'ஆனந்த வெள்ளம் ' என்று கோவையார் போற்றும்! திருவடியின்பமாகிய ஆனந்த வெள்ளம் வற்றாது. முற்றாது. அந்த ஆனந்த வெள்ளத்தினை வழங்குவதே ஆடல்வல்லானின் கூத்து

பூங்கழல்கள் - மலரின் தன்மையுடைய திருவடிகள் என்பது பொருள், மலர், மங்கலப் பொருள், மணமுடையது. தேன்பிலிற்றும் இயல்புடையது. மென்மையானது . ஆணவக் காரிருளினால் கட்டுண்டும் 'யான்' 'எனது' என்ற செருக்கில் சிக்கிக் கொண்டும் தலையால் நடக்கும் ஆன்மாக்களை, இறைவன் வன்முறையால் அணுகுவதில்லை. இறைவன் ஆன்மாக்கள் செய்யும் பிழைகளையெல்லாம் பொறுத்தாள்பவன். மேலும் பிழையெல்லாம் தவிர்த்தும் காத்து ஆள்பவன். பிழை பொறுத்தலினும் பிழைகளை தவிர்த்தல் பேரறம். என்றும் நினைந்து நினைந்து போற்ற வேண்டிய உதவி, இறைவன் ஆன்மாக்களை ஆணவத்தின் ஆதிக்கத்திலிருந்து மெள்ள யாதொரு சுவடும், களங்கமும், கறையும், நோவும் இன்றி மீட்பதைப் **"பையத் தாழுருவி"** என்பார். மாணிக்கவாசகர். ஆதலால் இறைவன் சிவன், ஆன்மாக்களை மென்மையாக இன்ப வெள்ளத்தில் அழுத்தி ஆட்கொள்வதால் பூங்கழல்கள் என்றனர்.

இங்குத் திருவடிகளைக் கழல் என்றார். வெற்றிச் சிலம்பணிந்த திருவடிகளைக் கழல் என்று கூறுவது மரபு. ஆம். எம்பெருமான் சிவனின் திருவடிகள் - கழல்கள்,

உயிர்களை ஆட்கொள்வதில் வெற்றி பெற்றவை. முப்புரம் எரித்து வெற்றி கொண்ட கழல்கள்! சிவன், காலத்தை வென்று விளங்கி ஊழி முதல்வனாக நிறபவன். ஆதலால், சிவபெருமானின் திருவடிகள் - கழல்கள்!

சமயநெறிக் கோட்பாட்டின் அடிப்படையே பலருக்கு விளங்காது. நம்மை - உயிர்களைக் கடவுள் படைத்தான். என்றே பலரும் கருதுகின்றனர். ஏன் சில சமயங்கள் அப்படியே கூறுகின்றன. நம்மை - உயிர்களைக் கடவுள் படைத்தான் என்பது அறிவியல் முறையிலும் கூட இசைந்து வராது. கடவுள் பரிபூரணன். **குறைவிலா நிறைவு, கோதிலா அமுது**, குறையிலிருந்து நிறை தோன்றலாம். இது பரிணாம வளர்ச்சி. நிறையிலிருந்து குறை தோன்றாது. ஆன்மாக்களுக்கு உள்ள குறைகளை நோக்கின் கடவுள் படைத்திருப்பான் என்று சராசரி அறிவு கூட ஒத்துக் கொள்ளாது. ஆதலால் உயிர்களுக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. உயிர்கள் என்றும் உள்ளவை ( Existence)

**எல்லா உயிர்களுக்கும் தோற்றமாம்**. எனபதற்குப் பொருள் கொண்டது போல **மூலையிலே கிடந்தேனை** - மறைவாக செயலின்றிக் கிடந்தவை செயலுக்குரிய அறிவுக் கருவிகளையும் செயற்கருவிகளையும் பெற்று இயக்கத்திற்கு வருவதே தோற்றம் என்றார் திருமூலரும். உயிர்களுக்கு முடிவும் இல்லை. அப்படியானால் உயிர் வாழ்க்கைக்கு முடிவே இல்லையா? முடிவில்லாமல் இருந்தால் எய்ப்பும் களைப்பும் வந்து விடும். உயிர்களின் வாழ்க்கைக்கு எல்லை இறைவன் திருவடிகளைச் சார்தலேயாம். இந்த நிலையிலும் சமயங்கள் தம்தம் நிலையில் மாறுபடும். உயிர்கள் திருவடி ஞானம் பெற சிவத்தினை அடைந்து திருவடி இன்பத்தை அடைதலே உயிர்களின் வாழ்க்கைக்கு முடிவு. அப்படியானால் திருவடிகளில் உயிர்கள் கலப்பதன்மூலம் தன்னை இழந்து விடுகின்றனவா? இல்லை! உயிர்கள்-ஆன்மாக்கள் திருவடியின்பத்தில் தன்னை இழந்து விட்டால் முன் சொன்ன உண்மைக்குமாறாகி விடும். அதாவது உயிர்களுக்கு - ஆன்மாக்களுக்கு அழிவு இல்லை என்பதற்கு மாறாகி விடும். உயிர்கள் தன்னை இழத்தல், சிவத்துடன் சேர்ந்து தன்னை இழத்தல் என்பது தற்போதமிழத்தலேயாகும். பாலொடு நீர் கலந்தது போல! பாலைக்காச்சினால் தண்ணீர் நீராவியாகிவிடும். அது போலப் பாலொடு நீர் கலந்த நிலைதான் சிவத்தொடு ஆன்மா கலந்த நிலை.

இறைவன் சிவனைக் கண்டறிவார் இல்லை என்பது திருவாசகம். இறைவனைக் கண்ட பிறகு தான், நம்புவது என்பது சமய நெறிக்குப் பொருந்தாத விவாதம். காண்டல் - கண்களால் காண்பது. கண்களால் காணக் கூடியவன் தான் கடவுள் என்பதை

**" புவனியில் சேவடி தீண்டினன் காண்க"**

**" கண்ணால் யானும் கண்டேன் காண்க"**

என்றருளியுள்ளமையால் அறிக. கண்கள் அறிவுப் புலனுடன் தொடர்பு கொள்ளவில்லையானால் காட்சி நிகழ்ந்தாலும் பொருள் புரியாது, பொருளைப் பற்றியதாகக் காட்சியமையாமல் போய்விடும். சிந்தனை செய்து தெளிந்து அறிவால் அறிந்து உணர்ந்து அனுபவித்த பிறகு தான் கடவுள், கண் காட்சிக்குப் புலனாகும். இது சமய அனுபவ நெறி!

அறிவு என்பது கல்வி மட்டுமல்ல, கல்வியின் பயன் அறிவு. கற்றவர்களிலும்

மூடர்கள் - அறிவில்லாதவர்கள் உள்ளனர். ஒலி நாடாப் போல ஒப்பிப்பர். அனுபவமும் இருக்காது செயலும் இருக்காது, ஒழுகலாறும் இருக்காது, நான்முகன் வேதங்களை நன்றாகப் பயின்றவன். வேதங்களுக்கு நாயகன், கலைமகள் நான்முகனின் மனைவி, நான்முகனின் நாவிலேயே இருக்கிறாள். ஆயினும் என்? சமய ஞானம் இல்லையே! பிரணவத்தின் பொருள் தெரியாமல் திருமுருகன் கையால் குட்டுப்பட்டவனாயிற்றே!

நான்முகன் கல்வியின் துணை கொண்டு இறைவன் திருமுடியைக் கண்டு வருவதாகக் கூறினான். சூளுரைத்தான். அன்னத்தின் உருவம் கொண்டு முடியைத்தேடி வானோக்கிப் போனான். திருமால் செல்வத்தின் அதிபதி. திருமகள் கணவன், இறைவன் திருவடியை **பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பதமலரை** க கண்டு வருவதாகச் சூளுரைத்தான், பன்றியின் உருவெடுத்தான்.

நிலத்தைத் தோண்டிக் கொண்டு கீழ் நோக்கிப் பயணமானான். அறியாமை ஆரவாரம் செய்யும், அகங்காரம் காட்டும். எப்போதம் அறியாமை மேல்நோக்கிய நிலையிலேயே இருக்கும்! செல்வன் ஒளிவான். மறைவான், யார்க்கும் புலப்படாமல் செயல் செய்வான், செல்வத்தை நிலத்தில் புதைத்து வைப்பான். வரலாறு பொருத்தமாக இருக்கிறது. இறைவன் திருமுடியை தேடிப்போன நான்முகன் முடியைக் காண முடியவில்லை, தோல்வியையும் ஒத்துக் கொள்ளவில்லை. படித்த பேதைகள் புத்திசாலிகள் என்று தம்மைக் கருதிக் கொண்டிருப்பவர்கள் உண்மையை - இயலாமையை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். பொருந்தும் படியாக பொய்கள் பல சொல்லி அறியாமையை அறிவு என்று வாதிடுவர். சாட்சிகளும் வைப்பர். நான்முகன் திருமுடியைக் கண்டுவிட்டதாகக் கூறினான். இது பொய். இதற்குச் சாடசி தாழம்பூ, திருமாலோ திருவடியைக் காண முடியவில்லை என்று ஒத்துக் கொண்டார். செல்வத்தை விட சமூகத்திற்கு அதிகத் தீமை பொய்யும் சூதும். படித்தவர்களால் தான் இவை வளர்கின்றன. அதனால் தான் பாரதி **"படித்தவன் சூது பண்ணினால் ஐயோ என்று போவான்!"** என்றான். நான்முகனும் திருமாலும் காண முடியாத திருவடிகள்!

மக்களே! வேதங்கள் ஓதுவதினால் மட்டும் இறைவனைக் காண முடியாது, அறிய முடியாது, அனுபவிக்க முடியாது, இறைவனை - சிவனைக் காண அன்பு தேவை. ஆற்றல் மிக்க அன்ப தேவை. நினைந்து நினைந்து நனைந்து நனைந்து அழும் அன்பு தேவை.

உயிர்கள் உடலொடு கூடி நிலத்தில் தோன்றியது. உயர்வதற்காக!. உயிர்கள் உய்வதற்காக. உடுத்துக் கொண்ட உடையனையது உடம்பு. பிறப்பின் நோக்கம் உய்தல். உயிர்-ஆன்மா, தன் முயற்சியால் மட்டுமே உய்தல் இயலாது. இறைவன் சிவனின் கருணையும் தேவை. இறைவன் சிவன் உயிர்களுக்கு உய்வு அருளுகின்றான். ஆன்மாக்களாகிய நாம் உய்யுமாறு அறிந்து அவ்வழியிலேயே ஆட்கொள்கிறான். உயிர்களை - ஆன்மாக்களை உய்யுமாறு செய்தல் - உடன் பாட்டு நெறிகளின் வழி சென்று மீட்டெடுத்தலேயாகும். இறைவன் சிவனின் ஆட்கொள்ளும் நெறியில் எதிர்மறை அணுகு முறையே இல்லை. ஆங்காரம் உயிரின் இயற்கை. அது எதிர்மறை அனுகுதலை ஏற்காது. ஆதலால் உயிர்களின் மனமறிந்து மனத்துள் இருக்கும் கருத்தறிந்து அக்

கருத்தினை முடித்து வைத்தே ஆட்கொண்டருள்கின்றான். இறைவன். ஆன்மாக்கள். புறத்தே போனாலும் உடன் வருவான். துரிசுகள் செய்தாலும் உடந்தையாக இருப்பான். முடிவான நிலை ஆட்கொண்டருளுதலால் 'பொன்மலர்' என்று போற்றுகின்றார்.

தைநீராடல் தமிழ் மரபு. காலப்போக்கில் மார்கழி நீராடல் பழந்தமிழர் காலம் தொடங்கி இன்றுவரை நிகழ்ந்து வருவது.

வாழ்க்கைப் பொழுதில் வைகறைப் பொழுது நல்ல பொழுது. வைகறைப் பொழுதில் ஆற்றல் மிக்குடைய ஓசோன். உலாப்போதரும். வைகறைப் பொழுதில் சுவாசிக்கும் ஒரு மூச்சு பத்து மூச்சுக்கு சமன். மூச்சு சுவாசிக்கும் எண்ணிக்கை அடிப்டையில்தான் வாழ்நாள் கணிக்கப்படுகிறது. வைகறையில் எழுந்து நடந்து சுவாசிப்பதால் - ஒரு தடவை சுவாசித்தால் ஒன்பது மூச்சு மிச்சப்படுத்தலாம். அந்த அளவு வாழ்நாள் வளரும். வைகறைப்பொழுதில் நீர் நிலைகளில் ஓசோன் படிந்து அந்தத் தண்ணீர் மிகுதியும் பயன் தரத்தக்க ஆற்றலுடையதாக விளங்கும். அப்போது நீராடல் உடலுக்கும், உயிருக்கும், உணர்வுக்கும், பத்திமைக்கும், மிகுதியும் பயனளிக்கும். ஆதலால் பயன் நோக்கி மார்கழி நீராடலையும் போற்றி என்றனர்.

இந்தப் பாடலில் இறைவனின் - சிவனின் தனித்தன்மை போற்றப்படுகிறது. ஐந்தொழிலுக்கும் சிவனே உரியவன். சிவனே முழு முதல்வன். சிவனை அறிவாலும் செல்வத்தாலும் காண இயலாது. அன்பினாலும் தொண்டினாலும் காணலாம். என்பது பெறப்படும். உண்மை! சிவன்- இறைவன் நம்மையெல்லாம் உய்ய ஆட்கொண்டருளப் பிரார்த்தனை செய்வோமாக! வாழ்வோமாக!

திருவாசகம் நாள்தோறும் ஓதுதலே பிரார்த்தனை. திருவாசகம் ஓதினால் சிவஞானம் சித்திக்கும் திருவாசகத்தை நாள்தோறும் ஓதுக.

**போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்**

(திருவெம்பாவை-20)

நன்றி - திருவாசகத்தேன

உ
சிவமயம்

# கனவு

## ஸரஸ்வதீகடாக்ஷாம்ருதம் கிருபானந்தவாரியார்

நமக்கு விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்க நிலை என்று மூன்று நிலைகள் உண்டு. ஜாக்ரம், சொப்னம், சுஷுப்தி என்பார்கள்.

கனவு என்பது மிகவும் சிந்தனைக்கு உரிய ஒன்று. கனு சாஸ்திரம் என்று வியாழ பகவான் எழுதியிருக்கிறார். கனவதிகாரம் என்று பாம்பன் அடிகளாரும் எழுதியிருக்கிறார்கள்.

கனவிலே மூன்று வகை உண்டு. ஒன்று பகலிலே கண்டவை விட்டும் தொட்டும் வரும். ஒன்று பித்த மயக்கத்தால் வருவது. ஒன்று எதிர் காலத்தில் விளயக்கூடிய நிகழ்ச்சிகளை விளக்குவது.

இந்தத் தூல உடம்புக்குள் இன்னும் ஓர் உடம்பு இருக்கின்றது. அது சூட்சும சரீரம் எனப்படும். அதற்குக் கண் காது முதலிய அவயவங்கள் உண்டு. மெல்லிய பட்டுச் சட்டைக்கு மேல் கோட்டுத் தரித்திருப்பதுபோல், ஆன்மா சூட்சும சரீரத்துக்கு மேல் இந்தத் தூல சரீரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. சூட்சும சரீரந்தான் கனாவில் தொழிற்படுகிறது. முதல் சாமத்தில் கண்ட கனா ஓர் ஆண்டில் பலிக்கும், இரண்டாம் சாமத்தில் கண்டகனா எட்டு மாதத்திலும், மூன்றாம் சாமத்தில் கண்ட கனா மூன்று மாதத்திலும், நாலாம் சாமத்தில் கண்ட கனா நாற்பது நாட்களிலும் பலிக்கும். முப்பது அல்லது பத்து நாட்களிலும் பலிப்பதுண்டு.

பூமிசம்பந்தமான கனா, நீர் சம்பந்தமான கனா, நெருப்புச் சம்பந்தமான கனா, காற்றுச் சம்பந்தமான கனா, ஆகாயம் சம்பந்தமான கனா என்று பல வகையான கனவுகள் உண்டு . இன்ன இன்ன கனாக்கண்டால் இன்ன இன்ன பலன் என்று கனா நூல் விரிவாக விளம்புகிறது.

ஞானேந்திரியங்கள் 5, கன்மேந்திரியங்கள் 5, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்கள் 5, வசனம், கமனம், தானம், ஆனந்தம், விசர்சனம் என்ற கன்மங்கள் 5, வாயுக்கள் 10, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற அந்தக் கரணங்கள் 4, புருடன் 1, ஆக 35. இந்த 35 தத்துவங்களுடன் புருவ நடுவில் ஆன்மா நின்ற நிலை சாக்கிரம், வாயுக்கள் 10, புலன்கள்5, வசனாதிகன்மங்கள் 5, அந்தக்கரணம் 4, புருடன் 1, ஆக 25, இந்த இருபத்தைந்து தத்துவங்களுடன் ஆன்மா கண்டத்தில் நின்ற நிலை கனவு, பிராணன் 1, சித்தம் 1, புருடன் 1, ஆக மூன்று. இந்த மூன்று தத்துவங்களுடன் இதயத்தில் ஆன்மா
நிற்கும் நிலை உறக்கம் (சுஷுப்தி)

**சாக்கிரமா நுதலினிலிந் திரியம் பத்தும்**
**சத்தாகி வசனாதி வாயு பத்தும்**

**நீக்கமிலந் தக்கரணம் புருட னோடு**
**நின்றமுப் பானைந்தும் நிலவும் கண்டத்**
**தாக்கியசொப் பனமதனில் வாயு பத்தும்**
**அடுத்தனசத் தாதிவச னாதி யாக**
**நோக்குகர ணம்புருடன் உடனே கூட**
**நுவல்வர் இரு பத்தைந்தாம் நுண்ணியோரே.**

**- தாயுமானார்**

இனி, கனவுகளில் சிலவற்றின் பயன்களைக் கூறுகிறேன். பாம்பு, தேள், சிலந்தி இவைகளைக் கண்டால் வெற்றி உண்டாகும். தவளை முதலியவற்றைக் கண்டால் நன்மை. பூனையைக் கண்டால் தீமை. தங்கத்தைக் கண்டால் சுபம். வெள்ளியைக் கண்டால் எண்ணிய கருமம் கெடும். ஈயத்தைக் கண்டால் விவாதம். இரும்பைக்கண்டால் வறுமை. மயிலைக் கண்டால் நன்மை. இறந்துவிட்ட பெரியோர்களைக் கண்டால் காரிய சித்தி. மயானத்தைக் கண்டால் நல்லது.

நூல்களில் கனவு நிலைகளைப்பற்றி வருகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே தருகிறேன்.

(1.) சிந்தாமணி என்ற பழம் பெரும் நூலில் சச்சந்தனுடைய மனைவி விசயை பூங்கொத்துக்கள் நிறைந்த அழகிய அசோகமரம் அடியெர்ந்து வீழ்ந்ததாகவும், அதன் அடியில் ஒரு முளை தோன்றியதாகவும் கண்டாள்

**தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்ததென்**
**முத்தணி மாலை முடிக்கிடனாக**
**ஒத்ததன் தாள்வழி யேமுளை யோங்குபு**
**வைத்ததுபோல வளர்ந்ததை யன்றே.**

இந்தக் கனாநிலையை அவள் தன் கணவனிடம் கூறி, ‘அதற்கு என்ன பயன்?’ என்று கேட்டாள்.

“அசோகமரம் வீழ்ந்தது, எனக்கு அழிவு உண்டாகும் என்பதையும், பல மாலைகட்கு இடனாக ஒரு முளை தோன்றியது, பல மனைவியருடன் உன் மகன் சிறப்புறுவான் என்பதையும் குறிக்கின்றன” என்று சச்சந்தன் தன் மனைவியிடம் கூறினான்.

(2.) கேகய நாட்டில் வசித்த ப்ரதர் கண்ட கனாக்களைப்பற்றி வான்மீகி மகரிஷி கூறுகிறார்.
“பரதேநாபி தாம் ராத்ரிம் ஸ்வப்நோ த்ருஷ்டோயமப்ரிய”

தீக் கனவுகளைக் கண்ட பரதர் கூறுகின்றார். “என் தந்தை தலைமயிரை விரித்துக்கொண்டு அழுக்குத் துணியுடன் ஒரு மலையின் உச்சியிலிருந்து சாணம் நிறைந்த மடுவில் குதித்து நீந்தி விளையாடுவதாகக் கண்டேன். கைகளால் எண்ணெய் வாரிக்குடித்துக்கொண்டு அடிக்கடி உரக்கச் சிரித்துக்கொண்டிருந்தார். உடம்பில் எண்ணெய் பூசிக்கொண்டிருந்தார். எள்ளன்னத்தைத் தின்று கொண்டு, எண்ணெய் நிறைந்த மடுவில்

தலைகீழாக விழுந்து முழுகினார். கடல் வற்றியது. சந்திரன் விண்ணிலிருந்து விழுந்தான். எங்கும் இருள் மூடியது. பட்டத்து யானையின் கொம்பு துகளாகியது. தீ அணைந்தது. பூமி வெடித்தது. மரங்கள் பட்டுப் போயின. மலைகளில் புகை கிளம்பியது. தயரதர் கரிய உடை உடுத்துக்கொண்டு, இரும்பு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கறுப்பு நிறமுள்ள பெண்களும்., மஞ்சள் நிறமுள்ள பெண்களும் அவரைச் சுற்றி நின்றுகொண்டு கைகொட்டிச் சிரித்தார்கள். சிவப்புச் சந்தனமும், சிவப்புமாலையும் தரித்துக்கொண்டு கழுதைகள் பூட்டிய தேரில் அவர் அமர்ந்து தெற்கே சென்றார். இத்தகைய கொடிய கனவுகளைக் கண்டேன்" என்று பரதர் கூறினார்.

(3.) சுந்தர காண்டத்தில் காட்சிப் படலத்தில் திரிசடை கண்ட கனவைப் பற்றிக் கம்பநாடர் கூறுகிறார்.

"அம்மா ஜானகி, இப்போது நான் சில கனவுகள் கண்டேன், என் கனவுகள் பொய்யாகமாட்டா பலிக்கக்கூடியவை.

**எண்ணெய்தன் முடி தொறும் இழுகி ஏறியே**
**திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின் மேல்**
**அண்ணல்வேல் இராவணன் அரத்த ஆடையன்**
**நண்ணினன் தென்புலம் நவையில் கற்பினாய்**

"குற்றமற்ற கற்புடைய தாயே! என் பெரிய தந்தையாகிய இராவணன் சிவந்த ஆடையை உடுத்துக்கொண்டு, கழுதைகளும் பேய்களும் பூட்டிய தேரின் மீது ஏறித் தென்திசை சென்றதாகக் கனாக் கண்டேன். சுற்றமும் புதல்வர்களும் இராவணனைத் தொடர்ந்து சென்றார்கள். இராவணன் வீட்டில் வளர்க்கும் நெருப்பு அணைந்தது. இடி விழுந்து, அழகிய அரண்மனை இடிந்தது. அரக்க மாதர்களின் தாலிகள் அறுபட்டு வீழ்ந்தன. மண்டோதரியின் கூந்தல் கீழே விழுந்தது. மேலும் அக்கூந்தலில் தீப்பிடித்து எரிந்து நாறியது. யானைகள் வாழும் காட்டில் புலிக் கூட்டங்களுடன் இரண்டு சிங்கங்கள் வந்து அழித்தன. அந்தக் காட்டில் வாழ்ந்த மயில் அந்தச் சிங்கங்களுடன் சென்றது.

**ஆயிரந் திரிவிளக் கமைய மாட்டிய**
**சேயொளி விளக்கமொன் றேந்திச் செய்யவள்**
**நாயகன் தனிமனை நின்று நண்ணுதல்**
**மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய்.**

"ஆயிரம் திரிகள் எரிகின்ற சிவந்த விளக்கினை ஏந்திக்கொண்டு ஒரு பெண் இராவணனுடைய வீட்டிலிருந்து விபீஷணருடைய வீட்டிற்கு வந்ததாகக் கனாக் கண்டேன்" இவ்வாறு இன்னும் பல கனாநிகழ்ச்சிகளைக் கூறினாள்.

(4.) கந்தபுராணத்திலும் இக் கனவு நிலையைப்பற்றிய செய்தி உண்டு. இந்திரன் மகனாகிய சயந்தன் வீர மகேந்திரபுரியில் சிறையில் கிடந்து இடர்பட்டான் அழுதான் சிவபெருமானை வேண்டித் தொழுதான். அவனுடைய துயரைக் களையுமாறு, கந்தவேள் கருணையுடன் அவனுடைய கனவில் காட்சியளித்தருளினார்.

**வீறு கேதனம் வச்சிரம்**
**அங்குசம் விசிகம்**
**மாறி லாதவேல் அபயமே**
**வலம்இடம் வரதம்**
**ஏறு பங்கயம் மணிமழுத்**
**தண்டுவில் இசைந்த**
**ஆறி ரண்டுகை அறுமுகங்**
**கொண்டுவேள் அடைந்தான்.**

முருகப்பெருமான் ஆறுமுகம் பன்னிரு கரங்களுடன் கூடிய திருவுருவுடன் கனவில் தோன்றியருளினார். சயந்தன் இந்தத் தூல உடம்புக்குள் இருக்கிற சூட்சும உடம்பிலுள்ள கண்களால் கண்டு தொழுதான்.

**தந்தை யில்லதோர் பரமனைத்**
**தாதையா வுடைய**
**கந்தன் ஏகியே யனையதன்**
**உருவினைக் காட்ட**
**இந்தி ரன்மகன் உளப்படும்**
**யாக்கையுள் இருந்த**
**முந்து கண்களால் கண்டனன்**
**தொழுதனன் மொழிவான்.**

(5.) பரமஞான அனுபூதிமானாகிய தாயுமானார் தம் கனவுநிலையை அருளிச் செய்துள்ளார். அவருடைய தலையின் மீது சிவபெருமான் திருவடி சூட்டியதாகக் கனவு கண்டார்.

**மால்வைத்த சிந்தை**
**மயக்கறஎன் சென்னிமிசைக்**
**கால்வைக்க வும்கனவு**
**கண்டேன் பராபரமே.**

மற்றும் ஒரு நாள் கனவில் இறைவன் தோன்றிச் சின்முத்திரையைக் கரத்தால் காட்டி அருள் புரிந்தான்.

**மைகாட்டு மாயை**
**மயக்கமற நீகுருவாய்க்**
**கைகாட்ட வும்கனவு**
**கண்டேன் பராபரமே.**

**மண்ணீர்மை யாலே**
**மயங்காதுன் கையால்என்**
**கண்ணீர் துடைக்கவும்நான்**
**கண்டேன் பராபரமே.**

(6.) ஆண்டாளம்மையார் திருமாலை நினைந்து நினைந்து உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து வழிபட்டார். எம்பெருமாட்டியின் கனவில் அரங்கத்தில் அரவணையில் அறிதுயில் அமர்ந்த அரிமுகுந்தன் காட்சி தந்து அருளினார். அதனை அந்த அம்மையார் அமுதத் தமிழால் அருளிச் செய்தருளினார்.

மத்தளங் கொட்ட
    வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம்
    நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி
    மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக்
    கனாக் கண்டேன் தோழீநான்.

(7.) திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரண்யத்தில் தங்கியிருந்தபோது அவருடைய கனவிலே சிவபெருமான் சென்றருளி, "நம் வாய்மூருக்கு வா" என்று அருளிச் செய்தார்.

(8.) திலகவதியாருடைய கனவிலே சிவபெருமான் தோன்றி, "உன் தம்பி சமணசமயம் புகுந்தான் என்று நீ வருந்தற்க. அக் கவலையை ஒழி. அவன் முன்னமே முனியாக என்னை அடையத் தவஞ்செய்தான். அவனைச் சூலை வலியால் ஆட்கொள்வோம்" என்று அருளிச்செய்தார்.

(9.) சங்கிலிநாச்சியார் கனவில் தோன்றி யருளினார்.

(10.) அருணகிரிநாத சுவாமிகள் வயலூரில் கண் துயிலும்போது முருகவேள் கனவில் தோன்றி, "நம் விராலிமலைக்கு வருக" என்று அருள் புரிந்தார்.

நன்றி:- கலைமகள் தீபாவளிமலர் 1964.

உ
சிவமயம்

# உணவும் உள்ளமும்

## திரு. ஆர். வீ. கந்தசுவாமி J.P அவர்கள்

துறவி ஒருவர், வீடு வீடாகச் சென்று உணவை யாசகமாகப் பெற்று உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் பெரும் பணக்கரர் ஒருவரின் வீட்டில் உணவு உண்டார். அப்போது அப்பணக்காரர் சுவாமிகளுக்குப் பெறுமதி மிக்க வெள்ளிக் கிண்ணமொன்றில் தண்ணீர் குடிக்கக் கொடுத்தார். உணவை உண்டு முடித்ததும், வீட்டுக் காரருக்குத் தன் நன்றியையும் நல்லாசியையும் தெரிவித்துவிட்டுச் சுவாமிகள் தனது ஆச்சிரமத்திற்குத் திரும்பிவிட்டார். அங்கு சென்றபின் தமது தோற்பையினை அவதானித்த பொழுது அதனுள் விருந்து தந்த பணக்காரர், குடிதண்ணீர் மொண்டு வைத்த வெள்ளிக் கிண்ணம் இருப்பதைக்கண்டு பதறிப்போனார். தன்னை அறியாமலேயே பையினுள் அதனை எடுத்து வைத்த தனது அறிவீனத்தை நினைந்துவருந்தினார். "அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்டுவிட்டேனே" எனக் கலங்கினார். எப்படியிருந்த போதிலும் "இது திருட்டுத் தானே" என எண்ணித் தன் ஊழ்வினையை நொந்து கொண்டே, அந்தப் பணக்காரரின் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றார். நடந்துவிட்ட தவற்றினை அவரிடம் எடுத்துக் கூறி மன்னிப்புக் கேட்டதுடன், வெள்ளிக் கிண்ணத்தையும் எடுத்துக் கொடுத்தார்.

அதற்கு அப்பணக்காரர் சுவாமிகளே தெரியாமற் செய்துவிட்ட ஒன்றுக்காக நீங்கள் வருந்துவது சரியன்று. மேலும் நீங்களோ விருப்பு வெறுப்பற்ற துறவி. இது ஏதோ கைதவறி நடந்த காரியம். அதை இனி மறந்து விடுங்கள் என்றார். மேலும் நானோ தெரிந்து கொண்டே செய்த தப்பிற்காக இன்னமும் வருந்திக் கொண்டிருக்கும் மாபாவி என்றார். சுவாமிகள் ஆச்சரியத்துடன் நீர் செய்த தவறான பாவகாரியம் யாது? எனக் கேட்டார். அதற்குப் பணக்காரரோ கண்ணீர் விட்டபடி, ஐயா நான் முன்னர் ஏழையாக இருந்த போது சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்பட்டேன். ஒரு நாள் வீதியில் சென்ற ஒருவரின் பணப்பையை திருடிவிட்டேன். அதனுள் ஆயிரக்கணக்கான பல பணத்தாள்கள் இருந்தன. அதனை மூலதனமாகக் கொண்டே இத்தனை பொருள், பணம் முதலானவற்றைச் சேர்த்துப் பெரிய பணக்காரனானேன். உங்களைப்போன்ற துறவிகளை ஆதரிக்கக்கூடிய வசதிகளைப் பெற்றேன். இருந்தும் என் மனச்சாட்சி உறுத்திக் கொண்டே இருக்கிறது என்றார். அதைக்கேட்ட சுவாமிகள் கலகலவென்று சிரித்தபடி உமது திருட்டுப்பணத்தினால் வந்த உணவைச் சாப்பிட்ட எனக்கும் திருட்டுக்குணம் இயற்கையாகவே வந்துவிட்டது. பார்த்தாயா? உண்ணும் உணவைப் பொறுத்தே ஒருவரது உள்ளமும் அமைகிறது

என்று கூறினார். "சரி சரி நீ கவலைப்படாதே" "ஒருவன் தன் தவற்றையுணர்ந்து திருந்தியபோது இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். என்று மீண்டும் சொல்லிவிட்டுத் தனது ஆச்சிரமத்தை நாடிச் சென்றார்.

இத்தகைய நீதியை உணர்த்தும் சம்பவமொன்று மகாபாரதக் கதையிலும் வருகிறது. கங்கையின் புத்திரராகிய பீஸ்மர், குருஷேத்திர யுத்தத்தில் கௌரவர் படைக்குத் தலைமையேற்றுப் போர் புரிந்தார். பத்தாம் நாட்போரில் அருச்சுனனின் அம்புகள் தொளைத்ததனால் இரத்த வெள்ளத்தில் அம்புப் படுக்கையில் கிடந்த படி பல்வேறு நீதிக் கதைகளைக் கூறிக்கொண்டிருந்தார். அப்போது திரௌபதி அவரைப் பார்த்து "இப்போது நீங்கள் சொல்லும் நீதி, என்னைக் கௌரவர் சபையில் துச்சாதனன் துகிலுரிந்தபோது ஞாபகத்திற்கு வராமற் போய்விட்டதா? அந்நேரம் வாய்மூடி மௌனியாக இருந்தீர்களே, இதுதான் உங்கள் நீதியா?" என்று வினாவினார். அதற்குப் பீஸ்மர், உண்மை தான். அப்போது இருந்த எனத உடல், துரியோதனனும் துச்சாதனனும் ஊட்டி வளர்த்த உணவின் ஊட்டத்தால் வளர்ந்தது. அதனால் செஞ்சோற்றுக் கடனுக்காக எனது சுய அறிவு மறைந்து காணப்பட்டது. இப்பொழுதோ அருச்சுனன் விட்ட அம்புகளினால் ஆன தொளைகளினால் எனது உடம்பிலுள்ள உதிரம் முழுவதும் வெளியேறி வெற்றுக்கூடே காணப்படுகிறது. ஆதலால் தான் அதற்குச் சுய புத்தியும் தெளிவும் ஏற்பட்டு உண்மையான நீதி எதுவென உரைக்கின்றது. என்று பதிலிறுத்தார். இந்தப் பதிலில் திரௌபதியும் சமாதானம் பெற்றாள் என்கிறது ஸ்ரீ மகாபாரதம். எனவே அறவழியில் தேடுகின்ற செல்வமும் பொருளுமே ஒருவரை நற்கதிக்கு இட்டுச் செல்லும் என்பதனை மேலே கூறப்பட்ட இரு கதைகளும் தருகின்றன. இதனை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

நன்றி

ஞானச்சுடர் - கார்த்திகை மலர் - 2007
வெளியீடு - சந்நிதியான் ஆச்சிரமம் -
சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை

உ
சிவமயம்

# சிந்தையும் செயலும்

குறிஞ்சி

தவத்திரு பரமஹம்ச நித்யானந்த சுவாமிகள் பிரம்ம சூத்திரத்திற்கு மிகப்பெரிய உரை எழுதியது பற்றிய வரலாற்றை 'தியானம் ஞானத்தின் திறவு கோல்' என்ற நூலில் எழுதியிருக்கிறார். எனக்கு அதைப் படித்த பின்னர் திருவாசகத்தைப் பார்த்தேன். படித்தேன். அதில் ஒரு பாடல் வருகிறது. அது திருச்சதகம் என்ற தலைப்பின் கீழ் வரும் 79ம் பாடல்.

இப்பகுதியை திருவாசகத்திற்குச் சிறப்புரை நல்கிய திருமிகு கா.சு.பிள்ளை அவர்கள் இறைவனை நோக்கி விளிப்பார். என்பார்கள். திருப்பெருந்துறையில் அருளிய பாடல்கள் இவை. இதனைப் பத்தி வைராக்கிய விசித்திரம் என்று ஒரு விருத்தி உரை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவர் பெயர் யாழ்ப்பாணம் பாலகிருஷ்ண பிள்ளை என நினைக்கிறேன்.

இந்தச் சதகம் பற்றி ஒரு சில குறிப்புகள் தெரிந்து கொள்ளலாம். சிவபெருமான் உத்திரகோச மங்கை என்ற ஊரில், மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டு "நீ இங்கேயே இருப்பாய், நாம் பிறிதோர் இடத்திற்குச் செல்கிறோம், உன்னைத் தில்லையிலே ஆட்கொள்வோம்!" என்று கூறிப் பிரிந்தான்.

பிரிவாற்றாமையால் வருந்திய மணிவாசகப் பெருந்தகை - இறைவனும் அவரும் ஆண்டான் அடிமையாகப் பாவித்து அவ்வியல்பு குன்றாது விரித்துரைத்த சதகம் இது.

பத்து வகையாக இப்படி அவரைக் காத்து அருளியதில் இந்த ஐந்தாம் பதிகத்தில் தேகம், பிரபஞ்ச நீக்கம் பற்றி பேசுகிறார். மணிவாசகப் பெருமான் தந்த (உள்) தலைப்பு மெய் உணர்தல் என்பதாகும். இது அந்தாதிச் செய்யுள் என்ற இலக்கண மரபில் எழுதப் பெற்ற ஒன்று. அதாவது முன்னைய பாடலின் கடைசி வார்த்தை, அடுத்து வரும் இப்பாடலுக்கு முதற் சொல்லாக வரும் என்பதாகும். பாடல:

" சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீர் இல்ஐம் புலன்களால்
முந்தை ஆன காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்
வெந்து ஐயா விழுந்திலேன் என்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை ஆய நின்னை இன்னம்
எய்தல் உற்று இருப்பேனே "

**அரும்பதவுரை**: சீர் இலா - சீர் கெட்டுப்போன ஐம்புலன்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவி, முந்தை - முன், வெள்கி-வெட்கப்பட்டு, விண்டிலேன்- அலறிடேன், எந்தை - என் தந்தை, ஆய - ஆகிய, நின்னை - உன்னை.

**தெளிவுரை**

என் தந்தை ஆகிய சிவபெருமானே! என் நினைப்பு, செய்கை, கேள்வி, மற்றும் பேச்சும் ஐம்புலன்களும் மாறுபாட்டினால் நீ முன்பு, எழுந்து அருளிய போது, அவை உனக்கு உரியனவாக ஆக்காது செய்து விட்டேனே! மூடனாகிய நான் ஐயோ, உன்னைச் சேராது போனேனே! அப்போதே நான் நெருப்பிலே வீழ்ந்து இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது, என்னோடு நீ நட்பாக இருந்த உள்ளத்தோடு சேர்ந்து வெட்கப்பட்டு போனேன். எனினும், என் தந்தை ஆகிய உன்னைச் சார்ந்தவாறு இங்கே ஒதுங்கியதால், உண்டு, உடுத்து இருக்கின்றேன்.! " எனப் புலம்புகிறார்.

எப்படி ஒருவருக்குச் சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு சீருற ஐம்புலன்களால் மன ஒருமைப்பாடு மட்டும் இன்றி, மனோதிடத்துடன் கூடிய உறுதி ஏற்படும். அதனால் அத்தகையோர் தன் கருமமே கண்ணாயினார் எனத் திகழ்வர் என்பதைக் கீழ்க்கண்ட வாஜஸ்பதி மிஸ்ரா வரலாறு விளக்கும்.

வாஜஸ்பதி மிஸ்ரா என்பவர் பிரம்ம சூத்திரம் என்ற நூலுக்கு மிகச்சிறந்த உரை எழுதி இருக்கிறார். அவர் எழுதிய உரையைப் போல வேறு யார் ஒருவரும் உரை எழுத முடியாது என்கிற அளவுக்கு, உலகத்தில் உள்ள தத்துவங்களை எல்லாம் உள்ளடக்கி உரை எழுதினார்.

அவர் அந்த உரையை எழுதத் துவங்குவதற்கு முன்பு ஒரு சம்பவம். வாஜஸ்பதியிடம் அவர் குரு சொன்னார். "எனக்கு வயதாகி விட்டது. என் மகளை நீதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். நான் கூடிய சீக்கிரமே இறந்து விடுவேன். அதனால் பிரம்ம சூத்திரத்திற்கான உரையை நீதான் எழுத வேண்டும். மிகச் சிறப்பாக எழுத வேண்டும். அதைச் செய்து விடு!" என்று சொல்லி விட்டு உயிர் நீத்தார்.

குரு சொன்னபடியே திருமணம் நடந்ததும் வாஜஸ் பதியும் தனிக் குடித்தனம் ஆரம்பித்து உரையை எழுதத் துவங்குகிறார். காலம் கடந்தது. வருடங்கள் உருண்டு ஓடின. உரை எழுதி முடித்தாகி விட்டது. அந்த நூலுக்கு என்ன பெயர் வைக்கலாம். என்று யோசித்துக்கொண்டு இருந்தார். தீவிரமாக யோசித்துக்கொண்டு இருந்தபோது, அவர் அருகில் இருந்த விளக்கிற்கு, ஒரு பாட்டி, நெய் ஊற்றி, விளக்கு ஏற்றிக் கொண்டு இருப்பதைக் கண்டார்.

"அம்மா! நீ யார்? " என்று கேட்டார். வாஜஸ்பதி. "நான் தான் உங்கள் மனைவி. என்னைத் திருமணம் செய்து கொண்டதும், நீங்கள் குருவின் ஆணையை ஏற்று (பிரம்மசூத்திரத்திற்கு) உரையை எழுத ஆரம்பித்து விட்டீர்கள்."

" அப்படியா "

" உங்களுக்கு எந்தத் தொல்லையும் தராமல், வேண்டிய உதவிகளைப் பக்கத்தில் இருந்து செய்து வருகிறேன்" என்று அவர் மனைவி பவ்யமாகச் சொன்னாள். வாஜஸ்பதிக்கு ஒரே பரிதவிப்பாக இருந்தது. ஆனாலும் உள்ளுக்குள் பரவசம் அடைந்தார். இவ்வளவு அர்ப்பணிப்பு உணர்வோடு ஒரு பெண் இருக்க முடியுமா? (உள்ளூர நினைத்தார்)..

மிஸ்ரா கேட்டார் "என் கவனத்தை, ஒரு முறையாவது திருப்பி இருக்கக் கூடாதா? உன்னை யார் என்று காட்டி இருக்கக் கூடாதா? உன் வாழ்க்கையை நான் வீணடித்து விட்டேனே!" என்று அழுதார்.

அதற்கு அவள் பதில் சொன்னாள் " உங்களுக்குச் சேவை செய்வதே எனது பாக்கியம். அது நிறைவேற நீங்கள் எனக்கு உதவினீர்கள் " (தொடர்ந்தாள்). " உங்களைத் திருமணம் செய்து கொண்டதால் தான் எனக்கு இந்த பாக்கியம் கிடைத்தது. அதற்கு எனது அநேக கோடி நன்றிகள் " என்று நெகிழ்ந்து கூறினாள்.

அவள் பெயர் தான் பாமதி. இந்தப் பெயரையே அவர் எழதிய பிரம்ம சூத்திர உரைக்கும் பெயராக வைத்தார். பல ஆண்டு காலம் பாமதியை, எதையும் எதிர் பார்க்காமல் இயங்க வைத்தது எது? அள்ள அள்ளக் குறையாமல் பெருகும் அன்பு என்னும் சக்தி தான். பாமதிக்குப் பர்த்தா மீது அன்பு, மிஸ்ராவுக்குப் பிரம்ம சூத்திரப் பொருளாகிய பரப்பிரம்மத்தின் மீது அன்பு. அதனால் அவர் சிந்தை, கேள்வி, வாக்கு, செயல்- எல்லாம் மெய்யாக - உறுதி குறையாத திடம் கொண்ட உள்ளத்தால் இறைவன் பால் திளைக்க, அந்த சக்தி அவர் உரை எழுதத் துணைநின்றது. அல்லவா?

நன்றி

**திருவாசகத் தேனமுது.**

உ
சிவமயம்

# வவுனியா மாவட்டமும் கந்தபுராண படனமும்

திரு. க. ஐயம்பிள்ளை
*(தலைவர் சேக்கிழார் மன்றம், வவுனியா)*

### தோற்றுவாய்

வேதத்தினை ஏற்றுக் கொண்ட மதங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான நூல் வேதம். அம்மதங்களுக்குச் சிறப்பான நூல் ஆகமம். எனவேதான் வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்னும் சொற்றொடர் வழங்கலாயிற்று. வாதுளம் முதல் காமிகம் ஈறாகவுள்ள இருபத்தெட்டு(28) ஆகமங்களும் சைவ சமயத்துக்குரிய சிறப்பு நூல்களாகும். இவற்றைச் சிவாகமம் என்பர். வேத ஆகமக் கருத்துக்கள் சாதாரண மக்களால் விளங்க முடியாதவை.

சாதாரண கண்களால் காண இயலாத மிகவும் நுண்ணிய அணுக்களையும் அவை போன்ற நுண் பொருட்களையும் கண்டறியப் பயன்படுத்தப்படும் கண்ணாடியைப் "பூதக் கண்ணாடி" என்பர். எனவே வேத, ஆகமக் கருத்துக்களை விரித்துக் கூறி விளங்க வைக்கும் பூதக் கண்ணாடியே புராணம் எனலாம். புராதனம் என்னுஞ் சொல் மருவி "புராணம்" என வந்ததாக அறிஞர் கருதுகின்றனர். இதன் பொருள் "பழைமையானது" என்பதாகும். கந்தபுராணம் என்றால் கந்தனது பழைமையான வரலாறு எனப் பொருள்படும்.

வடமொழியில் அமைந்த பதினெண் புராணங்களுள் காந்த புராணமும் ஒன்று. ஒரு இலட்சம் (100000) கிரந்தங்களையுடைய காந்த புராணம் ஆறு சங்கிதை (பிரிவு)களைக் கொண்டது. அவற்றுள் ஐந்தாவது சங்கிதையாகச் சங்கரசங்கிதை விளங்குகின்றது. சங்கரசங்கிதை (12)பன்னிரண்டு கண்டங்களையுடையது. முதலாவது கண்டம் சிவரகசிய கண்டம் ஆகும். இது ஸம்பவ காண்டம் முதல் உபதேச காண்டம் வரையான ஏழு (7) காண்டங்களைக் கொண்டது.

காஞ்சியில் அவதரித்த கச்சியப்ப சிவாச்சாரியார் ஸம்பவ (உற்பத்தி) காண்டம் முதல் தட்ச காண்டம் வரையுள்ள ஆறு காண்டங்களையும் தமிழில் பாடியருளினார்கள். ஏழாவது காண்டமான உபதேச காண்டம் குகனேரியப்ப முதலியாரால் பாடப் பெற்றது. இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியாருடைய மாணவனாகிய ஞானவரோதயர் என்பாரும் பாடியதாக அறிய முடிகின்றது.

### நல்லை நகர் நாவலர் வளர்த்த புராண படனம்

கந்த புராணத்தை உள்ளன்போடு படித்தும் பயன் விரித்தும் சிரத்தையோடு கேட்டும் வருபவர்களுக்கு சூரியனைக் கண்ட பனி போல துன்பங்கள் யாவும் நீங்கும், வளஞ்சிறக்கும், இறைவன் திருப்பாதம் அடைவதும் சாத்தியமாகும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. இத்தகைய பயன்களைத் தரக் கூடிய புராணத்தை இயன்றவரை எல்லா இடமும் பரவும் வகை செய்தல் வேண்டும் என்னும் பெரு விருப்பால் நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் கந்தபுராண படனத்தையும்

பிரசங்கத்தையும் நடத்தி வந்தார். இதன் காரணமாக கந்த புராணம் தோன்றிய தமிழகத்தை விட ஈழத்திலேயே மிகுந்த ஈடுபாட்டுடன் கந்தபுராண படனம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாவலர் பெருமான் ஈழத்தில் புராண படனத்தைத் தொடக்கி வைத்ததோடு பல மாணவர்களை ஒழுங்காகப் புராண படனங்களை வாசிக்கவும் பயன் விரிக்கவும் பக்குவப்படுத்தி வந்தார். அவர்களுள் தலை மாணாக்கனாக அவரது மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் விளங்கினார்கள். அவரிடம் புராண படனம் பயின்ற மாணாக்கர், வழி வழியாகப் புராண படனஞ் செய்து வந்தனர். முருகன் ஆலயங்களிலும் விநாயகர் ஆலயங்களிலும் திருமடங்களிலும் கந்தபுராண படனம் நிகழ்ந்தது. சாதாரணமாக முழுவதையும் படித்து முடிக்க மூன்று மாத காலஞ் சென்றது. ஆண்டு தோறும் மூன்று மாத காலங்கள் கந்தபுராண காலமாகவே அமைந்திருந்தன.

கல்வியறிவற்றவர்கள், குறைவான அறிவுள்ளவர்கள் கூட ஒழுங்காக புராண படனத்தைக் கேட்டுக் கேட்டு, கந்த புராணத்தின் கதை, விசேட கருத்துக்கள் தத்துவங்கள் பாடல் நயம் போன்ற பல்வேறு விடயங்களில் நன்கு பரிச்சயமுடையவர்களாக விளங்கினர். இவர்களுக்கு மத்தியில் பயன் சொல்வோரும் மிக அவதானமாகப் பொருள் விளக்கம் செய்ய வேண்டிய நிலையில் இருந்தார்கள். ஏதாவது தவறான அல்லது பொருத்தமற்ற உரை கூறினால் விரதமிருந்து உரை கேட்கும் அடியவர்களே பிழைகளைச் சுட்டிக் காட்டி விடுவார்கள் என்பதால் பயன் விரிப்போர் நல்ல முறையில் ஆயத்தஞ் செய்து கொண்டே உரை சொல்ல வருவார்கள்.

**கந்த புராண கலாசாரம்**

இவ்வாறு யாழ்ப்பாண மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ள கந்த புராணத்தின் பெயர் விதியொன்றுக்குச் சூட்டப்பட்டுள்ளது. கந்தர் மடம் அம்மன் வீதியையும் அரசடி வீதியையும் இணைக்கும் வீதியின் பெயர் கந்தபுராண வீதி என்பதாகும். இவ் வீதியின் வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ள ஞான வைரவர் கோயிலில் கந்தபுராண படனம் நீண்ட காலமாக நடைபெற்று வந்ததால் அவ்வீதிக்கு இப்பெயர் சூட்டப்பட்டதெனக் கூறுவர். யாழ்ப்பாணச் சைவ மக்களின் கலாச்சாரத்தோடு கந்தபுராணக் கலாச்சாரம் இரண்டறக் கலந்துவிட்டது. "கந்தபுராணம் வழிபாட்டு நூலாகவும் ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டு நூலாகவும் ஈழத்துச் சைவ உலகில் விளங்குகின்றது. சைவ சமய வாழ்வியல் அம்சங்களைக் கந்தபுராணக் கதையின் ஊடாகவே விளங்கிக் கொள்ளுதல், முருகனுக்குரிய விரதங்கள் ஏனைய வழிபாட்டு முறைகள் என்பவற்றைப் பேணிக் கொள்ளுதல் கந்த புராண படனங்களை மேற்கொள்ளுதல் அவற்றைச் செவி மடுத்தல் முருகன் தெய்வயானை வள்ளி என்போரைக் குறிக்கும் பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டுதல். முதலியன கந்தபுராண கலாசாரத்தின் முக்கிய கூறுகளாகும். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லை, வவுனியா, மன்னார், திருகோணமலை மாவட்டங்களைச் சார்ந்த சைவச் சூழல்கள் இவற்றைப் பேணி வந்துள்ளன. இன்றும் பேணி வருகின்றன.

இத்தகைய கலாசாரத்திற்கு "கந்தபுராண கலாசாரம்" எனப் பெயர் சூட்டி வழக்கில் கொணர்ந்தவர். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆவார். 1 இதனை

விளக்கி "கந்த புராண கலாசாரம்" என்னும் நூலையும் பண்டிதமணி தந்துள்ளார். இந்த வகையில் கந்தபுராணம் சைவமக்கள் வாழ்விலே நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. ஈழத்தில் கந்தபுராணம் சிறந்த இடத்தைப் பெற்றிருப்பதனை "இலங்கை வாழ் சைவர்கள் கந்தபுராணத்தை விதிப்படி பாராயணஞ் செய்து பிணியினின்றும் தணியப் பெறும் வழக்கத்தை இன்றும் மேற்கொள்கின்றனர்" என திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் குறிப்பிடுவதிலிருந்து உணரக் கூடியதாகவுள்ளது.

**வன்னி மாவட்டங்களில் புராண படனம்.**

யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட கந்தபுராண கலாசார மரபு ஊற்றின் பிரவாகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வன்னிப் பெருநிலப் பரப்புக்கும் திருகோணமலைக்கும் பாய்ந்து வளமூட்டியது. புராண படன அறிவு சான்ற புராணிகர் காலத்துக்குக் காலம் வன்னிப் பிரதேசத்திற்கு வருகை தந்து புராண படனத்தைத் தொடக்கி வைத்ததோடு குருவாக அமைந்து அக்கறையுள்ள அடியவர்களுக்குப் புராண படன ஒழுங்கு விதிக்கமையப் புராணத்தைப் பயிற்றுவித்தனர். பயிற்சிக்காலம் மூன்று மாதம் தொடக்கம் ஆறு மாதம் வரை நீடிக்கும். பயிற்சி முடிவில் குருவுக்கு வேட்டி சால்வை நெல்லு காசு போன்றன தட்சணையாக வழங்கப்படும். அதனைக் கூலியாகவோ சம்பளமாகவோ கருதுவதில்லை. கருதவும் கூடாது என்ற மரபு இருந்தது.

**முல்லைத்தீவு மாவட்டம்**

இவ்வாறு வன்னிப் பிரதேசத்திற்கு வருகை தந்த புராணிகர் சிலர் கிளிநொச்சிப் பிரதேசத்திலும் சிலர் தற்போதைய முல்லைத்தீவு மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும் தங்கியிருந்து புராண படனம் பயிற்றுவித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, கல்யாண வேலவர் ஆலயத்தை மையமாகக் கொண்டு புராண படனம் ஆரம்பிக்கப் பெற்று ஆலயத்தின் அர்ச்சகர் அமரர் பிரம்மஸ்ரீ க. கணேசையர் (சுப்பையர்) பொருள் விரித்துரைக்கப் பலர் புராணம் படித்துக் கொண்டிருந்தார்கள். காலவோட்டத்தில் அவர்களுள் அமரர்பிரம்மஸ்ரீ ஜெ. நாகராஜ ஐயர், கலாபூஷணம் தமிழ்மணி, கவிசேகரன் "அரியான்பொய்கை" க. செல்லத்துரை அவர்கள், ஆயுர்வேத வைத்தியர் அமரர் சி. திருநாவுக்கரசு அவர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அமரர் சி. நடராஜா அவர்கள் நாகராஜா ஐயரின் மகன் சிவஸ்ரீ நா. நடராஜக் குருக்கள் இவரின் தம்பி கலாநிதி நாகராஜ ஐயர், சுப்பிரமணியன் அவர்கள், அமரர் சண்முகம் செல்லத்தம்பி அவர்களும் தண்ணீரூற்றைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் வவுனியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். தா. சிவசிதம்பரம் அவர்களது தமையனாருமான அமரர் தா.குமரையா அவர்கள் திரு. கனகசிங்கம் முதலியோர் சிறப்பாகப் பயன் விரிக்கும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினர். இவர்களுள் தமிழ்மணி "அரியான் பொய்கை" க.செல்லத்துரை அவர்களும் சிவஸ்ரீ நாகராஜ ஐயர் நடராஜக் குருக்கள், திரு கனகசிங்கம் ஆகியோர் இப்பொழுதும் புராணபடனத்தின்போது பொருள் விரித்துரைக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

**வவுனியா மாவட்டம்**

வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை மருதோடை கந்தசுவாமி கோயிலை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்திருந்த அமரர் இராமுப்பிள்ளை என்னும்

புராணிகர் கந்தபுராணப் பயிற்சியை 1940களில் தொடங்கி வைத்தார். இவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்களுள் நாவற்குளத்தைச் சேர்ந்த அமரர் பொன்னையா இராசையா அவர்களும் திரு.த.சுந்தரம்பிள்ளை அவர்களும் வேலர் சின்னக்குளத்தைச் சேர்ந்த திரு.சின்னையா அவர்களும் திரு. மாரிமுத்து அருணாசலம் அவர்களும் கொந்தக்காரங் குளத்தைச் சேர்ந்த அமரர் க.கோபாலசிங்கம் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அமரர் இராமுப்பிள்ளை அவர்கள் கோவிலில் மட்டுமன்றி நாவற்குளம் கிராமத்திலும் தங்கியிருந்து பயன் பழக்கியவர். இதன் காரணமாக நாவற்குளத்தைச் சேர்ந்த அமரர் பொன்னையா இராசையா அவர்களும் திரு.த.சுந்தரம்பிள்ளை அவர்களும் பயன் விரித்துரைக்கும் ஆற்றல் பெற்றுயர்ந்தனர்.

அமரர் இராமுப்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் 1945 தொடக்கம் நாகர் கோவிலைச் சேர்ந்த புலவர் செல்லப்பா கணபதிப்பிள்ளை அவர்கள் மருதோடை கந்தசுவாமி கோவிலில் புராண படனத்தை ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தார். இவர் காலத்தில் மேலும் பலர் புராணம் படிக்கக் கலந்து கொண்டனர். அமரர் திரு. பொ. இராசையா அவர்களும் திரு.த.சுந்தரம்பிள்ளை அவர்களும் பயன் விரிப்பதில் பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் ஆயினர். ஆரம்பக் கல்விக்கு மேல் படிப்பதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லாதிருந்த போதும் இறையருளாலும் குருமாரின் ஆசியாலும் சுயதேடலாலும் உரை சொல்லுந் திறனை வளப்படுத்தியதோடு கற்றார் சபையிலே அவர்கள் மெச்சும் வண்ணம் பயன் விரிக்கும் சிறப்பும் பொருந்தியவர்களாக விளங்கினர்.

வன்னிப் பிரதேசத்திலெங்கும் செல்லப்பா பரியார் என்று அன்புடன் அழைக்கப்பட்ட நாகர் கோவிலைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவரின் மகன்தான் புலவர் கணபதிப்பிள்ளை அவர்கள். தந்தையைப் போன்று வைத்தியராகத் திகழ்ந்த போதும் புராணப் படிப்பிலும் பாடல்கள் யாப்பதிலும் கூடிய நாட்டமிருந்ததால் அத்துறைகளை வளர்த்துத் தமது பெயரை நிலை நிறுத்திய பெரியார் இவர். இவரால் யாக்கப் பெற்ற திருவூஞ்சற் பாட்டே மருதோடை கந்த சுவாமி கோவிலின் ஊஞ்சற் பதிகமாக விளங்குகின்றது. மகோற்சவ காலங்களில் வருகை தந்து திருவூஞ்சற் பதிகத்தைத் தாமே பண்ணோடு பாடி இன்புறும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டிருந்தவர் இவர்.

இவ்வாறு ஓமந்தை மருதோடை கந்தசுவாமி கோவிலில் கந்தபுராணபடனப் பயிர் செழித்து வளரத் தொடங்கிய சம காலத்தில் சாஸ்திரி கூழாங்குளத்திலும் நெடுங்கேணி கந்தபுராண முருகன் கோவில் என்று தற்காலத்தில் வழங்கப்படும் பழைய முருகன் கோயிலிலும் புராண படனம் ஆரம்பிக்கப்பட்டது. பிரபல ஆயுர்வேத வைத்தியராக விளங்கிய அமரர் செல்லையா அவர்கள் தமது மக்களுக்குப் புராண படனத்தைப் பயிற்றுவிக்கும் பொருட்டு வவுனியா பிரதேசத்திற்கு அடிக்கடி வந்து மக்களோடு நன்கு பரிச்சயமான மிருசுவில் வடக்கைச் சேர்ந்தவரும் புராண வாத்தியார் என்று அழைக்கப்பட்டவருமான திரு.கணபதிப்பிள்ளை சின்னையா ஆசிரியர் எனப் புழக்கத்தில் உள்ள பெயரைக் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதர் என்னும் சிறந்த புராணிகரைத் தங்கள் வீட்டில் தங்க வைத்து வீட்டிலும் சாஸ்திரி கூழாங்குளம் கந்தசுவாமி கோயிலிலும் புராண படனம் நிகழ்ந்த ஒழுங்கு செய்திருந்தார்.

இப்பயிற்சிப் பட்டறையில் பயின்றவர்களுள் பம்பைமடுவைச் சேர்ந்த அமரர்

சேனாதிராசா நாகலிங்கம் அவர்கள் சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்த அமரர் செல்லையா பத்மநாதன் அவர்கள் புதுக்குளத்தைச் சேர்ந்த திரு ஆறுமுகம் குமரப்பா அவர்கள் மருக்காரம்பளையைச் சேர்ந்த அமரர் சேனாதிராசா அவர்கள், தாண்டிக்குளத்தைச் சேர்ந்த அமரர் இராஜலிங்கம் அவர்கள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். புராணம் படிப்பதோடு பயன் விரித்துரைக்கும் அறிவாற்றல் நிரம்பியவர்கள்

இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அமரர் நாகலிங்கம் அவர்களின் மைந்தர்களான கிராம உத்தியோகத்தராகப் பணியாற்றி 2009 ஆம் ஆண்டு அமரத்துவம் எய்திய நா. யோகராசா அவர்கள் அகளங்கன் என்னும் புனை பெயர் கொண்ட ஆசிரியர் தமிழ்மணி நா. தர்மராஜா அவர்கள் செக்கடிப்புலவைச் சேர்ந்த திரு. க. பொன்ராசா அவர்கள், பம்பைமடுவைச் சேர்ந்த திரு.வீ.சிவசிதம்பரநடசா அவர்கள், புதுக்குளத்தைச் சேர்ந்த திரு. குமரப்பாவின் பிள்ளைகளான திரு. குமரப்பா வரதராஜா அவர்கள், மொழியரசி கலா குமரப்பா அவர்கள் மருக்காரம்பளையைச் சேர்ந்த அமரர் சேனாதிராசாவின் மகன் உலகநாதன் முதலியோர் புராண படனத்தில் வல்லவர்களாக விளங்குகின்றார்கள்.

**நெடுங்கேணிப் பகுதியில் கந்தபுராணம்**

வவுனியா மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள நெடுங்கேணி குடியிருப்பில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகன் சன்னிதானத்தில் 1945களில் புராண படனம் நடைபெற்றது. இதனைப் புராண வாத்தியார் என மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட புராணிகர் ஒருவர் நடத்தியுள்ளார். தற்போதுள்ள மக்களுக்கு அவரது பெயர் தெரியவில்லை. அதன் பின்னர் 1947 தொடக்கம் சில ஆண்டுகள் ஓமந்தை மருதோடை முருகன் ஆலய பிரதம குருவாக விளங்கிய அமரர் செல்லையா குருக்கள் நெடுங்கேணிக்கு வந்து நெடுங்கேணி முருகன் ஆலயத்தில் கந்த புராணப் படனத்தைப் பயிற்றுவித்தார்.

**ஊஞ்சற்கட்டி ஸ்ரீமுருகன் ஆலயம்**

குருக்களின் எடுப்பான தோற்றம், பயன் பழக்கும் ஆற்றல், பண்ணோடு புராணங்களைப் படிக்கும் பாங்கு, படிக்க வருவோரிடம் பழகும் பண்பு ஆகியவற்றால் கவரப்பட்ட நெடுங்கேணி ஊஞ்சற் கட்டியைச் சேர்ந்த அமரர் திரு. கணபதிப்பிள்ளை பேரம்பலம், அமரர் திரு. மாரிமுத்து பொன்னையா விதானையார், அமரர் திரு. வேலு சிற்றம்பலம் ஆகியோர் ஊஞ்சற் கட்டி முருகன் ஆலயத்தில் தங்கி நின்று புராண படனப் பயிற்சியளிக்க வேண்டுமென விநயமாக வேண்டிக் கொண்டதற் கிணங்க 1948 தொடக்கம் சில காலம் செல்லையா குருக்கள் அவர்கள் ஊஞ்சற்கட்டி முருகன் ஆலயத்தில் கந்த புராண படனம் ஆரம்பித்து வைத்தார். இங்கு பயிற்சி பெற்றவர்களுள் மேற்குறிப்பிட்ட மூவரும் பயன் விரிப்பதில் வல்லவர்களாக விளங்க வேறு பலர் புராணம் படிப்பதில் பயிற்சி பெற்றுச் சிறந்தனர்.

1958 இல் நிகழ்ந்த நாடு தழுவிய இனக் கலவரத்தால் எல்லைப்புறக் கிராமமான இங்கும் பதட்ட நிலை தோன்றியதால் புராணப் படிப்பும் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியது. 1987 இல் ஏற்பட்ட இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தப்படி இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்த பின்னர் தோன்றிய அமைதியின் காரணமாக உற்சாகமடைந்த இவ்வூர் மக்கள் 1988 தொடக்கம் மீண்டும் கந்தபுராண படனத்தை

ஆரம்பித்தனர். இதற்கு உந்து சக்தியாக தென்னமரவடி பொன்னம்பலம் என்பவரும் ஊஞ்சற்கட்டி திரு. கணபதிப்பிள்ளை பேரம்பலம் அவர்களின் புதல்வனாகிய கந்தசாமியும் விளங்கினர். இவர்களது முயற்சியால் செம்மலையைச் சேர்ந்த திரு. அருணாசலம் வேலாயுதம் அவர்களும் ஆலயத்தின் மகோற்சவ குருவாக விளங்கியவருமாகிய சிவஸ்ரீ நா. நடராஜக் குருக்களும் பயன் விரித்துரைக்க தண்டுவான் கிராமத்தவராகிய திரு. கிருஸ்ணபிள்ளை அவர்கள், முள்ளியவளையைச் சேர்ந்த திரு. மயில்வாகனம், திரு. தம்பிப்பிள்ளை, திரு. பொன்னம்பலம் ஆகியோர் புராணம் படித்துதவினர். காலப் போக்கில் விக்னம் என அழைக்கப்பட்ட ஊஞ்சற்கட்டி திரு. க. பே. சோமசுந்தரம் அவர்களும் வெடிவைத்தகல்லு திரு. நா. சிவகுரு அவர்களும் படிப்பதில் இணைந்து கொள்ள நயினா மடுவைச் சேர்ந்த சுந்தரம் என அழைக்கப்படும் திரு. செல்லப்பா பஞ்சாட்சரம் பயன்விரிப்பதில் இணைந்து கொண்டார்.

### பட்டிக்குடியிருப்பு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம்

வவுனியா கிழக்கின் எல்லைப்புறக் கிராமமாகிய பட்டிக்குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த அமரர் திரு. இராமுப்பிள்ளை, அமரர் திரு. ஆறுமுகம் முதலியோரது வேண்டுகோளுக்கிணங்கிய செல்லையாக் குருக்கள் அவர்கள் 1943 தொடக்கம் பட்டிக்குடியிருப்பு ஆலடி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனத்தைத் தொடக்கி வைத்ததோடு புராணபடனப் பயிற்சியையும் அளித்தார்கள். இவரிடம் பயிற்சி பெற்றவர்களுள் திரு. இராமுப்பிள்ளை அவர்களும் திரு. ஆறுமுகம் அவர்களும் புராணம் படிப்பதோடு பயன் விரித்துரைப்பதிலும் புலமை பெற்றார்கள். காலப்போக்கில் ஆறுமுகம் அவர்களது மைந்தர்களான திரு. ஆ. சிற்றம்பலம், குணம் ஆகியோர் பயன் விரிக்கும் அளவுக்கு ஆற்றல் பெற்றனர். மேலும் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. இராமுப்பிள்ளை சிவப்பிரகாசம் அவர்களும் திரு. திருநாமம் போன்றோரும் ஆலய பூசைகள் புரிவதோடு புராணபடனத்திலும் சிறப்பான பங்களிப்பைச் செய்தனர்.

ஊஞ்சற்கட்டியில் ஆரம்பித்த புராண படனம் மேலும் காஞ்சூரமோட்டை முருகன் கோயில் வரை தொடர்ந்தது. சாஸ்திரியார் என்று அழைக்கப்பட்டவர் படிப்பதோடு பயன் சொல்லும் அளவுக்குத் தம்மை உயர்த்திக் கொள்ள வேறுஞ் சிலர் புராணப் படிப்பில் பங்கு கொண்டிருந்தனர்.

சாதாரணமாக கந்தபுராண படனம் தொடங்கினால் மூன்று (03) மாத காலம் தொடர்ந்து நடைபெறும். இக்காலத்துள் புராணம் படிப்பவர்கள், பயனுரைப்பவர்கள், பக்தியுடன் கேட்டுக் கொண்டிருப்போர், விரதகாரர்கள் ஆகிய அனைவருக்கம் அடியவர்கள் ஒன்று கூடிச் சமைத்து உணவு வழங்குவர். இவ்வாறு படிப்பு முடியும் வரை ஆலயச் சூழல் முருகன் புகழ் பாடும், முருகன் புகழ் பேசும் பக்திச் சூழலாகவே அமைந்திருந்தது.

### கந்தபுராண படனம் தொடர்ந்து நடைபெறாமை

காலப் போக்கில் வவுனியா மாவட்டத்தில் கந்தர் சஷ்டி விரத காலத்தில் கந்த புராணம், யுத்த காண்டம், சூரபத்மன் வதைப் படலம் தொடக்கம் மீட்சிப் படலம் வரை படிப்பர். சில ஆலயங்களில் தேவ காண்டம் தெய்வானையம்மன் திருமணப் படலம் வரை படிக்கும் வழக்கமும் இருந்து வருகின்றது. நெளுக்குளம் கந்தசுவாமி ஆலயத்தில்

கந்தர் சஷ்டி விரத காலத்தில் புராண படனம் செய்யும் மரபு இம் மாவட்டத்தின் ஏனைய ஆலயங்களுக்கு முன்னோடியாக நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. கந்தர் சஷ்டி விரத காலத்தில் ஆலயத்திற்கு வரும் அத்தனை அடியவர்களுக்கம் அன்னதானம் வழங்கப்படும். சூரன்போர் திருவிழாவின் போது ஊரே திரண்டு வந்து நிகழ்வுகளில் திளைத்திருப்பர். மறுநாள் நடைபெறும் தெய்வானையம்மன் திருக் கல்யாணப் படிப்பும் மிகச் சிறப்பாக நடைபெற்று திருக் கல்யாணத் திருவிழாவும் பக்தி பூர்வமாக இடம்பெறும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானால் தொடக்கி வைக்கப் பெற்ற கந்தபுராண படனப் புனிதப் பணி அருகியமைக்குரிய பொதுவான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ☐ தொடர்ந்து மூன்று மாத காலம் பொருள் விரித்துரைக்கக் காலத்தைச் செலவிட பயன் 7விரித்துரைப்போருக்கு இயலாத நிலைமை.
- ☐ பொருள் தேடும் இன்றைய அவசர உலகில் புராணத்தைக் கேட்டு நேரத்தினை ஒதுக்க முடியாத ஒதுக்க விரும்பாத சமூக அமைப்பு.
- ☐ வர்த்தக மயமாகிவிட்ட கோயில்களில் புராணப் படிப்புக்காக நேரத்தையோ பணத்தையோ செலவிட ஆலய பரிபாலன சபையினர் விரும்பாமை. பரிபாலன சபையினருக்கு புராணப் படிப்பில் அக்கறை இல்லாமையும் புராணங்களை அறிந்து கொள்ளும் விருப்பமில்லாமையும்.
- ☐ வருமானந் தரக்கூடிய ஆலயக் கிரயைகள் புரோகிதம் சாஸ்திரம் ஆகியன தவிர கிரியைகளின் விளக்கத்தினை அடியவர்களுக்கு எடுத்துக் கூறக் கூடிய ஆகம உபநிடத அறிவு, ஆன்மீக அறிவை வளர்க்கக் கூடிய சமய, புராண, இதிகாச, வேத, உபநிடத அறிவு பெரும்பாலான அந்தணர்களான அர்ச்சகர்களுக்கும் சிவாச்சாரியார்களுக்கும் போதிய அளவு இல்லாமை.

முன்பெல்லாம் ஆலயத்தை மையமாகக் கொண்டு நிகழ்ந்த புராண படனங்களின் போது ஆலய பிரதம குரு காப்புச் சொல்வதோடு சில பாடல்களைப் படித்துக் காட்டிப் புராணம் படிப்பவர் கையில் புத்தகத்தைக் கையளிப்பதையும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் பயன் விரிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அந்த அளவுக்குத் தெய்வ பக்தி, புராணங்களில் நம்பிக்கையோடு கூடிய ஈடுபாடு, புராண படனப் பயிற்சியுடையவர்களாக அந்தணச் சிவாச்சாரியார்கள் விளங்கினார்கள். மற்றவர்களுக்கு விளக்கினார்கள். இன்று அவ்வாறு விளங்குபவர்கள் மிகச் சிலரே. விளக்குபவர்கள் மிகமிகச் சிலரேயாவர்.

**புராண படன மறுமலர்ச்சி**

ஈழத்துச் சைவ மக்களின் கலாசாரமாக விளங்கிய "கந்தபுராண கலாசாரம்" நின்று நிலைப்பதற்குரிய புராண படனத்திற்குப் புத்துயிரளித்துப் புதியவர்களையும் இளைஞர்களையும் இந்நிகழ்வில் ஈடுபடுத்தவும் கந்தபுராணத்தை முழுமையாகப் படித்துப் பயன் விரிக்கவும் வேண்டுமென்ற எண்ணத்தால் உந்தப் பெற்ற காவியமாமணி, தமிழ்மணி அகளங்கன் அவர்கள் (ஆசிரியர் நா. தர்மராஜா) அவர்களது பெரு முயற்சியின் காரணமாக 1992 இல் வவுனியா வெளிவட்ட வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் மீண்டும் புராண படனம் ஆரம்பமாகியது.

இவ்வாலயத்தில் பரிவார மூர்த்தியாக, வள்ளி, தெய்வயானை சமேதராய் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானது கோயில் திருப்பணி வேலைகள் வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்தவரும் வைரவர் புளியங்குளத்தில் வசித்தவரும் வாழ்வில் இறுதிவரை இவ்வாலயத்தின் தர்மகர்த்தா சபை உறுப்பினராகவும் ஆலய பரிபாலனசபை காப்பாளராகவும் விளங்கிய டாக்டர் S. சந்திரசேகரம் அவர்களது குடும்பத்தினரால் முற்றுவிக்கப் பெற்றது. 1992 இல் கும்பாபிஷேகம் நிகழ்ந்திருந்தது. இப்பெருமானின் சந்நிதியிலேயே புராண படனம் ஆரம்பிக்கப்பட்டது.

குரு ஸ்தானத்திலே அமர்ந்து பொருள் விரித்துரைத்தும் பலருக்குப் பொருள் உரைக்கப் பழக்கியும், படிக்கத் தூண்டியும் புராண படன நிகழ்வை அடியார்களுக்குப் பயன்படச் செய்ததன் மூ லம் புதிய சகாப்தத்தை மீண்டும் தொடக்கியவராக விளங்குகிறார் காவியமாமணி, தமிழ்மணி அகளங்கன் அவர்கள். இவர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய சிறந்த ஆசிரியர், மாணவருலகத்தாலும் ஆசிரிய சமூகத்தாலும் நன்கு மதிக்கப்பெற்ற பெருந்தகை. புராண, இதிகாச, இலக்கிய ஆன்மீக அறிவு நிறையப் பெற்றவர். உயர்ந்த பண்பாளர், சிறந்த கவிஞர், நல்ல நாடகாசிரியர், பரிசுபெற்ற சிறுகதை எழுத்தாளர், கவின்பெறு கட்டுரையாளர், ஆய்வாளர், இலக்கிய சமயப் பேச்சாளர், நாடறிந்த எழுத்தாளர், நல்லதொரு புராணிகர், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், பெரிய புராணம், ஏகாதசி புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களுக்குப் பயன் விரிக்கும் சிறப்பறிவு கொண்டவர். இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக விளங்கும் சீரிய சிந்தனையாளர். முப்பத்தைந்து (35) நூல்களுக்கு மேல் எழுதி வெளியிட்டவர். பெரிய புராணங்காட்டும் -

**"மாசி லாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசி னால்எத் திசையும் விளக்கினார்....."**

என்னுந் தொடர்களது தூய்மைக்கு இருப்பிடமானவர்.

**வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகராலயத்தல் புராண படனம்**

இவரைக் குருவாகக் கொண்டு புராண படனத்தைச் சிந்தாமணி விநாயகர் ஆலயத்திலே நடத்தவேண்டும் என்பதில் தளராத ஆர்வம் கொண்டவரான யாழ் வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவரும் வவுனியா கச்சேரியில் வேலைகள் பரிசோதகராகக் (Inspector of works) கடமையாற்றியவரும், தற்பொழுது வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பணியாற்றுபவருமான திரு. S. இரங்கநாததேசிகர் அவர்கள் புராணப் புத்தகங்களைத் தேடிச் சேகரித்தல், படிக்கக் கூடியவர்களை இனங்கண்டு அழைத்துவரல், பயன் விரித்துரைக்க விருப்பமானவர்களுக்கு தமிழ்மணி அகளங்கன் அவர்கள் ஆலோசனைக்கமைய பயன் ஆயத்தப்படுத்த வேண்டிய பாடல்களை ஒதுக்கித்தரல், புராண படனந் தொடங்கும் நேரத்துக்கு முன்னர் இக்கட்டுரையாளரது வீட்டில் படித்தும் பயன் விரித்தும் ஒத்திகை பார்த்தல் போன்ற பணிகளையாற்றி புராண படன நிகழ்வு சிறப்புற முற்றுப் பெறுவதற்கு அச்சாணியாக

விளங்கியவர்.

1992 இல் நிகழ்ந்த புராண படனத்தின் போது தமிழ்மணி அகளங்கனின் தமையனாரான அமரர் வவுனியா, பம்பைமடுவைப் பிறப்பிடமாகவும் சூசைப்பிள்ளையார் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிராம உத்தியோகத்தர் அமரர் திரு. நாகலிங்கம் யோகராசா அவர்களும் ஓமந்தை நாம்பன் குளத்தைச் சேர்ந்தவரும் வவுனியா கச்சேரியில் புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிப்பாளராகப் பணி புரிந்தவருமான திரு. கந்தையா ஐயம்பிள்ளை அவர்களும் மேற் குறிப்பிட்ட திரு. இரங்கநாததேசிகர் அவர்களும் யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்தவரும் வவுனியா கல்வித் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பணி புரிந்தவருமான திரு.ச.விஜயகுமார் அவர்களும் தொடர்ந்து படித்தும் பயன் சொல்லியும் வந்தனர்.

1993 இல் மீசாலை வடக்கைச் சேர்ந்தவரும் வவுனியா புகையிரத நிலையத்தில் புகையிரத நிலைய உதவியாளராகக் கடமையாற்றியவருமான திரு சரவணமுத்து தருமலிங்கம் அவர்களும் சரசாலையைச் சேர்ந்த திரு. செல்வராசா அவர்களும் பண்ணோடு புராணம் படிப்பதிலும் ஓமந்தை நாவற்குளத்தைப் பிறப்பிடமாகவும் கள்ளிக் குளத்தை வசிப்பிடமாகவும் இடம்பெயர்ந்து வவுனியா கற்குழியில் வசித்தவருமான திரு.த.சுந்தரம்பிள்ளை அவர்கள் பயன் சொல்வதிலும் பங்கு பற்றினர். 1995 தொடக்கம் பயன் விரிக்கும் பணியை திரு.த.சுந்தரம்பிள்ளை அவர்களே பொறுப்பேற்றுச் சிறப்புடன் நடத்தி வந்தார்.

1992 தொடக்கம் இவ்வாலயத்தில் பிள்ளையார் புராணம், திருவாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம் போன்றவற்றுக்குப் பயன் சொல்லியும் பல்வேறு சமயச் சொற் பொழிவுகள் ஆற்றியும் இவ்வாலயத்தில் ஆன்மீக அறிவு வளர்வதற்கான அருந்தொண்டாற்றிய நயினாதீவைச் சேர்ந்தவரும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றியவருமான திரு. ஆ. தியாகராஜா அவர்களும் இதே பணியாற்றிவந்த நெடுந்தீவைச் சேர்ந்தவரும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றியவருமான திரு. ஐ. யாதவராஜன் அவர்களும் வாய்ப்புக் கிடைக்கும் சமயங்களில் புராண படனத்தில் பங்கு கொண்டு பயன் சொல்லி வந்தனர்.

1994/95 ஆம் ஆண்டுப் பகுதியில் மதுவரித் திணைக்களத்தில் அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. மு. சொர்ணலிங்கம் அவர்களும் வவுனியா இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. சிவன் ஆகியோர் புரான படனத்தில் பங்கு கொண்டனர்.

மாகாண சபையில் செயலாளராகவம் மத்திய அமைச்சுக்களில் செயலாளராகவும் விளங்கிய எந்திரி இரகுநாதன் அவர்கள் வவுனியாவுக்கு வருகைதரும் நாட்களில் சமயம் வாய்க்கும் போதெல்லாம் புராண படனத்தில் பங்கு பற்றி எம் அனைவரக்கும் உந்து சக்தியாக விளங்கிய பெரியார்.

சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் கந்தபுராணம் யுத்தகாண்டம் பிற்பகுதிக்கு

உரையெழுதியவருமான யோகி கார்த்திகேசு அவர்களது பிரதம சீடர்களுள் ஒருவரான சுழிபுரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய சிறை அதிகாரியான கலாபூஷணம் மாதவர் மார்க்கண்டு அவர்கள் 1998 தொடக்கம் இவ்வாலயத்தில் புராணப் படிப்பின் போது சிறப்பாகப் பயன் விரித்துரைத்து வருகின்றார். இவரது பயன் விரிக்கும் ஆற்றல், புராணத்தின் மீது கொண்டுள்ள மதிப்பு, புராண படனத்தில் ஈடுபடுவோருடனான நட்போடு கூடிய உறவு, புதியவர்களை அணைத்து ஊக்கங்கொடுக்கும் மனோபாவம் முதலிய சிறந்த பண்புகள் புராண படனம் வளரவும் புதியவர்கள் ஈடுபடவுங் காரணமாக அமைந்தன.

1996 தொடக்கம் புராண படனத்தில் தொடர்ந்து பங்குபற்றி வந்தவரும் யாழ் சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளருமாக விளங்கிய திரு. பொ. நல்லையா அவர்கள் 2006 தொடக்கம் இவ்வாலயத்தில் கந்தபுராணத்துக்குச் சிறப்பாகப் பயன் சொல்லி வருகின்றார்.

இவ்வாலயத்தின் முன்னாள் செயலாளர் திரு. ஏ. குமாரசிங்கம் அவர்களும், தற்போதய பரிபாலன சபைச் செயலாளராகவும், கூட்டுறவுப் பாடசாலையின் உபஅதிபராகவும் கடமையாற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரான திரு. ஞா. கேதீஸ்வரன் அவர்களும் நிர்வாகசபை உறுப்பினரும் இலங்கை மின்சார சபையில் பணி புரிபவருமான திரு.S.தெய்வேந்திரராசா அவர்களும் மற்றொரு நிர்வாக சபை உறுப்பினரான கனகராயன்குளம் புதுவிளாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா திருநாவற்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரான கிராம உத்தியோகத்தர் திரு. சபாரத்தினம் தணிகாசலம் அவர்களும், ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய முகாமையாளரும் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. பொன்னம்பலம் அவர்களும் புராண படனத்தில் பங்கு பற்றி வருகின்றனர். இவ்வாலய பரிபாலன சபையின் காப்பாளர் இருவர், செயலாளர், நிர்வாக சபை உறுப்பினர் முகாமையாளரென பலர் புராண படனத்தில் பங்கு கொள்பவராக இருப்பதிலிருந்து இப்பரிபாலன சபையினர் புராண படனத்தில் கொண்டிருக்கும் அக்கறையும் மதிப்பும் தெளிவாகப் புலப்படுகின்றது.

வவுனியா இந்துமாமன்றத்தின் தலைவரும் வவுனியா மணிவாசகர் சபைத் தலைவரும் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வைரவர் புளியங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இறைபணிச்செம்மல் வை. செ. தேவராசா அவர்களும் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா வைரவபுளியங்குளத்தில் வசிப்பவரும் நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் பணி புரிபவருமான திரு. க. குலேந்திரன் அவர்களும் நீண்டகாலமாக இவ்வாலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாய்ப் புராண படனத்தில் பங்கு கொண்டு நல்ல பண்ணோடு கேட்பவர்க்கு இன்பமளிக்கும் வகையில் சிறப்பாகப் புராணம் படித்து வருகின்றனர்.

வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவுப் பிரதேச சபையின் செயலாளராகப் பணி புரிபவரும் யாழ் புற்றளை புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இ. திருமேனி அவர்கள் நீண்டகாலமாக இவ்வாலயத்தில் கந்தபுராணப் படிப்பில் பங்கு கொண்டு வருவதோடு கடந்த சில ஆண்டுகளாகப் பயன் சொல்லியும் வருகின்றார். மேலும் இளைஞர் சேவை மன்ற மாகாணப் பணிப்பாளராகக்

கடமையாற்றும் திரு. சிவதட்சணாமூர்த்தி அவர்களும் முல்லை மாவட்டம் புதுக்குடியிருப்பிலிருந்து இடம்பெயர்ந்து வந்த திரு.கனகசபாபதி அவர்களும் மாங்குளம் அம்பகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த திரு. நாதன் அவர்களும் கடந்த ஆண்டு (2009) முதல் புராண படனத்தில் பங்கு கொண்டு வருகின்றனர். திரு. சிவதட்சணாமூர்த்தி அவர்கள் சிறப்பாகப் பயன் சொல்லியும் வருகின்றார்.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் சில ஆண்டுகள் யாழ் செம்பியன் பற்றைச் சேர்ந்த திரு. ந. பழனியர் அவர்கள் பயன் விரித்து வந்தவர்கள். கடந்த 2008 ஆம் ஆண்டில் அமரத்துவம் அடைந்த இப்பெரியார் கந்தபுராணக் கடல். எந்த இடத்தில் பாட்டையோ அதன் பொருளையோ கேட்டாலோ உடனே சொல்லும் ஆற்றல் பெற்றவராக விளங்கியவர். புராண படனத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது யார் தவறு விட்டாலும் உடனே அதனைத் திருத்திவிடக் கூடிய அபாரமான நினைவாற்றல், தாம் பெற்ற பயிற்சியினால் பெற்றுக் கொண்டவர். 85 வயதுக்கு மேற்பட்ட இவர் படிப்பு நாடியும் பயன் சொல்லிப் பழகவும் விரும்பியவர்களுக்கு "ஊருணியாக" விளங்கிய பெருமகன்.

மேலும் பலர் காலத்துக்குக் காலம் வருகை தந்து கந்தபுராண படனத்தில் படித்தும் பயன் விரித்தும் சென்றுள்ளனர். அத்தகையவர்களுள் முல்லை மாவட்ட முள்ளியவளையைச் சேர்ந்த 87 வயதுடைய கலாபூஷணம் "அரியான் பொய்கை" க. செல்லத்துரை அவர்களும் 70 வயதுள்ள சிவஸ்ரீ நாகராஜ ஐயர் நடராசாக் குருக்கள் அவர்களும் 58 வயதுடைய திரு. புலேந்திரன் அவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். இம்மூவரும் பயன்விரிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்.

தமிழ்மணி அகளங்கன் அவர்கள் பயன்விரித்துரைத்த பயன்பழக்கிய காலத்துக்குப் பின்னர் கலாபூஷணம் மாதவர் மார்க்கண்டு அவர்கள் பயன் விரித்துரைத்த காலத்தில் பல புதியவர்கள் புராண படனத்தில் இணைந்து கொண்டனர். இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்களத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. பொ. நல்லையா அவர்களும் வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு பிரதேச சபையின் செயலாளர் திரு. இ. திருமேனி அவர்களும் கிராம உத்தியோகத்தர் திரு. ச. தணிகாசலம் அவர்களும் இவர் காலத்திலேயே பயன் விரித்துரைக்கும் பயிற்சி பெற்றனர்.

இவ்வாலயத்தில் மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரையிலன்று (திருவெம்பாவை நிறைவு நாள்) புராண படனந் தொடங்கப் பெற்று பங்குனி உத்தரத்திலன்று நிறைவடையும். நிறைவு நாளன்று கந்தபுராண தொகுப்புரையும் புராண படனத்தில் பங்கு பற்றியவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறும். இவ்வாலயத்தில் கந்தபுராண படன நிறைவு நாளன்று வவுனியா குருமன்காடு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் புராண படனம் ஆரம்பமாகும்.

**குருமன்காடு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம்**

இவ்வாலயத்தில் பங்குனி உத்தரத்தில் ஆரம்பமாகும் புராண படனம் ஆனி மகத்திலன்று நிறைவடையும். ஏறக்குறைய (03) மூன்று மாதங்கள் வரை இடம்பெறும். இந்நிகழ்வு முதன் முதலில் 1997 ஆம் ஆண்டு ஆரம்பமானது. ஆரம்பத்தில் திரு.

பாலசுந்தரம் அவர்களும் அதனைத் தொடர்ந்து கலாபூஷணம் மாதவர் மார்க்கண்டு அவர்களும் பயன்விரித்தார்கள். மருக்காரம்பளையைச் சேர்ந்த திரு. சேனாதிராசா உலகநாதன் அவர்களும் பயன் விரிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்.

திரு. சேனாதிராசா உலகநாதன் அவர்கள் சிறந்த விவசாயி. நிகண்டு முதலியன கற்று ஆழமான உறுதியான அத்திவாரத்துடன் தந்தையாரிடமும் வேறு பயனாசிரியர்களிடமும் பயன் சொல்லும் பயிற்சி பெற்றுத் தமது சுயதேடலால் மெருகூட்டிக் கொண்டவர் இவர். தற்போது எந்தவித முன் ஆயத்தமும் இன்றி புராணத்தின் எந்த இடத்தில் பயன் கூற அழைத்தாலும் மிக ஒழுங்காகப் பயன் விரிக்கும் ஆற்றல் மிக்கவர். படிப்பவர் பிழைவிட்டாலும் அதைத் திருத்திச் சரியான பயன் விரிக்கும் திறமை மிக்கவர். எந்தவித ஆடம்பரத்தையும் விரும்பாமல் தெய்வத்துக்கான அர்ப்பணிப்பாக இப்பணியைச் செய்யும் கொள்கைச் சான்றோராக விளங்குகின்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சிதம்பரப்பிள்ளை வைரவப்பிள்ளை அவர்கள் 2007 தொடக்கம் இவ்வாலயத்தில் பயன்விரித்துரைப்போராகப் புராண படனத்தில் இணைந்து கொண்டார். இளைப்பாறிய ஆசிரியரான இவர் சிறப்பாகப் பயன் சொல்லும் பணியை ஆற்றி வருகின்றார். யாழ்ப்பாணத்தில் சில கோயில்களில் பயன் சொன்ன அனுபவமுடையவர். ஆத்ம சாதனையின் பொருட்டு தினமும் தியானத்திலீடுபட்டு மனம் குவியப்பெறும் மாண்பு கொண்டவர். அமைதியாகத் தம் பணியாற்றுபவர். இவர் 2008 தொடக்கம் வவுனியா கந்தசாமி கோவிலிலும் 2009 தொடக்கம் தாண்டிக்குளம் முருகன் ஆலயத்திலும் கந்தபுராண படனத்துக்குப் பயன்விரித்து வருகின்றார்.

இவ்வாலய பரிபாலன சபையின் நிர்வாக சபை உறுப்பினராக விளங்கிய உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த அமரர் திரு. கந்தையா கனகலிங்கம் அவர்களது அயரா முயற்சியின் காரணமாகத் தொடங்கப் பெற்ற புராண படனத்தில் இவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய திரு. நரேந்திரன் அவர்களும் இணைந்து செயற்பட்டார். காலப்போக்கில் இவ்வாலய பரிபாலன சபையின் செயலாளரும் ஓமந்தை நொச்சிக் குளத்தைப் பிறப்பிடமாகவும் குருமன்காட்டில் வசிப்பவருமான கிராம உத்தியோகத்தர். திரு. S. R. அமிர்தலிங்கம் அவர்கள் திரு. குமாரசிங்கம் அவர்கள், ஓமந்தை மாளிகையைச் சேர்ந்தவரும் தற்போது வவுனியா வேப்பங்குளத்தில் வசிப்பவருமான திரு. இ. தருமபாலன் அவர்கள், ஓமந்தை செங்காராத்தி மோட்டையைச் சேர்ந்த திரு. ந. சிவசுப்பிரமணியம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. குணநாயகம் அவர்கள் அளவெட்டியைச் சேர்ந்த திரு.செல்லையா அவர்கள் ஆகியோர் புராண படனத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

பெண்கள் புராண படனங்களில் ஈடுபடக் கூடாது என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்த ஆலயங்களுக்கு மத்தியில் பெண்களும் புராணம் படிக்கலாமென்ற கருத்தைக் கொண்டு செயற்பட்ட பெருமைக்குரியதாக விளங்கிய இவ்வாலயத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் தற்போது வவுனியாவில் வசிப்பவர்களுமான சோதியம்மா என அழைக்கப்படுபவருமான திருமதி. சீ. பத்மசோதி அவர்கள், திருமதி. துரைச்சாமி துரையம்மா அவர்கள், திருமதி. தங்கராசா தமிழரசி அவர்கள், திருமதி. நவரத்தினம் விநோதமஞ்சரி

அவர்கள், திருமதி. நல்லையா சிவபாக்கியம் அவர்கள், திருமதி. வள்ளியம்மை அவர்கள் ஆகியோர் புராண படனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மூன்று மாத காலம் நிகழும் இப்புராண படன காலத்தில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு உபயகாரர்களை ஒழுங்கு செய்து விசேட பூசை வசதிகளை ஏற்படுத்தியுள்ளனர். பார்வதி கல்யாணம், முருகன் அவதாரம், சூரசங்காரம், தெய்வானை அம்மன் திருமணம், வள்ளி திருமணம் முதலிய விசேட நிகழ்வுகளின் போது பெரு விழாவாகச் சிறப்பான பூசை வழிபாடுகளுடன் அன்னதானமும் இடம்பெறுவது இவ்வாலயத்தின் சிறப்பம்சம் எனலாம்.

வெளிக்குளம் விநாயகர் ஆலயம்

கடந்த 1999 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயத்தில் நிகழும் கந்தபுராண படனம் சித்திரை மாத பூரணையில் தொடங்கி ஆனி மாத உத்தரத்தில் நிறைவேறும். ஆரம்பத்தில் இளைப்பாறிய அதிபர் திரு. சண்முகம் அவர்கள் உரை சொல்ல ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. க. கந்தசாமி அவர்கள், சின்னப்புதுக்குளம் திரு. தர்மலிங்கம் அவர்கள், வெளிக்குளம் திரு. கந்தையா இராசையா அவர்கள், திரு. கந்தையா தியாகராசா ஆகியோர் புராணம் படித்தனர். பின்னர் திரு. க. கந்தசாமி அவர்கள் திரு. தர்மலிங்கம், பூலோகசிங்கம் அவர்கள் திரு. மா. செல்லையா அவர்கள் திரு. கந்தையா இராசையா அவர்கள் திரு. துரைசிங்கம் நிரோசன் அவர்கள் திரு. கந்தையா தியாகராசா அவர்கள், திரு தர்மலிங்கம் அவர்கள் ஆகியோர் பயன் விரிப்பதோடு புராணப் படிப்பிலும் பங்கு கொண்டு வருகின்றனர். ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு கனகசபை கந்தசாமி அவர்களும் ஆலய பரிபாலனசபையினரும் கந்தபுராண படனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இங்கு விஷேட நிகழ்வுகள் நிகழுங் காலங்களில் சிறப்பான பூசைகள் இடம் பெறுகின்றன.

வவுனியா கந்தசுவாமி ஆலயம்

கந்தனைப் பற்றிய புராணம் கந்தசுவாமி கோவில்களில் படிக்க வேண்டியதாக இருந்த போதும் கந்தர் சஷ்டி விரத காலத்தில் யுத்த காண்டத்தின் இறுதிப்பகுதி மட்டுமே படித்துப் பயன் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் மூன்று முக்கிய விநாயகர் ஆலயங்களில் கந்தபுராணம் முழுமையாகப் படித்துப் பயன் விரிக்கும் வழக்கம் தொடர்ந்தது.

இக்குறையைப் போக்கும் முகமாக வவுனியா நகர கந்தசுவாமி ஆலயத்தில் திருமதி. சீ. பத்மஜோதி அவர்களின் பெரு முயற்சியால் 2007 ஆம் ஆண்டு கலாபூசஷம் மாதவர் மார்க்கண்டு அவர்கள் பயன்விரிக்க திரு. கந்தையா குலேந்திரன் திரு. வை. செ. தேவராசா, திரு.C. A.இராமஸ்வாமி ஆகியோர் படிக்க புராண படனம் தொடங்கி நிறைவெய்தியது.

தொடர்ந்து 2008 ஆம் ஆண்டு முதல் இளைப்பாறிய ஆசிரியர் திரு. கி. வைரவப்பிள்ளை அவர்கள் பயன்விரிக்க திரு.வை. செ.தேவராசா அவர்கள் திரு.க. குலேந்திரன் அவர்கள் திரு.C.A.இராமஸ்வாமி அவர்கள் ஆகியோர் புராணம் படித்து வருகின்றனர்.

**தாண்டிக்குளம் ஸ்ரீகந்தசுவாமி ஆலயம்**

இவ்வாலயத்தின் பரிபாலன சபைத் தலைவர் எந்திரி ந. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் ஆலோசனைப்படி 2009 ஆம் ஆண்டு கந்தபுராணம் முழுமையாகப் படித்துப் பயன்விரிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. இளைப்பாறிய ஆசிரியர் திரு.S.வைரவப்பிள்ளை அவர்களும் மருக்காரம்பளையைச் சேர்ந்த புராணிகர் திரு. சேனாதிராசா உலகநாதன் அவர்களும் பயன்விரித்துரைக்க, திரு. செல்வரத்தினம், திரு. பொன்னுசாமி, திரு.தங்கராசா அவர்கள் ஆகியோர் புராணம் படித்து வருகின்றனர். இடம்பெயர்ந்து பெரியார்குளத்தில் வசிக்கும் முள்ளியவளையைச் சேர்ந்த கலாபூஷணம், கவிசேகரன் திரு. க. செல்லத்துரை அவர்களும் திரு. வ. புலேந்திரனும் கலந்து பயன் விரித்தும் புராணம் படித்தும் பங்களிப்புச் செய்தனர்.

நிறைவு நாளன்று பயன் விரித்த, புராணம் படித்த இறை தொண்டர்களை ஆலய பரிபாலன சபையினர் கௌரவித்து உற்சாகமளித்தனர்.

1992 இல் காவியமாமணி, தமிழ்மணி அகளங்கன் அவர்கள் வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் முருகன் சந்நிதியில் ஏற்றி வைத்த புராண படன ஞானதீபம் சுடர்விட்டுப் பிரகாசிப்பதோடு ஏனைய ஆலயங்களிலும் இவ்வொளி பரவக் காரணமாயமைந்தமை முருகப் பெருமானது திருவருட்பேறே எனலாம்.

**நிறைவு**

இவ்வாறு தமிழ்நாட்டின் காஞ்சியம்பதியில் குமரக் கோட்டக் கச்சியப்ப சிவாச்சாரியாரெனும் கார்முகில் ஸ்கந்த புராணம் என்னும் வடமொழிக் கடலில் படிந்து முகந்தெடுத்த புனித நீர் காஞ்சியம்பதியிலே கந்தபுராணமென்னும் பக்தி மழையாகப் பொழிந்து தமிழகமெங்கும் ஓடிய வெள்ளப் பிரவாகம் ஈழத்திருநாட்டிலும் ஓடிக்கொண்டிருந்த வேளையில் ஐந்தாம் குரவராகத் தோன்றிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஒழுங்காக வாய்க்கால்களமைத்து ஈழத்துச் சைவ உலகின்பால் ஆற்றுப்படுத்தினார்.

அவர் காட்டிய வழியிலோடிய கந்தபுராணப் பக்திவெள்ளம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வன்னிப் பெருநிலப் பரப்பையும் கிழக்கு மாகாணத்தையும் குறிப்பாகத் திரு.கோணமலை மாவட்டத்தையும் வளமாக்கிப் பக்திப் பயிர் செழிக்கப் பயன்பட்டு வருகின்றது.

எமது மாவட்டத்திலும் கந்தபுராணம் முழுமையாகப் படிக்கும் வழக்கம் ஆரம்பத்தில் காட்டிய பல்வேறு ஏதுக்களால் தடைப்பட்டிருந்தது. கந்தர் சஷ்டி விரத காலத்தில் படிக்கும் யுத்த காண்டப்பகுதி மட்டும் தொடர்ந்து படித்துப் பயன் விரிக்கப்பட்டு வந்தது.

தடைப்பட்டிருந்த நீரோட்டத்தின் தடையை நீக்கியுதவிய தமிழ்மணி அகளங்கனின் அயராத பணியே மீண்டும் வவுனியா மாவட்டமெங்கும் கந்தபுராணப் படிப்பு பரவி வருவதற்குக் காலாயமைந்தது. அவரைக் கருவியாகக் கொண்டு ஆறுமுகப்பண்ணவன் தன் பேரருட்திறத்தால் ஆட்டுவிக்கின்றான். ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே!

உ
சிவமயம்

# வன்னிப் பிரதேச (வவுனியா மாவட்டம்) கிராமியத் திருமண நடைமுறைகள்

**தமிழ்மணி அகளங்கன்**

வன்னிப் பிரதேசத்தில் பெரும்பாலும் மாப்பிள்ளை வீட்டார் தங்கள் மகனுக்குரிய பெண்ணைத் தேடுவதே நடைமுறையாக இருந்தது.

ஊரில் உள்ள பெரியவர்கள் மாப்பிள்ளையின் தந்தையிடம் அல்லது முக்கியஸ்தர்களிடம் பெண்ணைப் பற்றியும் பெண் வீட்டார் பற்றியும் மேலோட்டமான தகவல்களைச் சொல்லி, பெண் கேட்க வழி வகுப்பார்கள்.

ஒரே ஊரவர்களாக இருந்தால் மணமகளை மணமகனும் மணமகனை மணமகளும் பார்த்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். வேற்றூரவராக இருந்தால் அவ்வாய்ப்பு இல்லாமலும் இருந்திருக்கும்.

மணமகளைப் பற்றியும் மணமகளின் பெற்றோரைப் பற்றியும் குடும்ப விபரம் பற்றியும் பல வழிகளில் மணமகனின் பெற்றோர் விசாரித்து அறிவார்கள்.

அதிலே மிகவும் முக்கியமான நம்பகமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள அவர்களது குடி மக்களில் ஒருவராகிய கட்டாடி (வண்ணான்) எனப்படும் சலவைத் தொழிலாளி முக்கிய இடம் பெறுவார்.

இரண்டு குடும்பங்களுக்கும் ஒரே குடிமக்கள் இருந்தால் அது உண்மையான தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்கும். காரியம் சுலபமாக முடிந்துவிடும்.

குடிமக்கள் எனக் குறிப்பிடப்படுவோர் ஐவர். கட்டாடி எனப்படும் சலவைத் தொழிலாளியாகிய வண்ணான். பரியாரி (நாவிதன் - அம்பட்டன்) எனப்படும் மயிர் வினைஞர். கோவியர், கொல்லன் (கம்மாளன் - இரும்புத் தொழில் செய்பவர்), பறையர் ஆவர்.

பெண் சம்பந்தமாக, குறிப்பாக நிறம், குணம், தோற்றம் முதலானவைகளைக் கட்டாடியிடம் இரகசியமாக அறிந்து கொள்ளும் வழக்கம் உண்டு.

மணமகன் மணமகளைப் பார்க்கும் எந்தச் சடங்கும் நடைபெறுவதில்லை. மணமகனும் மணமகளும் ஒருவரை ஒருவர் கண்ணால் காணாமலேயே மணவறையில் அருகருகே அமர்ந்த திருமணச் சடங்குகளும் நிறையவே இருந்தன.

மணமகன் மணமகளைப் பார்க்க விரும்பினால் கோயில்களில் அல்லது வேறு திருமண வீடுகளில் யாரும் அறியாவண்ணம் பார்க்க முடியுமே அன்றி நேரடியாக அறிவித்துவிட்டுப் பார்க்க முடியாது.

மாடு பார்க்கச் செல்வதாகச் சொல்லிவிட்டு நண்பர்களோடு சென்று சந்தர்ப்பம் கிடைத்தால் தூரத்தில் நின்றவாறே பெண்ணைப் பார்க்கின்ற வழக்கம் இருந்தது.

சாதகப் பொருத்தம் பார்க்கின்ற வழக்கம் பெருமளவிற்கு இடம்பெறவில்லை. மாப்பிள்ளை வீட்டுக்காரரும் ஊரில் உள்ள பெரியவர்களும் சேர்ந்து பெண் வீட்டுக்காரருக்கு செய்தி அனுப்பிவிட்டு பெண் வீட்டுக்குத் திருமணம் பேசப் போவது வழக்கம். இதனைப் பேச்சுக்கால் என்று அழைப்பார்கள்.

பெண்கள் வீட்டில் மணமகன் சார்பில் அவர்களோடு சென்ற பெரியவர் பேச்சைத் தொடங்குவார். பேச்சின் போது கொடுக்கல் வாங்கல் பற்றியும் பேச்சு இடம்பெறும். அது சீதனப் பேரம்பேசலாக இருப்பதில்லை. என்ன கொடுக்கப் போகிறார் என்பதைத் தீர்மானிப்பதாகவும் அறிவதாகவும்தான் அமையும்.

பெண் வீட்டாரின் சார்பில் பெரியவர் ஒருவர் மணமகனுக்கு என்ன கொடுப்பீர்கள் என்றும் கேட்டுக் கொள்வார். மணமகனின் பெற்றார் தங்கள் மகனுக்குக் கொடுப்பவற்றைப் பற்றிக் கூறுவர்.

பேச்சுக்களின் பின்பு விருந்துபசாரம் நடைபெறும். செட்டிகுளப் பகுதியில் விருந்தின் பின்புதான் முடிவு சொல்லும் வழக்கம் இருந்தது. வேறு பகுதிகளில் சாதகமான முடிவு இருந்தால் மட்டும்தான் விருந்து (கைநனைத்தல்) நிகழும். காலப்போக்கில் விருந்துக்கும் முடிவுக்கும் சம்பந்தமில்லாமலேயே போய்விட்டது.

விருந்தின்போது பாகற்காய் ஒரு கறியாக வைக்கப்பட்டிருந்தால் பெண் வீட்டாருக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்பதற்கான நாகரிகமான (சூசகமான) வெளிப்பாடாக அது அமையும். இது செட்டிகுளப் பகுதியில் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

மணப்பெண் சபைக்கு வருவது கிடையாது. திருமணம் பேசப் போன மணமகனின் நெருங்கிய பெண் உறவினர்கள் உள்ளே சென்று பெண்ணைப் பார்க்கலாம். அதுவும் பெண் வெட்கத்தில் தலை குனிந்து அடிக்கடி முகத்தைக் கைகளால் பொத்திக் கொள்வார். முகத்தைக் கூட முழுமையாகப் பார்க்க முடியாதிருக்கும்.

மணமகள் பெரும்பாலும் 12 வயது முதல் 17 வயதிற்குட்பட்டவராகவே இருப்பார். பருவமடையாத பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் இருந்ததில்லை. அதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

மணமகனைப் பற்றி மணமகள் தனது தோழிகள் மூலமாகவோ வயது போன பெண் உறவினர்களது உரையாடல்கள் மூலமாகவோ தகவல்களைப் பெற்றுத் தனக்குப் பிடிக்கவில்லை என்றால் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள மாட்டார்.

திருமணம் முடிப்பதைச் சடங்கு முடித்தல் என்றே கிராமங்களில் சொல்வார்கள்.

திருமணம் தீர்மானிக்கப்பட்ட பின்பு மணமகனின் சகோதரி, சகோதரியின் கணவன், கோவியன் மற்றும் ஓரிருவர் மணமகள் வீட்டிற்குச் சம்பந்தப்பெட்டியும் வாழைக் குலையும் கொண்டு போவார்கள்.

பொதுவாக மாட்டு வண்டியிலேயே பிரயாணம் நடைபெறும். அவரவர் வசதிக்கேற்ப சாதாரண மாட்டு வண்டிலாகவோ, கூடார வண்டிலாகவோ அது இருக்கும்.

சம்பந்தப் பெட்டி என்பது பனையோலையால் இழைக்கப்பட்டு மட்டை கட்டப்பட்ட கடகமாக, மூடி உள்ளதாக அதாவது மூடல் பெட்டியாக இருக்கும். அந்தப் பெட்டி பல வண்ண ஓலைகளால் இழைக்கப்பட்டதாக இருக்கும். சிலவேளை ஓலைகளிலும் வண்ணம் தீட்டியிருக்கலாம். இழைத்த பின்பும் வண்ணம் தீட்டியிருக்கலாம்.

பெட்டிக்குள் முக்கியமாக ஐந்து வகையான பலகாரங்கள் இருக்கும். முறுக்கு, தோட்டச்சு, பயத்தம் பணியாரம், அரியதரம், சீப்புக்காய் (சிப்பி) இவையே அவை.

வடக்குப்பகுதி என அழைக்கப்பட்ட ஓமந்தை நாம்பன்குளம் போன்ற பகுதிகளில் குமிழமொட்டு எனப்படுகின்ற பலகாரமும் செய்யப்பட்டது. அது அரியதரப் பலகாரம் போன்றதாகவும் ஒருபக்கம் கூராகப் புடைத்துமிருக்கும். அந்தப் புடைப்புப் பகுதிக்குள் சீனிப் பாகு கலந்த தேங்காய்ப்பூ உள்ளுடனாக இருக்கும். இப்பொழுது அந்தப் பலகாரம் மறக்கப்பட்டுவிட்டது.

சம்பந்தப் பெட்டிக்கு மேல் வெள்ளைத்துணி மூடப்பட்டிருக்கும். சம்பந்தப் பெட்டியை மணமகன் வீட்டுக் கோவியன் தூக்கிச் சென்று மணமகள் வீட்டில் கொடுப்பார். பின்பு அங்கு விருந்துபசாரம் நடைபெறும். மணமகள் வீட்டுக்காரரும் வேறொரு தினத்தில் மணமகன் வீட்டிற்கு வந்து விருந்தில் கலந்து கொள்வார்கள்.

**ஊருக்குச் சொல்லுதல்**

தங்கள் உறவுக்குள் உள்ள மிக முக்கியமான மங்களகரமான குடும்பம் ஒன்றிற்கு முதலில் சொல்வது வழக்கம். இதை வெற்றிலை வைத்தல் என்று சொல்வார்கள்.

திருமண வீட்டுக்காரரின் நெருக்கமான ஓர் ஆண் உறவினரும் குடிமக்களில் ஒருவரான கோவியன் எனப்படுபவரும் வெற்றிலை வைப்பதற்காக ஊர் ஊராகச் செல்வார்கள்.

வெற்றிலை வைப்பவர்களது குலம் தவிர்ந்த வேறு குலத்தைச் (சாதி) சார்ந்த எவருக்கும் வெற்றிலை வைக்கப்படுவதில்லை. குலம் சம்பந்தமான சகல குடும்ப விபரங்களும் குடும்பக் கோவியனுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

சாதிக் கலப்புள்ள வீடுகளுக்கு கோவியன் வெற்றிலை வைப்பதில்லை. வெற்றிலை வைப்பிப்பவர் எவ்வளவு தெண்டித்தாலும் வெற்றிலை வைக்கும் கோவியன் தாழ்ந்த சாதியினருக்கு, கலப்புச் சாதியினர்க்குவெற்றிலை வைக்க மாட்டான்.

இங்கு வேளாளக் குடிகளே உயர் சாதியினராகக் கருதப்பட்டனர். ஏனையோர் யாவரும் தாழ்ந்த சாதியினரே.

அந்தணர்கள் இந்தப் பிரதேசங்களில் அந்தக் காலங்களில் வாழவில்லை என்றே கூறலாம். பிராமணாலங்குளம், குருக்கள் ஊர் இக்காலப் பெயர்களே. அங்கு பிராமணர்கள் குருக்கள்மார் இருந்தார்கள் என்று சொல்ல முடியவில்லை. அது தனி ஆராய்ச்சிக்குரியது.

வெற்றிலை வைத்து அழைக்கப்படுபவர்களுக்கு அழைத்தவர்கள் மிகுந்த மரியாதை செய்ய வேண்டும். தம்மைவிடச் சாதியில் தாழ்ந்தவர்களுக்கு அந்த மரியாதை செய்ய முடியாத படியினால்
அவர்களை வெற்றிலை வைத்து அழைப்பதில்லை.

அவர்களை அழைக்க விரும்பினால் வாய்ச் சொல்லாக யார் மூலமாவது அழைக்கலாம். ஆனால் கோவியன் மூலமாக அழைக்க முடியாது. வெற்றிலை வைத்து அழைக்கப்பட்டவர்கள் மட்டும்தான் சபையிலே, பந்தியிலே சமனாக இருக்கலாம்.

ஒரு தட்டத்தில் கொஞ்ச வெற்றிலைகள், பாக்குகள், தேசிப்பழம் ஒன்று, மஞ்சள் துண்டும் வைத்து, அதனை அழைக்கப்பட்டவர்களிடம் கொடுத்துக் கோவியன், திருமணச் செய்தியை இடம், நாள், நேரம் உட்பட மணமகன், மணமகள் விபரங்களோடு அழகாகச் சொல்லுவான்.

அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு அறிகுறியாக சில வெற்றிலை பாக்குகளை அழைக்கப்படுபவர் எடுத்துக் கொள்வார்.

குடும்பத் தலைவனுக்குச் சொல்லுதல், குடும்பத் தலைவிக்குச் சொல்லுதல் அல்லது இருவருக்கும் சொல்லுதல் என்ற பாகுபாடுகள் இருக்கவில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து சென்று சொல்லுகின்ற வழக்கமும் இருக்கவில்லை.

திருமணத்திற்கு வர விரும்பாதவர்கள் தங்களது விருப்பமின்மையையும் கோபத்தையும் வெற்றிலை பாக்கை எடுக்காமல் விடுவதன் மூலம் நாகரிகமாக வெளிப்படுத்துவர்.

வெற்றிலை வைப்பதில் முக்கியமான பங்கு கோவியனுடையதே. ஏதாவது தவறு நடந்தால் யார் வெற்றிலை வைத்தவர் என்ற கேள்விதான் பெரிதாக எழும்.

குலத் தூய்மையைக் காப்பாற்றுகின்ற முக்கிய பொறுப்பும் கோவியனுடையதே.
இரு வீட்டார் அழைப்பு என அழைக்கப்படும் வழக்கம் இருக்கவில்லை.
பெண் வீட்டவர்கள் அவர்களுக்குரிய கோவியன் மூலமாகவும், ஆண் வீட்டவர்கள் அவர்களுக்குரிய கோவியன் மூலமாகவும் வெற்றிலை வைப்பார்கள்.

பெண் வீட்டில் தாலிகட்டும் சடங்கு நடைபெறுவதால், மாப்பிள்ளை வீட்டுக்காரர் தங்களது நெருங்கிய உறவினர்களை அங்கு அழைத்துச் செல்வார்கள்.

அதேபோல தாலிகட்டு முடிந்த பின் மாப்பிள்ளை வீட்டிற்கு புதுமணத் தம்பதிகளோடு பெண் வீட்டார் செல்லும் பொழுது அவர்கள் தமது நெருங்கிய உறவினர்களை அழைத்துச் செல்வார்கள். இவர்களுக்கு வெற்றிலை வைக்கவில்லை என்ற பிரச்சனை இருக்காது.

**பொன்னுருக்கல்**

பொன்னுருக்கல் என்பது தாலி செய்வதற்குரிய பொன்னை உருக்குகின்ற நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

திருமணம் செய்து பிள்ளைகள் பெற்று மங்களகரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் வயது முதிர்ந்த ஒரு தட்டான் (பொற் கொல்லன்) மூலமாக இச்சடங்கு நடைபெறும். இப்பொழுது இவர் பத்தர் என்று அழைக்கப்படுகிறார்.

அனேகமாக ஒரு பவுண் குற்றி இதற்குப் பயன்படுத்தப் படுகின்றது. திருமணச் சடங்கிற்கு இரண்டு நாட்களிற்கு முன்னர் ஒரு சுபவேளையில் மணமகன் வீட்டில் கும்பம் வைத்து தேங்காய் உடைத்து இக்கருமம் நிறைவேற்றப்படும்.

மணமகன் அவ்விடத்தில் அமர்ந்திருப்பார். மணமகள் வீட்டைச் சார்ந்த மிக முக்கியமான ஒரு குடும்பத்தினர் கலந்து கொள்வர். ஒரு புது மண் சட்டியில் உமி போடப்பட்டு, நெருப்புத் தழலில் பொற்காசு வைக்கப்பட்டு உருக்கி உருண்டையாக எடுக்கப்படும்.

பொன் உருகுகின்ற அழகைப் பார்த்து, திருமணமாகப் போகின்ற தம்பதிகளின் வாழ்க்கையை நினைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

பொன்னுருக்கும் நிகழ்வு திருமணம் நடைபெறுவதற்கு முன் 3ம், 5ம். 7ம், நாளில் இடம் பெறுவது வழக்கம்.

பொன்னுருக்கிய பின் மணமகன் வீட்டைவிட்டு வெளியே வரமாட்டார். மணமகளும் வீட்டைவிட்டு வெளியே செல்ல மாட்டார். பொன்னுருக்கல் அன்று கன்னிக்கால் நாட்டுதல் என்னும் நிகழ்வும் பெரும்பாலும் நடைபெறும்.

இந்நிகழ்வு அன்று இரு வீட்டிலும் நடைபெறுவதால் மணமகன் வீட்டில் இருந்தும் மிக முக்கியமான குடும்பத்தினர் மணமகள் வீட்டிற்குச் செல்வார்கள்.

கன்னிக்கால் வைத்தல் என்பது பந்தல் போடுவதற்காக ஒரு சுபவேளையில் பச்சைக்கப்பு (தடி) ஒன்றை நடுவதாகும். பந்தல் போடுவதற்கு முழுக்க முழுக்க பச்சை மரங்களே பயன்படுத்தப்படுகின்றன. இரண்டு வீட்டிலும் விருந்துகளும் நடைபெறும். விருந்துகள் முழுக்க முழுக்க சைவமாகவே அமையும்.

**திருமணச் சடங்கு**

***முருக்கெடுத்தல்***

மணமகன், மணமகள் இருவரது வீட்டிலும் முருக்கு எடுத்தல் என்னும் சடங்கு நடைபெறும். முருக்கு எடுத்தல் என்பது நன்கு செழித்து வளர்ந்திருக்கின்ற ஒரு முள்முருக்கு மரத்தில் நேரிய கிளை ஒன்றை வெட்டிக் கொண்டு வந்து மணவறையின் முன்னே அமைக்கப்பட்ட அரசாணியில் நட்டு வைப்பதாகும்.

அநேகமாக திருமணச் சடங்கிற்கு முதல் நாளில் இந்நிகழ்வு இடம்பெறும். வீட்டில் உள்ள பெரியவர்கள் கட்டாடியுடன் ஒரு சுபவேளையில் முள்முருங்கை மரத்தடிக்குச் சென்று அங்கு பிள்ளையார் பிடித்து வைத்து வழிபாடு செய்து, தேங்காய் உடைத்து முருக்கங்கிளை ஒன்றை வெட்டுவார்கள்.

அந்தக் கிளை நிலத்தில் விழாதபடி ஒரு பெரியவர் கவனமாகக் கைகளால் பிடிப்பார். முட்கள் கைகளில் குத்திவிடும் என்பதால் சால்வையையோ அல்லது வேறு துணியையோ பயன்படுத்துவார். கலியாண முருங்கைத் தடியை சிலர் தேடி வெட்டுவார்கள்.

இத்தகைய கருமங்களின் போது சால்வையைத் தலையில் தலைப்பாகையாகக் கட்டிக் கொள்வது வழக்கம். தேங்காய் உடைத்தல், அறுகரிசி போடுதல் முருக்கெடுத்தல் முதலான அனைத்துக் காரியங்களுக்கும் அதில் ஈடுபடுபவர்கள் தலையில் சால்வையைக் கட்டிக் கொள்வது வழக்கம்.

தங்கள் வீட்டு வேலியில் உள்ள முருக்கு மரத்தில் இருந்து கிளையை வெட்டிக் கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருக்கவில்லை. நெருங்கிய உறவினர் ஒருவரின் வீட்டில் இருந்துதான் முருக்கு எடுத்து வந்தார்கள்.

முருக்கு எடுப்பதை ஒரு ஆடம்பரமான சடங்காக முற்காலத்தில் செய்யவில்லை. இன்றும் வன்னியில் அது எளிமையான சடங்காகவே நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் மேளதாளத்தோடு சென்று முருக்கு எடுத்தலும் ஆடம்பரமான ஒரு வைபவமாக இடம்பெறுவதை அறிய முடிகின்றது.

முருக்கு எடுத்து வரும் பொழுது கட்டாடி எனப்படும் சலவைத் தொழிலாளிகள் இருவர் வெள்ளை வேட்டி ஒன்றை மேலே பிடித்துக் கொண்டு வருவார்கள். இதனை தூளி பிடித்தல் என்று சொல்லுவார்கள்.

மணவறையின் முன்னாலே அம்பட்டன் எனப்படும் சிகை அலங்காரத் தொழிலாளியினால் களிமண் கொண்டு அழகாக அமைக்கப்பட்டிருக்கும் அரசாணியின் நடுவில், கொண்டுவரப்பட்ட முருக்கு குத்தி நிறுத்தப்படும்.

அந்த முருக்கை, சிவப்பு நிறமான பட்டுச் சேலையால் ஒரு சாதாரணப் பெண்ணின் உயர அளவிற்கு சுற்றிக் கட்டுவார்கள்.

**பந்தல் போடுதல்**

இரண்டு வீடுகளிலும் திருமண நாளுக்கு ஒரு கிழமைக்கு முன்பாகவே பந்தல் போடுவதற்கான ஆயத்தங்கள் தொடங்கிவிடும்.

காட்டில் பச்சைத் தடிகளை வெட்டிக் கொண்டு வந்து பந்தல் போடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். பொன்னுருக்கிய அன்று கன்னிக்கால் நட்டு அதன் பின் பந்தல் போடும் வேலைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

திருமணங்கள் அனைத்தும் வீடுகளிலேயே நடைபெற்ற காரணத்தினால் உறவினர்கள் வந்து கூடியிருப்பதற்குப் பந்தல்கள் தேவைப்பட்டன. இரவில் திருமணம் நடைபெற்றால் பலர் பந்தலுக்குள்ளேயே நித்திரை கொள்ளக் கூடியதாக இருக்கும். பொதுவாகத் திருமணங்கள் வளர்பிறைக் காலத்து இரவுகளிலேயே நடைபெற்றன.

பந்தலுக்குப் பெரிய படங்குகளைச் சுற்றிக் கட்டி மேலேயும் படங்குகளைப் போட்டு மூடினார்கள். பந்தலுக்குள்ளேயும் வீட்டுக்குள்ளேயும் முழுமையாக வெள்ளை கட்டப்படும்.

வீட்டுக்குள்ளே மேல் விதானமாக மட்டும் வெள்ளை கட்டப்பட்டிருக்கும். பந்தலுக்குள்ளே மேல் விதானம் மட்டுமல்லாமல் உட்புறம் முழுவதும் வெள்ளை கட்டப்பட்டிருக்கும்.

வெள்ளை நிறமான வேட்டிகளை இவ்விதமாகக் கட்டுவதையே வெள்ளை கட்டுவது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பிற்காலத்தில் ஒரு சில முக்கியமான பகுதியில் மட்டும் வெள்ளை வேட்டிகளைக் கட்டிவிட்டு ஏனைய பகுதிகளுக்கு நிறச் சேலைகளைக் கட்டும் வழக்கம் வந்துவிட்டது.

### மாப்பிள்ளை அழைப்பு

திருமணங்கள் யாவும் பெண் வீட்டிலேயே நடைபெற்றன. அதனால் பெண் வீட்டிற்கு மாப்பிள்ளையை அழைத்துச் செல்கின்ற நிகழ்வு முக்கிய சடங்காக இடம்பெற்றது.

மாப்பிள்ளைத் தோழனும் பெண் வீட்டைச் சார்ந்த முக்கியமான ஒரு குடும்பத்தவரும் மாப்பிள்ளை வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் வந்த பின்பு மணமகனுக்குப் பாலறுகு வைக்கும் சடங்கு இடம்பெறும்.

கும்பம் வைத்துக் கும்பத்தைப் பார்த்தபடி கிழக்கு முகமாக மாப்பிள்ளை அமர்ந்திருக்க பசுப்பாலை அறுகம்புல்லினால் தொட்டு மணமகனின் தலையில் வைக்கும் நிகழ்ச்சி பால் அறுகு வைத்தல் எனப்பட்டது.

மணமகனின் தாய், தந்தை, மற்றும் முக்கிய உறவினர் பாலறுகு வைப்பார்கள். மாப்பிள்ளைத் தோழனும் பாலறு வைக்கும் வழக்கம் சில இடங்களில் இருந்தது.

அதன் பின்பு மாப்பிள்ளைக்குத் தோய வார்த்தல் இடம்பெறும். மாப்பிள்ளையை நீராட்டும் நிகழ்வே தோயவார்த்தல் எனப்பட்டது. மணமகளுக்கும் இதே போல தோய வார்த்தல் மணமகள் வீட்டில் இடம்பெறும்.

பாலறுகு வைப்பதற்கு முன்பாக அம்பட்டன் எனப்படும் நாவிதன் மணமகனுக்கு முகச்சவரம் செய்வார்.

தோயவார்த்த பின்பு மணமகனுக்குரிய அலங்காரங்கள் செய்யப்படும். மணமகனது தலையில் தலைப்பாகை வைக்கப்படும்.

வீட்டில் உள்ள பெரியவர் ஒருவர் தலைப்பாகையை மணமகனது தலையில் வைப்பார். இந்தத் தலைப்பாகை அந்தப் பிரதேசத்திலுள்ள உடையார் அல்லது முதலியாரிடமிருந்து இரவலாக வாங்கப்படும்.

இப்பொழுது கட்டாடியிடம் இந்தத் தலைப்பாகை பெறப்படுகிறது. மாப்பிள்ளைத் தோழன் தலைப்பாகை வைத்துக் கொள்ளும் வழக்கம் இப்போது பல இடங்களிலும் பரவலாக உள்ளது.

மாப்பிள்ளைத் தோழன் எனப்படுபவர் மணமகளின் சகோதரனாக இருப்பார். உடன்பிறந்த சகோதரன் இல்லாதவிடத்து ஒன்றுவிட்ட சகோதரன் மாப்பிள்ளைத் தோழனாக அமைவார். அப்படியும் இல்லாது போனால் உறவு வழியில் ஒரு சகோதரன் மாப்பிள்ளைத் தோழனாக இருப்பார்.

இப்போது உள்ளது போல மாப்பிள்ளைத் தோழன் தலைப்பாகை அணியும் வழக்கம் அப்போது இருந்திருக்கவில்லை. இதே போன்று மணமகனின் சகோதரி பொம்பிளைத் தோழியாக இருப்பார்.

மாப்பிள்ளையும், மாப்பிள்ளைத் தோழனும், பொம்பிளைத் தோழியும், மாப்பிள்ளையின் பெற்றோர்களும், உறவினர்களும் மாப்பிள்ளை அழைப்பிற்காக வந்த பெண் வீட்டினரும் மாட்டு வண்டில்களில் பெண் வீட்டிற்குச் செல்வர்.

வசதி படைத்தவர்களின் திருமணச் சடங்குகளில் கூடார வண்டிலில் மாப்பிள்ளையும் மாப்பிள்ளைத் தோழனும் பெண் பிள்ளைத் தோழியும் மற்றும் முக்கிய உறவினரும் செல்வர்.

பெண்ணுக்குரிய கூறைச்சேலை, தாலிக்கொடி, மற்றும் அலங்காரப் பொருட்கள் மங்கலப் பொருட்கள் யாவும் எடுத்துச் செல்லப்படும். குறிப்பாகப் பெண் பிள்ளைத் தோழி இறங்குப் பெட்டியில் இவைகளை எடுத்துச் செல்வார்.

பெண் வீட்டில் இவர்களை வாசலில் வைத்து ஆரத்தி எடுத்து வரவேற்பார்கள். வெங்கலத் தட்டில் மூன்று வாழைப்பழத் துண்டுகளில் மூன்று திரிகள் இடப்பட்டு அவை ஏற்றி வைக்கப்பட்ட பின் மணமகள் வீட்டாரின் மிக நெருங்கிய இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பர். பின் அத்திரிகளை அணைத்து அந்தக் கரியினால் மணமகனுக்கும் தோழனுக்கும் திருஷ்டிப்பொட்டு வைப்பார்கள்.

பின்பு மணமகனின் காலுக்குத் தோழன் தண்ணீர் வார்ப்பார். இது காலுக்குத் தண்ணீர் வார்த்தல் எனப்படும். தனது காலுக்குத் தண்ணீர் வார்த்த தோழனுக்கு மணமகன்

மோதிரம் அணிவிப்பார். பின்பு மணமகனை மாப்பிள்ளைத் தோழனும் மற்றும் பெண் வீட்டினரும் அழைத்துச் சென்று மணவறையில் இருக்கச் செய்வார்கள்.

பின், மாப்பிள்ளை வீட்டுக்காரரை பெண் வீட்டார் மிகவும் அன்பாக உபசரிப்பார்கள். பெண்பிள்ளைத் தோழியும் வேறும் சில பெண்களும் உள்ளே சென்று மணமகளை அழைத்து வருவார்கள். மணமகள் தன் பெற்றோர் வாங்கிக் கொடுத்த ஆடையை அணிந்து கொண்டு மணவறைக்கு வருவார்.

மணமகன் வீட்டுப் பெரியவர் ஒருவர் வழிகாட்டலில் பெண்ணின் தந்தையும் தாயும் பெண்ணின் கையை மணமகன் கையின் மேல் வைத்து தண்ணீர் வார்ப்பார்கள்.

இது தத்தம் செய்து கொடுத்தல் எனப்படும். **கைப்பிடித்துக் கொடுத்தல்** என்று சொல்லப்படுகின்றது. இதற்குப் பின்பு மணமகள் மணமகனுக்கு முழுமையான உரித்துடையவராக ஆகிவிடுகின்றார்.

மணமகனது நெருங்கிய உறவினர் ஒருவர் ஒரு தட்டில் தாலிக்கொடி, கூறைச்சேலை, மஞ்சள், குங்குமம், தேசிப்பழம், கண்ணாடி மற்றும் மங்கலப் பொருட்களை வைத்து சபையில் உள்ள பெரியவர் யாவருக்கும் காட்டிச் செல்வார். அவர்களும் அதனைத் தொட்டு வணங்கி ஆசீர்வதிப்பார்கள்.

மணமகன் மணமகளுக்குரிய கூறைச்சேலை, சட்டை முதலான உடைகளையும் மற்றும் அலங்காரப் பொருட்களையும் மணமகளிடம் கொடுப்பார். பெற்றுக் கொண்ட மணமகளை தோழியும் மற்றும் உறவினர்களும் அறைக்குள்ளே அழைத்துச் சென்று சேலை மாற்றி அலங்காரம் பண்ணி அழைத்து வருவார்கள்.

மணப்பெண் சபைக்கு வரும்பொழுது மணமகளுக்கு தோழி மாலையிட்டு அழைத்து வருவார். மணமகள் கையில் மாலையுடன் வந்து மணமகனுக்கு மாலையிட்டுவிட்டு மணமகனது வலப்பக்கத்தில் அமர்வார்.

மணமகன் எழுந்து நின்று மணமகளின் கழுத்தில் தாலியைக் கட்டுவார். பின்னால் நின்று தோழியும் மற்றும் மங்களகரமான (சுமங்கலிப்) பெண்களும் துணை புரிவார்கள்.

ஒரு சுமங்கலிப் பெண் ஒற்றைத் திரி விளக்கை அல்லது சிறிய குத்து விளக்கை வெளிச்சத்திற்காகப் பிடிப்பார். தாலி கட்டிய பின் மணமகனுக்கு இடது புறமாக மணமகள் அமர்ந்து கொள்வார்.

மணமக்கள் கிழக்கு முகமாக இருக்கக் கூடிய வகையில் மணவறை அமைக்கப்பட்டிருக்கும். தரையில் இருந்து நான்கு அல்லது ஐந்து அங்குல உயரமான, வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட பலகை மணமக்கள் அமர்வதற்காக வைக்கப்பட்டிருக்கும். அதனை மணை என்று சொல்வார்கள்.

மணைக்கும் அரசாணிக்கும் இடையில் இரு குத்துவிளக்குகள் நிறைகுடம் என்பன

வைக்கப்பட்டிருக்கும். மணமகன் வீட்டுப் பெரியவர் ஒருவர் தேங்காய் உடைக்கத் தாலி கட்டும் நிகழ்வு இடம்பெறும்.

தவில் எனப்படும் மங்கல வாத்தியம் அக்காலத்தில் இப்பிரதேசத்தில் இல்லாததால் இந்நிகழ்வு இடம்பெறுவதில்லை.

தாலிக்கொடி வாங்குவதற்கு வசதி இல்லாதவர்கள் அவ்வூரிலுள்ள அல்லது அயலூரிலுள்ள உடையார், முதலியார் அல்லது வேறு வசதி படைத்த பெரியவரிடம் இரவலாகத் தாலிக்கொடியை வாங்கிக் கட்டிவிட்டு சில நாட்களின் பின் மஞ்சள் கயிற்றை மாற்றும் வழக்கம் இருந்தது. கூறைச்சேலை கூட இரவலாகப் பெறப்பட்டதாக அறிய முடிகிறது.

இந்த ஆய்வுக்குரிய பிரதேசத்தில் பெரும் நிலச் சுவாந்தர்களோ அல்லது வசதி படைத்த பணக்காரர்களோ இல்லாததினால் உடையார், முதலியார் போன்றோரிடமே தாலிக்கொடி, கூறைச்சேலை இரவலாகப் பெறப்பட்டிருக்கின்றன.

அந்தணர்கள் மூலமாகச் சடங்கு செய்யப்படாததினால் ஓமம் வளர்த்தல், ஓமத் தீயை வலம் வருதல், இடம்பெறுவதில்லை.

ஆனால் அரசாணியை மும்முறை வலம் வரும் வழக்கம் இருந்திருக்கிறது. மிஞ்சி அணிவிக்கும் வழக்கமும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அம்மி மிதிக்கும் வழக்கம் இடம்பெற்றிருக்கிறது.

மணமகளது காலை மணமகன் அம்மிமேல் தூக்கி வைத்தலை அம்மி மிதித்தல் என்பர்.

மணமகனது வலது கையின் சின்னிவிரலை, மணமகளது இடது கையின் சின்னி விரலோடு தோழி சேர்த்துவிட அவர்கள் மூன்று தரம் அரசாணியைச் சுற்றி வலம் வருவார்கள்.

மஞ்சள் நீருக்குள் மோதிரம் போட்டு எடுக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. மணமகனையும் மணமகளையும் மணவறை அமைந்திருக்கும் பந்தலுக்கு வெளியில் அழைத்து வந்து வடக்குத் திசையில் வானத்தில் அருந்ததி பார்க்க விடுவர். அதற்குப் பின்பு மணமகனும் மணமகளும் மணையில் வந்து அமர பெரியவர்கள் அறுகரிசி போடுவார்கள்.

அதன் பின்பு தனியறையில் மணமகனும் மணமகளும் விடப்படுவார்கள். தோழியும் சில பெண்களும் பிரத்தியேகமாகச் சமைக்கப்பட்ட உணவை அவ்வறையில் கொண்டு சென்று கொடுப்பார்கள். அங்கே மணமகள் மணமகனுக்கு சாப்பாடு போட்டுக் கொடுப்பார். இதனைச் சாப்பாடு குடுப்பித்தல் என்று சொல்வர். பூதாக்கலம் சாப்பிடுதல் என்றும் கூறுவர்.

புதிய சட்டி பானையில் மணமகள் மணமகனுக்கு உணவு பரிமாறுவதனால் பூதாக்கலம் எனப் பெயர் வந்திருக்கலாம்.

தாலி கட்டும் முகூர்த்தத்தைப் பகலாயின் அடியளந்து நிச்சயிப்பார்கள். இரவாயின் வாழை வெட்டி நிச்சயித்தார்கள். மணிக்கூடு இல்லாத காரணத்தால் இவ்வாறு நடைபெற்றது. அடியளத்தல் என்பது ஒருவர் தனது நிழலைத் தனது காலால் அளந்து நேரத்தைக் கணித்தல் ஆகும். இதற்குரிய கணித முறை சோதிடத்தில் கூறப்பட்டுள்ளது.

வாழை வெட்டுதல் என்பது குலை போடாத குட்டிக் கன்னி வாழை ஒன்றை கூர்க் கத்தியினால் வெட்டிவிட்டால் அது எவ்வளவு நேரத்தில் எவ்வளவு வளர்ச்சியடையும் என்று ஒரு கணக்கு வைத்திருந்தார்கள். அதன் மூலம் நேரத்தைக் கணித்தார்கள்.

சங்க காலத்து நாழிகை வட்டிலோ, பிற்காலத்து மணிக்கூடுகளோ இல்லாததினால் இவையே நடைமுறையாக இருந்தது.

**பந்தி வைத்தல்**

பெண் வீட்டில் பந்தி வைக்கும் இந்நிகழ்வில் யாவரும் தரையில் இருந்து வாழையிலையில் சாப்பிடுவார்கள். பெண் வீட்டுப் பெரியவர் தனது நெருக்கமான உறவுள்ள பெரியவரிடம் அல்லது உடையார், முதலியார் போன்ற ஒருவரிடம் முதலில் தண்ணீர்ச் செம்பு கொடுத்து சாப்பிட அழைப்பார்.

மணமகன் வீட்டாரையும் முதல் பந்தியில் அமர்ந்து சாப்பிடச் சொல்வார்கள். மணமகன் வீட்டில் இருந்து வந்த பெண்களுக்கும் தனியாகப் பந்தி வைக்கப்படும். அதில் மணமகள் வீட்டுப் பெண்கள் அமர்ந்து கொள்வார்கள். இருப்பினும் முதலில் ஆண்களுக்குரிய பந்தியே வைக்கப்படும்.

பந்தி வைத்தல் என்பது வரிசையாக இருத்தி இலைபோட்டு உணவு பரிமாறுவதாகும். பந்தி வைக்கும் பணியில் கோவியன் முக்கிய பங்கு ஏற்பான். முதற் பந்தியில் வண்ணான், அம்பட்டன் எனப்படும் குடிமக்கள் இருந்து உணவு உண்பார்கள்.

உணவு பரிமாறிய பின்பு மணமகள் வீட்டுப் பெரியவர் ஒருவர் சாப்பிடலாமா என்று கேட்பார். கோவியன், வண்ணான், அம்பட்டன் ஆகியோரில் யாராவது ஆம் சாப்பிடலாம் என்று சொல்வார்கள். பின்பு உணவு உண்பார்கள்.

மணமகன், மணமகள் ஆகியோர் ஒரே குலத்தைச் சார்ந்தவர்களாகவே இருப்பார்கள். வேறு தாழ்ந்த குலத்தவர்கள் யாராவது சபையில் இருந்தால் அதை நாகரிகமாக மேற் கூறிய மூவரும் வெளிப்படுத்துவர். "என்ன கட்டாடி சாப்பிடலாம் தானே" என்று கேட்க **"ஒரு மறு தெரியுது"** என்று அவர் சொன்னால் யாரும் சோற்றில் கைவைக்க மாட்டார்கள். அந்தக் குறைந்த சாதிக்காரர் தானாக எழுந்து செல்ல வேண்டும். அல்லது மணமகன், மணமகள் எப்பகுதியைச் சேர்ந்தவரோ அப்பகுதியால் வெளியேற்றப்படுவார்.

தாழ்ந்த சாதியினருக்குத் தனியாகப் பந்தி வைக்கும் வழக்கம் இருந்தது. இருப்பினும்

இப்பிரதேசத்திற்குள் சாதிப்பிரச்சினை கொடுமையான நடவடிக்கையாக இருக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

**காசு போடுதல்**

மணமகள் வீட்டுப் பெரியவர் ஒருவர் ஒரு கொப்பி, பேனை அல்லது பென்சில் சகிதம் பந்தி வைத்து முடிந்த பின் உட்காருவார். அவருக்கு முன்னால் கொப்பி வைத்து எழுதுவதற்கு வசதியாக வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட பெட்டி இருக்கும். திருமணத்திற்கு வந்தவர்கள் தமது பெயர், ஊர், தொகை என்பவற்றைக் கூறிக் கொடுத்துவிட்டுச் செல்வார்கள்.

இந்தியாவில் இதனை மொய் எழுதுதல் என்று சொல்வார்கள். அங்கு பெறப்படும் பணம் பெண் வீட்டுத் திருமணச் சடங்கின் ஒரு பகுதியை ஈடுசெய்ய உதவும். பின்பு மணமக்களோடு, மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டு முக்கிய உறவினர்கள் சிலரும் தோழன் தோழி உட்பட மணமகன் வீட்டிற்குச் செல்வார்கள்.

மணமகன் வீட்டு வாசலில் சுமங்கலிப் பெண்கள் இருவர் ஆரத்தி எடுத்து மணமக்களை வரவேற்பார்கள். மணமகன் வீட்டில் மணமகள் வீட்டிலிருந்து வந்தவர்களுக்கும், மணமகன் வீட்டிற்கு வந்த உறவினருக்கும் பந்தி வைக்கப்படும்.

மணமகன், மணமகள் மணவறையில் சிறிது நேரம் அமர்ந்துவிட்டு தனியறைக்குச் செல்வர். அங்கு தோழி மூலம் உணவு வழங்கப்படும். மணமகன் வீட்டிலும் காசு போடுதல்
நிகழ்வு இடம்பெறும்.

**கால்மாறிச் செல்லுதல்**

பொதுவாக 3ம் நாள் மணமகள் வீட்டிற்கு மணமக்களும் மணமகனின் நெருக்கமான உறவினர் குறிப்பாக தோழியும் கணவனும் செல்வர்.

மாப்பிள்ளைத் தோழனும் அதுவரை மாப்பிள்ளை வீட்டில் இருந்துவிட்டுச் செல்வார். கால் மாறிப் புறப்படுவதற்கு முன் மணமகன் வீட்டில் வெள்ளை அவிழ்ப்பு இடம்பெறும். வெள்ளை அவிழ்ப்பு என்பது பந்தலுக்குள் கட்டப்பட்டுள்ள துணிகள் யாவற்றையும் அவிழ்க்கும் நிகழ்ச்சியாகும். வெள்ளை அவிழ்ப்பு அன்று சில இடங்களில் பந்தலையும் பிரித்து விடுவார்கள். அன்று இறைச்சி சமைக்கின்ற வழக்கம் இருந்தது.

மதுபானம் குடிப்பவர்களுக்கு மதுபானம் பரிமாறப்படும். பொன்னுருக்கியதில் இருந்து அன்று வரை மணமக்கள் வீட்டில் மாமிசம் சமைப்பதில்லை. மணமக்கள் கால் மாறிச் சென்ற பின்பு மணமகள் வீட்டில் வெள்ளை அவிழ்ப்பு நிகழ்வு இடம்பெறும். அங்கும் அதே நடைமுறை இடம்பெறும்.

பின்பு மணமகளின் உறவினர் வீட்டில் மணமக்களுக்கு விருந்துபசார நிகழ்வு நடைபெறும். மணமகனது உறவினரும் தங்கள் வீட்டில் விருந்து வைப்பார்கள். இந்த விருந்துபசாரம் ஓராண்டு வரையில் கூட நிகழ்ந்திருக்கிறது.

சாந்தி முகூர்த்தம்

மணமகனும் மணமகளும் தனி அறையில் உடல் ரீதியாகச் சந்திக்கின்ற நிகழ்வுக்குரிய நேரத்தைச் சாந்தி முகூர்த்தம் என்று கூறுவார்கள். இப்படியான நிகழ்வு இப்பிரதேசத்தில் இடம் பெறவில்லை. சில மணமக்கள் மாதக் கணக்கில் உடல் ரீதியாகப் பழகாமலேயே தனியறையில் நித்திரை செய்து இருக்கிறார்கள்.

மிகவும் இளம் வயதில் திருமணம் செய்வதால் அவர்களுக்கிடையே இருக்கும் அச்சம், கூச்சம் அது ஒரு கெட்ட காரியம் என்னும் நினைப்பு போன்ற பல்வேறு காரணங்களாலும் அது பற்றிய அறிவின்மையாலும் அப்படி நிகழ்ந்திருப்பதாகக் கூறுவார்கள்.

மணமகனின் நண்பர்கள் அல்லது தோழியின் கணவர் மணமகனிடம் அடிக்கடி விசாரித்து அவரின் அச்சத்தைப் போக்கியதாகவும் அறியப்படுகிறது. அதேபோல் மணமகளின் திருமணம் செய்த உறவினர் தோழி போன்றோர் மணமகளைத் தயார்ப்படுத்தியதாகவும் அறியப்படுகிறது.

மணமகனின் பெற்றோர் வீட்டில் அல்லது மணமகனுக்குரிய தனி வீட்டில் அவர்கள் குடும்பம் நடாத்துவார்கள்.

**சோறு குடுப்பித்தல்**

மிகவும் வறிய குடும்பங்களிலும் ஆணும் பெண்ணும் களவாகப் பழகி ஏதாவது சிக்கல் ஏற்பட்ட நிலையிலும் அல்லது கூடிக்கொண்டு ஓடி ஊரவரால் அழைத்துவரப்பட்ட நிலையிலும் திருமணச் சடங்கு நிகழ்வுகள் நடைபெறுவதில்லை.

பெண்ணைக் கொண்டு ஆணுக்குச் சாப்பாடு பரிமாறச் செய்து இரண்டு தரப்பினரும் அதனைத் திருமணமாக ஏற்றுக் கொள்வார்கள். இதனை **சோறு குடுப்பித்தல** என்று கூறுவார்கள்.

அந்த ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்தும் பொழுது தங்கள் வசதிக்கேற்ப தாலிகட்டு இடம்பெறும். இந்நிகழ்வு இவர்களுக்குள்ளேயே இடம்பெறும்.

சீர்வரிசை

முறைப்படியான திருமணத்தில் வயற்காணி, மேட்டுக்காணி, வீட்டுச் சமையல் பாத்திரங்கள், நகைகளோடு சீதனமாகக் கொடுக்கப்படுகின்ற வழக்கமும் இருந்தது.

அதுமட்டுமன்றி பெண் வீட்டார் சீதனமாகக் கொடுக்கின்ற வயலை முதலாண்டில் தங்கள் செலவில் விதைத்துக் கொடுக்கின்ற வழக்கமும் இருந்தது.

சிலர் காலபோகத்தைத் தங்கள் செலவிலேயே முழுமையாகச் செய்து அருவி வெட்டி அடித்து நெல்லைச் சீதனமாகக் கொடுப்'பதும் உண்டு.

உ
சிவமயம்



## வவுனியா வெளிவட்ட வீதி
# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்
## ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழா

**இடம் : ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்**
**காலம் : 22.10.2010 வெள்ளிக்கிழமை**
**காலை 8.00 மணி**





**தலைமை**

திரு.வி.எஸ்.தேவகுமாரன் அவர்கள்
(தலைவர் ஆலய பரிபாலன சபை)

**விசேட விருந்தினர்கள்**

ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(இரண்டாவது குருமஹா சந்நிதானம் - நல்லை ஆதீன முதல்வர்)

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்
(இந்து மத குரு பீடாதிபதி இலங்கை)

சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள்
(தலைவர், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம்)

சிவஸ்ரீ.உ.சிவகுமாரக் குருக்கள்
(பிரதம குரு, சிந்தாமணி விநாயகர் ஆலயம்)

சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள்
(கும்பாபிஷேகப் பிரதம குரு - சங்கத்தானை)

**பிரதம விருந்தினர்கள்**

உயர்திரு.வி.கயிலாசபிள்ளை அவர்கள்
(தலைவர், அகில இலங்கை இந்துமா மன்றம் கொழும்பு)

உயர்திரு.கந்தையா நீலகண்டன் (சட்டத்தரணி) அவர்கள்
(பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்துமா மன்றம் கொழும்பு)

**சிறப்பு விருந்தினர்கள்**

திருமிகு.ஜி.விஸ்வநாதன் அவர்கள்
(மேல் நீதிமன்ற நீதிபதி - வவுனியா)

திருமிகு.மா.கணேசராஜா அவர்கள்
(மாவட்ட நீதிபதி - வவுனியா)

**கௌரவ விருந்தினர்கள்**

திருமதி.P.M.S.சாள்ஸ் அவர்கள்
(அரசாங்க அதிபர் வவுனியா)

உயர்திரு.S.N.G.நாதன் அவர்கள்
(நகரபிதா வவுனியா)

உயர்திரு.சி.இரங்கராஜா அவர்கள்
(செயலாளர் ஆளுநர் வ.மா)

உயர்திரு.தி.இராசநாயகம் அவர்கள்
(செயலாளர், பொது நிர்வாக அமைச்சு வ.மா)

திருமதி.சாந்தி நாவுக்கரசன் அவர்கள்
(பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

உயர்திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்கள்
(பிரதேச செயலாளர் - வவுனியா)

உயர்திரு.V.கந்தசாமி அவர்கள்
(பொருளாளர், அகில இலங்கை இந்துமா மன்றம், கொழும்பு)

உயர்திரு.ந.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்
(பிரதம பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா)

உயர்திரு.க.ஈஸ்வரராஜா அவர்கள்
(பிரதம பொறியியலாளர், கட்டிடங்கள் திணைக்களம் - கிளிநொச்சி)

**விருந்தினர்கள்**

உயர்திரு.நா.சேனாதிராசா அவர்கள்
(தலைவர், வ.சுத்.இந்து இளைஞர் சங்கம் - வவுனியா)

உயர்திரு.வை.செ.தேவராஜா அவர்கள்
(தலைவர், இந்து மாமன்றம் - வவுனியா)

உயர்திரு.ஆறு திருமுருகன் அவர்கள்
(தலைவர், ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் தெல்லிப்பளை)

உயர்திரு.ஆ.நவரத்தினராஜா அவர்கள்
(ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் கோவில்குளம்)

உயர்திரு.கு.சிவகுமாரன் அவர்கள்
(தலைவர், சாயி சமித்தி - வவுனியா)

**பூஜை, வரவேற்பு, ஆசிகள், தலைமை உரை, திறப்பு விழா, மலர் வெளியீடு, உரைகள், கௌரவிப்புக்கள், கலை நிகழ்ச்சி, நன்றியுரை, மகேஸ்வர பூஜை(அன்னதானம்)**

அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

வெளிவட்ட வீதி,
வவுனியா. தொ.பே: 024 2221408

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
பரிபாலன சபை

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# வேல்முருகன் ஜுவலர்ஸ்



தங்கப் பவுண்
நகை
வியாபாரிகள்

# VEL MURUGAN
JEWELLERS

**No.87, Kandy Road, Vavuniya.**
**T.P: 024 2222248**

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



# கணேசா நகையகம்



நவீன 22 கரட்

தங்க

ஆபரணங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

## கணேசா நகையகம்

123, பஜார் வீதி,
வவுனியா.
தொ.பே: 024 2222464

194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே: 021 2225987

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள்வாழ்த்துக்கள்

# முருகேசு சங்கர் கணேஸ்

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

நாடு முழுவதும்

தரமான

கணினி பயிற்சி என்றால்...

அனைவரினதும்

முதற் தெரிவு

TECHNO WORLD

Studies (Pvt) Ltd

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# EYE CARE

# OPTICALS

# 49, Bus Stand Complex
Vavuniya.
T.P: 024 4905334

# 21, Near Ramachandra,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# RAVI

## MULLTI SHOP
## WATCH REPAIRERS

இல.
பேருந்து நிலையம்
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# KALAI LUXMI

# STORES

No.01, New Market,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# NEW KRISHNA

## SOUND SERVICE

61/3, கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
தொ.பே6648112

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# SIVASAKTHY

No.32, Bazaar Street, Vavuniya.
T.P: 024 5673641, 024 2221172
Stores: 79, 1st Cross Street, Vavuniya.
T.P: 024 5673643, 024 2221063
Sujan Rice Mill: Veppankulam, Vavuniya.
T.P: 024 5673642, 024 2221797

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# VIBUSAN PRINTERS

Offset Printing, Screen Printing, Invitation,
Rubber Stamp
and All Kinds of Printing works

# 34, New bus Stand Complex, Vavuniya
T.P: 024 4921960
Mop: 077 9007983

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# MODERN PLASTICS CENTRE

Distributor for F.M.J Plastics Yo hurt cups
and all plastic Items

60, Dam Street,
Colombo - 12

Phone: 011 320296
433018
436754

# SERAN WELDING WORK SHOP

வாழ்த்துகின்றோம்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

No.92, 1st Cross Street,
Vavuniya.
T.P: 024 5680044, 077 7423647

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# நாவலர்

## அறநெறிப் பாடசாலை

ஓமந்தை
வவுனியா

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# R.சோதிராசா

பூங்கா வீதி,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# சசி எலற்றோனிக்

வயறிங்
வயின்டிங்
பிலமிங்
ரேடியோ

இல.321, கொறவப் பொத்தான வீதி,
வவுனியா.
தொ.பே: 077 6366421

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

வெல்டிங் மற்றும் ஒட்டு வேலைகளுக்கு
நீங்கள் நாட வேண்டிய இடம்

# KOBI
## IRON WORKS

No.52, Kandasamy Kovil Road,
Vavuniya.
T.P: 077 6232054

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
ஏங்கள் வாழ்த்துக்கள்

## கிறவுன் சலூன்

புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

## சுபா சலூன்

கண்டி வீதி,
வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
ஏங்கள் வாழ்த்துக்கள்

## பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.309A 2/3 காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு - 6
தொ.பே: 011 2222198

இல.340, செட்டித் தெரு
கொழும்பு - 11
தொ.பே: 011 4422321
001337313

இல.4, பேருந்து நிலையம், யாழ்ப்பாணம்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# SANASA

## DEVELOPMENT BANK

Kandy Road,
Vavuniya.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# பூமா ரெக்ஸ்

வீரசிங்கம் மண்டபம்
31/1 பஜார் வீதி,
வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# அஸ்டலட்சுமி

## பதிப்பகம்

செட்டியார் தெரு
கொழும்பு – 11

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# அபிராமி

## சிற்பநிலையம்

61A, முதலாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள் வாழ்த்துக்கள்

# ரவிதாஸ் ஜுவலரி

70, கடை வீதி,

வவுனியா

---

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள் வாழ்த்துக்கள்

# சுப்பிரமணியம் & Co(PVT) LTD

செட்டியார் தெரு,

கொழும்பு – 11

# Vaani




## COMPUTER PRINTING CENTRE

- 4 Color Designing & Printing
- Digital Colour Works
- Type Setting
- Binding Works
- Wedding Cards Dealer
- Calander & Diary Items
- Paper Store

*All type of Computer Printing Works*

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்




VCPC

**VAANI COMPUTER PRINTING CENTRE**
61B, 1st Cross Street, Vavuniya.
T.P : 024 - 2223658

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா

சிறப்புற எங்கள்

வாழ்த்துக்கள்

# காவடி மார்க் கற்பூரம்

நின்று

நிலைக்கும்

ஜோதிமயம்

காவடி மார்க்

கற்பூரம்

## பிரபா ட்ரேடிங் கம்பனி

கபேஸ்லேன், கொழும்பு.

தொ.பே: 328 426

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**AMBIKAI**
**CDS**
**AMBIKAI**
**PRINT**

No.240, H.P Road,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**உமா**
**ஸ்ரோர்ஸ்**

இல.144 கண்டி வீதி,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**நியூ**
**திருமகள்**
**ரெக்ஸ்**

இல.72, மொடன் மார்க்கட்
பஜார் வீதி,
வவுனிாய.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**TASTY COOL**
**DRINKS**

No.29, Bus Stand Complex
Kandy Road,
vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# ATHAVAN PRINTERS

அனைத்துவகையான அச்சுவேலைகளுக்கும்

நாடுங்கள்

No.92c, Mill Road,
Vavuniya.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# VAVUNIYA MEDICALS

No.27, Bus Stand Complex
Kandy Road,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# சிற்பக்கலா வித்தகர் கோ.தினேஸ்

கோயிற் கோபுர வேலைகள், சுதை வேலைகள், வர்ணவேலைகள்
அனைத்தும் நல்லமுறையில் செய்து தரப்படும்

17, வடமலைப்பிள்ளை சந்து துறையூர்,
திருச்சி, தென்னிந்தியா.
தொ.பே: 077 4348957, 0091 9786965585

---

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# JEGAN SERVICE PLACE

Soosaippillaiyarkulam,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள் வாழ்த்துக்கள்

# ஜெயா கிறீம் ஹவுஸ்

## கண்டி வீதி,
## வவுனியா

"மேன்மைகொள் சைவநீதி, விளங்குக உலகமெல்லாம்"

---

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள் வாழ்த்துக்கள்

# NEW VANNI QUICK

- Offset 4 Colour Printing
- Computer Designing & Type Setting
- Binding
- And All type of Printing works

**No.140/2, Kandy Road,
Vavuniya.
T.P: 024 2221499**

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



# விநாயகர் ரயர் வேக்ஸ்

புகையிரத நிலைய வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.

T.P:-077 9177027



○ ரயர் ○ டெக் ரயர்
○ ரியுப் ○ றீபில் ரயர்
○ மவுலர் ○ றிம் வகை



வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

கா.வ 1982 வவுனியா கூ.சங்கம்

# வவுனியா கால்நடை வளர்ப்பாளர்
# கூட்டுறவுச் சங்கம்

பாசார் வீதி, வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# ஹேமோஸ் ட்ரேடர்ஸ்

தரமான சுவரோடுகள், தரையோடுகள், நிறப்பூச்சுகள்,

மின் உபகரணங்கள், PVC குழாய்கள்

இல.06, மில் வீதி, வவுனியா.

தொ.பே: 024 4906849, 0718387956

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# NEW ARUMUGAM STORES

No.82, Bazaar Street,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# RAJAGULAM TRADES

No.74, Modern Market,
Bazaar Street, Vavuniya.
T.P: 024 2221018

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# SHANMUGAM 'N' SONS

Dealers in Textiles & Readymade Garments
(Specialist in Bridal Sarees)
No.150, Bazaar Street, Vavuniya.
T.P: 024 2222517
e-mail: shanamir2002@yahoo.com

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



பாடசாலைப் புத்தகம் ஆசிரியர் பட்டப்படிப்பு புத்தகங்கள் வரையான

அனைத்து இலங்கை இந்தியப் புத்தகங்களும். மற்றும் தத்துவப்

புத்தகங்களும் உளவியல் புத்தகங்களும் ஒரே இடத்தில்

நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

# அறிவாலயம் ARIVALAYAM

No:-190B, Station Road,

Vavuniya.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

மாணவர்களின் ஊடாக மக்கள் பலத்துடன்..............

M.M.ரதன் ஆசிரியரின் வழிகாட்டலில் ................

***No-01 TUITION OF PANDARIKULAM***

# ஐடியல் கல்லூரி

பண்டாரிகுளம்– வவுனியா.

10 வது வருட வெற்றிகரமான கல்வி சேவையில்......



தரம்:-06 முதல் A/L வரையான

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# NEW LALITHA TEX



ஆடவர், மங்கையர் மனங்கவரும் அழகான

ஆடைகளும் நீடித்துழைக்கும்

நவீன காலணிகளும் ஒரே இடத்தில்

பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**லலிதா ரெக்ஸ்**
இல. 56 நவீன சந்தை
யாழ்ப்பாணம்

**லலிதா ரெக்ஸ் அன்ட் சூ பலஸ்**
இல.42, கடை வீதி,
வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்


# குமார் கூல்பார்



இல.15, பஸ் நிலையம்,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## LUCKY VIDIEO HOME



No:-51, 1st Cross Stree,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## N.K.BOOK CENTRE

No:-33, Station Road,
Vavuniya.



பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்பு பொருட்கள் இங்கு மலிவாகப்
பெற்றுக் கொள்ளலாம்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## வேல் கபே



கொரவபொத்தான வீதி,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## வவுனியா ஒப்டிக்கல்



நவீனசந்தை – வவுனியா.
கண்டி வீதி – வவுனியா.
இல.30, இல.52 கடைத்தொகுதி
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# கீன் கல்லூரி





## வைரவபுளியங்குளம்,
## வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# வரதன் அரிசி ஆலை

## இறம்பைக்குளம்,
## வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# MAADASAMY TRANSPORT

No. 172F, Mill Road, Vavuniya.
T.P: 024 3248335

---

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா

சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## சண்முகதாஸ் குடும்பம்

வேப்பங்குளம்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# LOGI METAL CRUSHER INDUSTRIES

தவசிகுளம் வீதி, மதவுவைத்தகுளம், வவுனியா.
தொ.பே: 024 2220110, 024 4925504, 024 4925521 தொ.ந: 024 223046
மின்னஞ்சல்: logimetal@gmail.com

தரமான கட்டிட மூலப் பொருட்களான கல்லு மணல் மண் என்பனவற்றை
இங்கு பெற்றுக்கொள்ளலாம்

# LOGI DISTRIBUTORS

இல.50 2ஆம் குறுக்குத் தெரு வவுனியா.
தொ.பே: 024 4925505 தொ.ந: 024 223046
மின்னஞ்சல்: logidistributors@gmail.com

1. சகல விதமான Anton PVC தயாரிப்புக்கள்
2. இலங்கை உருக்குக் கூட்டுத்தாபன உற்பத்திகள்
3. உலக பிரசித்தமான Asian Paints உற்பத்திகள்
4. மற்றும் Philips Hayleys lighting தயாரிப்புகள்

# LOGI SPARE PARTS

இல.34, 2ம் குறுக்குத் தெரு வவுனியா.
தொ.பே: 024 2223501, 024 4920390 தொ.ந: 024 2223501

கனரக இயந்திரங்களுக்கும் சகல விதமான வாகனங்களுக்கும்
உரிய தரமான உதிரிப்பாக விற்பனையாளர்கள்
Hydrualic Hose உற்பத்தியும் பழுதுபார்த்தலும்

# LOGI HARD WARE

இல.34A, 2ஆம் குறுக்குத் தெரு வவுனியா.
தொ.பே: 024 2223501, 024 4920390 தொ.ந: 024 2223501

சகல விதமான கட்டிட மூலப்பொருட்களும் தரமான இரும்புப் பொருட்கள்
மின்னிணைப்பு உதிரிப்பாகங்களும் இங்கு கிடைக்கும்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# செலான் வங்கி

# SEYLAN BANK P.L.C

## அன்புடன்

## அரவணைக்கும்

## வங்கி

SEYLAN
BANK PLC
The bank with a heart

இல.42, 2ம் குறுக்குத் தெரு
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

ரூபன்

ஹாட்வெயர்ஸ்

கண்டி வீதி,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

கோகுலன்
ஸ்ரோர்ஸ்

பஸ்நிலையம்
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

திரு.க.தனசேகரம்

இல.198, தேக்கந்தோட்டம்
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

திரு.த.தர்மபாலன்

கண்டி வீதி
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள் வாழ்த்துக்கள்

# N.S.RATNAM & BROS

## No. 6 First Cross Street,

## Vavuniya.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# Gagen CENTRE

No. 25-46, Bus Stand Complex,
Vavuniya.
Tel : 2222476

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி

விநாயகர் ஆலய அன்னதான/கலாசார மண்டபத்

திறப்பு விழா

சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# சதாசிவம் குலதேவராசா

**168, யாழ்ப்பாண வீதி,**

**வவுனியா.**

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**சைவ உணகம்**

**பிறின்ஸ் ஹொட்டேல்**



இல. 111, கண்டி வீதி, வவுனியா

**பிறின்ஸ் பார்மசி**

இல.462 D, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**பிறின்ஸ் ரான்ஸ் போட்**

இல.462 D, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே: 021 2228083, 021 222 4386

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# மாருதி

இல.226/4
ஆண்டிவால் வீதி
கொழும்பு 13

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# R.M.Nanayakara

GABO'S Lane
Colombo 11

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

வவுனியா கிளிநொச்சி A9 வீதியில்
காணி, வீடு விற்பனைக்கு உண்டு,
மற்றும் வாடகைக்கு வீடு பெற்றுத்
தரப்படும்
தொடர்புகளுக்கு

# மு.மகாதேவன்

தொ.பே: 024 2220553,
077 4483052
தொடர்பு நேரம்: பி.ப 6.00 மணிக்குப் பின்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# GANAPATHI CAMPHOR

No. 08, Hythe Land,
Deltota
Tel: 077 2378898

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி
விநாயகர் ஆலய அன்னதான/கலாசார மண்டபத்
திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# உதயா ஜுவலர்ஸ்

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு

எம்மை நாடுங்கள்

இல.162, பஜார் வீதி, வவுனியா.

தொ.பே: 024 3242438

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# ஜீவன் நகையகம்

உண்மையான 22 கரட் தங்க நகைகளுக்கு

நாடவேண்டிய இடம்

ஜீவன் நகையகம் JEEVAN NAKAIYAKAM

இல16.மில் வீதி, வவுனியா. தொ.பே: 024 2221934

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



**Mathangold jewellery**

No:-190A, Station Road,
Vavuniya.



வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**கவிதா ஸ்ரோர்**

இல.5, பேருந்து நிலையம்

வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**SUGANTHAN'S**

GENERAL MERCHANTS
No:-13A, Mannar Road,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**டேஸ் தேங்காய்
வியாபாரம்**



31A, சந்தை சுற்றுவட்ட வீதி
வவுனியா.

# ABISHAA HOSPITAL (PVT) LTD



## வரையறுக்கப்பட்ட அபிஷா தனியார் வைத்தியசாலை

வாழ்த்துகின்றோம்

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள்வாழ்த்துக்கள்

# 24A, Katkuli, Vavuniya

T.P: 024 2221474, 024 2224574

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்

# SUN BRITISH BUSINESS MANAGEMENT COLLEGE (PVT) LTD



## SCDL, ICDL கணனிக் கற்கைகள்

## மிகக்குறைந்த கட்டணத்தில் கணனிக் கற்கைகள்

Dip in office Automation, Computerized Accounting Packages, Dip in DTP.
Dip in Hardware Engineering, Dip in Multimedia, Dip in Programming, GIT, ICT Certificate in Web Browsing, Dip in Auto CAD, Dip in web Designing.

**அரச அங்கீகாரம் பெற்ற மற்றும் சர்வதேச சான்றிதழ்களுடன் மொழிக் கற்கைகள் மொழி பெயர்ப்பும் சர்வதேச ஆங்கிலக் கற்கைநெறிகள்**

---

IELTS,TKT ESOL, for kids and young learners

ஆங்கில சான்றிதழ் கற்கைகள்
அடிப்படை மட்டம் இடைநிலைமட்டம் இறுதி நிலை மற்றும்
ஆங்கில பேச்சு O/L, A/L ஆங்கிலப் பாடங்கள்

**முகாமைத்துவக் கற்கைகள்**

AAT, வங்கிக் கற்கைகள், B.Com வெளிவாரிப்பட்டப்படிப்புகள்
ஆங்கில/ தமிழ் மொழி மூலக் கற்கைகள்

G.C.E O/L, G,C,E A/L மாணவர்களுக்கான ஆங்கில மொழி மூலக்கற்கைகள்

SUN BRITISH BUSINESS MANAGEMENT COLLEGE

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# Kugan Motor Stores

**IMPORTERS AND DEALERS IN TRACTOR & MOTOR SPARE PARTS**



**52D, 2nd Cross Street,**
**Vavuniya.**

**110 Pazaar Road,**
**Vavuniya.**

**T.P: 024 2221845, Fax: 024 2221842**

# T.S.K TRADERS

**வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய**

**அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா**

**சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்**




## T.S.K. ரேடர்ஸ்

இல. 41, சூசைப்பிள்ளையார்குளம் வீதி,

வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# THIRUMAKAL

## Book Shop

No.14, Tharmalingam Road,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# Ganeshan Hardware

## கணேசன் ஹாட்வெயர்

தரமான இரும்பு மற்றும், கட்டிட பொருட்கள் மலிவு
விலையில் பெற்றுக் கொள்ளலாம்

NO.31, Kandasamy
Kovil Road,
Vavuniya.
T.P: 024 2221066

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# தர்மலிங்கம்

# குடும்பம்

புகையிரத நிலைய பொயின்ஸ்மன்
2ம் குறுக்குத் தெரு, கூமாங்குளம்,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# கலைமகள் அச்சகம்

இல. 50, சந்தை சுற்றுவட்ட வீதி
வவுனியா
தொ.பே: 071 3055719

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# R.V.R

உம் குறுக்குத் தெரு,
வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# AMBAL AGENCY

(Adjoining Ambal Cafe)

No. 09, Horawapothana Road,
Vavuniya.
T.P/Fax: 024 2222421

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறக்கவும் தானங்களில் சிறந்த
தானம் அன்னதானம் பெருகவும் இந்துக் கலாசாரம்
மேம்பாடடையவும் வாழ்த்துகின்றோம்.




மங்கையர் மனங்கவரும் தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
என்றும் நாடுங்கள் !

# நஜிந்தா ஜுவல்லரி

இல. 52, கடைவீதி, வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா

சிறப்புற எங்கள்

வாழ்த்துக்கள்



# KARUNIYA

## CIVIL ENGINEERING CONTRACTORS

building materials

supplier

and transport




**No. 135/1, 1st Lane, Ukkulankulam,**

**Vavuniya.**

**T.P: 024 2222157**
**077 8379262**

# VAVUNIYA WINE STORES

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்





# VAVUNIYA WINE STORES

**No.160, Kandy Road,**

**Vavuniya.**

# இராசையா மருந்துக்கடை



வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா

சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

---

எங்களிடம் ஆயர்வேத மருந்துகள், ஆயுர்வேத மருந்துச் சரக்குகள்,
கோயில் கும்பாபிஷேக, சங்காபிஷேகப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

இல.202, கடை வீதி,
வவுனியா.

இல.53, நவீனசந்தை
வவுனியா.

இல.209, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு
விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# மா.கதிர்காமராசா குடும்பம்


குட்செட் வீதி, சிவன் கோவிலடி
தோணிக்கல், வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# VANNI HARDWARE & Electrical





No:- 46, Bazaar Street,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்



VENUKKA TEX

No. 90, Bazaar Street,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

JASE JEWELLERY

Genuine 22Kt Gold Jewellery

No.8/B, Mill Road, Vavuniy.
Tel: 024 3241140

**வாழ்த்துகின்றோம்**

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள்வாழ்த்துக்கள்



# சாயிராம் கோல்ட் ஹவுஸ்

**Buyers & Sellers of Bullion (Gold Silver & Gems)**

**மங்கையர் விரும்பும் தங்கம், வெள்ளி வைர**
**நகைகளுக்கு நாடவேண்டிய இடம்**



## *சாயிராம் கோல்ட் ஹவுஸ்*

இல.32, மில்வீதி,
வவுனியா.
தொ.பே: 024 4923594

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# HOTEL VANNI INN



A/C Rooms

Non A/C Rooms

Wedding Hall

Restaurant

Car Parking

2nd Cross Street,
Vavuniya.

Tel: 024 2222074
Fax: 024 2222074

---

# LANKA FILLING STATION

**( Opposite of CTB Bus Station )**

Kandy Road, Vavuniya.

T.P: 024 2222060

---

# M.T.C TRANSPORT

**Gnanavairavar Kovil Lane**

**2nd Cross Street,**

**Vavuniya. T.P: 024 4920114**

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**RAGAMS**

**TEX**

No.5, New Market,
Vavuniya.
T.P: 024 4903811

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**ஆனந்தா**

**ஸ்ரோர்ஸ்**

இல.6,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**மெல்போன்**

**கறீம் ஹவுஸ்**



கண்டி வீதி,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**THASH**

**HARDWARE STORES**

No.143, Kandy Road,
Vavuniya.
T.P: 024 2223257

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

VENKADESWARA SUPPER MARKET

வெங்கடேஸ்வரா சுப்பர் மார்கட்

இல. 21, பசார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 2222418

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

G.H.A DE SILVA & CO

No.64, Bazaar Street,
Vavuniya

வவுனியா வெளிவட்ட வீதி,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

SVS

Inn

Tourist Rest & Guest

A/C & Non A/C Rooms

Vehicle Parking

149A, Kandy Road,

Vavuniya

T.P: 024 5671887, Mobile: 077 78/25017

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா

சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



# VINAYAGA'S TRADING COMPLEX

## Furniture and Building Material Sales Center

No. 21, Horawapothana Road,

Vavuniya.

T.P: 024 2221638

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி
விநாயகர் ஆலய அன்னதான/கலாசார மண்டபத்
திறப்பு விழா சிறப்புற
எங்கள்வாழ்த்துக்கள்

# டாக்டர்.த.முத்துலிங்கம்

No.66, யாழ் வீதி,

வவுனியா.

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

# ரவீந்தாஸ் ஜுவலர்ஸ்



இல. 176, பஜார் வீதி, வவுனியா.

தொ.பே: 024 2222462

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



**சின்பொன் வெதுப்பகம்**

கைத்தொழில் பேட்டை
பூந்தோட்டம் ,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**(White Stone)**
**வைற் ஸ்ரோன் உணவகம்**



இல:-16,கண்டி வீதி,
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



**ஆதிவிநாயகர்**
**ஸ்ரோர்ஸ்**
**பஸ்நிலையம்,**
**வவுனியா.**

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

**ஐங்கரன்**

**அரைக்கும் ஆலை**

கற்குழி
வவுனியா.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்



# வசந்தி

## தொலைத் தொடர்பகம்

## வசந்தி சினிமா



## வசந்தி றெஸ்ரோரென்ஸ்

**வவுனியா நகரில் தலைசிறந்த**

**ஒரே உணவகம்**

**அனைத்தும் ஒரு குடையின் கீழ் பெற்றுக்கொள்ள ...**

இல. 40, கண்டி வீதி, வவுனியா

தொ: 024 2222366, 024 2222607, 024 2222615

பக்ஸ்: 024 2222583

# HOTEL NELLY (PVT) LTD

வவுனியா வெளிவட்ட வீதி,

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா

சிறப்புற
எங்கள் வாழ்த்துக்கள்





# HOTEL NELLY (PVT) LTD

**No.84, 2nd Cross Street, Vavuniya.**

**T.P: 024 2224477-8**

**Fax: 024 2224479**

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## றோயல் கூல்பார்



14, பஸ் நிலையம்
வவுனியா

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## HONDA MOTORS



No.37, Kandasamy Kovil Road,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற எங்கள்வாழ்த்துக்கள்

## THEEBAN
## JEWELLERY

34B, Bazaar Street,
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்
ஆலய அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா
சிறப்புற. எங்கள்வாழ்த்துக்கள்

## CARVALHO
## OPTICALS

13, Bus Stand Complex
Vavuniya.

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள்வாழ்த்துக்கள்

# METO TRADERS

## No. 35, BUS STAND BUILDING

## VAVUNIYA

---

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற

எங்கள்வாழ்த்துக்கள்

# NEW THAYALAN STORES

No.86, Tharmalingam Road,

Vavuniya.

T.P: 024 2221000

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/கலாசார மண்டபத் திறப்பு விழா சிறக்கவும் தானங்களில் சிறந்த
தானம் அன்னதானம் பெருகவும் இந்துக் கலாசாரம்
மேம்பாடடையவும் வாழ்த்துகின்றோம்.

# வவுனியா பல நோக்கு கூட்டுறவு சங்கம் வ.து

## எமது உறுதிமிக்க சேவைகள்

நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனை சேவை

கோப்சிற்றி மினி கோப்சிற்றி சேவைகள்

ஒப்பந்த சேவைகள்

உலக உணவுத்திட்ட பொருட்கள் விநியோகம்

கிராமிய வங்கி சேவைகள்

பாலர் முன்பள்ளி சேவை

புதிய வேலை வாய்ப்புக்களை வழங்தல்

வாகன சேவை

கலாச்சார மண்டப சேவை

உற்பத்திகள் } அரிசி மா உற்பத்தி
நல்லெண்ணை உற்பத்தி

கூட்டுறவே நாட்டுயர்வு



# Giri

## Elactonic Super Market

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
அன்னதான/ கலாசார மண்டபத் திறப்பு விழா சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்



**கிரி எலக்றோனிக் சுப்பர் மாக்கெட்**

கண்டி றோட், வவுனியா.

**கிரி எண்டபிரைஸ்**

புதிய பஸ் நிலையம்,
வவுனியா.

தொ.போ: 024 2220270, 077 6143500.

வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா. தொ.பே : 024 2223658.